

நெஞ்சமடி
நீ எனக்கு
உமா மகேஸ்வரி

25 JUN 2011

# நெஞ்சமடி நீ எனக்கு

உமா மகேஸ்வரி

அருண் பதிப்பகம்
107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014

## நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : நெஞ்சமடி நீ எனக்கு |
| ஆசிரியர் | : உமா மகேஸ்வரி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2007 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 240 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருண் பதிப்பகம் 107/8, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர் சென்னை-18. ✆:94441-01753 |

விலை: ரூ.80.00

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட் சென்னை-14. ✆:28480166 |



தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

452336
6227174

CHN
CHN452336
6227174
CHN452336


# நெஞ்சமடி
# நீ எனக்கு

## உள்ளே


1. நெஞ்சமடி நீ எனக்கு 5
2. இதயத்தைக் கிள்ளாதே 140


# நெஞ்சமடி நீ எனக்கு

## 1

மணி ஐந்தரை அடித்ததோ இல்லையோ டேபிள்மேல் இருந்த ஃபைல்ஸ், பேப்பர்ஸ், எக்ஸ்ட்ரா, எக்ஸ்ட்ராவை எல்லாம் எடுத்து பரபரவென அடுக்கி வைத்து டேபிள் ட்ராயரைப் பூட்டி, ஒரு முறை இழுத்துப் பார்த்து திருப்திபட்டு, சாவியை ஹேண்ட்பேக்கிலேயே போட்டுக் கொண்டு, அந்த இரண்டு மாடிக் கட்டிடத்தில் இருந்து வெளியே வந்தாள் துளசி. ஓட்டமும் நடையுமாக ஐந்து நிமிடங்கள் செலவழித் தால் பஸ் ஸ்டாப். அடையார் செல்லும் பஸ்சிற்காக சிறிது நேரம் காத்திருந்து, எந்த நிமிடமும் தான் விழுந்து விடலாம் என்ற அறிவிப்போடு அறுபது டிகிரி கோணத்தில் தஸ்புஸ் சென வந்து நிற்கும் பேருந்தில் தன்னையும் இணைத்துக்

கொண்டு, அடையார் சிக்னலில் துளசி இறங்குவதற்குள் உயிர் போய் உயிர் வந்தது. பஸ்சை விட்டு இறங்கும்போது தான் நல்ல காற்றையே சுவாசிக்க முடிகிறது. ஹாஸ்டலை நோக்கி துரிதமாக நடையை எட்டிப் போட்டாள். ஆவின் பார்க்கைத் தாண்டி, பெசன்ட் நகர் போகும் சாலையில் முதல் கட்டிங்கில் உள்ளே நுழைந்தால், எண்ணி ஒன்பதாவது கட்டிடம் 'துர்கா பாய் ஒர்க்கிங் வுமன்ஸ் ஹாஸ்டல்.' பழையதும் இல்லாமல் புதியதும் இல்லாமல் ஏனோதானோ கட்டிடம். ஹாஸ்டல் கேட்டை துளசி தொட்டதுமே, உன்னை எனக்கு ஒன்னரை வருடங்களாகத் தெரியுமே என்ற ஸ்நேக சத்தம்.

லட்டர் பாக்ஸில் கடிதம் ஏதாவது வந்திருக்கா என்று பார்த்தாள். தனக்கு யார் போடப் போகின்றார்கள்? என்ற கேள்வி உள்மனதில் இருந்தாலும், ஒவ்வொரு நாளும் அனிச்சையாக அந்தச் செயல் நடக்கத்தான் செய்தது.

'அந்தக் கடிதத்தை கூட காணோமே' உதட்டை அசைக்காமல் காற்று வெளிவர முனகினாள். பின் உதட்டைச் சுழித்தபடி மாறி ஏறப் போனவளை ஹாஸ்டல் வார்டன் குரல் தடுத்தது.

''துளசி.''

நின்றவள் திரும்பிப் பார்த்து சிரித்தபடியே ஏறிய படிகளில் இருந்து கால்களைக் கீழே இறக்கினாள்.

''எஸ் மேடம்.''

''இன்னைக்கு தானேம்மா டூர் கிளம்புற?''

''ம்.'' தலையாட்டினாள்.

''என்னைக்குத் திரும்புற?''

''ஹாலிடே டூர்தானே மேடம். மன்டே மார்னிங் மெட்ராஸ். வந்திடுவோம்.''



''ரெண்டு நாள்தானா? சரிம்மா, பார்த்துப் போயிட்டு வா... நான் வெளியே கிளம்புறேன். நீ புறப்படும்போது நான் இருக்க மாட்டேன். விஷ் யூ ஹேப்பி ஜேர்னி.''

''தேங்க்யூ மேடம்'' கூறிவிட்டு இரண்டு இரண்டு படிகளாகத் தாவினாள் துளசி.

பள்ளத்து ரூம்.

அதுதான் அவளுடைய ரூம். ஒரு அறையில் அதிகபட்சம் மூன்று பேர். துளசி இருக்கும் அறையில் ஆறு மாதங்களுக்கு முன்பு மூன்று பேர்கள். தற்போது இவளும் மும்தாஜும்தான். அந்த ஹாஸ்டலில் பள்ளத்து ரூம் என்றாலே தனி மரியாதை. ஒரு கவுரவம். நல்ல அந்தஸ்து. இதற்கு முழுக் காரணம் அந்த அறைக்கு என்றே பிறந்து வரும் ஜீவன்கள். ஆன்மாவையும் மனதையும் மட்டுமே நேசிக்கும் இளம் பெண்கள் அந்த அறைக்கு வருவதால்தான் அப்படி ஒரு கவுரவம். பூசல் இல்லாத விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோடு வளரும் பரிசுத்தமான நட்பு. அந்த நான்கு சுவர்களுக்குள் சுழன்று விளையாடியது.

துளசி ரூம் கதவில் கை வைக்கும்போதே... உள்ளே லாக் பண்ணி இருப்பது தெரிந்தது. இரண்டு முறை கதவைத் தட்டினாள்.

''வரேன்'' உள்ளே இருந்து குரல் ஒலித்தது. ஒரு நிமிடம். இரண்டு நிமிடங்கள் மூன்று நிமிடங்கள், நிமிடங்கள் தொடர்ந்து கொண்டும் கரைந்து கொண்டும் இருந்தன. பொறுமை இழந்த துளசி,

''தெய்வமே'' குரல் உயர்த்தி கத்தினாள்.

கதவு திறந்தது. கண்களைத் தேய்த்தபடி மும்தாஜ் ப்ரவுன் கலர் நைட்டியில் தலையை சாய்த்துப் பார்த்தபடி நின்றாள். அவளை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தவள் ஹேண்ட்

பேக்கை தன் கட்டில் மேல் போட்டு விட்டு அப்படியே தலையணையில் சரிந்து படுத்துக் கொண்டு,

"என்னம்மா காலேஜ் கட்டா, தூக்கம் போட்டு இருக்க?"

"11.00 மணிக்கே வந்திட்டேன்."

துளசி பாத்ரூமில் இருந்து திரும்பி வருவதற்குள் சிறிய வி.ஐ.பி. சூட்கேஸில் இரண்டு நாளைக்குத் தேவையான ட்ரஸ், பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்து வைத்தாள் மும்தாஜ். எடுத்து வைக்கும்போதே ஏதோ ஓர் துயரம் அழுத்தியது. இரண்டு நாட்கள் துளசியைப் பிரிந்து இருக்க வேண்டுமா? முகம் அறியாத துளசியின் வயலின் மாஸ்டர் மேல் கேபம் கோபமாக வந்தது. ஒரு பெருமூச்சை நீளமாக உள்ளே இருந்து இழுத்து வெளியே விட்டாள். சூட்கேஸை மூடி கட்டில் மேலேயே போட்டாள். காரணம் இல்லாமல் மெல்லிய சோகம் ஒன்று பனித்துளியாக அவளுக்குள் இறங்கத் துவங்கியது.

சரியாக 7 மணிக்கு பாத்ரூமை விட்டு வெளியே வந்த துளசி அறைக்குள் நுழைந்து, சடசடவென நைட்டியை உருவி, சல்வாருக்கு மாறத் தொடங்க, உடை மாற்றுபவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள் மும்தாஜ்.

அழகான முகம், சிவப்பான நிறம். அளவான உயரம். வளைய வேண்டிய இடத்தில் வளைந்து நெளிய வேண்டிய இடத்தில் நெளிந்து, சிலையான உடல்வாகு. இருபத்தி மூன்று முடியப்போகும் பருவம். பார்த்த உடன் பேசத் தோன்றும் குடும்பக் களை. கருமையான அடர்ந்த கூந்தல். நுனியில் சீராக வெட்டப்பட்டு, செழுமையாக அவள் முதுகில் படர்ந்து இருந்தது. மூன்றை திருப்பிப் போட்டது போல் இடை நெளிந்தது. நீள நீளமான கைகள் அதில் அழகழகான விரல்கள். நகங்களை வளர்க்காமல் வெட்டியிருந்தாள். செதுக்கிய நாசி. துள்ளும் விழிகள். வளைந்து நெளிந்த புருவங்கள், எந்த நேரத்திலும் ஈரம் சுமந்து மின்னும் இதழ்கள். உற்றுப் பார்த்தால் கழுத்திலும், காது ஓரங்களிலும் குட்டிக் குட்டியான பூனை ரோமங்கள்.



"என்னடி அப்படிப் பாக்குற?"

"ஆம்பளையா பிறக்கலையேன்னு ரொம்ப கவலையா இருக்கு."

"ஏன்?"

"நான் மட்டும் ஆம்பளையா இருந்தேன்னு வச்சிக்கோ, உன்னைத் துரத்தி துரத்தியாவது காதலிச்சிருப்பேன்."

அவ்வளவுதான். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை நடு முதுகில் அழுத்தி வைத்து இழுத்தது போல் துடித்துத் திரும்பி..

"மும்தாஜ்!" கத்தினாள் துளசி.

சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்த மும்தாஜ் அதிர்ச்சியோடு நிமிர்ந்து பார்த்தாள்.

"காதல்ங்ற வார்த்தையே என் காதுல விழக்கூடாது. அந்த வார்த்தையைக் கேட்டாலே ஈயத்தைக் காய்ச்சி ஊத்தின மாதிரி இருக்கு" பற்கள் அரைபட்டன.

"சாரி" மிகவும் சன்னமாக மும்தாஜ் முனகினாள்.

சிறிது நேர மவுனத்திற்குப் பிறகு... மும்தாஜின் அருகில் வந்து நின்றாள் துளசி.

"சிக்னல் வரைக்கும் வரதானே?"

"இல்லை" மறுப்பாகத் தலையாட்டினாள் மும்தாஜ்.

"எம்மேல கோபமா?"

"அது இந்த ஜென்மத்தில வராது. உன்னோட இந்தப் பிரிவு தற்கால பிரிவா இருந்தாலும், என்னால தாங்க முடியலை.

அதென்னமோ தெரியல துளசி. உன்னை நினைக்கும்போது மனசுக்குள்ளே இனம் புரியாத சிலிர்ப்பு, சந்தோஷம். உன்னை பஸ் ஏற்றிவிட்டு ஹாஸ்டல் வரதுக்குள்ளே அழுதுடு வேன். என்னைப் புரிஞ்சிக்கோ. இந்த மாதிரி பரிசுத்தமான நினைவு ஆணுக்கும் பெண்ணுக்கும் வந்தா காதல்ன்றோம். பெண்ணுக்கும் பெண்ணுக்கும் வந்தா நட்புங்றோம் தட்ஸ் ஆல்'' மும்தாஜ் முடிப்பதற்கு முன்னாலேயே துளசியின் முகம் அஷ்டகோணலாக மாறியது. முகத்தில் உள்ள நாடி நரம்பு களுக்கும், தசைக்கும் இரத்த ஓட்டம் ஜிவ்வென்று ஏறியது.

''காதல்... காதல்... காதல்... சும்மா இருக்கியா?'' வெடித் தாள், பூகம்பம் போல் குமுறத் தொடங்கினாள், துளசியின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட மும்தாஜ்.

''துளசி ப்ளீஸ்... ஏன் இப்படி டென்ஷனாகுற...?''

அதற்குள் முகத்தில் பூத்த வேர்வைகளை ஒற்றி எடுத்த வள் மவுனமாகவே இருந்தாள்.

''எப்பவுமே வில்லுல கட்டின நாண் மாதிரி ஸ்டிப்பாக இருக்காத. ஒரு நாள் பட்டுன்னு அறுந்துடுவே.''

''.........''

''நீ டூர் முடிஞ்சி வந்ததும் ஆபீஸ்க்கு லீவ் போட்ற, நான் காலேஜுக்கு லீவ் போட்றேன்.''

''.....''

''ஏன்னு கேட்கமாட்டியா?''

''.......''

''சரி வேண்டாம். நானே சொல்றேன். ப்ரண்ட்ஸ்க்குள்ளே எந்த ஒளிவும் மறைவும் இருக்கக் கூடாது. எங்கிட்டே உள்ள அத்தனை விஷயமும் உனக்குத் தெரியும். சைட் அடிக்கிற



துல இருந்து, என் உடம்புல இருக்கிற மச்சம் வரைக்கும் உங்கிட்டே சொல்லி இருக்கேன். பட் நீ எனக்கு புதிராவே இருக்க. அந்தப் புதிரை அன்னைக்கு நீ புரிய வைக்கிற.''

''.........''

''என்ன எதுவுமே பேச மாட்டேங்கற, உன்னோட மவு னத்தை சம்மதமா எடுத்துக்கட்டுமா?''

''மவுனம் என்பது சம்மதத்திற்கு மட்டும் அடையாளம் இல்லை. அலட்சியத்துக்கும் அடையாளம். என்ன சொல்றதுன்னு தெரியாத மன எழுச்சிக்கு அடையாளம். ஏன் இப்படி முட் டாள்தனமா பேசறாங்கன்ற புதிரா பாக்குற புத்திசாலித்தனத் திற்கும் அடையாளம். இதுல எதை வேணா எடுத்துக்கோ.''

''துளசி நீ ஒரு சில நேரம் தான் நல்லாப் பேசற... மத்த நேர மெல்லாம் மூடியாயிட்ற, வாட் ஹேப்பண்ட்... பிரச்சினை இல்லாதவங்களே இல்லை. எங்கிட்டே ஷேர் பண்ணிக்கோ.''

''உங்கிட்டே என்னென்ன ஷேர் பண்ணிக்க முடியுமோ, அதெல்லாம் ஷேர் பண்ணிகிட்டுதான் இருக்கேன். வீணாக நீயும் குழம்பிகிட்டு என்னையும் குழப்பாதே.''

''துளசி.''

''இரண்டு நாள் கழிச்சிதான் பார்க்கப்போறோம். வேற ஏதாவது பேசு.''

''உனக்கு வழக்கமான லெட்டர் வந்திருக்கு'' என்றபடி அந்த இன்லான்ட் கடிதத்தை துளசியிடம் நீட்டினாள்.

வாங்கியவள், தன் கபோடை திறந்து அதற்குள் போட்டாள். பிரிக்காமல் குவியலாகக் கிடந்த கடிதங்களின் கூட்டத்தில் அன்று புதிய மெம்பராக அந்தக் கடிதம் போய் விழுந்தது.

''யார் இந்த லெட்டர் போட்றா? இதோ 100க்கும் மேலே வந்திருக்கும். நீயும் பிரிக்காமத் தூக்கி கபோட்டுக்குள்ளேயே போட்ற... இதுக்கு என்ன அர்த்தம்?''

''அதுக்குள்ளே என்ன எழுதி இருக்கும்னு எனக்குத் தெரியும்னு அர்த்தம்.''

''பிடிச்ச கடிதமா இருந்தா பிரிச்சிப் படிக்கணும். பிடிக்கலைன்னா கிழிச்சிப் போடணும். ஏன் பத்திரப் படுத்துற.''

''இம்... மார்கழி மாசம் பத்த வச்சி குளிர்காய.''

''துளசி... நான்'' அவளை அதற்கு மேல் பேச விடாமல் தடுத்தாள் துளசி.

''நீ ஒண்ணும் பேச வேண்டாம். ஒரு பைசா கூட பொறாத விஷயத்தை புடிச்சி நோண்டாத. பெங்களூர்ல உனக்கு என்ன வேணும்?''

''நீ திரும்பி வந்ததும், நான் கேக்கற கேள்விகளுக்கு பதில் வேணும்.''

''பாக்கலாம்.''

''பாக்கலாம் இல்ல, சொல்லுற.''

''உனக்கு ஏண்டி இப்படி ஒரு ஆர்வம்?''

''இது ஆர்வம் இல்லை. ஆதங்கம்... இவ்வளவு நாள் பழகியும் உன்னைப் பத்தி எனக்கு ஒண்ணுமே தெரியலையேங்கற வேதனை.''

விரக்தியான சிரிப்பா இல்லை, வேதனையான சிரிப்பா என்று வேறுபடுத்திப் பார்க்க முடியாத ஒரு சிரிப்பு துளசியின் இதழில் இடம் பிடித்தது. மும்தாஜின் தோளைத் தொட்டவள்.

''நதி மூலம். ரிஷிமூலம் பார்க்கக் கூடாதுன்னு சொல்லுவாங்க. அதுக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனா உன்னோட கேள்விகளுக்கு நான் பதில் சொல்லாததுக்கு ஒரே ஒரு காரணம்தான், உன்னோட நிம்மதி போயிடும்.''



''பரவாயில்லை.''

''என்னை நீ நம்பலை, சந்தேகப்படற ஆம் ஐ கரெக்ட்?''

''நோ, நீ என்னை நம்பலை. அதான் எதையுமே சொல்ல மாட்டேங்கற. நானும் இன்னைக்குக் கேக்கலாம், நாளைக்குக் கேக்கலாம்னு நாளை கடத்திட்டேன். ப்ரண்ட்ஷிப்ங்கறது வெறும் சந்தேகத்தை பங்கு போட்டுக்கவும், டைம்பாஸ் பண்ணவும் இல்லை. கண்ணீரைத் துடைப்பதற்கும், கண்ணீரை வராமல் பார்க்கவும்தான். நீ எங்கிட்டே நடிக்கிற... உன்னோட அப்பா, அம்மா உன்னோட பேமலி பத்தி தெரியணும்.''

''நான் ஒரு அனாதை'' நெற்றியைச் சுருக்கிக் கொண்டு கூறினாள்.

''அப்படியே வச்சிக்குவோம்... எப்படி படிச்ச?''

''பிளஸ் டூ வரைக்கும் ஸ்கூல். பி.எஸ்ஸி காலேஜ்'' அலட்டிக்காமல் கூறினாள்.

''கடிக்காத'' என்று தன் உதடுகளைக் கடித்துக் கொண்டாள் மும்தாஜ்.

''உண்மையைச் சொன்னா கடிக்கிறேங்கற?''

''உன்னை யார் படிக்க வச்சா?''

''பாதர் படிக்க வச்சார்.''

''ஃபாதர் டீன்ஸ் சர்ச் பாதரா?''

''இம்... அப்படிக் கூட வச்சிக்கலாம்.''

''எதுவுமே உறுதியா இல்லையா?''

''இருக்கலாம்.''

''ஐய்யோ'' மண்டையைத் தட்டிக் கொண்டவள்.

''நீ ஜி.துளசி... ஜி.யார்?''

''என்னடி... இன்னைக்கு பயங்கர கேள்விக் கணைகளை எறிஞ்சிகிட்டு இருக்க... ஆங் என்ன கேட்ட... ஜி யாருன்னா... ஜி ஃபார் காட்.''

சூட்கேசை எடுத்துக் கொண்டு கிளம்பியவளைக் கை நீட்டித் தடுத்தவள்.

''எனக்கு பதில் வேணும்.''

''ஏய்... என்னைக் கோபப்பட வைக்காதே. நான் யாருன்னு தானே உனக்குத் தெரியணும். நல்லா கேட்டுக்க ஒரே வார்த்தையில் சொல்றேன். சாக்கடை'' வேகமாகக் கூறிவிட்டு மாடிப்படிகளில் இறங்கத் தொடங்கினாள். பின்னாலேயே மும்தாஜ் வருவாளா என்று பார்த்தாள். வரவில்லை. கேட்டைத் திறந்து கொண்டு வெளியே வந்தவள், இருபது அடி தூரம் நடந்த பின்னால், ஹாஸ்டல் பக்கம் திரும்பி தன் ரூமைப் பார்த்தாள். ஜன்னல் கம்பிகளுக்கு நடுவில் மும்தாஜின் முகம். கைகளை ஆட்டிக் கொண்டு இருந்தாள். சிரித்தபடியே கைகளை பதிலுக்கு அசைத்த துளசி. மணி பார்த்து நடையை எட்டிப் போட்டாள்.

மும்தாஜ் ஜன்னல் கம்பிகளுக்கு இடையில் வைத்திருந்த முகத்தை எடுக்காமலேயே துளசி போவதையை பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சாக்கடை'' அந்த வார்த்தை மும்தாஜின் அன்றிரவு உறக்கத்தைத் தொலைக்கத் துவங்கியது.



# 2

அடையார் சிக்னல் அருகில் வசந்த் அண்ட் கோ ஷோ ரூமிற்கு முன்னால் நின்றாள் துளசி. மும்தாஜின் கேள்விகளுக்கு இனியும் இப்படியே பதில் சொல்ல முடியுமா? அவள் பாவமா தான் பாவமா என்று புரியவில்லை. யோசனையில் இருக்கும்போதே அவர்களின் மியூசிக்கல் டூர் பஸ் ஹாரன் அடித்து நின்றது. சுதாரித்துக் கொண்டவள், ஒரு இளைஞன் கதவு திறந்து விட தேங்க்யூ என்று கண்களால் கூறி விட்டு ஏறினாள். பேருந்து நகரத் துவங்கியது. எல்லா சீட்டுகளும் நிரம்பி வழிந்தது. கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தாள். அவள் சீட் தேடுவதை உணர்ந்த வயலின் மாஸ்டர் தன் சில்க் ஜிப்பாவைத் தட்டிக் கொண்டு எழுந்து,

''துளசி... ஜேம்ஸ் பக்கத்துல இடம் இருக்கு பார், போய் உட்கார்.''

''மாஸ்டர்'' தயங்கினாள்.

''எதுக்கு தயக்கம்... பக்கத்துல உட்கார்றதுல என்ன, அதுவும் ஜேம்ஸ் உன்னோட பேட்ச்தானேம்மா?''

என்ன பேசுவது என்று தெரியாமல் தயங்கியபடி ஜேம்ஸ் சீட் அருகில் சென்று நின்றாள்.

''ஹலோ'' சிரித்தான் ஜேம்ஸ்.

''ஹலோ...'' வார்த்தைக்கு வலிக்குமா என்பது மாதிரியான சுரத்தேயில்லாத குரல். அவள் சூட்கேஸை வாங்கி மேலே வைத்தவன், ஜன்னல் பக்கம் அவளுக்கு விட்டு நகரும்போது,

"பரவாயில்லை நான் இங்கேயே உட்கார்ந்துக்கிறேன்" கூறி விட்டு அவனை ஓரத்திலேயே தள்ளிவிட்டு, சீட் நுனியில் அமர்ந்தாள். பேருந்து சென்னையின் எல்லையைத் தாண்டி பெங்களூர் சாலையில் வேகம் எடுத்தது.

வீடியோ கோச் பஸ்.

"மாஸ்டர் நான் வீட்டுல இருந்து கேஸட் கொண்டு வந் திருக்கேன்."

"என்ன கேஸட்ம்மா" கேஸட்டோடு நின்ற பெண்ணைப் பார்த்துக் கேட்டார் வயலின் மாஸ்டர்.

"1942 எ லவ் ஸ்டோரி மாஸ்டர்."

"ஓ... பேஷா போடலாமே" மாஸ்டரின் அனுமதி கிடைத்த வுடன் கேஸட் வி.சி.ஆரில் திணிக்கப்பட்டு, வீடியோ திரை யில் ஓடத் துவங்க, முக்கால் வாசி தூக்கத்திற்கு போன துளசி சடாரென விழித்துப் பார்த்தாள். எல்லோரும் ஆர்வமாகப் படத்தில் தங்கள் பார்வைகளைப் படர விட்டிருந்தனர். பக்கத் தில் ஜேம்ஸை பார்த்தாள். அவனும் வீடியோ திரையில் கவன மாக இருந்தான். குளிருக்காக கொண்டு வந்த சால்வையால் முகத்தை மூடிக் கொண்டு சீட்டின் ஸ்டியரிங்கை தளர்த்தி விட்டு சாய்ந்து சரிந்து படுத்தாள். ஆனாலும் தூங்க முடிய வில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து சிறிது நேரத்திற் குப் பிறகு முகத்தை மூடியிருந்த சால்வையை விலக்கினாள். இமைகளைப் பிரித்து வீடியோ திரையைப் பார்த்தாள். காதல் சீன். தலையைக் குனிந்து கொண்டவள் நெற்றியில் கை வைத்து அழுத்திக் கொண்டாள்.

"எக்ஸ்க்யூஸ்மீ" ஜேம்ஸ்தான் அழைத்தான்.

அவன் புறம் தலையை சாய்த்துத் திருப்பினாள்.

"தலைவலியா?"



"........."

"எங்கிட்டே டேப்லெட் இருக்கு."

"நோ தேங்க்ஸ்."

"ஏன் இப்படி இருக்கீங்க... லாஸ்ட் ஒன் இயரா உங்க டைம்லதான், ஒரே பேச்சில்தான் வயலின் ப்ராக்டீஸ் பண்றேன். பட், இதுநாள் வரைக்கும் யார்கிட்டேயும் சகஜமா பேச மாட்டேங்கறீங்க. ஒரு விஷ் கூட பண்ணியது இல்லை" ஏதோ ஓர் குருட்டு தைரியத்தில் பேசி முடித்தான்.

துளசியின் பார்வையில் டஜன் கணக்கில் கோபமும் அலட்சியமும் தொங்கிக் கொண்டு இருந்தன.

"நான் இங்கே உட்கார்ந்து இருக்கிறது பிடிக்கலையா?"

ஜேம்ஸிற்கு தன் தலையிலேயே ஓங்கிக் கொட்டிக் கொள்ளலாமா என்று தோன்றியது. இந்த சூழ்நிலையைத் தவற விட்டால் இப்படி அருகே அமரும் சூழ்நிலை கிடைக்கவே கிடைக்காது. கேட்டுடணும்... எப்படியும் இன்று கேட்டுடணும். எத்தனை கடிதங்கள் தான் ஐ லவ் யூ. ஐ லவ் யூன்னு போட்டு கிட்டு இருக்கிறது. தைரியத்தை வரவழைத்துக் கொள்ள, காலரை சரி செய்தான். டென்ஷனை மறைக்க சர்ட் பட்டன் களை கழற்றித் திரும்ப போட்டான். இதயத் துடிப்பு மேலும் அதிகமானது.

பஸ் சீரான வேகத்தில் போய்க் கொண்டு இருந்தது. பாதி பேர் முழு தூக்கத்திலும், மீதிப் பேர் அரைத் தூக்கத்திலும் ஓரிரண்டு பேர்கள் மட்டும் வீடியோ திரையைப் பார்த்தார்கள்.

"துளசி" உதட்டை ஈரப்படுத்திக் கொண்டான்.

"....."

"நீங்க பேசாட்டியும் பரவாயில்லை. நான் சொல்றதைக் கேளுங்க." அவளுக்கு மட்டும் கேட்கும்படி பேசினான்.

சீட்டில் இன்னும் தளர்ந்து உட்கார்ந்து, தலையை சாய்த்து வைத்துக் கண்களை மூடிக் கொண்டாள்.

''ஐ லவ் யூ'' வார்த்தைகள் ஜேம்ஸின் மனதில் இருந்தே வெளியே வந்தன. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள, தன் இரண்டு கைகளையும் ஒன்றோடு ஒன்றை பின்னிக் கொண்டு, மூச்சு விடவே யோசித்தாள் துளசி.

''துளசி... ஐ லவ் யூ... நிறைய பேசணும், மனம் விட்டுப் பேசணும்.''

''.......''

''பேசு. ஏதாவது பேசு, என்னோட மனசு எந்தப் பெண்ணைப் பார்த்தும் சலனப்பட்டது இல்லை. உன்னைப் பார்த்ததும் மனசைப் பறிகொடுத்துட்டேன்.''

''.........''

''ஏதாவது சொல்லு, பிடிக்குதோ, பிடிக்கலையோ பதில் சொல்றது நாகரீகம் இல்லையா?'' மெதுவாக அவன் பக்கம் தலையைத் திருப்பினாள். அவன் மூச்சுக் காற்றும் அவள் மூச்சுக் காற்றும் ஒன்றோடு ஒன்று மோதி, கலந்து சிதறின.

''நாகரீகம்... எது நாகரீகம்... சந்தர்ப்ப சூழ்நிலையினால பக்கத்துல உட்கார்ந்துகிட்டு இருக்கிற பொண்ணுகிட்ட, இஷ்டம் போல பேசறதா? தொந்தரவு பண்றதா? எதுக்கும் ஒரு லிமிட் இருக்கு. நீங்க மீறுநீங்கன்னு நினைக்கிறேன்.

''துளசி... நான் ரியலாவே...''

''இங்க பாருங்க ஜேம்ஸ்... இனிமே நான் மெதுவா பேச மாட்டேன், என்னைக் கத்த வச்சிடாதீங்க.''

''ப்ளீஸ் துளசி... அன்டர்ஸ்டேன்ட் மீ.''

''ஸ்டாப்பிட் நான்சென்ஸ், மாஸ்டரைக் கூப்பிட்டு பஸ்ஸை நிப்பாட்டணுமா?''



''வேண்டாம்'' ஓரமாக ஒடுங்கிக் கொண்டான். அந்த ஆண் பிள்ளையின் கண்களில் நீர் நிறைந்தது. புரிஞ்சிக்கவே மறுக்கும் இவகிட்ட போயா நான் மனசை இழந்தேன். ஒருவேளை இந்த ஆணவமும், அலட்சியமும்தான் என்னைப் பிடிச்சி இழுத்ததோ... பலவாறு குழம்பினான். எதைப் பற்றி யும் கவலைப்படாமல் உறங்கத் துவங்கி இருந்தாள் துளசி. பஸ்சின் குலுக்கலில் அவளின் முகத்தை மூடியிருந்த சால்வை நழுவி கழுத்தில் விழுந்து, கொஞ்சம் இறங்கி நெஞ்சில் கிடந்தது. அவள் முகத்தைப் பார்த்தான். கருவிழிகள் உருள வில்லை. நல்ல உறக்கம் சீரான மூச்சுக் காற்று ஏறி இறங்கிக் கொண்டு இருந்தது. என்னதான் அவள் புறக்கணித்தாலும், அந்த முகத்தைப் பார்க்கும்போதே, சூரியன் முன்னால் விழுந்த பனித்துளி போல் அல்லவா கரைந்து காணாமல் போய் விடுகிறது, பாழாய்ப் போன மனது. வெகு நேரம் அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டு இருந்தான்.

அன்று மாலை பெங்களூர் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் ஒன் றில் எல்லோரும் பார்வையிட்டபடி பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். துளசியைக் கொஞ்சம் இடைவெளி விட்டு ஜேம்ஸ் தொடர்ந்து கொண்டு இருந்தான்.

மருதி படத்தைப் பார்த்ததும், தன்னோடு வந்த சுமிதாவின் கைகளைப் பிடித்து நிறுத்தி...

''மருதி படம் வேணும் சுமிதா.''

''மருதியா?'' கேள்வியோடு சிரித்தாள் சுமிதா.

''இம்...''

''யாருக்கு?''

''ப்ரண்ட்டுக்கு.''

''பாய் பிரண்டா?'' காதில் கிசுகிசுத்தாள்.

"ம்..."

அவர்கள் பின்னால் நின்று கொண்டிருந்த ஜேம்ஸிற்கு சாட்டையால், அடி விழுந்தது போல் ஒரு நிமிடம் உடல் துடித்து அடங்கியது.

'பாய் ப்ரண்டா. அவனுக்கு மருதி படமா? நடப்பது நடக் கட்டும். மெட்ராஸ் திரும்புவதற்குள் பேசிடணும்.' முடிவுக்கு வந்த ஜேம்ஸ் அப்படியே ரிவர்ஸ் கீர் போட்டது போல் ஓட்டலுக்குள் சென்று, தன் அறைக்குள் நுழைந்தவன் கதவைத் தாழிட்டு ப்ரிஜ் வாட்டரில் இரண்டு டம்ளரை உள்ளே செலுத்தி விட்டு, கண்களை இறுக்கி மூடிக் கொண்டான்.

நைட் டின்னரின் போது துளசி சாப்பிட வராததையும், அவளுக்கு வயிறு சரியில்லை என்றும் சுமிதா மூலம் தெரிந்து கொண்டு, ஒரே ஒரு இட்லியோடு எழுந்தான். வேகமாக மாடிப்படிகளில் தாவியவன் துளசி தங்கியிருக்கும் அறைக்கு முன்னால் சிறிது தயக்கத்தோடு நின்று, காலிங் பெல்லில் கைவைக்க நினைத்து, வேண்டாம் எனத் தயங்கி கதவைத் தள்ளிப் பார்த்தான். ஈஸியாக உள்ளே சென்றது. தான் செய் வது சரியா தவறா என்று அவனுக்கே தெரியவில்லை. ஏதோ ஓர் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த துளசியின் முன்பு போய் நின்றான். தன் முன்னால் நிழலாட இமைகளை உயர்த் திப் பார்த்தாள் துளசி.

அவனைப் பார்த்ததும் கலவையான உணர்ச்சியோடு எழுந்து நின்றாள்.

"உட்கார்" கட்டளையாக குரல் ஒலித்தது.

அவனைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்தாள்.

"பயமா இருக்கா."

இல்லையென தலையாட்டினாள்.



"உண்மையாவா?"

"எஸ். என் மேல் எனக்கு அவ்வளவு நம்பிக்கை."

"பேசணும்" நின்றபடி பேசிக் கொண்டிருந்தான்.

"நான் கேட்கத் தயாரா இல்லைன்னா?"

"சர்ச்க்குப் போறோம். வேணுங்கறதை கேக்கறோம். செஞ்ச பாவத்தை மன்னிக்கச் சொல்லி மண்டி போட்றோம். காரணம் ஆண்டவர் கேட்டுக் கிட்டு இருக்கிறார் என்ற நம் பிக்கையில... அவர் தூங்கறாரா... இல்ல விழிச்சிகிட்டு இருக் காரான்னு பிரார்த்தனை பண்றவனுக்கு தேவை இல்லாத விசயம்."

"உட்கார்ந்து பேசலாமே" அவனைப் பார்த்துக் கூறினாள்.

"இல்ல. இந்த ரூம்ல பேசினா, சாப்பிட்டு வர உன் ப்ரண் ட்ஸே கூட தப்பா நினைக்கலாம். வெளியே போய் பேசலாம். இந்த ஹோட்டல் ரிசப்ஷன் கூட நல்ல இடம்தான்."

எழுந்தாள் துளசி. புத்தகத்தை மூடி வைத்தாள்.

"வரேன்... எதுக்குத் தெரியுமா... மனசுக்குள்ளேயே புழுங்குவது எவ்வளவு வேதனைன்னு எனக்குத் தெரியும். ஏதோ பேச ணும் பேசணும்னு சொல்றீங்களே அதைப் பேசிடுங்க."

ஜேம்ஸின் பின்னால் கதவைத் தாழிட்டு விட்டு நடந்தாள். ரிசப்ஷனில் இருவரும் வந்து அமர்ந்தார்கள்.

"என்ன பேசணும்" ஆரம்பித்தும் வைத்தாள்.

"நான் சொல்றதைக் கேட்பியா?"

"என்ன சொல்லப் போறீங்கன்னு தெரிஞ்சிக்கத்தானே. ரிசப்ஷன் வரைக்கும் வந்திருக்கேன்" நிமிர்ந்து முதல் முத லாக அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள். அவளை விட நிறம் கம்மிதான். குண்டான முகம். அடர்த்தியான புருவம்.

அதற்குக் கீழ் சிரிக்கும் கண்கள். முகத்திற்கு ஏற்ற நாசி. மொழு மொழு கன்னங்கள். தாடையில் இரண்டு நாள் ரோமங்கள். மேல் உதட்டை முழுவதும் மறைக்கும் அளவு வளர்ந்திருந்த மீசை. அழகாகத்தான் இருந்தான். கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

''நான் உன்னை விரும்புறேன்.''

''அப்படியா?''

''துளசி! ப்ளீஸ், நான் சொல்ல வந்ததைச் சொல்லிட்றேன். அதற்கு மேல் நீ பேசு.''

''..........'' ஆமோதிப்பது போல் அமைதியானாள்.

''நான் யாருன்னு உனக்குத் தெரியாது. தெரிஞ்சிக்கணும்ற அவசியமும் இல்லை. ஆனா, சொல்ல வேண்டிய சூழ்நிலையில நான் இருக்கேன். நான் ஒரு நக்ஸலைட்.''

''...............'' இமைகளை மட்டும் உயர்த்தினாள்.

''ஆச்சர்யமா இருக்கா... ஆனா உண்மை. போலீஸ் ரெக்கார்ட்ல கூட என் பெயர் இருக்குன்னு நினைக்கிறேன். இல்லாம இருந்தாலும் நான் ரொம்ப நல்லவன்னு நடிக்க விரும்பல. தினமும் சர்ச்சுக்குப் போற கட்டுப்பாடு நிறைஞ்ச ஒரு கிறிஸ்துவ குடும்பத்துல பிறந்தவன். அம்மா, அப்பா, தங்கைன்னு அழகான குடும்பம். காலேஜ் வாழ்க்கை, இள ரத்தம், புரட்சிங்கற பேர்ல என்னை ஒரு புது வழியில நடக்கத் தூண்டிடுச்சி. யாராவது ஒருத்தன் ஐந்து பைசா ஏமாத்துறான்னு தெரிஞ்சாலே ரத்தம் எல்லாம் கொதிக்கும். அன்பை மட்டுமே போதிக்கிற எங்க குடும்பத்துல, வன்முறையின் கையைப் பிடிச்ச நான் வித்தியாசமானவனாத் தெரிஞ்சேன். ஞானஸ்நானம் எடுத்துக்கிட்டா என்னோட இந்த வாழ்க்கைக்கு தடங்கல் வருமோன்னு நினைச்சி, எடுத்துக்கல. அது என்னோட பேரண்ட்சுக்கு பிடிக்கலை. பிரச்சினைகள் அதிகமாகி வீட்டை விட்டும்



வெளியே வந்துட்டேன். நாலைந்து வருடம் சுதந்திரமாக சந்தோசமா இருந்த வாழ்க்கை, கொஞ்ச நாளா கசக்க ஆரம்பிச்சிடுச்சி. மனசுக்குள்ளேயே ஒரு வெறுமை. யாருக்காக வாழ்றோம்ங்கற ஏக்கம். கொஞ்ச கொஞ்சமா என்னை அரிக்கவும் ஆரம்பிச்சது. இருக்கிறவங்ககிட்டே இருந்து எடுத்து இல்லாதவன்கிட்ட கொடுத்தாலும் கொள்ளை கொள்ளை தான்னு உறுத்தவும் ஆரம்பிச்சது. நான் நினைச்சது ஒண்ணு, நடந்தது ஒன்று. ஏதாவது ரிலாக்சேஷன் வேணும்னு தோணிச்சி, மியூசிக் நல்ல வழின்னு தெரிஞ்சதும் இங்கே வந்து சேர்ந்தேன். நான் வடிகால் தேடி வந்த இடத்துல, வாழ்க்கைத் துணையா நீ கிடைக்க மாட்டாயான்னு உருகினேன். உன்னோட சின்சியாரிட்டி, உன்னோட அமைதி, உன்னோட ஆக்டிவிட்டீஸ், இதுக்கு மேலே எங்கிட்ட இருந்த தேடல் உங்கிட்டே கிடைச்ச திருப்தி.

''வாழ்க்கை தொலைஞ்சிடுச்சின்னு நினைச்ச நேரத்துல உன்னைப் பார்த்ததும் இருக்குங்கற ஆர்வம். எத்தனையோ லெட்டர் போட்டேன். ஒண்ணுக்கு கூட ரிப்ளை இல்லை.''

''அந்த ராஸ்கல் நீதானா?'' மனதிற்குள் அசை போட்டாள்.

''நாளுக்கு நாள் கற்பனைகளும், கனவுகளும் அதிகமாச்சு. பேச பயம். கடிதங்கள் எல்லாம் என்னாச்சோன்ற கவலை. ஆனா இப்போ உன்னோட காதல் எனக்குக் கிடைக்காதுன்னு தெரியும். அப்புறம் ஏன் இதைச் சொல்றேன்னு பார்க்கிறியா? உன்னோட எதிர்கால வாழ்க்கைக்கு என்னோட இறந்த கால வாழ்க்கையைச் சொல்லி விஷ் பண்ணத்தான்.''

''விஷ் பண்ணவா?'' முழித்தாள்.

''எஸ்... விஷ் யூ ஆல் த பெஸ்ட். நீ, ஸாரி நீங்க மருதி பிச்சர் வாங்கின போது பின்னாலதான் நின்னேன். உங்களோட பாய் பிரண்ட்டை ஐ மீன் பெட்டர் ஹாஃப்க்கும் என்னோட மன மார்ந்த நல்வாழ்த்துக்கள்.''

அவ்வளவுதான் வெள்ளிக் காசுகளை சிதற விட்டது போல் கண்களில் நீர் கொப்பளிக்கும் வரை சிரித்தாள் துளசி.

''மும்தாஜ் எனக்கு பெட்டர் ஹாஃப்பா?'' அடக்க முடியாமல் அவன் அறியாமையை நினைத்துச் சிரித்தாள்.

ஜேம்ஸிற்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

''சுமிதா பாய் ப்ரண்டுக்கான்னு கேட்டதற்கு தலையாட்டினீங்களே?'' இழுத்தான். சிரித்துக் கொண்டே.

''பாய்ன்னாலே முஸ்லீம்னு சொல்லுவாங்க. முஸ்லீம் ப்ரண்ட்... பாய் ப்ரண்ட், தட்ஸ் ஆல்.''

அவள் தன்னைக் காதலிக்காவிட்டாலும் அவளுக்கு ஒரு காதலன் இல்லை என்பது பூக்களை வாரித் தெளித்தது போல் சிலிர்த்து, உந்துதல் அதிகமாக அவனையும் மறந்து அவள் கைகளைப் பற்ற...

''யூ ஸ்கவுன்ட்ரல்'' அமிலமாக சொற்களை இறைத்து, அவன் கண்களில் பூச்சி பறக்கும் அளவிற்கு 'பளார்' என ஓங்கி அறைந்தாள். ரிசப்ஷனில் உள்ள அத்தனைப் பேரும் ஸ்தம்பித்து அதிர்ச்சியோடு இவர்களைப் பார்த்தார்கள்.

## 3

**மா**லை 5.00 மணி.

நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள் துளசி. கழுத்துவரை போர்த்திக் கொண்ட போர்வை கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனமாக விலகியிருந்தது. கணுக்காலுக்கும் மேலேறிய நைட்டி.



அடிக்கடி அவள் புரண்டு புரண்டு படுத்ததினால் நைட்டி ஜிப், எந்த ஆண் இருக்கின்றான் என்ற தைரியத்தில் தன் பொஸிஷனை விட்டு சிறிது இறங்கி இருந்தது. ஒருக்களித்து இருந்ததால் ஒரு கையைத் தன் மேலேயும், மற்றொரு கையைத் தலைக்கு கீழும் வைத்திருந்தாள். உதடு வெடித்து, உள்ளிருக்கும் பற்கள் பளிச்சிட்டது.

கதவைத் தள்ளிக் கொண்டு, உள்ளே நுழைந்த மும்தாஜுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. இரண்டு நாள் பிரிவு. தனிமையில் அந்த அறையின் அமைதியோடு போராடிக் கொண்டு இருந்தது, அவளுக்குத்தானே தெரியும். துளசியின் தூக்கம் கலைந்து விடக் கூடாது என்று கதவை சத்தம் இல்லாமல் தாழிட்டாள். தன் புக்ஸை டேபிள் மேல் வைத்து விட்டு, நைட்டியை அணிந்து கொண்டு, முகம் கழுவி... ஒரு நிலைக்கு வரும் வரை துளசியிடம் இருந்து சின்ன சலனம் கூட இல்லை. எழுப்பவும் மனமில்லை. தூங்குபவளைப் பார்க்கவும் பிடிக்கவில்லை. கைகளை வலுக்கட்டாயமாக பிசைந்து சிவப்பேற்றினாள். அப்போதுதான் பார்வையை அறை முழுவதும் ஓட விட்டாள். துளசி கொண்டு போயிருந்த சூட்கேஸைத் தவிர, ப்ளோ - அப் சைசில் காக்கி பேப்பரால் மடிக்கப்பட்டு வெள்ளை நூலால் சுற்றப்பட்ட பார்சல் தட்டுப்பட்டது.

'பிரித்துப் பார்க்கலாம்' மனம் திட்டமிட்டதுமே பார்சலைப் பிரிக்கத் துவங்கினாள். எப்படியும் அரை கிலோ பேப்பர் தேறும். உருவி உருவிப் போட்டாள். லேசான அதிர்ச்சியோடு கடைசி பேப்பரையும் அகற்றியபோது, விழிகள் விரிந்தன.

மிகவும் அழகான மசூதி... கலைநயத்தோடு உச்சி மீது வரையப்பட்ட அந்த மூன்றாம் பிறையை எத்தனை முறை வேண்டுமானாலும் பார்த்துக் கொண்டு இருக்கலாம். திரும்பி துளசியைப் பார்த்தாள். அதே உறக்கம். எப்போதோ, ஹாஸ்டல் மொட்டை மாடியில்...

''எனக்கு வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை அந்த மசூதிக்குப் போறது பிடிக்கலை துளசி. கொஞ்சம் கூட ப்ரைவசி இல்லை. லேடீஸே வரதில்லை. ஒரே ஜென்ஸ் கூட்டம். எல்லாம் என்னையே பார்க்கிற மாதிரி இருக்கு. அமைதியா அல்லாவைத் தொழப்போனா அமைதியில்லாம மனசு தவிக்குது. ஒரு நல்ல மசூதி பிக்சர் கிடைச்சா... மனசார என்னோட தொழுகை ரூம்லேயே நடக்கும்.''

அதற்கு துளசி பலமாகச் சிரித்தாள்.

''உங்களுக்குத்தான் உருவ வழிபாடே இல்லையே... அப்புறம் என்ன?''

''நீ சொல்றது கரெக்ட்தான். பட் திருநீர் வைக்கும்போது உனக்கு கிடைக்கிற திருப்தியும், ஆறுதலும், அந்த மூன்றாம் பிறையும் மசூதியும் எனக்குக் கொடுக்குது.''

அந்த நினைவுகள் அப்படியே கொஞ்சம் கூடப் பிசகாமல் மும்தாஜின் மனக் கண் முன்னால் விரிந்தது. இவளுக்கு எப்படி நன்றி சொல்வது, எதைச் சொன்னாலும் எப்படிச் சொன்னாலும் அவளுக்கு ஈடாகுமா? பகவத் கீதையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு தூங்குபவள். எனக்காக, என் ஆசைக்காக... இதை சுமந்து வந்திருக்கின்றாள். வார்த்தைகள் வெளி வராமல், இதயத்திற்குள்ளேயே பேசிக் கொண்டாள்.

'எல்லோரும் சாப்பிட வாங்க' கீழே ஹாலில் இருந்து சமையல்கார அம்மாவின் குரல் கணீர் என்று ஒலித்தது. அடுத்த நொடியே மந்திரத்திற்கு கட்டுப்பட்டது போல வயிறும் அலாரம் அடிக்கத் துவங்க, படத்தை அப்படியே வைத்து விட்டு, துளசியைத் தட்டி எழுப்பத் துவங்கினாள் மும்தாஜ்.

மும்தாஜ் பால் எடுத்துக் கொண்டு வந்ததும். ஆளுக்கு நான்கு ஸ்லைஸ் ப்ரட்டும் இரண்டு வாழைப் பழங்களையும் உள்ளே தள்ளி விட்டு, பாலைக் குடித்து முடித்ததும்



எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி, படுக்கப் போகும்போது மணி 9.10.

மும்தாஜ் ட்யூப் லைட்டை ஆஃப் செய்துவிட்டு... ஜீரோ வாட்ஸ் பல்பை ஒளிர விட்டபோது...

''படிக்கலையா?'' துளசி கேட்டாள்.

''இல்ல.''

''செமஸ்டர் நெருங்கலை?'' சந்தேகமாகக் கேட்டாள்.

''கொஞ்ச நாள்தான் இருக்கு. நான் தரவோ இருக்கேன். உங்கிட்டே நிறைய பேசணும்.''

''ஓ... பேஷா பேசலாமே... நான் நல்லா தூங்கிட்டேன்...''

அவர்கள் பேசிக் கொண்டு இருக்கும்போதே, ஜீரோ வாட்ஸ் பல்ப் தன் மஞ்சள் நிற மேலாடையை, அறை முழுவதையும் அலைய விட்டு நிரம்பியிருந்தது.

துளசியின் கட்டிலில் அவளுக்கு அருகில் வந்து அமர்ந்த மும்தாஜ்.

தழுதழுத்த குரலில் 'தேங்க்ஸ்' என்றாள். மும்தாஜின் குரலில் இருந்த கரகரப்பு துளசியை சடார் என எழ வைத்தது.

''என்ன மும்தாஜ்... குரல் ஒரு மாதிரியா இருக்கு'' அவள் முடிக்கும் முன்பே.. மும்தாஜின் விழிகளில் உருண்டு திரண்ட நீர் முத்துக்கள் துளசியின் கைகளில் விழ... சுடுநீரை தாங்கிக் கொள்ள முடியாமல், துடித்துப் போய் தோழியின் முகத்தை நிமிர்த்தினாள். மும்தாஜின் விழிகளில் கரையைக் கடக்க நீர் அருவிகள் தடுமாறி தத்தளித்துக் கொண்டிருந்தன.

''என்ன மும்தாஜ்... எதுக்கு அழற'' மும்தாஜின் கைகளை இறுக்கிக் கொண்டாள்.

''தேங்க்ஸ்.''

''எதுக்கு?''

''மகுதி.''

''அடச்சீ... இதுக்குப் போயா தேங்க்ஸ் சொல்லி... இப்படி அழற?''

''உனக்கு... எப்படி?''

மும்தாஜின் கன்னத்தை தட்டிய துளசி.

''என்ன, எப்படி... உனக்கு பிடிச்ச ஒரு படம் வாங்கிகிட்டு வந்திருக்கேன். தட்ஸ் ஆல். இதுல தேங்க்ஸ் சொல்ற அளவு ஒன்னுமே இல்லை. என்னமோ வேல்ட் பேங்கில பத்து கோடி ரூபாய் கடன் வாங்கிக் கொடுத்துட்ட மாதிரி உணர்ச்சி வசப்பட்ற.''

''இதுக்கு எத்தனை கோடி கொடுத்தாலும் ஈடாகாது.''

''சென்டிமென்டா... படுத்துத் தூங்கு... நான் உன் ப்ரண்டுடி... பெத்த குழந்தைக்கு, தன் பாலைக் கொடுத்துட்டு... பால் குடிச்ச குழந்தை தனக்கு தேங்க்ஸ் சொல்லணும்னு எந்தத் தாயும் எதிர்பார்க்க மாட்டா... அந்த மாதிரி ஒரு உணர்வு தான். இதுக்குப் போய் நன்றி. அப்படி இப்படி சொல்லி விலகிப் போய்டாதே.''

''..........''

''ஆமாம்! ரெண்டு நாளா என்ன பண்ணின?'' பேச்சை மாற்றினாள்.

''பயங்கர போர். அதுவும் தனியா இருக்க ரொம்ப பயமா இருந்திச்சி.''

''....''



''நீ டூரைப் பத்தியே எதுவும் பேசலை. என்ஜாய் பண்ணினியா?''

''இல்லடி'' சலிப்பாகக் கூறினாள்.

''ஏன்?''

''ஏன்டா போனோம்னு ஆயிடுச்சி.''

''ஏன்?''

''நல்ல மூடை ஒருத்தன் ஸ்பாயில் பண்ணிட்டான்.''

''எங்கே திரும்பச் சொல்லு... ஒருத்தனா?'' கேட்டபடி ஒரு தலையணையை எடுத்து தன் மடியில் வைத்துக் கொண்டு துளசியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

''எஸ்.''

''என்ன பண்ணினான்?''

''பஸ்ஸிலேயே தொந்தரவு.''

''என்ன பண்ணினான்... அதைச் சொல்லு.''

''ஐ லவ் யூன்றான்.''

''அடக்கடவுளே! உங்கிட்ட போயா?''

''கிண்டலா?''

''இல்லம்மா... உங்கிட்டே ஐ லவ் யூன்னா என்ன நிலமைன்னு எனக்குதானே தெரியும்.''

''நான்தான் பஸ்ஸிலே கடைசியா ஏறினேன். அவன் பக்கத்துலதான் சீட் இருந்தது.''

''வெரி இன்ட்ரஸ்டிங்... மேலே சொல்லு'' யார் அந்த துரதிர்ஷ்டசாலியோ என்று தோன்றினாலும் மேலும் கேட்க ஆர்வமானாள்.

பஸ்ஸில் அருகில் அமர்ந்ததில் இருந்து கடைசியில் தான் விட்ட அறை வரை ஒன்று விடாமல் எல்லாவற்றையும் ஒப் பித்தாள்.

அமைதியாகவே இருந்தாள் மும்தாஜ். அதற்கு முன்பு படபடவென பேசியவள். அப்போது மவுனமாகவே இருந்தாள்.

''என்ன... ஒன்னுமே பேசாம முழிக்கிற?''

''நான் முழிக்கல... நீ முட்டாள்தனம் பண்ணிட்ட.''

''நானா?''

''எஸ்... நீதான்... நீதான் தப்பு பண்ணிட்ட.''

''நானா... தப்பா... என்னடி உளர்ற?''

''உளறல... நீ உணர்ச்சி வசப்பட்டுட்ட. கை நீட்டி இருக்கக் கூடாது.''

''மும்தாஜ்... அவன்.''

''என்ன தப்பு... நீ யாரையோ லவ் பண்றன்னு நினைச்சி கிட்டு பெருந்தன்மையா விஷ் பண்ண வந்தான். நீ யாரையும் காதலிக்கலைன்னு தெரிஞ்சதும்... ஏற்பட்ட சந்தோசம் கையைத் தொட்டுட்டான். நீ நாசுக்கா தட்டி விட்டுட்டு வந்து இருக்கலாம்.''

''ஏய்... புரியாம.''

''நான் புரியாமப் பேசல... யாருக்குமே தெரியாத விசயத்தை... ரிசப்ஷன்ல ஓங்கி அறைஞ்சி எல்லாத்துக்கும் தெரியப்படுத் திட்ட.''

''..........''

''காதல வெளிப்படுத்தறதுல லெட்டர்தான் பெஸ்ட் மெத் தட். கஜினி முகம்மது இந்த ஜேம்ஸ்கிட்டே பலமா தோத்துப் போய்ட்டான். எத்தனை லெட்டர்ஸ்... ஒன்னையாவது



பிரிச்சிப் படிச்சி இருப்பியா? படிச்சிருந்தா.... அன்னைக்கே எனக்கு இதெல்லாம் புடிக்காதுன்னு நீ சொல்லி இருக்கலா மில்ல... அவனும் இந்நேரம் மனசைத் தேத்தி இருப்பான்.''

''நீ சப்போட்டா?''

''அவன் யாரு நான் சப்போர்ட் பண்ண? நீ தப்பு பண் ணிட்டியேன்னு தான் சொல்றேன். உன்னை அவனுக்கு ரொம்பப் பிடிச்சிப் போச்சி போல இருக்கு. அதை உங்கிட்ட வெளிப்படுத்த அவனுக்கு உரிமை இருக்கு. அவன் ஒன்னும் உங்கிட்டே அநாகரீகமா நடந்துக்கலையே... ரூமுக்குள்ளே பேசினா உன் பேர் கெட்டுப் போயிடும்னு.. ரிசப்ஷனுக்கு கூட்டி வரும்போதே அவனைப் பத்தி நீ தெரிஞ்சிக்க வேணாம். எஸ்சுன்னா எஸ்சுன்னு சொல்லு... நோன்னா நோன்னு சொல்லிட்டுப் போ... உன் பாஷையில ஸோ சிம்பிள். இதுக்குப் போய் கையை ஓங்கிட்டியே.''

''எனக்குக் காதல்னாவே புடிக்காது. உனக்கே தெரியு மில்ல?''

''இது ஜேம்ஸ்சுக்குத் தெரியணும்னு நினைக்கிறது முட்டாள் தனம். சாதாரண முட்டாள்தனம் இல்லை வடிகட்டின முட் டாள்தனம்.''

''.......''

''ஏன் மவுனமாயிட்ட... திரும்ப அவன் வயலின் க்ளாஸ் வரணும். எல்லாரையும் எப்படி அவன் ஃபேஸ் பண்ணு வான்?''

''அதைப்பத்தி எனக்குக் கவலை இல்லை'' துளசியின் விழிகள் கோபத்தோடு உறவாடத் துவங்கின.

''பாவம்டி.''

''அந்தப் பொறுக்கிக்கு நீ ஜால்ரா'' துளசியின் முகம் சிவக்கத் துவங்கியதும்.

''நீ படு துளசி... காலையில பேசிக்கலாம்...'' என்றாள் மும்தாஜ்.

''எங்கூட இவ்வளவு நாள் பழகியும், நீயே புரிஞ்சிக் கலையே மும்தாஜ். தப்புப் பண்ணக் கூடாதுன்னு ரொம்ப கேர்புல்லா இருக்கிறவ நான். ஏன்னா... ஏன்னா...'' அதற்கு மேல் பேச முடியாமல்... எழுந்து டவலை எடுத்து முகத்தை துடைத்துக் கொண்டாள்.

இனிமேல் துளசியை எதுவும் கேட்கக் கூடாது என்ற எண்ணத்தோடு மும்தாஜ் பார்க்க, பெட்ஷீட்டை இரண்டு முறை உதறிப் போட்டு... தலையணையில் தலை வைத்துக் கண்களை மூடிக் கொண்டாள்.

''துளசி.''

கண்களைத் திறந்து பார்த்தாள்.

''எம்மேல கோபமா?''

''ம்கூம்.''

''ம்... சொல்லு... ஆள் எப்படி?''

''நல்லா இருப்பான்'' என்றாள்.

''பாக்கணுமே'' என்றவளை எரித்து விடுவது போல் பார்த்ததும்... உதட்டை மடித்து, தன் தலையிலேயே இரண்டு கொட்டுக்களைப் போட்டுக் கொண்டு...

''தப்பு... தப்பு... வாய் தவறி வந்திடுச்சி'' என்றபடி தன் கட்டிலில் தன் உடலைச் சாய்த்தாள் மும்தாஜ். இருவருமே இமைக் கதவை சாத்தி விழியை மூடினார்கள். துளசியின் விழிக்குள் ஜேம்ஸ் சிரித்தான். திறந்து திறந்து மூடிப்



பார்த்தாள். விடாப் பிடியாக அவன் உருவம் மறைய மறுத்தது. பொட்டுப் பொட்டாக அவளுக்கு வேர்க்கத் துவங்கியது. மூன்று வருடங்களுக்கு பிறகு இரவு கனவில் ஒரு இளைஞன். மெல்ல உடல் நடுங்கத் துவங்கியது.

அடுத்த நாள் கிடைக்கப் போகும் அதிர்ச்சிக்கு... அப்போதே அவள் உள்ளம் அவளுக்குத் தெரியாமல் அலறத் துவங்கியது.

# 4

தன் அலுவலகத்திற்கு அருகிலேயே, நடந்தால் எட்டி விடும் தூரத்தில் உள்ள புகழ்மிக்க மெரீனா பீச்சில் ஆரவாரம் இல்லாத, ஆள் நடமாட்டம் குறைந்த இடமாகப் பார்த்து முழங்கால் இரண்டையும் கைகளால் கட்டிக் கொண்டு, வந்து வந்து போகும் அலைகளை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் துளசி. அலுவலகம் முடியும் முன்னரே, ஹெட்கிளார்க்கிடம் பர்மிஷன் வாங்கிக் கொண்டு, இங்கு வந்து உட்கார்ந்து இரண்டு மணி நேரங்கள் கடந்து விட்டன. மனம் இன்னும் அமைதிக்கு வந்தபாடில்லை.

எத்தனை முறை கரையை அலைகள் தொட்டாலும் தழுவி தழுவிப் பார்த்தாலும், கரையோடு அலை கொண்ட காமம் தீர்ந்தபாடில்லை. எப்போதும் அதே ஆவேசம் சீற்றம். தணிந்து செல்லும் குழைவு. பார்த்துக் கொண்டே இருந்தாள். அந்த அலைகளுக்கும், தன் எண்ண அலைகளுக்கும் வித்தியாசம் அதிகம் இல்லையோ என்று கூடத் தோன்றியது. நேற்று விழிக்குள் ஜேம்ஸின் உருவம் சிக்கிக் கொண்டதில்

இருந்து இதே தவிப்பு தான். புரிந்து கொள்ள முடியாத ஏதோ ஓர் பயம். எப்படிச் சொல்வது? யாரிடம் சொல்வது? எதைச் சொல்வது? பட்டிமண்டபமும் நடத்திப் பார்த்தாயிற்று... எல்லாம் அவளே என்பதால் சரியான முடிவுக்கு வர முடிய வில்லை. மறக்க வேண்டும் என்று எண்ணியிருந்த... கிட்டத் தட்ட மறந்தே போயிருந்த நினைவுகள் அவள் மனதை சப்பாத்தி மாவாகப் பிசைந்தன. சுற்றும் முற்றும் பார்த்தாள். இருட்டத் துவங்கி இருந்தது. எழுந்து நடக்கத் தொடங் கினாள்.

பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றாள். மணி பார்த்தபோது... ஏழு மணி, 35 நிமிடம், 8 விநாடிகள் என்று காட்டியது. கொஞ்ச நேரத்தில் 210 வந்ததும். ஏறி டிக்கெட் வாங்கி, வாட்ச் ஸ்ட் ராப்பில் செருகிக் கொண்டதும், கண்களை மூடிக் கொண்டாள்.

மூட்டிய விழிகளுக்குள் ஜேம்ஸ் சிரித்தான். படக்கென விழிகளைத் திறந்தாள். அவனை அடிக்காமல் இருந்திருந் தால், இதுபோல் எதுவும் தோணியிருக்காதோ... இப்படி குழம்பிக் கொண்டு சரியான ஸ்டாப்பிங் இறங்கி... பக்கத்து வீட்டுக் கதவைத் தட்டாமல் ஹாஸ்டல் கேட்டிலேயே கை வைத்து, உள்ளே சென்றது, அவளைப் பொருத்தவரை மிகப் பெரிய ஆச்சர்யம்தான். தன் அறைக் கதவைத் திறந்தாள்.

'இன்னும் மும்தாஜ் வரலையா?.. இல்லை வந்தும் இந்த முண்டம் லைட் கூடப் போடாமல் இருக்கா... ஒண்ணும் புரி யலையே...' தனக்குள் பேசிக் கொண்டே ஸ்விட்சைத் தட்டி னாள். அநியாயத்துக்கும் சிணுங்கிக் கொண்டு ட்யூப் லைட் எரிந்தது. சடையைத் தூக்கி இறுக்கிக் கொண்டை போட்டாள். சேலையில் உள்ள ஒவ்வொரு ஊக்கையும் கழற்றி கட்டில் மேல் போடும்போது...

''துளசி.''



குரல் கேட்டு திரும்பினாள். சேலை நழுவ மார்போடு பிடித்துக் கொண்டாள். கதவருகே சுஜாதா பக்கத்து ரூம்.

''ஒரு பேட் நியூஸ். மும்தாஜ், இவ்வளவு நேரமும் உன்னை எதிர்பார்த்துதான் இருந்தா... நீ வரவே இல்லை. ஆபீஸ்க்குப் போன் பண்ணிக் கூட பார்த்தோம். நீ பர்மிஷன் போட்டுக் கிளம்பிட்டதா சொன்னாங்க.''

''மும்தாஜுக்கு என்ன?'' அவசரமாகக் கேட்டாள்.

''மும்தாஜுக்கு ஒண்ணுமில்லை, அவ ஊருக்குப் போயி ருக்கா, அன்பார்ச்சுநேட்லி நீ லேட். அவளால வெயிட் பண்ண முடியல.''

''சுஜா விஷயத்தைச் சொல்லு.''

''மும்தாஜோட அப்பா இறந்திட்டார்.''

''வாட்!'' சேலைத் தலைப்பை நழுவ விட்டாள்.

''எஸ்... ஹெர் ஃபாதர் ஈஸ் நோ மோர்.''

''எப்போ? எப்படி?''

''தெரியலை. தந்தி வந்தது.''

''மை காட்!'' கட்டில் மேல் அப்படியே உட்கார்ந்து கொண்டாள். கருகருவென கண்ணீர் சுரக்கத் துவங்கியது. மும்தாஜுக்கு இருந்த ஒரே சொந்தம் ரத்த பந்தம். அவரும் இந்த நொடி இல்லை. இவள் கதறி அழக்கூட ஆதரவான தோள் அங்கே இல்லையே... அடி வயிற்றில் இருந்து பந்தாக எழுந்த உணர்வு, நேராகத் தொண்டையை அடைத்து நின்றது. பேசத் தொண்டை வரை வந்த வார்த்தைகள் கூட அப்படியே துக்கத்தில் சுருண்டு நசுங்கி அமுங்கியது. தன்னைப் போல் அவளும் அனாதையாகி விட்டாளா? அதுவரை கரகரவென சுழன்ற கண்ணீர் கூட ஏதோ சக்திக்கு கட்டுப்பட்டது போல்

நின்றது. துடைத்து விட்ட வானம் போல் மனம் வெறுமையானது. தான் அழுவதை விட சோகம் தாங்கி வருபவளுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் விழித்தாள். நேரில் சென்று வர வாய்ப்பும் உருவாகவில்லை. எண்ணி ஆறாவது நாள் காலையே கதவைத் தட்டினாள் மும்தாஜ்.

கதவு தட்டும் சத்தம் கேட்டதும், நினைவிற்கு வந்த துளசி, தலையணைக்கு அடியில் தன் வாட்ச்சைத் தேடினாள். கையில் அது அகப்பட்டதும், கண்களைக் கசக்கிக் கொண்டு விழிச்சிறையை விடுவித்தபோதுதான் நைட் லேம்ப் கூடப் போடாமல் படுக்கையில் சரிந்தது நினைவிற்கு வந்தது. வாட்ச்சை உற்றுப் பார்த்தாள். அதில் இருந்த ரேடியம், காலை 5.30 என்று காட்டியது. 'இந்த நேரத்தில்' கால்கள் பின்ன எழுந்தவள், ஸ்விட்சைத் தட்டினாள். கண்கள் கூசியது.

'மும்தாஜாய் இருக்குமோ?' சட்டெனத் தோன்றியதும், இதயம் எம்பிக் குதித்து அதிர்ந்தது. உடம்பிற்குள் குப்பென எதுவோ பற்றிக் கொண்டு எரிய... படபடப்பு மிகுந்தது. தாளை விலக்கினாள்.

கைகளில் சூட்கேஸோடு மும்தாஜ். சல்வார் அணிந்து இருந்தாள். துப்பட்டா பாதி தலையை மறைத்தபடி கழுத்தைச் சுற்றியிருந்தது. பளீர் என சிரிப்போடு இருக்கும் அவள் முகத்தில் தன் வாப்பாவை இழந்த துக்கம் அப்பட்டமாகத் தெரிந்தது.

மும்தாஜின் கையில் இருந்த சூட்கேஸை வாங்கிக் கொண்டாள். மும்தாஜ் எதுவும் பேசாமல் உள்ளே நுழைந்ததும், கதவை சாத்தித் தாழிட்டு விட்டு சூட்கேஸை அறையின் ஓர் ஓரமாக வைத்து விட்டு, மும்தாஜைப் பார்த்தாள். அவள் துளசியின் கட்டிலில் போய் அமைதியாக அமர்ந்து இருந்தாள். அருகே சென்ற துளசி மும்தாஜின் முன்பாக அமராமல், அவள் பின்னால் அமர்ந்து, அவளின் பின்புறத் தோளை அழுத்தமாகப் பற்றினாள்.



அவளின் அழுத்தமான பிடிக்கு ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன.

''நான் இருக்கேன்.''

''கவலைப்படாதே.''

''டேக்கிட் ஈஸி.''

''இதுதான் வாழ்க்கை.''

''இது இயற்கை'' இது போன்ற எத்தனையோ அர்த்தங்கள். தலையைக் குனிந்தபடியே இருந்தாள் மும்தாஜ். துளசியின் இன்னொரு கை அவளின் முதுகை ஆதரவாகத் தடவிக் கொண்டு இருந்தது.

''ஐ அன்டர்ஸ்டேன்ட் யூ.... உன்னோட பீலிங்ஸை என்னால புரிஞ்சிக்க முடியுது. அன்னைக்கு கொஞ்சம் லேட்டாயிடுச்சி. ஐ'ம் ஸாரி.''

''........''

''மும்தாஜ், உன் நிலை எனக்குப் புரிஞ்சாலும், சேர்ந்து அழ எனக்கு விருப்பம் இல்லை. இப்போதான் நீ தைரியமா இருக்கணும். கதவு சாத்தப் பட்டால் ஜன்னல் திறக்கும். நம்ம வாழ்க்கையே இழப்புங்கற கோட்டைக்குள்ளே தானே இயங்கிக் கிட்டு இருக்கு. இந்த உலகத்துல பிறந்ததுமே அழ ஆரம்பிக்கின்றோம். என்ன பாடுபடப் போறோமோ... எதை எதை இழக்கப் போறோமோங்கற துக்கம். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும் காலத்தையும் வயதையும் இழக்கிறோம். பள்ளிப் பருவத்துல எத்தனையோ இழப்புகள். சம்பிரதாயப்படியும் சாஸ்திரப்படியும், கட்டிக்கிட்டவங்ககிட்ட நம்மையே இழக்கிறோம். குழந்தைகளுக்காக ஆரம்பத்துல தூக்கத்தை இழக்கிறோம். போகப் போக சகலத்தையும் இழக்கிறோம். போகும் போது நாம தனியாத் தான் போறோம்.

எவ்வளவு பிரியமானவங்களாக இருந்தாலும் கூட வர்றதில்லை. ஆறடி மண்ணுகூட இந்த உலகத்துல நமக்கு சொந்தமில்லை மும்தாஜ். எரிச்சிட்டாங்கன்னா சாம்பலை தண்ணீரில் கரைச்சிடுவாங்க. புதைச்சிட்டா கொஞ்ச நாள்ல தோண்டிப் போட்டுட்டு... வேற சடலத்தைப் புதைச்சிடுவாங்க... மனசைத் தேத்திக்க..."

"..........."

"உன்னோட மவுனம் எனக்குப் புரியுது. எனக்கொரு நிலை இப்படி வந்தால்தான் தெரியும்னு தோணுதா? இதையெல்லாம் விட கஷ்டமான நிலையெல்லாம் நான் தாண்டிட்டேன் மும்தாஜ். துக்கம், சோகம், ஏமாற்றம், இழப்பு... இது தான் ஒரு மனிதனை பண்படுத்தும்ங்கறது என்னோட அபிப்ராயம்... ஒருவேளை அதனால்தான் இப்படியெல்லாம் பேசறேனோ என்னவோ தெரியலை."

"........."

"மும்தாஜ்!" அவளைத் தன் புறமாகத் திருப்பினாள். முகத்தை நிமிர்த்தினாள். அணையை உடைத்துக் கொண்ட ஆவேச சீறலாக கண்ணீர் புறப்படத் துவங்கியது. கண்ணீரைத் துடைக்க வந்த துளசியின் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, கதறத் துவங்கினாள், மும்தாஜ். அவள் அழுது முடிக்கட்டும் என்று, அவளின் தலையையும் முதுகையும் ஆதுரத்தோடு தடவினாள். ஆவேசமாக புறப்பட்டு வந்த அழுகை, மெல்ல மெல்ல சுதி குறைந்து, தேம்பலில் வந்து நிற்கும் வரை பொறுமையோடு காத்திருந்தாள் துளசி.

"எப்படி?"

"ஹார்ட் அட்டாக்."

"........"



"எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. பேசாம டிஸ்கன்டியூ பண்ணிடலாமான்னு பாக்குறேன்."

"ஏன்?"

"வாப்பா இருக்கும்போதே உனக்குத் தொல்லை குடுத்துக்கிட்டு இருந்தேன். இனிமே வேண்டாம்."

"அப்புறம்?"

"தெரியலை."

"இந்த நிமிஷமே என்ன பண்றதுன்னு உனக்குத் தெரியலை. நீ டிஸ்கன்டினியூ பண்ணிட்டு என்ன பண்ணப் போறே... இன்னம் நாலு மாதம் இருக்கு. படிப்பு முடிய... எம்.எஸ்ஸியை கம்ப்ளீட் பண்ணினால் ஒரு வேலைக்கு ட்ரை பண்ணலாமில்ல."

"........."

"கேக்கறேனேன்னு தப்பா நினைக்காத, அன்பைத் தவிர உங்க வாப்பா உனக்கு எதுவுமே வச்சிருக்கலையா?"

நிமிர்ந்து பார்த்தவள், தலையாட்டிவிட்டு தலை குனிந்தாள்.

"சொந்தக்காரங்க?"

"அவங்க இல்லாத இருக்கறதே நல்லது. இருந்த குடிசையையும் கடன்ற பேர்ல பிடிங்கிட்டாங்க. என்னை முழுதாக விட்டதே அல்லாவோட கிருபை."

"இனிமே என்ன பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்க?"

"படிப்பை நிறுத்திட்டு வேலை தேடப் போறேன்."

"இன்னும் நாலு மாசம்தான் இருக்கு படிப்பு முடியல... நான் இருக்கறதை மறந்திட்டியா?"

"மறக்கல. உன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாங்கற முடிவு."

"ஏன்?"

"சில விஷயங்களுக்குக் காரணமே தெரியாது. ஆனா மனசு தடுக்கும். அது மாதிரிதான்."

"மும்தாஜ்!"

"என்னை மன்னிச்சிடு துளசி. இத்தனை நாளா நீ பண்ணிய அத்தனை உதவிக்கும் பிரதியுபகாரமாக என்னால எதையும் செய்ய முடியாது. நீ செய்ய நினைக்கிற உதவி அளவுக்கு நம்ம நட்பு இல்லை. நட்பில் இரண்டு குணங்கள் உண்டு. ஒன்னு தன் தோழி தன்னிடம் பழகிய நாட்களில் இருந்து அவளைப் பற்றி தெரிந்தால் போதும்னு நினைக்கிற மனப்போக்கு. இன்னொன்று தன் தோழியின் இறந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம் எல்லாம் தெரிஞ்சிக்கணும். தெரியணும்னு நினைக்கிற மனப்போக்கு.

"இதுல நாம ரெண்டு பேரும் எந்த வகை? நீயே யோசிச்சிப் பார். உன்னோட எந்தக் காலமும் எனக்குத் தெரியாது. ஆனா என்னோட அத்தனை காலமும் உனக்குத் தெரியும். எந்த விதமான அன்பா இருந்தாலும் ரெண்டு பக்கமும் சமமாக இருக்கணும். நாம அப்படி இருக்கோமா? நான் ஒரு பைத்தியக்காரி. நான் எதிர்பார்க்கிற எதுவுமே எனக்குக் கிடைக்கிறது இல்லை. நான் அன்பாத்தான் இருப்பேன். உயிராத்தான் நினைப்பேன், மத்தவங்க அப்படி நினைக்கிறது இல்ல. இது என்னோட முகராசின்னு கூடச் சொல்லலாம். நான் அவங்கதான் உலகம்னு நினைப்பேன். ஆனா அவங்க நான் இல்லாத வேறு ஒரு உலகத்துல இருப்பாங்க. இது எம் மேல விதிக்கப்பட்ட சாபம். அப்படி இருக்கும்போது, நீயும் என்னைப் போலவே இருக்கணும்னு நினைக்கிறது பைத்தியக்காரத்தனம்" படபடவென பொறிந்து தள்ளினாள். எதையோ ஆரம்பித்து எதையோ அவளின் பேச்சு முடித்தது.



மும்தாஜின் கண்களை நேருக்கு நேர் சந்தித்த துளசி,

"நட்பில் மூன்று வகை உண்டு. தன் தோழிக்காக எல்லாத்தையும் விட்டுக் கொடுக்கிறது. அவ மனசுல உயர்ந்த அந்தஸ்துல நிறைஞ்சி இருக்கணும்னு நினைக்கின்ற மனோபாவம். இந்த வகை நான். என்னைப் பத்தி பேச பயமா இருக்கு. காந்தியோட வாழ்க்கை வரலாறை தெரிஞ்சிக்கலாம். கோட்சேவை எதற்குத் தெரிஞ்சுக்கணும்? ஏற்கனவே சொல்லி இருக்கேன். ரிஷி மூலம், நதி மூலம் பார்க்கக்கூடாது. பார்த்தால் பிரச்சினை. இன்னைக்கு பிரச்சினைக்கு உரிய காவேரி. தோன்றியிருக்கிற இடம் ஒரு ஆடு தாண்டக்கூடிய இடமாம்... நம்ப முடியுதா... இல்லல்ல. ஆனா அதான் உண்மை."

"நீ அழகா, அற்புதமா உதாரணம் சொல்லுவன்னு எனக்கு நல்லாவே தெரியும். எனக்கு அது தேவையில்லை" எனக் கூறி விட்டு எழுந்த மும்தாஜின் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தாள்.

"நான் சொல்றதைக் கேளு."

"உன்னைப் பத்தி சொல்லு கேட்கிறேன். இப்போ எனக்கு என் வாப்பா கூட இல்லை. நீதான். எனக்குன்னு எல்லாமே நீதான். அப்படிப்பட்ட உன்னை பத்தி முழுதாகத் தெரியாமல் என்னால் இருக்க முடியாது."

துளசியின் முகத்தில் சிறிய மாற்றங்கள் நிகழ்ந்தன.

"சொல்லணுமா?"

"ஆமா?"

''நீயும் என்னை விட்டுப் போய்டக் கூடாதுன்னு, நான் மறுக்கிறேன். நான் மறுத்தால் நீயே விலகிப் போய்டறதா சொல்ற. ஓ.கே. எல்லாத்தையும் கேட்டுட்டு நீயே முடிவெடு. நான் பிறந்ததில் இருந்து இன்று வரை விளக்கமா சொல்ல இப்போ நேரம் இல்லை. ஏன்னா கிளம்பி ஆபீஸ் போகனும். அதுக்கு முன்னால ஒரு வரியில என்னைப் பத்தி சொல்லிட றேன்'' என தயக்கமாக மும்தாஜின் முகத்தைப் பார்த்தாள்.

''இம்... சொல்லு...''

''பெருமையா சொல்லிக்கிற மாதிரி என் வாழ்க்கையில எதுவுமே இல்லை. சொல்லிக்க முடியாத விஷயங்கள்தான் நிறைய இருக்கு. அதுல மிக முக்கியமான ஒண்ணு... நான் ஒரு நடத்தை கெட்டவள். சொல்ல, நினைக்க அருவெறுப்பா குமட்டுதுதான். என்ன பண்றது? சில நேரம் உண்மை அசிங்க மாகவும் அருவறுப்பாகவும் தானே இருக்கு. இதுக்கு மேல என்னிடம் பேசவே நீ யோசிப்பன்னு நினைக்கிறேன். நிதா னமா முடிவெடு'' கூறி விட்டு எப்போதும் போல் அலுவலகம் கிளம்ப ஆயத்தமானாள்.

நெருப்பு இடி விழுந்து இருந்தால்கூட மும்தாஜ் அந்த அளவு நிறம்மாறி கருகிப் போய் இருக்க மாட்டாள். அவளின் வாப்பா இறந்த அதிர்ச்சி கூட ஏதோ ஒரு மூலையில போய் ஒளிந்து கொண்டது.

''துளசி அப்படிப்பட்ட பெண்ணா?'' நினைத்துப் பார்க்கும் போதே மூச்சுக் காற்றில் கெட்ட நெடி கலந்தது போல் இருந்தது.

## 5

இரண்டு நாட்கள் யுகம் போல் இருவருக்குமே நகர்ந்தது. இருவரும் பேசிக் கொள்ளவும் இல்லை. இருவருக்கும்



இடையில் மிகப் பெரிய கான்க்ரீட் சுவர் எழுப்பப்பட்டது போல் உணர்ந்தார்கள். மன்னிப்பைப் போல் கொடுமையான தண்டனையும் இல்லை. மவுனம் போல் கொடுமையான ஆயுதமும் இல்லை. உணர்ந்து தவித்தனர். எப்போதும் வயலின் க்ளாஸ் போய் வரும்போது ரிலாக்ஸாக இருக்கும் துளசி. இப்போதெல்லாம் இறுகிப் போய் வந்தாள். குழப்பம் வெளியில் விழுந்த கண்ணாடி போல் பிரதிபலித்தது. கேட்க மும்தாஜின் மனம் துடித்தாலும், வாய் வரை வந்த வார்த்தை களை எச்சிலோடு விழுங்கி... ஜீரணிக்க வைத்தாள். மும்தாஜ் கல்லூரியை விட்டு நிற்கவில்லை என்பதை மட்டும் அறிந்து, நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் துளசி. இந்த மவுனப் புரட்சி வெற்றிகரமாக ஐந்தாவது நாளையும் தொட்டது.

ஆறாவது நாள் காலை ஞாயிறாக அமைந்தது. எப் போதும் லேட்டாக எழும் துளசி, சீக்கிரமாகவே எழுந்தாள். மும்தாஜ் எந்திரிக்கும் முன்பே காபி கொண்டு வந்து மூடி வைத்தாள். தன் டவலை எடுத்துக் கொண்டு பாத்ருமிற்குள் நுழைந்து, அவள் உடை களைந்து... சோப்பு போடும் போது, இங்கே மும்தாஜ் எழுந்தாள். ப்ரஷ் பண்ணிவிட்டு, காபியைக் குடித்து விட்டு, தன் கட்டில் மேலேயே சம்மணம் இட்டு அமர்ந்து கொண்டாள். மனம் துளசி எங்கே என்று கேட்டா லும் முகத்தில் சலனம் இல்லை.

உள்ளே நுழைந்த துளசியை ஏறிட்டுப் பார்த்தாள் மும்தாஜ்.

'காலையிலேயே எங்கே கிளம்பிட்டா?' உள்ளுக்குள் கேள் விக்குறி. முதுகை வளைத்து நின்றது.

''மும்தாஜ்'' தயக்கமாக துளசியின் குரல் பிசிறு தட்டி கரகரத்தது. அதற்காக காத்திருந்தாற் போல்.

''ம்.'' என்றாள்.

''உன்னோட ப்ரண்ட்ஷிப் தொடருமான்னு இப்போ நான் கேக்கலை... ஒரு ஒன் ஹவருக்கு என்னோட வெளியே வர முடியுமா?''

''.........''

''எதுக்குன்னு நீ கேட்காட்டியும் சொல்ல வேண்டிய நிர்ப் பந்தத்தில் இருக்கேன். உனக்கு மட்டும் இல்லை. இன்னொரு ஜீவனுக்கும் என்னைப் புடம் போட்டுக் காட்ட வேண்டிய கட்டாயம். கனவில் கூட தோன்றக் கூடாதுன்னு நினைக்கும் என்னுடைய கடந்த கால வாழ்க்கையை... இரண்டு முறை விளக்க எனக்கு விருப்பம் இல்லை. அதனால இரண்டு பேரையும் ஒண்ணா உட்கார வைத்து சொல்லிட்றதுங்கற முடிவிற்கு வந்து விட்டேன்.''

''எத்தனை மணிக்கு நான் கிளம்பணும்'' மும்தாஜின் குரலில் எந்தவித உணர்ச்சியும் இல்லை.

''இன்னும் ஒரு மணி நேரத்துல.''

''சரி'' என்றபடி குளியலுக்குத் தேவையான அனைத்தை யும் சுருட்டிக் கொண்டு கீழே இறங்கினாள். அவள் போவ தையே இமைக்க மறந்து பார்த்த துளசி... இமைக்குள் சுரந்த நீரை மட்டும் அனிச்சையாய் சுண்டி எறிந்தாள்.

இருவரும் ஹாஸ்டல் கேட்டை சாத்தி விட்டு வெளிவந்த போது சரியாக மணி 7.30. துளசி சேலையிலும், மும்தாஜ் சல்வாரிலும் இருந்தார்கள். மும்தாஜின் துப்பட்டா காலைக் காற்றின் சீற்றத்தை சமாளிக்க முடியாமல் பறக்கத் துடித்தது. அதை சரி செய்தபடியே துளசியின் பின்னால் தொடர்ந்தாள். அந்தத் தெருவை விட்டு வெளிப்பட்டு ஆவின் ரவுண்டானா விற்கு வந்தார்கள். கதவு திறந்திருந்தது. அதைத் தள்ளி விட்டு ஆவின் பார்க்கின் உள்ளே நுழைந்தவளை, எதுவும் பேசாமல் நெற்றியைச் சுருக்கியபடி தொடர்ந்தாள் மும்தாஜ். அந்த



நேரத்தில் யாருமே இல்லை. சுற்றும் முற்றும் பார்த்த துளசி நடுவில் உள்ள ஒரு மரத்தை தேர்ந்து எடுத்து, மரத்திற்குக் கீழே படர்ந்து இருந்த புல்வெளியில், புல்லுக்கு வலிக்குமோ என்ற தயக்கத்தோடு மென்மையாக அமர்ந்தார்கள். அவர் களின் காலில் இருந்த செருப்பு அவர்களுக்கு முன்பு கழட்டி விடப்பட்டு இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தபடி ஐந்து நிமிடங்களைப் பிடித்து தள்ளிய மும்தாஜ்....

மெல்ல செருமினாள்.

துளசியின் பார்வை ஆவின் பார்க்கின் உள்ளே நுழையும் அத்தனை வழிகளிலும் மேலும் அலை பாய்ந்து கொண் டிருந்தது.

''யாரை எதிர்பார்க்கிறே?... ஜேம்ஸா?'' மிகவும் சிரமப் பட்டு வார்த்தைகள் உதிர்ந்தன.

மும்தாஜை திரும்பிப் பார்த்த துளசி...

''ம்...'' என்றாள். அவள் முகத்தில் சின்ன மகிழ்ச்சி கோடாக மின்னி மறைந்தது. மேலும் பேச துளசி எத்தனித்த போது... ஜேம்ஸ் ஆவின் உள்ளே நுழைந்து கொண்டிருந் தான். நுழைந்தவனுக்கு இவர்களைக் கண்டு பிடிப்பதில் சின்ன சிரமமும் ஏற்படவில்லை. அந்த சின்ன பார்க்கில் இருப்பதே இவர்கள் இரண்டு பேர்தான். இவர்களை நோக்கி கம்பீரமாக நடந்து வந்தான். ப்ரவுன் கலர் பேண்ட், ஆஸ் கலர் டீ சர்ட், கலையத் துடிக்கும் க்ராப்பை அலட்சியமாக இடது கையால் கோதியபடி இவர்களை நெருங்கினான். கண்ணாடி, முன்பு அரை மணி நேரமாவது நின்றிருப்பான் போல் இருந்தது. முகத்தில் கவர்ச்சியான மனதை அள்ளும் களை. துளசியை மட்டும் தனியாக எதிர்பார்த்து இருப்பான் போலிருக்கிறது. அவன் புருவங்களுக்கு இடையில் சின்னதாக ஒரு சுருக்கம் விழுந்து மறைந்தது.

அருகில் வந்து நின்று துளசியைப் பார்த்து,

''ஹாய்'' என்றான்.

துளசி எதுவும் பேசவில்லை. சிக்கனமாகச் சிரித்தாள். மும்தாஜ் அதை கவனிக்கத் தவறவில்லை.

''உட்காருங்க'' மும்தாஜ்தான் கூறினாள்.

''தேங்க்யூ'' என்றபடி அமர்ந்தவன்,

''உங்க பேர் என்னன்னு தெரிஞ்சிக்கலாமா?'' என்றான்.

''மும்தாஜ்.''

''அது நீங்கதானா?''

''என்னை முன்னாடியே தெரியுமா?''

''ம்... உங்க ப்ரண்ட் சொல்லி இருக்காங்க.''

துளசி அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமே இல்லாமல் இருவரும் பேசத் தொடங்கியதுமே அமைதியாக அவனைப் பார்த்தாள்.

''ஐஸ்க்ரீம் சாப்பிட்றீங்களா?''

''இவ்வளவு காலையில வேண்டாம். அது மட்டும் இல்ல நான் வேணும்னு சொல்லிட்டா.. உங்களுக்கு தர்மசங்கட மாயிடும்'' என்றாள் மும்தாஜ்.

''ஏன்...?'' புரியாமல் விழித்தான்.

''இன்னும் ஆளே வரலை.''

''ஓ... சாரி...'' அதற்கு மேல் இருவரும் எதுவும் பேச வில்லை.

ஏனோ தெரியவில்லை. துளசியின் கண்கள் சதா கலங்கிக் கொண்டே இருந்தது. அழுவதே பிடிக்காது என்று கூறுபவள்,



தன் கண்ணீரை அடக்கத் தெரியாமல் தத்தளித்தாள். கீழே ஏதோ தேடுவது போல் பாவனை காட்டி கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

''எனக்கு எப்படி ஆரம்பிக்கறதுன்னே தெரியலை. காத லிச்சே ஆகணும், நான் இல்லாம வாழ்க்கையே இல்லன்னு நீங்க புலம்புறீங்க. என் கடந்த காலம் தெரிஞ்சாதான் என் னோட நட்பையே ஏத்துக்குவேன்னு இவ மிரட்றா... உங்க ளோட பிரச்சினைகள் வேற வேறயா இருக்கலாம். ஆனா, அது ரெண்டுக்குமே எங்கிட்ட இருக்குறது ஒரே பதில்தான்.

''மிஸ்டர் ஜேம்ஸ் உங்களைக் காதலிக்கிற நிலையில் நான் இல்லை. எப்படி எப்படியோ சொல்லிப் பார்த்திட்டேன். அதை நீங்க காதுல வாங்கற மாதிரியே தெரியலை. நானே உங்களை விரும்பினால்கூட... குருடன் சூரிய உதயம் பார்க்க ஆசைப்பட்ற கதையாத்தான் இருக்கும்.''

''அதான் ஏன்... காரணம் சொல்லுங்க.''

''குடும்ப வாழ்க்கை என் வாழ்நாள் முழுக்க கானல் நீர்தான். காரணம்...'' என்று கூறப் போனவளின் தொடை யில் கை வைத்து அழுத்தினாள் மும்தாஜ். சொல்ல வேண்டாம் என்று தலையாட்டினாள்.

''அதை சொல்றதுல ஒண்ணும் தப்பில்லை மும்தாஜ். அதை மட்டும் சொல்லலைன்னா இந்த ஜேம்ஸ் என்னை விட்றா மாதிரி இல்லை. ஒரு நல்ல மனிதன் எதுக்காக என்னை நினைச்சி வாழ்க்கையை வீணடிக்கணும். அதுக்கு பதில் நான் வீணாப் போன கதையைச் சொல்லிடலாம்.''

ஜேம்ஸ் புரியாமல் இருவரையும் பார்த்தான்.

''நான் குடும்பப் பொண்ணு இல்ல ஜேம்ஸ். சில பேரோட படுக்கையை பகிர்ந்துகிட்ட பாவி நான்.'' அவள் கூறி முடிக்கும் முன்பே... அவன் கைகளில் அகப்பட்ட அத்தனை

புற்களும் வேரோடு வெளிவந்து, உயிருக்குப் போராடியது. கண்களை அகல விரித்து துளசியைப் பார்த்தான். இதழ் திறந்ததே தவிர வார்த்தைகள் காற்றாக வெளிவந்தன. கண்களில் ரத்தக் கோடுகள் தோன்றத் துவங்கின.

அவனிடம் நிகழ்ந்த மாற்றங்களைப் பார்த்து துளசி சிரித்தாள்.

''இப்படி ஒரு நிலைமை உங்களுக்கு வரக்கூடாதுன்னு... மறைமுகமா சொல்லிப் பார்த்தேன்... நீங்கதான் கேட்கலை.''

''..........''

மும்தாஜிற்கு மிகவும் சங்கடமாக இருந்தது. தனக்கு துளசியின் நடவடிக்கை பிடிக்கவில்லை என்றாலும் மற்றொருவன் தன் தோழியைத் தவறாகப் பார்ப்பானே என்ற எண்ணம் அவளுக்குள் பீறிட்டு எழுந்து தத்தளித்தது.

''இதற்கு மேலும் என் கதையைக் கேட்க விருப்பப் படறீங்களா?''

மயிர்க்கால்கள் குத்திட அதிர்ந்து போன ஜேம்ஸ்... தன்னை ஒரு வழியாக ஆசுவாசப்படுத்திக் கொண்டு. 'ஆமாம்' என தலையாட்டினான்.

''தாத்தா, பாட்டிகிட்டே கதை கேட்டு இருந்தீங்கன்னா... ஒரு ஐம்பது வருசத்துக்கு முன்னால எல்லாம் வேசி குலம்னு ஒரு சமுதாயமே இருந்துச்சுன்னு சொல்லி இருப்பாங்க. அந்தக் கால ராஜா, மிட்டா மிராசுக்கு எல்லாம் இவங்க வீட்டுங் கள்லதான் முக்கால்வாசி பொழுது போகும். இப்போ அப்படி இல்லை என்றாலும் அந்த வழி வந்தவதான் நானும்... சிலப்பதிகார மாதவிக்கும் என்னோட அம்மாவுக்கும் அப்படி ஒரு ஒற்றுமை... இரண்டு பேருமே பிறந்த வம்சத்தை ஒதுக்கிட்டு, ஒருத்தனுக்காகவே காலம் முழுக்க வாழணும், கழுத்துல கனமான தாலி தொங்கணும். நெற்றியிலும், நடு வகிட்டிலும் அழுத்தமாகக் குங்குமம் இருக்கும்போதே, கணவனோட மடியிலேயே உயிரை விடணும்னு, இப்படி ஒரு கற்பனை உலகத்தில் வாழ்ந்தாங்க. மாதவிக்கு ஒரு கோவலன் மாதிரி, எங்கம்மாவுக்கும் ஒருத்தன். மன்னிச்சிடுங்க. என் அப்பா யாருன்னே எனக்குத் தெரியாது. முகம் தெரியாத அந்த அப்பாவிற்கு நான் மரியாதை கொடுக்கத் தயாராக இல்லை. அந்த ஆள் நிச்சயமா அயோக்கியனாத்தான் இருக்கணும். நம்பி கூட வந்தவளை சந்தேகம் என்ற பெயரில் தாலி கட்டாமல் ஓடிய கோழை. எங்கம்மாவைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காகவே நான் கடைசி வரை என் அப்பன் பேரை கேட்கலை. ஆனா என் பேருக்கு முன்னாடி 'ஜி'ன்னு ஒரு இன்சியல் இருக்கு. அதுக்கு முழுச் சொந்தக்காரி என்னோட தாய் தான்... எங்கம்மா பேர் கங்கா.

''..........''

மும்தாஜ் உடம்பிலும், ஜேம்ஸ் உடம்பிலும் மின்சார ஒயரை செருகியது போல் ரத்தம் சுண்ட சுண்ட அவளைப் பார்த்தார்கள்.

''இந்தச் சமுதாயம்தான் பொம்பளைய கடவுள், தேவதைன்னு சொல்லுது. அதே சமுதாயம்தான் பொம்பளை வெறும் படுக்கைக்குன்னு எழுதப்படாத சட்டமாவும் நினைச்சிகிட்டு இருக்கு. ஆம்பளை பத்து வீட்டில் நுழைந்து வந்தாலும் பொம்பளைங்க ஏத்துக்கிறாங்க. ஆனா பொண்டாட்டி மேலே சின்ன சந்தேகம் வந்தாலும் கற்பே போய்ட்டதா பெரிய பஞ்சாயத்தே நடக்கும். தன் பொண்டாட்டி மட்டும் பத்தினியா இருக்கணும். இழுத்துப் போத்திகிட்டு நிக்கணும். மத்தவங்க அத்தனை பேரும் கண்ணுக்கு விருந்தா இருக்கணும்னு நினைக்கிற ஆம்பளைங்களை நம்பி, என்னையும் சுமக்க ஆரம்பிச்சிட்டா என் தாய். நான் பிறக்கிற வரை என் அம்மா பத்தினியாகத்தான் இருந்தாள். மாதவி போல் என் தாயால் துறவியாக முடியவில்லை. காரணம் நான்.

"ஆரம்பத்துல கூலி வேலை செஞ்சிதான் எங்கம்மா வாழணும்னு ஆசைப்பட்டா. சேத்துல காலை வைக்கும்போதெல்லாம் அடுத்த ஒரு மணி நேரத்துல எங்கம்மாவுக்கு பால் கட்டிக்குமாம்... வேதனை தாங்காம... மரத்துல தூக்கு கட்டி போட்டு இருக்க எங்கிட்டே ஓடி வருவாங்களாம்... இது தினமும் நடக்க ஆரம்பிச்சது. அந்த காட்டு சொந்தக்காரன் கண்களில் என் அம்மா பட்டுட்டா... என் அம்மாவோட அத்தனை விஷயமும் தெரிந்ததும்... இன்னும் வசதியா போச்சி... குடும்பப் பெண்ணாக இருந்தால் யோசித்து இருப்பான். வேசியர் குலம்தானே தொட்டுப் பார்க்கணும்னு தோணிப் போச்சு... பால் கட்டிகிட்டு, வலி தாங்காம ஓடி வந்த என் அம்மாகிட்டே... பாலா? படுக்கையான்னு பேரம் பேசி இருக்கான். அப்பவே என் கழுத்தைத் திருகிப் போட்டுட்டு... என் அம்மாவும் செத்து இருக்கலாம். ஏனோ அதைச் செய்யாமல் தன்னோட உணர்வு, ஆசை, கற்பனை, ஏக்கம் எல்லாத்தையும் கொன்னுட்டு... ஒவ்வொரு நாளும் செத்து என்னை வளர்த்தாங்க. மூணு வயசுக்கு மேலே என்னை அவங்களோட தங்க விட்டது இல்லை. பொத்திப் பொத்தி என்னை வளர்த்தாங்க. நானா கேள்வி கேட்கிறதுக்கு முன்னால, தானா சொல்ல ஆரம்பிச்சிட்டாங்க. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை என்னைப் பார்க்க ஹாஸ்டல் வந்திடுவாங்க.

"என்னிடம் எல்லா விஷயத்தையும் சொல்லும்போது... என் தாய் மானத்தை வித்துப் பிழைக்கிறாங்கற எண்ணத்தை விட, பரிதாபம்தான் அதிகமாத் தோணிச்சு. என்னைப் பெத்தவ ஒரு பாவப்பட்ட ஜீவன்." சொல்லிக் கொண்டு இருக்கும் போதே விம்மலாக அழுகை வெடித்துச் சிதறியது.

திகைத்துப் போன மும்தாஜ்... துளசியின் இரு கைகளையும் அழுத்தமாகப் பற்றிக் கொண்டாள்...



"ஏய்... துளசி... ப்ளீஸ்..."

"....."

031,3NV, N'x P7;1
A52336 / 6227174

"வேண்டாம் துளசி... இப்படி ஒரு பூகம்பம் வெடிக்குமுன்னு நான் எதிர்பார்க்கலை. நீ யாருக்குப் பிறந்தாலும் எப்படி வாழ்ந்தாலும் எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரிய வேண்டாம். எந்திரி போலாம்."

"சொல்ல ஆரம்பிச்சிட்டேன்... முழுசா சொல்லிட்றேன் மும்தாஜ்." தழுதழுத்தவள் மீண்டும் தொடங்கினாள்.

"காலேஜ் வாசல்ல என்னைக்கு கால் எடுத்து வச்சேனோ அன்னைக்கே எனக்கு சனியன் பிடிக்க ஆரம்பிச்சிடுச்சி. சின்ன வயசுல இருந்தே அம்மாவைத் தவிர வேற யாரையும் எனக்குத் தெரியாது. அதனால யாராவது அன்பாப் பேசுனா பனிக்கட்டியா உருகிப் போயிடுவேன். என் காலேஜ் மேட் மோகன். அவன் என்னைக் காதலிக்கிறதா சொன்னப்ப ஏத்துகிட்டேன். யோசிக்கவே இல்லை. என் அம்மாவோட வாழ்க்கையினால எனக்குக் கல்யாணம் ஆகாதோ என்ற பயம் எனக்கு இருந்ததால... அவனை இழந்திடக் கூடாதுன்னு அவனோட ஒவ்வொரு சொல்லுக்கும் உயிர் கொடுத்தேன். நான் பைனல் இயர் பண்ணும்போது... எக்ஸாம் முடிச்ச அடுத்த நாள் மோகனோட பர்த்டே... எனக்கு ட்ரீட் கொடுக்கறதா பெரிய ஹோட்டலுக்குக் கூட்டிகிட்டு போய், அவனோட பிறந்த நாளுக்கு என்னையே பரிசா கேட்டான். நான் தயங்கல. மறுத்தா என்னை விட்டுப் போயிடுவானோன்னு பயந்து, அந்த ஹோட்டல்ல என்னையே கொடுத்தேன். ஆனா, விதி போலீஸ் ரூபத்தில் ஹோட்டலுக்கு வந்திடுச்சி. என்னை யாருன்னே தெரியாதுன்னு சொல்லிட்டான். போலீஸ் ஸ்டேஷன் கம்பிகளுக்குப் பின்னால முழுசா ஒரு நாள் 20 வயசுல நின்னேன். என் அம்மா தான் தனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் மூலம் அபராதம் கட்டிட்டு ரிலீஸ் பண்ணி

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

கூட்டிகிட்டுப் போனாங்க. எங்கிட்டே பேசவே இல்லை. அப்போ...'' அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. அன்று நடந்தது அப்படியே அவள் முன்பு வெகுண்டு எழுந்து நின்றது. தொடர்ந்தாள்.

## 6

**ச**ர்... என தேய்த்துக் கொண்டு, குட்டி புழுதி புயலை உருவாக்கி விட்ட பின்னரே அந்த பஸ் நின்றது. துளசியும் கங்காவும் ஆளுக்கு இரண்டு சூட்கேஸோடு கீழே இறங்கி னார்கள். கிட்டத்தட்ட இரவு ஒன்பது மணியை நெருங்கிக் கொண்டிருந்த நேரம் என்பதால், அது கிராமமா? இல்லை கிராமமும் அல்லாமல் நகரமும் அல்லாத இரண்டும் கெட் டானா என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. கான்க்ரீட் வீடுகளும், அவற்றிற்கு நடுவில் குடிசை, ஓட்டு வீடு என்று கலந்தே தெரிந்தது. வீதிகளில் ஆள் நடமாட்டம் இல்லை. தெருவிளக்குகள் மட்டும் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது. உடம்பாலும் மனதாலும் சோர்ந்து போன, நொந்து போன கங்கா, தமிழ்நாட்டின் வடக்கு எல்லையில் இருந்து தெற்கு எல்லைக்கு இடம் மாறி ஒரு வருடம் ஆகிறது. அதனால் கங்காவின் இருட்டு வாழ்க்கை இந்த கிராமத்தில் இருந்த யாருக்கும் அறிமுகம் இல்லாமலேயே அமுங்கிப் போய் இருந்தது. இருவரின் மூன்று நிமிட நடைகளுக்குப் பிறகு... ஊருக்குள் இருந்த மற்றொரு தெருவில் நுழைந்து... ஐந்து வீடுகள் தள்ளி இருந்த அந்த ஓட்டு வீட்டின் முன்னே நின்று, தன் பர்சில் இருந்த சாவியை எடுத்து, தன்னிடம் இருந்த இரண்டு சூட்கேஸையும் கீழே வைத்து விட்டு பூட்டைத் திறந்தாள் கங்கா.



பூட்டு சத்தம் கேட்டு... எதிர் வீட்டு முன் வாசலில் விளக்கு பளிச்சென்று ஒளிர்ந்தது. கதவைத் திறந்து கொண்டு அந்த வயதான வெள்ளைப் புடவை மூதாட்டி எட்டிப் பார்த்தாள்.

''யாரது?'' சத்தமாகக் கேட்டாள்.

''நான்தாம்மா'' என்றாள் கங்கா. அப்போது,

''நீதானா, என்னடா சத்தம் கேட்குதேன்னு எட்டிப் பார்த் தேன். அது யாரது கூட?'' கண்களை சுருக்கிக் கொண்டு கேட் டாள்.

''நான்தான் பாட்டி'' துளசியின் குரல் கேட்டதும், தன் வாசலைத் தாண்டி இவர்களிடம் கொஞ்சம் நடையை எட்டிப் போட்டு வந்தாள் எதிர் வீட்டுப் பாட்டி. துளசியின் அருகில் வந்து, கண்களைச் சுருக்கி, பார்வையைக் கூர்மையாக்கி உச்சம் தலையில் இருந்து உள்ளங்கால் வரை விழியால் அவளை விழுங்கி விட்டு, ஆதூரமாக தன் கைகளைக் கொண்டு துளசியின் தாடையை வருடினாள்.

''நல்லா இருக்கியா?''

''ம்'' தலையாட்டினாள்.

''பரீட்சையெல்லாம் நல்லா எழுதியிருக்கியா?''

''ம்.''

கங்கா இதையெல்லாம் கண்டு கொள்ளாமல், வீட்டின் உள்ளே நுழைந்து ஹால் லைட்டின் சுவிட்சை தட்டி விட்டு... தோட்டத்துப் பக்கம் உள்ள பாத்ரூம் உள்ளே நுழைந்து விட்டாள்.

''திடீர்னு தந்தி வந்துடவும்... உன் அம்மாவுக்கு உடம்பெல்லாம் நடுங்கிப் போச்சி... நான்தான் தைரியம் சொல்லி அனுப்பி வச்சேன்... ஏதாவது சங்கடமா?''

கிழவி துருவியதும்... சங்கடமாக நெளிந்தவள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்ல'' மழுப்பினாள்.

''தந்தி போலீஸ் ஸ்டேசன்ல இருந்து வந்திருக்குன்னாங்க?'' கிழவி விடுவதாக இல்லை.

துளசியின் உடல் குப்பென வேர்க்கத் துவங்கியது.

''அதெல்லாம்... ஒண்ணுமில்ல பாட்டி... ஹாஸ்டல்ல பிரச்சினை. வார்டனுக்கும் பிள்ளைங்களுக்கும் சண்டையாப் போயிடுச்சி. பிரச்சினை பெரிசாக போலீஸ் வரை போயி டுச்சி... யாரோ ஒருத்தர் பண்ணின தப்புனால மூணாவது வருசம் படிச்ச எல்லார் மேலேயும் கம்ப்ளைன்ட் கொடுத்துட் டாங்க. இப்போ அதெல்லாம் சரியாயிடுச்சி'' மனதிற்கு பட் டதைக் கதையாக ஜோடித்தாள்.

''நல்லபடியா வந்துட்டல்ல, அது போதும்... இனி மேல ஒண்ணும் படிக்க வேண்டாம். நல்லவனா ஒருத்தனைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்க.''

''..........''

துளசி எதுவும் பேசவில்லை.

''சரி... சரி.. உள்ள போ, நாளை பாக்கலாம்'' என்றபடி திரும்பவும் துளசியைத் தலைமுதல் கால்வரை உற்றுப் பார்த்து விட்டு தன் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள்... போகும் போது...

''என்னம்மா இந்த துளசி வளர்ந்துட்டா... ஒரு வருசத் துக்குள்ள இப்படி தளதளன்னு ஆயிட்டா... எவன் புண்ணியம் பண்ணியிருக்கானோ... ம்... ம்...'' என்று பெருமூச்சோடு முனகினாள். எதிர்வீட்டுக் கிழவி தன் வீட்டிற்குச் சென்று கதவைத் தாழிடும் வரை பார்த்துக் கொண்டிருந்த துளசி, அதன்பின் தன் வீட்டிற்குள் நுழைந்து கதவைத் தாழிட்டாள்.



இன்று இருக்கும் அதே துளசிதான் அன்றும்... ஒரே ஒரு வித்தியாசம் அன்றைய துளசியின் முகத்தில் குழந்தைத் தனமும், அப்பாவிக் களையும் அப்பிக் கிடந்தது. இன்றைய துளசியின் முகத்தில் இறுக்கமும், கடுமையும் அதிகம் படர்ந்து இருந்தது.

பயம், நடுக்கம், அதிர்ச்சி எல்லாமே கொதிக்கும் நீரில் வைத்த வெப்பமானி போல் உள்ளுக்குள் எகிறிக் கொண் டிருந்தது துளசிக்குள். போலீஸ் ஸ்டேஷனில் இருந்து இந்த நிமிடம் வரை ஒரு வார்த்தைகூடத் தன் தாய் பேசவில்லையே என்ற மாயவட்டம் அவளை அச்சுறுத்தியது. ஹாலுக்கு அருகில் ஒட்டி இருந்த படுக்கை அறைக் கதவை மெல்லத் தள்ளி உள்ளே எட்டிப் பார்த்தாள்.

கட்டில் மேல் கங்கா இல்லை. பார்வையைக் கீழ் இறக்கி னாள். கங்கா இருந்த கோலம் கண்களில் பட்டதும், கண்களில் நெருப்பு விழுந்தது போல் உள்ளம் அதிர்ந்தது. கட்டில் முனையில் மடிந்து உட்கார்ந்து, தலையை கட்டில் முனையில் மோதிக் கொண்டு சத்தமில்லாமல் கதறிக் கொண்டு இருந் தாள் கங்கா.

நத்தையைவிட மெதுவாக தாயை நோக்கி நகர்ந்தாள்.. தயங்கியபடி கங்காவின் குலுங்கும் முதுகைப் பார்த்துக் கொண்டே நின்றாள். மெல்ல தன் கைகளைத் தாயின் தோளில் வைத்தாள். அடுத்த நொடி துளசியின் கூந்தல் முழுவதும் கங்காவின் கைகளால் முறுக்கப்பட்டு இருந்தது. அவள் உடல் முழுவதும் மின்னலாய் வலி தெறித்து ஓடியது. வலியின் கொடுமை தாங்க முடியாமல்.

''ம்...மா...'' கத்தினாள்.

துளசியின் முகத்தை தனக்கு நேராகத் திருப்பி உறுத்துப் பார்த்தாள் கங்கா. கண்களில் தீப்பொறிகள் பறக்கவில்லை

என்பது ஆச்சர்யமாக இருந்தது. மூர்க்கமான பெண் புலியின் வேகம் முகத்தில் இருந்தது.

இரண்டு கைகளாலும் பற்றியிருந்த முடியை, ஒரு கையால் பற்றிக் கொண்டு மறு கையால்,

'பளார்... பளார்' என ஓங்கி அறைந்தாள்.

பருந்தின் கையில் சிக்கிய கோழிக் குஞ்சை விட மோசமான நிலைக்கு துளசி தள்ளப்பட்டாள். தன் கோபம் தீரும் வரை அறைவதை நிறுத்தவே இல்லை கங்கா. தானாக பலமிழந்து கை துவண்டது. அதன் பின் ஏதோ அசிங்கத்தை தொட்டு விட்டு உதறுவது போல், தன் கருவிழியாய் நினைத்த மகளை உதறித் தள்ளினாள் கங்கா.

"போச்சு... எல்லாம் போச்சு... எல்லாம் போச்சு... போச்சு..." கைகளை விரித்து விரித்து பார்த்தபடி தனக்குத்தானே பேசிய தாயை பயத்தோடு நிமிர்ந்து பார்த்தாள் துளசி.

கண்களில் கண்ணீர் கரை புரண்டு ஓடியது. கன்னத்தில் கங்காவின் விரல் நகங்கள் கிழித்த ரத்தக் கோடுகளும் பட்டை பட்டையாக தடித்தும் போயிருந்தது.

"என்னை மன்னிச்சிடும்மா... ப்ளீஸ்ம்மா... நீ இப்படியே இருந்தா... சாகறதைத் தவிர வேற வழியே எனக்கில்லை... நீ பேசாம இருக்கிறது என்னால தாங்க முடியலம்மா..."

"......"

"உன் கையாலேயே என்னை விஷம் வச்சி கொன்னுடும்மா."

அந்த ஒரு வார்த்தையை மட்டும் கங்காவின் செவி உள்ளிழுத்தது. தன் காலைக் கட்டிக் கொண்டு கதறும் மகளைக் குனிந்து பார்த்தாள். தலை அலங்கோலமாக இருந்தது. அந்தப் பிஞ்சு முகம் ரத்தக் களறியாகவும், பட்டைப் பட்டையாய்



தடித்தும் இருந்தது. தன்னைப் பார்த்து கெஞ்சிக் கொண்டிருக்கும் அந்தக் கண்களில் ஜீவனே இல்லாமல் பட்டுப் போய் இருந்தது. ஏதோ வெறிவந்தாற்போல் அடித்து விட்டாளே தவிர, தன் மகளின் நிலையைப் பார்த்து அதிர்ந்து போய் விட்டாள். துளசியின் உடம்பில் தூசு பட்டால் கூட பொறுக்காத நானே இப்படிக் கொடுமைப் படுத்தி விட்டேனே... நானா இப்படி?... நானா இப்படி...? கண்களிலும் முகத்திலும் கோபம் தணிந்தது.

'துளசியை அடிக்க உனக்கென்ன யோக்கியதை இருக்கு?' மனசாட்சி உசுப்பியது. சுருண்டு கிடக்கும் மகளை அப்படியே அள்ளி எடுத்து மடியில் சரித்துக் கொண்டாள். கண்களில் காவிரியாய் நீர் பெருக. மகளின் முகத்தைக் கைகள் நடுநடுங்க தாங்கிப் பிடித்தவள்,

பேச முடியாமல் கதறினாள். துளசியின் முகத்தை தன் கழுத்தோடு இறுக்கிக் கொண்டாள்.

"கடவுளே! எங்களன்னு ஏன் இப்படி சோதிக்கிற? நாங்க என்ன பாவம் பண்ணினோம்... உனக்குக் கருணையே கிடையாதா?"

துளசியிடம் இருந்து தேம்பல் வரத் துவங்கியது.

"இருபது வருசம் கழிச்சி எம் மகளை இப்படிப் பார்ப்பேன்னு தெரிஞ்சிருந்தா... பாலுக்கழுத அன்னைக்கே அரளி விதை தின்னுட்டு... கள்ளிப் பாலக் கொடுத்து இருப்பேன... எம்புள்ள இப்படி நிக்கறதுக்கா மானத்தையே வித்தேன்."

"அம்மா..." ஈனக் குரலில் முனகினாள்.

"என்னடா..." தலையை அழுத்திப் பிடித்தாள்.

"கள்ளிப்பால் குடிக்கிற வயசில்லம்மா... அரளியை அரைச்சி ரெண்டு பேருமே தின்னுருவோம்."

''கடவுளே! கடவுளே!'' வேகமாக தலையில் அடித்துக் கொண்டாள்.

''எங் கையால அரளியைக் கொடுக்கவா இப்படி அரும் பாடு பட்டேன். எல்லாம் வீணாப் போச்சே... நான் வாழ்ந்த அந்த அசிங்கமான வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் இருக்கிறதா நினைச்சேன். அதுவும் இல்லாமப் போச்சே.... இது வேற ஒண்ணுமில்ல நம்ம தலையெழுத்து... வந்த வம்சம் அப்படி... காக்காயா பிறந்துட்டு... அன்றில் பறவையா வாழ ஆசைப் பட்டா நடக்குமா?''

''..........''

''உன் அறியாத வயசுல இருந்தே... என்னைப் பத்தி அணு அணுவா சொல்லியிருந்தேனே... எதுக்கு... எதுக்குச் சொன்னேன். நீ வாழ்க்கையில தப்பு பண்ணக் கூடாதுன்னு தான். சொல்லக் கூடாத விஷயத்தை எல்லாம் உங்கிட்டே சொன்னேன். சொல்ல வேண்டியதை எங்கிட்டே மறைச்சிட் டியே... நீ என் பொண்ணுங்கறது உனக்கு மட்டும்தான் தெரி யும்... வெளி உலகத்தைப் பொறுத்தவரை உன்னை எடுத்து வளர்த்துக்கிட்டு இருக்கேன். ஒரு விபச்சாரியோட பொண் ணுங்கறதை விட அனாதைங்கறது நல்லா இருக்குமில்லையா... அதான்... என்னால உன் வாழ்க்கை பாதிக்கக் கூடாதுன்னு பொத்திப் பொத்தி பார்த்தேனே... இப்படி... இப்படி பண்ணிட் டியே... என்மேல் பட்ட காற்றை கூட உம் மேலே பட விட்ட தில்லையே... எனக்கு ஒண்ணுமே புரியல... உலகமே இருண்டு போன மாதிரி இருக்கு...''

''மன்னிச்சிடும்மா... என்னை மன்னிச்சிடு... என்னமோ நினைச்சேன்... என்னமோ நடந்திடுச்சி... என்னை மன்னிச் சிடும்மா... என்னை மன்னிச்சிடுமா'' இதைத் தவிர துளசியின் வாயில் இருந்து வேறு வார்த்தையே வரவில்லை.



மகளை மேலும் இறுக்கமாகத் தழுவிக் கொண்டாள்.

''உன்னைக் கண்டிக்க எந்தத் தகுதியும் எனக்கில்லை. அது எனக்கே தெரியும். மத்தவங்க தன் பிள்ளைகளுக்கு எப்படிப் பேர் வைப்பாங்கன்னு தெரியாது. நான் ஏன் உனக்கு துளசின்னு பேர் வச்சேன் தெரியுமா... பேர்ல கூட நீ புனித மானவளா, உத்தமியா இருக்கணும்னு... தாயைப் போல புள்ள நூலப் போல சேலைங்கறதை இப்படியா நீ நிரூபிக்கணும்... கம்பிக்குப் பின்னால உன்னைப் பார்த்தப்பவே நான் செத்துப் போய்ட்டேன். பொண்ணுக்குன்னு இருக்கிற மரியாதை, கவுரவம், மானம், இதையெல்லாம் இழந்தப்பக் கூட நான் இப்படித் துடிக்கல... உன்னை மாலையும் கழுத்துமா கல் யாண கோலத்துல பாக்கணும். தாலியும் கருக மணியும் உன் கழுத்து நிறைஞ்சி இருக்கணும். நடு வகிடு நிறைய குங்குமத் தோடு குடும்பப் பொண்ணா பார்க்கணும்னுதானே... நா... நா... என் உசுர வச்சிக்கிட்டு இருந்தேன். நான்.. நான்.. அசிங்கமானவளா இருக்கலாம். உன்னையும் அதே நிலைமை யில... துளசி... கண்ணெல்லாம் இருட்டுது. நெஞ்ச அடைக்கிற மாதிரி இருக்கு. துளசி... துளசி...'' மிகவும் தடுமாறினாள்.

பதறிப்போன துளசி, சடார் என தன்னை விடுவித்துக் கொண்டு... தன் தாயை உலுக்கினாள்.

''அம்மா...''

''........''

தளர்ந்து சரிந்தாள் கங்கா.

''அம்மா... என்னை மோசம் பண்ணிடாதம்மா... அம்மா.''

தலையில் அடித்துக் கொண்டு கதறினாள். மின்னல் பொறி போல் மனசுக்குள் யோசனை தோன்றவும், தாயின் மார்பில் தன் காதை வைத்து அழுத்திக் கொண்டு உன்னிப்பானாள்.

கங்காவின் இதயம் துடித்துக் கொண்டுதான் இருந்தது. வேக வேகமாக வெளி வந்த சுவாசக் காற்றை ஆசுவாசப்படுத்திக் கொண்டு வேகமாக எழுந்து தண்ணீர் எடுத்து வந்து முகத்தில் தெளித்தாள்.

மெல்லிய முனகல் வெளிப்பட்டதும்

முகத்தில் இருந்த நீரைத் துடைத்து விட்டு...

''அம்மா...'' என்றாள்... முகம் வெளிறிப் போய் இருந்தது.

''இம்... ஹ...ம்...''

கஷ்டப்பட்டு சிறிது தண்ணீரையும் குடிக்க வைத்து, கட்டிலில் படுக்க வைத்து கழுத்து வரை போர்த்தி விட்டாள். அன்று இரவு முழுவதும் துளசியின் இமைகள் கீழே இறங்கவில்லை. கண்ணுக்குள் குண்டூசி வைத்து தைத்தாற்போல் மூடவும் முடியாமல் உறுத்தியது. அரை மணி நேரத்திற்கு ஒரு முறையாவது கங்காவின் நெஞ்சில் காது வைத்தும், நாடி துடிக்கிறதா என்று சோதித்தும் நெஞ்சு ஏறி இறங்குகிறதா என்றும் பார்த்தாள்.

காலை ஐந்து என்று அலாரம் அடித்து ஓய்ந்ததும், தடுமாறிக் கொண்டு எழுந்த துளசி, ஜில்லென்ற குளிர்ந்த நீரில் முகத்தை அலம்பினாள். வாசல் தெளித்துக் கூட்டினாள். வீடு முழுவதையும் கூட்டி சுத்தப்படுத்தினாள். சூட்கேஸில் இருந்த தன் துணிமணிகளை எடுத்துக் கொடியில் போட்டாள். ஸ்டவ் பத்த வைத்து தண்ணீரை சுட வைத்து எடுத்துக் கொண்டு... ஒரு வெள்ளைத் துண்டையும் தோளில் போட்டுக் கொண்டு படுக்கை அறையைத் திறந்தாள்.

போர்வைக்குள் இருந்த கங்காவைத் தட்டி எழுப்பினாள்.

''இப்ப உடம்பு எப்படிம்மா இருக்கு, டிபன் நானே பண்ணட்டுமா?''



''பண்ணு... நான் ஒன்னு கேட்பேன் சொல்லனும்?''

''என்னம்மா?''

''உனக்கு துளசியைத் தெரியுமா?''

காய்ச்சிய இரும்புக் கம்பியை கண்ணுக்குள் செருகியது போல் அதிர்ந்தாள்.

''அம்மா'' தோளைப் பிடித்து அழுத்தினாள்.

''துளசி தெரியாது... பெருமாள் கோவில்ல சாமிக்குப் போடுவாங்களே. துளசின்னா ரொம்பப் புனிதமானதாம்... சாமிக்கு அர்ச்சனைப் பண்றது... உனக்குத் தெரியுமா?''

''அம்மா...''

''துளசின்னா புனிதமானது... உனக்குத் தெரியாது?''

துளசியின் கன்னத்தைத் தட்டிய கங்காவை.. பயத்தோடு பார்த்தாள் துளசி... மெல்ல மெல்ல அந்த விபரீதம் புரியத் துவங்கியது. புரிந்தபோது துளசியின் மண்டைக்குள்ளும் ஆயிரம் புழுக்கள் ஒன்றாக நெளிந்தது.

## 7

ஜேம்சும் மும்தாஜும் இமைக்க மறந்து இருந்தார்கள். தண்ணீர் கிடைக்கும் என்று பள்ளம் தோண்டப் போய்... கண்ணிவெடி பார்த்த அதிர்ச்சி. கயிறு என்று எண்ணி அசால்ட்டாக தூக்கப் போய்... அது விஷம் மிக்க பாம்பாய் மாறி பயமுறுத்தியது. இருவரும் துளசியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவளோ இவர்களின் முகத்தையோ

அதில் ஏற்பட்ட மாற்றங்களையோ கண்டுகொள்ளவே இல்லை. மேலே தொடர்ந்தாள்.

''என்னையே யாருன்னு தெரியாத அளவு என் அம்மாவோட மனநிலை மாறிப்போச்சு... இருபது வருசமா எத்தனையோ கஷ்டத்தை அனுபவிச்சவங்க. எத்தனையோ சோதனைகளைச் சந்தித்தவங்க, எனக்கு ஏற்பட்ட நிலைமையை பார்த்து பைத்தியமே புடிச்சிப் போச்சு. துளசியைப் பத்திய நினைவுகள் மட்டும் அவங்களுக்குள்ளே தங்கிப் போச்சி... துளசிச் செடி போல நான் இருக்கணும்னு எதிர் பார்த்த அந்த மனசுக்கு... பெரிய ஏமாற்றம். ஏமாற்றத்தைத் தாங்கிக்க முடியல. இந்த உலகம் தானே ஏமாத்தும், அதான் தொந்தரவே இல்லாத கற்பனையான அந்த பைத்தியக்கார உலகம் எங்கம்மாவை அழைத்துக் கொண்டது. என் அம்மா நெஞ்சடச்சி செத்து இருந்தால்... கூடவே நானும் துணைக்குப் போயிருப்பேன். உங்க ரெண்டு பேருக்குமே இன்னைக்கி கஷ்டமில்லை. மண்டை குழம்பிப் பைத்தியமாயிட்டதால... நான் வாழ வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டேன். என் அம்மாவை கூட்டிகிட்டு மெட்ராஸ் வந்தேன். கீழ்ப்பாக்கம் ஆஸ்பிட்டல்லதான் இருக்காங்க. இந்த மூணரை வருசமாவும் எங்கம்மா கிட்டே எந்த மாற்றமும் இல்லை. டாக்டரைக் கேட்டா, கற்பனைக்கும் மீறிய எதிர்பார்ப்பு, நம்பிக்கை எல்லாம் தோல்வியைச் சந்திக்கும்போது இந்த நிலைமைக்கு ஆளாய்டறாங்க. உங்கம்மாவும் அந்த வகைதான்... நல்லாயிடுவாங்க. அப்படின்னுதான் சொல்லிகிட்டு இருக்காங்க... ஆனா எனக்கந்த நம்பிக்கை போயிடுச்சி. இன்னும் சொல்லப் போனால் என் அம்மா இப்படியே தொந்தரவு இல்லாத அந்த உலகத்திலேயே இருந்திடட்டும்னு தோணுது. இதோ அந்தக் கடவுள் என்னை விட்டார்னு நினைக்கிறீங்களா? இல்லை. என்னை விட மனசே இல்லை.



''மெட்ராஸ் வந்தேன். வந்த ஒரு வாரத்திலேயே ஒரு கம்பெனியில வேலைக்குச் சேர்ந்தேன். விளம்பரக் கம்பெனி. ரிசப்ஷனிஸ்ட் வேலை. கை நிறைய சம்பளம். என் அம்மாவோட மருத்துவ செலவுக்கும் என்னோட செலவிற்கும் போதுமானதா இருந்தது. என் கம்பெனியோட மேனேஜரை நல்லவர்ன்னு நினைச்சேன். எங்களோட நட்பு நெருக்கமானபோது... அவரை ஒரு சகோதரரா நினைச்சிதான் என் அத்தனை கஷ்டத்தையும் சொன்னேன். எந்த ஒரு பொண்ணும் தன் பலவீனத்தை எந்த ஒரு ஆணிடமும், தனக்கு எவ்வளவு நெருக்கமான ஆணிடமும் சொல்லக் கூடாதுன்னு அப்புறம் தான் தெரிய ஆரம்பிச்சது.

''அந்த ஆளே இரண்டாவது முறை நான் வழி தவற வச்சிட்டான். அவன்கிட்ட இருந்து என்னால தப்பிக்க முடியல. எவளவோ முயற்சி பண்ணி கடைசியில தோத்துதான் போனேன். உடனே வேலையை விடவும் முடியல. ஒரு இரண்டு மாதம் அப்படியே போச்சு... இவங்க விளம்பர ஆர்டர் பிடிப்பதற்காக, கஸ்டமர்சுக்கு பார்ட்டி கொடுக்கிறது வழக்கம். அங்கே வந்தவனுங்க கண்ணிலேயும் நான் விழுந்திட்டேன். பெப்ஸி வேணும், லிம்கா வேணும்னு கேக்கற மாதிரி நான் வேணும்னு கேட்டானுங்க. முடியாதுன்னு கதறினேன். என்னை வாழ விடுங்கடான்னு அழுதேன். அதுக்கு ஏற்கனவே நீ கெட்டுப் போய்ட்ட. இனிமே நீ பத்தினியா மாற முடியாது. அனுசரிச்சி போன்னு, கட்டாயப்படுத்தி வலுக்கட்டாயமா ஒரு முறை என்னை அனுப்பி வச்சாங்க.

''என்னை நினைச்சி எங்கம்மா எப்படி பாதை மாறினாளோ... அதே சூழ்நிலையும், அதே சந்தர்ப்பமும் எனக்கும் அமைஞ்சது. என்னால தப்பிக்க முடியல. அதுக்காக என் அம்மாவோட வாழ்க்கையையும் என் வாழ்க்கையையும் நான் சத்தியமா நியாயப்படுத்தல. இந்த சமுதாயம் எங்களோட பலவீனத்தைப் பயன்படுத்தி பழிவாங்கிடுச்சி. அவ்வளவுதான்.

இதுக்கு மேலேயும் அந்தக் கம்பெனியில நான் இருந்தா எனக்கு முத்திரையே குத்திடுவாங்கன்னு தோணிச்சி. கையில இருந்த பணத்தை நம்பி வேலையை விட்டேன். அப்போ நான் இருந்த ஹாஸ்டலையும், காலி பண்ணிட்டு.... இப்போ வேலை பாக்குற கம்பெனியில வந்து சேர்ந்தேன். சம்பளம்தான் கொஞ்சம் இழுத்துப் பிடிக்குமே தவிர... என்னை சுத்தி எந்த ஓநாய் கூட்டமும் இல்லை. அமைதியான வாழ்க்கை. இருந்தாலும் என் பழைய வாழ்க்கை என்னை உறுத்திக்கிட்டுத்தான் இருக்கு. நான் ரொம்ப நல்லவ சந்தர்ப்ப வசத்தால கெட்டுப் போய்ட்டேன்னு பொய் சொல்லவும் விரும்பல. முதல் தப்பு, எனக்காக என் அம்மா வாழ்க்கையை மாத்திகிட்டது. இரண்டாவது தப்பு, என் அம்மா அதையே வாழ்க்கையாக்கிகிட்டது. மூன்றாவது தப்பு என் தாயோட நிலையும், கனவையும் தெரிஞ்ச நான் காதல்ங்ற பேர்ல கற்பைப் பறிகொடுத்தது. நாலாவது தப்பு, என்னை சிலருக்கு தாரை வார்த்தது. ஐந்தாவது தப்பு இன்னும் நான் உயிரோட இருக்கிறது. இத்தனை தப்புக்கும் சொந்தக்காரியான என்னை நீங்க கல்யாணம் பண்ணிக்கனுமா? நியாயமான்னு நீங்களே உங்க மனசைக் கேட்டுக்குங்க. நான் நல்லா வாழனும்னு ஆசைப்பட்டது என்னவோ கடவுள் மேல் ஆணையா உண்மை. எங்கே அந்த வாழ்க்கை கிடைக்காதோங்கிற பயத்திலேயே.... இந்த நிலைமைக்கு ஆளாயிட்டேன்... இதை என்னன்னு சொல்றது? விதி. அப்படித்தான் சொல்ல முடியும்'' என முடித்தாள்.

துளசி நிமிர்ந்து ஜேம்ஸ், மும்தாஜ் இருவரையும் பார்த்தாள். ஆனால் அவர்கள் பூமியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் துளசியும் அவர்களின் மவுனத்தைக் கலைக்கவில்லை. தானும் அவர்களின் மவுன விரதத்தோடு சேர்ந்து கொண்டாள். மனம் லேசாகி இருப்பது போல் உணர்ந்தாள். இறுக்கம் கொஞ்சம் தளர்ந்திருந்தது. தன்னைக்



கொஞ்சம் கொஞ்சமாக கொன்று கொண்டிருந்த நஞ்சை, தன்னிடம் இருந்து வெளியேற்றி விட்ட புத்துணர்ச்சி... விழுங்கவும் முடியாமல், துப்பவும் முடியாமல் வாய்க்குள்ளேயே நாற்றமெடுத்து, புற்றே வைக்கப் போன உமிழ்நீரை காறி உமிழ்ந்து, டெட்டால் போட்டுக் கழுவிய களைப்பு. ஒன்றும் பேசாமல் இருந்தாள்.

முகத்தை அழுத்தமாகத் துடைத்துக் கொண்ட ஜேம்ஸ், நிமிர்ந்து துளசியைப் பார்த்தான். அவன் கண்களில் வெறுப்போ பரிதாபமோ எதுவும் இல்லை.

''என்னை மன்னிச்சிடுங்க துளசி, நாம தப்பு பண்ணிட்டுத்தான் வருத்தப்படுவோம். எதுக்காக காதலிக்கலன்னு காரணம் கேட்டதற்காக இப்போ நான் வருத்தப்பட்றேன்'' அதைக் கேட்டும் முதல் முறையாக அவனை நேருக்கு நேர் பார்த்து பளிச்சென சிரித்தாள் துளசி.

''நான் என் வாழ்க்கையில் தப்பு பண்ணி இருக்கலாம். ஆனா என்னால இன்னொருத்தர் தப்பு பண்ணக்கூடாது. நான் வாழ்க்கையை தப்பா அமைச்சி இருக்கலாம். ஆனா என்னால இன்னொருத்தருக்குத் தப்பான வாழ்க்கை அமைஞ்சிடக் கூடாது. அதனாலதான் என்னை நானே கடுமையாக்கிக்கிட்டேன். என்னோட வாழ்க்கை பல ஆண்களால பாதிக்கப்பட்டு இருக்கலாம். ஆனா என்னால ஒரு ஆணோட வாழ்க்கையும் சரி, பெண்ணோட வாழ்க்கையும் சரி பாதிக்கக் கூடாது. எந்த ஜென்மத்துல என்ன பாவம் பண்ணினனோ... இந்த ஜென்மத்துல இப்படி ஒரு வாழ்க்கை. இன்னமும் நான் பாவம் பண்ணனுமா... வேண்டாம்'' ஜேம்ஸை நோக்கி கை கூப்பினாள்.

மெல்ல ஜேம்ஸ் எழுந்தான். பேண்ட்டையும், டீசர்ட்டையும் சரி செய்தான். அவன் எழுந்ததுமே மும்தாஜ் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவள் கண்கள் முழுக்க அந்திவானம்

போல் சிவந்து இருந்தது. அதற்குள் கண்ணீர் அலை மோதிக் கொண்டு இருந்தது. வேகம் எடுத்த நீர் கன்னங்களில் வழிந் தோடத் துவங்கியது.

''நான் வரேன்'' ஜேம்ஸ் கூறியதுமே,

மும்தாஜ் தடுத்தாள்.

''மிஸ்டர் ஜேம்ஸ்... ப்ளீஸ் வெயிட் எ மினிட்?''

''எஸ்...'' என்றான்.

''எதுவுமே சொல்லாமப் போறீங்க?''

''மும்தாஜ் அவரை இப்ப போக விடு'' துளசி சொன்னாள்.

என்றுமில்லாமல் சில்லரைக் காசை சிதற விட்டது போல் திரும்பத் திரும்பச் சிரித்தாள், துளசி.

''இத்தனை நாள் வேணா நான் சிரிச்சது போலியா இருக்கலாம். இப்போ நிஜம். நான் இப்படிச் சிரிக்கக் கார ணமே நீயும் அந்த ஜேம்சும்தான். அதற்கு முதல்ல நான் தேங்க்ஸ் சொல்லணும். நீங்க ரெண்டு பேரும் கேட்காட்டி... நான் யார்கிட்டே... சொல்லப் போறேன். எனக்குள்ளே புழுங்கி செத்து இருப்பேன்.''

''சாரி துளசி... உன் மனசைக் கஷ்டப்படுத்தி இருந்தால் மன்னிச்சிடு. உன் கடந்த கால வாழ்க்கையை நினைக்கும்போது மனசுக்குத் தாங்கல... ஆனா ஓங்கி அறையணும் போல இருக்கு?''

''என்னையா?''

'இல்லை'யென தலையாட்டினாள்.

''பின்னே யாரை?''

''அந்த ஜேம்ஸை.''



''அவன் இனி கையில் கிடைக்கமாட்டான். அதை விடு. ஆமா... எப்போ டிஸ்கன்டியூ பண்ணப் போற?'' கொக்கி போட்டாள்.

''ஏன் என் படிப்பை நிறுத்தனும்... நீயில்லியா?'' என்றவளின் கைகளைப் பிடித்து இறுக்கி சந்தோசமாக அழுதாள் துளசி.

''உன்னோட கடந்த கால வாழ்க்கை என் நட்பை ஒண் ணும் பண்ண முடியாது. நட்பை விலை பேச நான் தயாரா இல்லை. நீ என் தோழி... எப்பவுமே எங்கையுமே... உன்னை விட்டுக் கொடுக்கவும் மாட்டேன். காட்டிக் கொடுக்கவும் மாட்டேன்'' என்றவளை அப்படி ஒரு அன்போடு, பெருமை யோடு பெருமிதத்தோடு பார்த்தாள் துளசி. அது மட்டும் பார்க்காக இல்லாமல் அவர்களின் ஹாஸ்டலாக இருந்தால் தூக்கி சுத்தியிருப்பாள். மனம் சமயம் சந்தர்ப்பம் பார்த்து தன்னை அடக்கிக் கொண்டது.

''போலாமா?''

''ஓ... போலாமே...'' என்றாள் துளசி.

''துளசி...''

''ம்...''

''என்னைக்கு அம்மாவ பாக்கக் கூட்டிகிட்டுப் போற?''

''......''

''ஏன்டி பேச மாட்டேங்கிற? இதுநாள் வரைக்கும் நீ மறைச்சது பத்தாதா? இன்னும் ஏன் தயங்குற? நீ என்ன நினைக்கிறன்னு எனக்குத் தெரியாது. ஆனா உங்கம்மாவ என்னோட அம்மாவா நான் நினைக்கிறேன். நீ மட்டும் இல் லன்னா இப்போ நான் அனாதை. உன்னோட சந்தோஷம் என்னோட சந்தோஷம். உன்னோட துக்கம் என்னோட துக்கம். உன் அம்மா என் அம்மா... இன்னும் மனசுக்கு என்னன்னமோ

தோணுது. ஆனா அதெல்லாம் சரியான வார்த்தையா வெளி வர மாட்டேங்குது. எனக்கு எப்படிப் பேசறதுன்னு தெரி யலை. என் மனசும், உணர்வும் உனக்குப் புரியுது தானே?'' சந்தேகம் தட்ட வினா எழுப்பினாள்.

இருவரும் நடந்து கொண்டேதான் இருந்தார்கள். துளசி அப்போதும் எதுவும் பேசவில்லை. அதிகமான சந்தோஷமும், உணர்ச்சிக் கொந்தளிப்பின் வெளிப்பாடும் எல்லா நேரங் களிலும் வார்த்தையாக வெளிப்படுவதில்லை. மவுனமாகவே நின்று விடுகின்றது. சில நேரம் மவுனம் கூட நல்ல பதிலாக மாறுவதும் உண்டு. அப்போது அப்படி ஒரு நிலைக்கு துளசி தள்ளப்பட்டாள். அன்று மாலையே தன் தாயைப் பார்க்க மும்தாஜை அழைத்துக் கொண்டு கீழ்ப்பாக்கம் சென்றாள்.

அடுத்த நாள் காலையே வயலின் க்ளாஸில் ஜேம்ஸ் இல்லை. துளசிக்கு என்னவோ போல் இருந்தது. தன் வரலாறு தான் அவன் வராமைக்குக் காரணமா? இல்லை உடல்நிலை ஏதாவது சரியில்லையோ... ஒன்றும் அவளுக்குப் புரியவில்லை. தான் ஓங்கி அறைந்தும் சுத்தி சுத்தி வந்தவன் இப்போது ஓடிப்போய் விட்டானா? யோசிக்க யோசிக்க தலை வலித்தது தான் மிச்சம். மும்தாஜிடமும் விஷயத்தைக் கூறினாள்.

''உன் அழகுக்காக உன்னை சுத்தியிருப்பான்னு நினைக் கிறேன். இந்த மாதிரி ஆளால காதலோட புனிதமே கெட்டுப் போச்சு.''

''புரியாம பேசாத... மொட்டத் தலைக்கும் முழங்காலுக் கும் முடிச்சிப் போடாதே.''

''என்ன நீ... இப்போ எல்லாம் ஜேம்ஸ் பத்தியே பேசிகிட்டு இருக்க?''

''அம்மாடி... நீ பாட்டுக்கு விபரீதமா கற்பனையை ஓட விட்டுடாதே... ரொம்ப நாளா என் பின்னாடி சுத்தின ஆளாச் சேன்ற பரிதாபம்தான் வேற ஒண்ணுமில்லை.''



''ஆமாம். கேட்கவே மறந்திட்டேன். இப்போ லெட்டரை யும் காணோம். பாவம் போஸ்டல் டிப்பார்ட்மெண்ட்'' ஜேம்ஸை மட்டம் தட்டுவதிலேயே குறியாக இருந்தாள் மும்தாஜ்.

அந்த வாரம் வெள்ளிக்கிழமை. இரண்டு நாட்களாகவே மழை வேறு நசநசத்துக் கொண்டிருந்தது. பலமான மழையும் இல்லை. லேசான மழையும் இல்லை. ஆபீஸ், காலேஜ் போய் வருவதற்குள் அமெரிக்க, ஈரான் பிரச்சினையைத் தீர்ப்பது எளிதாகப் பட்டது. அதுவும் அந்த ஹாஸ்டலில் இருந்து பஸ் ஸ்டாண்ட் போவது குட்டி சமுத்திரத்தையே தாண்டுவது போல், வழி நெடுக்க குழியும், குண்டும், சேறுமாய் தண்ணீரோடு நிரம்பி வழியும். மழை காரணமாகவே மும்தாஜ் நாலரைக் கெல்லாம் ஹாஸ்டலில் இருந்தாள். அடுத்த ஒரு மணி நேரத்தில் அதிசயமாக துளசியும் வந்து விட்டாள்.

வந்ததும் சூடான காபி. தண்ணீரில் கை வைக்கவே இரு வருக்கும் பயமாக இருந்தது. முகம் கழுவுவதற்கும் இரு வரும் ஒருவரை ஒருவர் அசடு வழிய பார்த்துக் கொண் டார்கள். நைட்டி மேலேயே ஸ்வெட்டரும் மாட்டப்பட்டது. இரவு சாப்பாடு முடிந்தது. ஸ்வெட்டர் மேல் போர்வையும் சுற்றிக் கொண்டு, பேருக்கு புத்தகத்தை கையில் வைத்திருந் தாள். இல்லையென்றால் துளசியிடம் பாட்டு வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டி வரும்.

''ஃபேன ஆஃப் பண்ணுடி...'' கதவைத் தாழிட்டபடியே துளசி கூறினாள்.

''நான் ஆஃப் பண்ணிடுவேன்... கொசுப் படை எல்லாம் போர் தொடுக்கும். அதுங்களோட போராடுவதைக் காட்டிலும் சுருண்டு படுத்து இறுக்கி போத்திக்கறது தவுஸன் டைம்ஸ் பெட்டர்.''

''ஆனாலும் நீ ரொம்ப மோசம். சின்னக் குளிரக்கூட தாங்க மாட்டேங்கற'' என்றபோது... கதவு தட்டப்படும் சத்தம்

கேட்டு.. இருவரும் ஒருசேர திரும்பிப் பார்த்தார்கள். மும்தாஜ் தன்னால் காலைக் கீழே வைக்க முடியாது என்று கூறி விட்டாள்.

''யாருன்னு பார்த்துட்டுப் பேசுகிறேன்'' பற்களைக் கடித்துக் கொண்டே.. கதவைத் திறந்தாள். ஹாஸ்டல் வார்டன்.

புரியாமல் நெற்றியைச் சுருக்கினாள்.

''மேடம்!''

''உன்னோட ரிலேஷனாம். இந்தப் பார்சல் கொடுத்திட்டுப் போறார்.''

''யார்?''

''அவசரமா கொடுத்துட்டுப் போறார். அவர் பேரைக் கேட்கலை... மழை வேற, நனைஞ்சிகிட்டே போறார்.''

மனசு குழம்பியது. யார் என்று தவித்தது. ஆயினும் வெளிக் காட்டாமல் வாங்கிக் கொண்டாள்.

''துளசி.''

''மேடம்.''

''நீ தப்பா நினைக்கக் கூடாது. நீ நல்ல பொண்ணுன்னு தெரியும். இருந்தாலும் நைட்ல யாரையும் பார்க்க வரச் சொல்லாதே. சன்டே வந்து பாக்கச் சொல்லுங்க. உனக்கு அலோ பண்ணுவேன். மத்தவங்க அதை மிஸ்யூஸ் பண் ணிடுவாங்க... பார்த்துக்கோ.''

''ஓ.கே... மேடம்'' வார்டன் படிகளில் கீழே இறங்குவதைப் பார்த்து விட்டு கதவை சாத்தி தாழிட்டாள். சின்னதாய் ஒரு பார்சல், திருப்பி திருப்பிப் பார்த்தாள். டு அட்ரசும் இல்லை. ப்ரம் அட்ரசும் இல்லை.''

''என்னது?''



''பார்சல்...''

''ஏய்... பாத்து வெடிகுண்டா இருக்கப் போவுது.''

''உனக்கு எந்த நேரத்துல என்ன பேசணும்னே தெரியாது. பீ சீரியஸ்'' என ஒரு மிரட்டு மிரட்டிவிட்டு... மும்தாஜ் கட்டிலிலேயே அவளுக்கு அருகில் அமர்ந்து பார்சலைப் பிரிக்கத் துவங்கினாள். துளசியின் தோளில் தன் முகத்தை வைத்து ஆட்டிக் கொண்டிருந்தாள் மும்தாஜ்.

''ஆடாதடி.''

''பேப்பரே ஒரு ரெண்டு கிலோ வருமோ?''

முறைத்துப் பார்த்துவிட்டு, திரும்பப் பிரிக்க ஆரம்பித் தாள். கடைசி பேப்பரைப் பிரித்ததும் கிடைத்தது புத்தம் புதிய ஒரு ஆடியோ கேஸட்.

''ஆடியோ கேஸட்!'' இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து உதட்டை பிதுக்கிக் கொண்டார்கள்.

''என்னது... புதிரா இருக்கு?''

''கேஸட்ல ஏதாவது பேர் இருக்கான்னு பார்?''

''இல்லையே.''

''தூங்கற நேரத்தில இப்படி ஒரு டென்ஷனா... இம்... என்னன்னு தெரியலன்னா தூக்கமே வராது. இரு வரேன்'' என்றவள் போர்வையை உதறி விட்டு எழுந்தாள்.

''எங்கே போற?''

''விமலாகிட்டே டேப்ரிக்கார்டர் இருக்கு. வாங்கிட்டு வரேன்'' போன வேகத்தில் டேப்ரிக்கார்டரோடு திரும்பி வந் தாள். ப்ளக் ஸ்விச் போர்டில் செருகப்பட்டது.

''துளசி கதவை லாக் பண்ணிட்டனான்னு பார்?''

''ஏன்... லாக் பண்ணிதான் இருக்கு.''

''டேப் கேட்கும்போதே எதுக்கு எதுக்குன்னு நோண்டிட்டாளுங்க.''

டேப்பில் கேஸட் செருகப்பட்டது. ப்ளே அழுத்தப்பட்டது. கேஸட்டும் ஓடத் துவங்கியது.

''துளசி! நான் ஜேம்ஸ் பேசறேன்.

பட்டென நிறுத்தினாள் மும்தாஜ்.

''ஜேம்சு?''

''அது தெரியுது... எதுக்கு ஸ்டாப் பண்ணின?''

''ஷாக் ஆயிட்டேன். ஸ்டாப் பண்ணிட்டேன். வித்தியாசமான ஆளா இருப்பார் போல இருக்கு. வெரி இன்ட்ரஸ்டிங் பர்ஸன்.''

தலையில் அடித்துக் கொண்ட துளசி... கேஸட்டை ரிவர்ஸ் அடித்து ப்ளேவை அழுத்தினாள். இருவரும் காதைக் கூர்மையாக்கினார்கள்.

''**து**ளசி! நான் ஜேம்ஸ் பேசறேன்.

''ஆச்சர்யமா இருக்கா! இருக்கும். உங்க ப்ரண்ட் மும்தாஜும் பக்கத்துல இருப்பாங்கன்னு நினைக்கறேன். ஹலோ மும்தாஜ் எம்மேல கோபமா கூட இருப்பீங்கன்னு நினைக்கிறேன். ஐ'ம் வெரி ஸாரி. நான் அங்கேயே ஏதாவது சொல்லி இருந்தால் நான் அவசரப்பட்டு முடிவெடுத்ததாகவும்... ஏதோ நான் பெரிய தியாகம் பண்றதாகவும் தோணலாம்... அதான் அமைதியா வந்துட்டேன்.

''துளசி! உன் கதையைக் கேட்டதினால எனக்குள்ள எந்த மாற்றமும் இல்லை. நீ சம்மதிக்கிறவரை நான் காத்துகிட்டு இருக்கிறதா ஒரு இறுதியான முடிவிற்கே வந்துட்டேன்.



இதில் பரிதாபமோ தியாகமோ கொஞ்சம் கூடக் கிடையாது. உண்மையான அன்பு மட்டும் தான் இருக்கு. உன் வாழ்க்கையில நடந்த சம்பவங்களை, இந்த சமுதாயம் கருணையோடு பார்க்காது. உன்னைக் காமத்தோடதான் பார்க்கும். இது நம்ம பண்பாட்டுக்கு ஒத்து வராதுன்னு எனக்கு நல்லாவே தெரியும். ஆனாலும் ஒத்துக்கிட்ட உன் நெஞ்சுக்கு முன்னால... எனக்கு எதுவுமே கண்ணுல படல. நீ ஒரு அழகான வெள்ளையடித்த சுவர். நாலைந்து கருப்பு புள்ளி இருக்கு. அது பளிச்சின்னு கண்ணுல படுது. உறுத்துதுன்னு சொல்ற... உண்மைதான். அவையெல்லாம் அழிக்கக் கூடிய புள்ளிகள்தான். உடம்பு, மனசு இரண்டுமே கற்பு சம்பந்தப்பட்ட விஷயம்தான். இல்லையென சொல்லவில்லை. இருப்பினும் உன் மனதிற்குதான் என் முழு ஆதரவும். நான் உன் மனதைத் தொட விரும்புகிறேன். சம்மதிப்பாயா... என் வீட்டுக் கதவை திறக்கும் போதெல்லாம்... நீ என் மனக் கதவை திறந்ததுதான் நினைவிற்கு வருகிறது. வயலினை வாசிக்க எடுத்தால், அதில் பாட்டாய் பண்ணாய் நீதான் இருக்கிறாய் என்று இசை சொல்கிறது. வீட்டைத் துடைக்கலாம் என்றால், உண்மை என்ற பெயரில் நீ உன்னை சுத்தப்படுத்தியதுதான் நினைவிற்கு வருகிறது. ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு செயலிலும் நான் உன்னைத்தான் பார்க்கிறேன். உன்னால் எனக்கொரு நல்ல துணையாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை அசைக்க முடியாமல் எனக்குண்டு. உனக்கும் இருந்தால் ஓடி வா. கைகளை நீட்டிக் கொண்டு காத்திருக்கிறேன். நாம் இருவருமே வாழ்க்கையில் வெவ்வேறு வகையில் பாதிக்கப்பட்டவர்கள். நாம ரெண்டு பேரும் ஏன் ஒன்று சேரக் கூடாது. உங்கம்மாவோட செத்துப் போன கற்பனைக்கு நான் உயிர் கொடுக்க ஆசைப்பட்றேன்.

''நீ எனக்கு வேணும் துளசி. உன் அன்பு, உன் ஆசை, உன் கற்பனை, உன் உணர்வு, உன் மனசு... எல்லாமே எனக்கு

வேணும். அதற்கு பதிலா... இவை அனைத்தையும் என்னிடம் இருந்து கொடுக்கவும் துடித்துக் கொண்டிருக்கிறேன். ப்ளீஸ் துளசி... ஏதாவது ஒரு காரணம் கண்டு பிடிச்சி என்னை மறுத்துடாத... வாழணுங்கற ஆசைக்கு மறைமுகமா நீதான் காரணமா இருந்த... அந்த ஆசையை நேரடியா நீயே அழிச்சிடாதே. மதத்தாலே நான் வேறயா இருக்கலாம். மனசுக்கு மதிப்புக் கொடுக்கிறது... ஒரு ஆத்மாவோட ஆசையை நிறைவேத்தறது எல்லா மதத்திற்கும் ஒன்றுதான். அன்புதான் எல்லாருக்குமே வேதம். தன்னைக் கொடுமைப்படுத்தினவங்களுக்காக... ரத்தம் சிந்தும் போதும், அவங்களை மன்னிக்கும்படி வேண்டிய இயேசு... உனக்கு தாலி கட்டுவதால் என்னைத் தண்டிக்க மாட்டார்.''

அதற்கு மேல் அவன் பேசிக் கொண்டே போனது எதுவுமே துளசியின் செவிகளில் விழவில்லை. அப்படியே உணர்வுகள் கொந்தளிக்க உருகிப்போய் உட்கார்ந்து இருந்தாள். வெளியில் திரிந்து களைத்துப் போனவளுக்கு வேப்ப மர நிழல் கண்ணில் பட்டது. பாலைவன மணலில் நா வறண்டவளுக்கு பக்கத்திலேயே ஒரு ஆர்ட்டீசியன் ஊற்று பீறிட்டு எழுந்தது. கேஸட் ஓடி முடிந்து 'பட்'டென விழுந்த போதுதான் சுயநினைவிற்கே வந்தாள். கேஸட்டைத் திருப்பிப் போட்டுப் பார்த்தாள் மும்தாஜ். வெறுமே ஓடியது. கேஸட்டை வெளியே எடுத்தவள் துளசியைப் பார்த்தாள். அவள் பிரம்மை பிடித்தாற் போல் உட்கார்ந்து இருந்தாள்.

''ஏய்...'' தோளைப் பிடித்து உலுக்கினாள்.

''இம்... ம்...''

''நீ கேட்ட மாதிரி தெரியல... கேஸட்டை திருப்பிப் போடட்டுமா?''

''இம்... ம்... கேஸட்டா திருப்பியா, வேண்டாம்'' என்றவள் எதுவும் பேசாமல் தன் கட்டிலில் போய் குறுகிப் படுத்துக்



கொண்டாள். கேஸட் டேப் ரிக்கார்டர் எல்லாவற்றையும் ஒதுக்கித் தனியே வைத்துவிட்டு, ட்யூப் லைட்டையும் அணைத்து நைட் லேம்பை ஒளிரவிட்ட மும்தாஜ், தன் கட்டிலில் படுக்காமல் துளசியின் அருகில் வந்து படுத்தாள். அவள் முகத்தில் இருந்த போர்வையை விலக்கினாள். அவள் கன்னத்தில் கை வைத்தபோது தான் ஈரம் கசகசத்தது.

''அழுகிறாளா?'' பதறிப் போனவள் துளசியை தன் முகம் பார்க்கத் திருப்பினாள்.

''இப்ப எதுக்கு அழுவுற?''

''........''

''ப்ச்... சொல்லு... இப்ப என்ன நடந்துபோச்சு?''

''எனக்கு பயமா இருக்கு மும்தாஜ்.''

''உனக்கா... எதுக்கு?''

''இந்த ஜேம்ஸ் ஏன் என் பின்னால இப்படி அலையணும்?''

''காதல்.''

''இல்லடி. என் மனசு ஒப்பவே மாட்டேங்குது.''

''பைத்தியக்காரத்தனமா உளராதே. உன் வாழ்க்கையில் நடந்த அத்தனை சம்பவத்திற்கும் நீ மட்டும் காரணம் இல்லை. அப்படியே வச்சிகிட்டாக் கூட... நீ நல்லவ. வாழ வேண்டியவ... தப்பு பண்ணி திருந்தினவங்களுக்கு வாழ்க்கையே இல்லையா?''

''இல்லடி... நான்.''

''நீ எதுவும் பேச வேண்டாம். உன்னைப் பத்தி எதுவுமே நீ ஜேம்ஸ் கிட்டே மறைக்கலையே. அவருக்கு எல்லாமே தெரி

யும். நீ இல்லாம அவருக்கு வாழ்க்கையே இல்லங்கறார். அவர் மனசு உனக்குப் புரியலையா?''

''என்னால முடியாது.''

''திரும்பத் திரும்ப இதையே பேசாத... ப்ளீஸ் துளசி... நீ பாதி கேஸட் தான் கேட்ட, நான் முழுசா கேட்டேன். இப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதனை, எதையோ நினைச்சி மிஸ் பண்ணிடாத.. எதையோ நினைச்சி, வாழ்க்கையை இழந்துடாதே.''

துளசியின் தலையைக் கோதி விட்டாள் மும்தாஜ். அவளை அமைதிப்படுத்த முயற்சி பண்ணினாள்.

''நம்ம தேடி வரும்போதே வாழ்க்கையை அமைச்சிக்கணும். பின்னால வருத்தப்படக் கூடாது.''

''இல்லடி... என்னோட சுகத்தை மட்டும் எண்ணி நான் சென்றால், நீ எப்படி?''

''உனக்கு நான்தான் பிரச்சினையா?''

''இல்ல... உன்னை இந்த நிலைமையில் விட்டு என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது.''

''என் மேல நீ வச்சிருக்க அன்பு உன் வாழ்க்கையையே பாதிக்கும்னா... நான் உயிரோடவே இருக்க மாட்டேன். ஏன்னா எனக்கு உன் நல்வாழ்க்கைதான் முக்கியம்'' என்றவளை இறுக்கி அணைத்துக் கொண்டாள் துளசி. இருவருமே ஒருவருக்காக ஒருவர் விட்டுக் கொடுப்பதிலேயே குறியாக இருந்தார்கள்.

''நீ என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன் மும்தாஜ். தயவு செஞ்சி என்னை விட்டு மட்டும் போயிடாதே. எனக்கு சத்தியம் பண்ணிக்கொடு'' என்று கை நீட்டியவளின் கைகளை மடக்கி விட்டு, அவள் தலையில் கை வைத்து...



''போக மாட்டேன்'' என்றாள் மும்தாஜ்.

அதே நேரம்...

ஜேம்ஸ் அந்த பங்களாவின் அவுட்டவுஸில் குடியிருக்க பேசி முடித்து சாவியைப் பெற்றுக் கொண்டு... தன் ரூமை நோக்கி நடந்தான். எப்படியும் துளசி சம்மதிப்பாள் என்ற நம்பிக்கை... ஆனால் துளசி வேலை பார்த்த விளம்பரக் கம்பெனி மேனேஜரின் அவுட்டவுஸில்தான் துளசியோடு குடும்பம் நடத்த திட்டம் போட்டு இருக்கிறோம் என்று பாவம் அவனுக்குத் தெரிய நியாயமில்லை.

# 8

அந்த வார புதன்கிழமையே ரிஜிஸ்தர் அலுவலகத்தில் துளசியை மனைவியாக்கிக் கொண்டான் ஜேம்ஸ். ரெஜிஸ்ட்ரார் முன்னிலையில் கையெழுத்துப் போட்டவன். அதே வேகத்தில் வடபழனி முருகன் கோவிலுக்கு அழைத்துச் சென்று, தாலியும் கட்டினான். அந்த நிமிடம் வரை துளசிக்கு எதுவுமே புரியவில்லை. நடந்து கொண்டிருக்கும் அனைத்து நிகழ்ச்சியும் பிரமிப்பாகவும், நல்லதா, கெட்டதா என்று உணர முடியாமல் தவித்தாள். கேஸட் கேட்ட அடுத்த நாளே ஜேம்ஸைப் போய் பார்த்தது... பேசியது எல்லாமே மும்தாஜ்தான். சாட்சி கையெழுத்து மும்தாஜும் ஹாஸ்டல் வார்டனும்தான்.

மும்தாஜ் வா என்றாள் வந்தாள். நில் என்றாள் நின்றாள். கையெழுத்துப் போடு என்றாள் போட்டாள். மாலையை மாத்திக்கோ என்றாள் மாற்றிக் கொண்டாள். ஆக மொத்தம் ஒரு ரிங்மாஸ்டரின் கட்டளைக்கு அடிபணியும் விலங்கு

போல் மாறிப்போய் இருந்தாள் துளசி. வடபழனியில் வேலை முடிந்ததுமே ஹாஸ்டல் வார்டன்.. மனமார வாழ்த்தி விட்டு, கிளம்பி விட்டார்.

''எங்கே மும்தாஜ் போகணும்ற'' ஜேம்ஸ் கேட்டான்.

''துளசியோட அம்மாவைப் பார்க்கப் போகணும்.''

''மை காட்.. நினைவே இல்லாமல் போயிடுச்சி... அவங்களையும் கூட்டிகிட்டு வந்திருக்கலாமே?''

''நாங்க முன்னாடியே கேட்டுப் பார்த்துட்டோம். வெளியே யெல்லாம் அனுப்ப மாட்டோம்னு சொல்லிட்டாங்க.''

''சரி... நான் போய் டாக்ஸி பார்த்துட்டு வரேன். இங் கேயே நில்லுங்க'' என்றவன் சிறிது நேரத்தில் ஒரு வெள்ளை நிற டாக்ஸியோடு வந்தான்.

கதவைத் திறந்து விட்டு...

''இம் ரெண்டு பேரும் பின்னால ஏறுங்க...''

உதட்டில் ஆள் காட்டி விரலை வைத்து மறுத்த மும்தாஜ். ''மேரீட் கப்புள்ஸ்தான் எப்பவும் பின்சீட். நான் முன்னாடி உட்கார்ந்துக்கிறேன். நோ ப்ராப்ளம்'' என்றவள். இருவரை யும் பின்னால் உட்கார வைத்துவிட்டு... முன் கதவைத் திறந்து உட்கார்ந்து கொண்டு, கதவை இழுத்துச் சாத்தினாள்.

டாக்ஸி கீழ்ப்பாக்கம் நோக்கி சாலையில் சீராக ஓடத் துவங்கியது. சாலையோரத்தை ரசித்தபடி வந்தாள் மும்தாஜ். அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்த்தாள். துளசியின் தலை குனிந்து இருந்தது. ஜேம்ஸ் சாலையோரம் பார்வையை ஓட விட்டு இருந்தான்.

''துளசி'' பின்னால் திரும்பிக் கொண்டு அழைத்தாள் மும்தாஜ்.



நிமிர்ந்த துளசி, பார்வையிலேயே 'என்ன' என்று கேட்டாள்.

துளசியின் எண்ணத்தை சந்தோசமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு கேள்வி மேல் கேள்வி கேட்டுப் பார்த் தாள். ம்கூம் எந்த மாற்றமும் இல்லை.

''என்னடி கல்யாணம் ஆன கொஞ்ச நேரத்துலேயே ஆள் மாறிட்ட...?''

''....'' அமைதியாக பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''ம்கூம்... நீ இருக்கிற நிலைமையைப் பார்த்தால் இன்னும் கொஞ்ச நாள்ல யார்னு கேட்ப போல இருக்கே... நான் பக்கத்தில் இருக்கும்போதே இப்படி... ஹாஸ்டல் போய் ஒரு வாரமாவது ஆச்சி.. ம்கூம் ஒண்ணும் சொல்லிக்கிற மாதிரி இல்லை.''

அப்போதும் துளசி பேசவில்லை. பார்வையிலும் முகத் திலும் களை இல்லை. ஜேம்ஸ் தான் ஓரக் கண்ணால் பார்த்து விட்டுப் பேசினான்.

''என்ன மும்தாஜ்... இப்படி வார்றீங்க... ஆமாம் அதென்ன ஹாஸ்டல்? நீங்க ஹாஸ்டல்ல இருக்கப் போறதா யார் சொன்னா? எங்ககூடத்தான் இருக்கப் போறீங்க?''

''என்ன ஜேம்ஸ் சொல்றீங்க.''

''உண்மைதான்... நானும் துளசியும் குடும்பம் நடத்த ஏற் கனவே நான் இருந்த ரூமே போதும். நீங்களும் எங்ககூட இருக்கப் போறீங்கன்னுதான் வேற வீடு பேசி அட்வான்ஸ் எல்லாம் கொடுத்திட்டேன்.''

''இல்ல ஜேம்ஸ்.''

''நீங்க என்ன சொல்லப் போறீங்கன்னு எனக்கு நல்லாவே தெரியும். நோ ஆர்க்யூமென்ட்ஸ். கூட்டைக் கலைக்கிறதும்

தப்பு. கூடப் பழகினவங்களைப் பிரிக்கிறதும் தப்பு... அதுவும் நீங்க ரெண்டு பேரும் ரொம்ப திக் ப்ரண்ட்ஸ்.''

''இதெல்லாம் உங்களுக்கு.''

''துளசி சொல்லலை... யூகம்தான்.''

ஓரத்தில் உட்கார்ந்து இருந்த துளசி... கொஞ்சம் நகர்ந்து அவனருகில் வந்தாள். அவன் தொடை மேல் இருந்த வலது கையை மென்மையாக பிடித்து அழுத்தினாள். ஜேம்ஸின் உடம்பில் மின்சாரம் பாய்ந்தது. துடித்து நரம்புகள் அடங்கின.

இன்னும் அவனுக்கு நெருக்கமாக வந்தாள். அவன் கைமேல் இருந்த தன் கையை எடுக்கவே இல்லை.

''தேங்க் யூ'' அவனுக்கு மட்டும் கேட்கும்படி கூறினாள்.

''எதுக்கு துளசி?''

''தாலி கட்டியதற்கு. என் பிரண்டை நம் பிரண்டா ஆக்கின தற்கு'' தலையைக் குனிந்தபடி பேசினாள். தன் மேல் இருந்த அவளின் கையை தன் கையோடு கோர்த்துக் கொண்டான் ஜேம்ஸ். இதையெல்லாம் காணாதது போல் கண்டு கொண் டிருந்த மும்தாஜ்... கசிந்த கண்ணீரை யாரும் பார்க்காதவாறு துடைத்துக் கொண்டாள். கீழ்ப்பாக்கம் மருத்துவமனையின் முன் டாக்ஸி நிற்கும்வரை, இருவருமே ஒருவர் கையை மற்றவர் இறுக்கிக் கொள்வதிலேயே குறியாக இருந்தார்கள்.

சம்பிரதாய அனுமதிகளைப் பெற்ற பின் மூவரும் உள்ளே நுழைந்தார்கள். பரிச்சயமான டாக்டர்சும், நர்சும் துளசியைப் பார்த்து சிரித்தபடியே நகர்ந்தார்கள். இருபக்கமும், கம்பி களுக்குப் பின்னாலும் ஒரு சில பைத்தியங்கள் சுதந்திரமாக பேசிக் கொண்டு, சிரித்துக் கொண்டு, சண்டையிட்டுக் கொண் டும் இருந்தார்கள். ஜேம்ஸின் சட்டையைப் பிடித்துப் பார்த்து விட்டு ஒரு பைத்தியம் ஓடியது. அந்த வரிசையில் கடைசி



அறைக்கு முதல் அறையில் நின்றாள் துளசி. கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள். ஜேம்ஸையும், மும்தாஜையும் உள்ளே வரும்படி ஜாடை காட்டினாள். ஹாஸ்பிடல் யூனிபார்மில் சிறிது அலங்கோலமாக குப்புற அடித்துப் படுத்து இருந்த உருவத்தின் தோளைத் தொட்டாள் துளசி.

விலுக்கென அந்த உருவம் எழுந்து உட்கார்ந்தது.

''இவங்கதான் என் அம்மா'' ஜேம்ஸைப் பார்த்துக் கூறி னாள்.

கங்காவைப் பார்த்துக் கைகூப்பினான் ஜேம்ஸ். கலைந்த தலை... அதிகம் சிக்கல் விழுந்த கூந்தல். நாற்பத்தைந்து வயது தான். ஆனால் 50, 52 வயது முதுமை. கண்களில் மிரட்சி... ஒரு காலத்தில் ரசிக்கப்பட்ட அழகான உடம்பு... இன்று எலும்பும் தோலுமாய், முதுகையும், தலையையும் சொறிந்து கொண்டு நின்றாள்.

''அம்மா!''

தலையை சாய்த்து வெறித்துப் பார்த்தாள்.

''இவரை நான் கல்யாணம் பண்ணிகிட்டேன்'' என்றபடி ஜேம்ஸின் கையைப் பிடித்து தன் அருகில் நிறுத்தினாள்.

''உனக்குத் துளசி தெரியுமா?'' சின்னப் பிள்ளை போல் வாயில் எச்சில் ஒழுக... வைத்துக் கொண்டு கேட்டாள்.

இருவரும் கங்காவின் காலில் விழுந்தார்கள். நகர்ந்து போய் நின்று கொண்டாள். கண்ணீரோடு நிமிர்ந்து பார்த்த துளசி... மனதை சமாதானப்படுத்திக் கொண்டு எழுந்தாள்.

''எங்கம்மா ஆசீர்வாதம் பண்ற நிலையில...''

''பரவாயில்லை, அவங்க நிலைமை அப்படி'' என்றபடி கங்காவின் அருகில் சென்றான்.

''உங்க பொண்ணை நான் கல்யாணம் பண்ணியிருக் கேன்'' என்றான்.

''துளசி ரொம்பப் புனிதமானது'' என்றாள்.

''ஆமாம்! அந்தத் துளசியைத்தான் என் வீட்டுல வச்சிருக் கேன். நீங்க ஆசைப்பட்டபடியே பத்திரமா பார்த்துக்கு வேன்'' எனக் கூறி விட்டு.. துளசியைப் பக்கத்தில் அழைத்து... அவள் மார்பில் ஒளிந்திருந்த திருமாங்கல்யத்தை எடுத்து கங்காவிடம் காட்டினான். சர்ட் பாக்கெட்டில் வைத்து இருந்த குங்குமத்தை பிரித்து துளசியின் நடுவகிட்டில் அழுத்தமாக இட்டான். புரிந்து கொள்ள முடியாத மனநிலையில் கங்கா இருந்தாலும், அந்தத் தாலியும் குங்குமமும் உள்ளுக்குள் மெல் லிய சலனத்தை ஏற்படுத்தத்தான் செய்தது. இந்த தாலிக்கும் குங்குமத்திற்கும் எப்படி எல்லாம் ஏங்கியிருப்பாள். எத்தனை பாடுபட்டு இருப்பாள். எப்படியெல்லாம் தன்னை வருத்தியிருப் பாள் என்பது... கங்காவின் கண்களில் வழிந்த கண்ணீரே காட்டிக் கொடுத்தது.

தன் மகள்தான் மாப்பிள்ளையோடு வந்து நிற்கிறாள் என்று அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஆனா லும் அந்தத் தாலியையும், அவள் நெற்றியில் இருந்த குங் குமத்தையும் தொட்டுப் பார்த்துச் சிரித்தாள், அதையே ஆசீர் வாதமாக எடுத்துக் கொண்டார்கள். டாக்டரிடம் எல்லாம் பேசி விட்டு வெளியே வந்தபோது, கடிகார முட்கள் மதியம் 1.30 என்று காட்டியது.

மும்தாஜ் வயிற்றை தட்டிக் காண்பித்தாள். வேகமாகச் சிரித்தான் ஜேம்ஸ்.

''அதுக்குதான் போறோம்.''

ஏ.ஸி. ரெஸ்ட்டாரண்டாகப் பார்த்து அழைத்துச் சென்றான். கிட்டத்தட்ட 1 மணி நேரம் கழித்து வெளியே வந்தார்கள்.



''நேரா வீட்டுக்குப் போகலாமா?''

''வெயிட்... வெயிட்.. உங்களோட தங்கப் போறேங்கறது முடிவாயிடுச்சி. நான் ஹாஸ்டல்ல இருந்தாலும், வீட்டுல இருந்தாலும் என்னைப் பார்த்துக்கப் போறது என்னவோ துளசிதான். இருந்தாலும் இன்னைக்கு நான் வரலை. வெகேட் பண்ணிகிட்டு இன்னும் ரெண்டு நாள்ல வந்திட்றேன். இப்போ வீட்டுக்கு நீங்க ரெண்டு பேரும் போங்க.''

பேச வாயெடுத்தாள் துளசி.

''உஷ்'' உதட்டில் விரல் வைத்தவள்.

''நான் உங்ககூட தங்கணும்னா இன்னைக்கு வரமாட் டேன். ஜேம்ஸ் அட்ரஸ் கொடுங்க. முதல் வேலையா துளசியோட திங்க்ஸ் எல்லாத்தையும் இன்னைக்கு ஈவ்னிங்க் குள்ளே கொண்டு வந்திட்றேன். ப்ளீஸ் நான் சொல்றதைக் கேளுங்க.''

''இல்ல மும்தாஜ். வார்டன்கிட்டே சொல்ல வேண்டாமா... உங்க மத்த ப்ரண்ட்ஸ்கிட்ட சொல்ல வேண்டாமா? ஸோ உங்க ரெண்டு பேரையும் ஹாஸ்டல்ல கொண்டு வந்து விட் டுட்டு... துளசியோட திங்க்ஸ் எல்லாத்தையும் நான் எடுத்துட் டுப் போயிட்டு... ஈவ்னிங் வந்து கூட்டிகிட்டுப் போயிட் றேன்.''

''இம்... இந்த ஐடியாவும் நல்லாதான் இருக்கு'' மும்தாஜ் ஆமோதித்ததும்... துளசி வழக்கம்போல் எதுவும் பேசவில்லை.

சரியாக இரவு 7.00 மணிக்கு ஜேம்ஸ் ஹாஸ்டல் வந்தான். துளசியை வரச்சொல்லி விட்டு ஹாஸ்டல் மேடத்தோடு பேசிக் கொண்டு இருந்தான்.

சத்தம் போட்டு அழாத குறைதான் துளசிக்கு.

''அழாத துளசி... இன்னைக்குத்தான் நீ வாழ்க்கையை ஆரம்பிக்கப் போற... பழசு எதுவுமே உன் நினைவிற்கு வரக் கூடாது.''

''நீ மட்டும்... இல்லன்னா... இந்த முடிவிற்கு வரவே மாட்டேன் மும்தாஜ்...''

''ஓ...கே... ஓ...கே.. நீ என்னைவிட புத்திசாலி. ஏகப்பட்ட குழப்பத்தில் இருந்ததினால்தான் உன்னால எந்த முடிவுக்கும் வர முடியல... உன்னோட நட்பை அல்லா எனக்குக் கொடுத்த பரிசா நினைக்கிறேன்'' என்றபடி துளசியை இறுக்கி அணைத்துக் கொண்டாள். துளசியின் கன்னங்களிலும், நெற்றியிலும் ஆசையோடு இதழ் பதித்தாள்.

''விஷ்யூ ஆல் த பெஸ்ட்'' என்று அழுகையோடு சிரித்த படி கண் சிமிட்டினாள்.

''ரெண்டு நாள்ல வந்திடுவல்ல?''

''கண்டிப்பா.. போனா போவுது. இன்னைக்கு ரெண்டு பேருக்கும் ஃபர்ஸ்ட் நைட் ஆச்சேன்னு ஒரு கருணையோடு வரல. ரெண்டு நாள்ல வந்து குதிச்சிட மாட்டேன். உன்னை யும், ஜேம்ஸையும் யார் விட்டது'' என்று தலையாட்டி சிரித்தாள்.

நாண ரேகை முதல் முறையாக துளசியின் முகத்தில் எட்டிப் பார்த்து மின்னியது. எல்லோரிடமும் விடைபெற்று ஜேம்ஸோடு ஆட்டோவில் ஏறினாள். ஆட்டோ அந்தத் தெரு முனையைத் தாண்டிய பிறகும் கைகளை ஆட்டிக் கொண்டு நின்றாள்.

பனிக்காற்று இரண்டு பக்கமும் ஊசியாக சீறியது. குளிர் தாங்க முடியாமல் தன்னை குறுக்கிக் கொண்டாள்.

''ரொம்பக் குளிருதா? உனக்கு குளிர் தாங்காதே'' என்றான் ஜேம்ஸ்.



''அதெல்லாம் இல்லை'' தலையைக் குனிந்து கொண்டாள். ஆட்டோ டிரைவர் சாலையில் மட்டும் கவனமாக இருக் கிறாரா என்று கவனித்துவிட்டு... துளசியின் இடுப்பில் கை போட்டான் ஜேம்ஸ். நெளிந்தாள். நகரவும் இல்லை. தடுக்கவும் இல்லை. அது ஜேம்ஸிற்கு இன்னும் தைரியத்தைக் கொடுத்தது. அவள் அருகில் இன்னும் நெருங்கி உட்கார்ந் தான். அவன் மூச்சுக்காற்று அவள் முகத்தில் மோதி... சூடாய் பரவியது. சட்டென அவள் தோளில் முத்தமிட்டான். பேச முடியாமல் சிலிர்த்துப் போய் உட்கார்ந்து இருந்தாள்.

ஆட்டோ... கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் வேகமெடுத் துக் கொண்டிருந்தது.

''சார்'' ஆட்டோ டிரைவர் அழைத்ததும், நகர்ந்து கொண்ட ஜேம்ஸ்,

''என்ன?'' என்றான்.

''கோடம்பாக்கம் பவர் ஹவுசுக்குப் பக்கத்துலதானே வீடு?''

''நான் ரூட் சொல்றேன்'' என்றபடி வீட்டிற்கு வழிகாட்டி னான். அந்த சின்ன பங்களாவின் முன்பு ஆட்டோ நின்றது. துளசியை கை பிடித்து இறக்கினான். மீட்டரைப் பார்த்து அதிகமாகவே கொடுத்தான். கேட்டைத் திறந்தான். கேட் அருகிலேயே இருந்த கூர்க்கா சிரித்தான்.

''இவங்கதான் வொய்பா சார்.''

''ம்.''

''வணக்கம்மா'' துளசியும் பதிலுக்கு கைகூப்பினாள்.

''வீட்டுல ஸார் இருக்காரா?''

''இல்லை ஸார்... ஸாரும் அம்மாவும் வெளியே போயிருக் காங்க. வர லேட்டாகும்னு நினைக்கிறேன். நீங்க போங்க... நான் சொல்லிட்றேன்'' என்றான்.

அவுட்டவுஸை நோக்கி நடந்தான். அவனைப் பின் தொடர்ந்தாள் துளசி. அவுட்டவுஸின் வெளித்தோற்றமே அழகாகத்தான் இருந்தது. கதவைத் திறந்தான். உள்ளே சென்று எல்லா சுவிட்சையும் போட்டான். சட்டென யோசனை தோன்ற வலது காலை எடுத்து வைத்தாள் துளசி. நுழைந்த துமே கதவைத் தாழிட்டாள். ஹால், கிச்சன், மூன்று அறை கள்... பாத்ரூம் என்று சுத்தமாகவும் அழகாகவும் அந்த சின்ன வீடு அசத்தியது.

''அவுட்டவுஸ் பெரும்பாலும் வாடகைக்கு விட மாட் டாங்களே... உங்களுக்கு எப்படி?''

''இந்த வீட்டு காயத்ரியை கிட்டத்தட்ட பத்து வருசமா எனக்குத் தெரியும். எனக்கு அக்கா மாதிரின்னு வச்சுக் கோயேன்... ரொம்ப நல்லவங்க. எனக்கு கார்டியன் மாதிரி.''

''நம்ம கல்யாணம் அவங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும். வரன்னுகூட கம்பல் பண்ணினாங்க. நான்தான் வேண்டான்னுட்டேன்'' வீட்டைச் சுற்றிப் பார்த்தாள். வீட்டிற் குத் தேவையான அனைத்தும், அரிசி, பருப்பு, கடுகில் ஆரம் பித்து, ஸ்டவ்.. கெரஸின் வரை வாங்கியிருந்தான்.

''கொஞ்ச நாளைக்குத்தான் ஸ்டவ்... அப்புறமா கேஸ் வந்திடும்... அப்ளை பண்ணி இருக்கேன்.''

பேச முடியாமல் அவனை ஏறிட்டாள்.

''கவர்மெண்ட் கேஸ்னாதான் லேட்டாகும். தனியார் கேஸ்தான் நிறைய இருக்கே... ஒரு வாரத்துல வந்துடும்.''

''.........'' அவனையே பார்த்துக் கொண்டு வந்தாள்.



''இது ஹால். கொஞ்சம் கொஞ்சமா பர்னிச்சர்ஸ் வாங்கிப் போட்டுடலாம்.''

''.......''

''இது மும்தாஜ் ரூம்'' கதவைத் திறந்து காட்டி சாத்தினான்.

''.........''

''இது நம்மோட திங்க்ஸ் வச்சிக்கற ரூம்'' திறந்து காட்டி னான். அவன் துணிமணிகள் அவளுடைய அத்தனை சூட் கேசும் அங்கேதான் இருந்தது.

''.........''

''இது கிச்சன்.''

''........''

''இது பாத்ரூம்.''

''......''

''இந்த ரூமை என்ன பண்றதுன்னே தெரியலை... யோசிக்கலாம்.''

''........''

''இதுதான் நம்ம பெட்ரூம்'' திறந்தான். ஒரு புதுப்பாய் போடப்பட்டு இருந்தது. இரண்டு தலையணை. ஒரு ப்ளேட் டில் ஸ்வீட்ஸ், பழம் எல்லாம் வைத்திருந்தான். பக்கத்தில் ஒரு ப்ளாஸ்கில் பால் வாங்கி வைத்திருந்தான்.

''தப்பா நினைக்காதே. வீட்டுக்குத் தேவையான பாத் திரங்கள், பொருட்கள், கேஸ்... அப்படி இப்படின்னு வாங்கின பின்னாலதான் கட்டில் ஞாபகமே வந்தது. இப்போதைக்கு பாய்...''

அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''பாய் கூட உங்ககிட்டே நான் கேட்கலையே.''

''நீ எதுவுமே எங்கிட்டே கேட்கங்காட்டியும்... நான் உனக்கு அதை செஞ்சிடணும்.''

''என்னால இன்னும் நம்ப முடியல... எனக்கு இப்படி ஒரு வாழ்க்கையா?''

''நீ நினைக்கிறது தப்பு. எந்த வகையிலும் நீ குறைந்து போனவ இல்ல. என்னைப் பொருத்தவரை... நீ வைரம். கொஞ்ச நாள் குப்பையில வைரம் கிடந்து விட்டால், மதிப்பு போயிடுமா? உனக்கு இனிமேல் இந்த சந்தேகம் இருக்கக் கூடாது. பழைய வாழ்க்கை உனக்கும் தேவையில்லை. எனக்கும் தேவையில்லை ஓ.கே.?''

''ம்'' தலையாட்டி ஆமோதித்தாள்.

''கைலி மாத்திக்கிறேன்'' என்றவனை குறும்பாகப் பார்த்து கள்ளச் சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

''அட... உனக்கு சிரிக்கக் கூடத் தெரியுமா... உன் மனசும் குணமும் என்னை உங்கிட்டே உருக வச்சிடுச்சி... அப்போ மட்டும் நீ சிரிச்சி இருந்த... ஒரு நிமிடம் கூட தூங்கியிருக்க மாட்டேன். அள்ளுற'' என்றவன் ட்ரஸ் சேஞ்ச் பண்ண நடக்காமல் ஓடினான்.

திரும்பி அவன் வந்தபோது, துளசி ஹாலில் நின்று இருந்தாள்.

''என்ன இங்கே?''

''இவ்வளவு வாங்கினீங்களே... ஒரு அம்பாள் படம் வாங்குனீங்களா?'' என சட்டென கூறி... பின் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.



''இப்போ எதுக்கு நாக்கை கடிக்கிற... வேணும்னா வாங்கிடலாம்.''

''வாழ்க்கையை ஆரம்பிக்கப் போறோம். சாமி கும்பிடலாம்னு. ஏசு படமும் இல்லையா?''

''இல்லை.''

''எங்கிட்டே பகவத் கீதை இருக்கு. உங்ககிட்டே பைபிள் இருக்கா?''

''இருக்கு.''

''கொண்டாங்க.''

ஹாலில் உள்ள ஒரு அலமாரியைத் தேர்ந்தெடுத்து, பகவத் கீதையும், பைபிளும் அருகருகே வைக்கப்பட்டது. இரண்டையுமே இருவரும் வணங்கினர். இருவர் எண்ணத்திலும் ஏசுவோ, கிருஷ்ணனோ தோன்றாமல்... கண்ணுக்குத் தெரியாத ஒரு ஒளியை வணங்கினர். பின்பு,

பாயில் வந்து உட்கார்ந்தாள் துளசி. அவள் அருகில் வந்து அமர்ந்தவன், விழியால் அவளை ஊடுருவினான். அவன் பார்வையையே அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நாணத்தோடு தலை கவிழ்ந்தாள்.

''உன் மடியில் தலை வைக்கட்டா?'' கிசுகிசுத்தான்.

''ம்.'' தலையாட்டினாள். அவள் மடியில் தலை வைத்தான்.

''உன் கையைத் தொட்டதுக்கே ஒங்கி அறஞ்சியே. இப்போ மடியிலேயே படுத்து இருக்கேனே என்ன பண்ணப் போற?'' வம்பிழுத்தான்.

''உங்க கை எம்மேல பட்டதும் புது ரத்தம் ஓட்ற மாதிரி இருக்கு... உண்மைங்கற தீயில் குதித்ததால்... மாசு எல்லாம் போன மாதிரி பளிச்சின்னு இருக்கு. என்னையே திரும்ப எனக்குக் குடுத்து இருக்கீங்க... அதனால?'' நிறுத்தினாள்.

''அதனால?'' அவள் கன்னத்தில் தன் ஆள் காட்டி விரலால் கோலம் போட்டான்.

''மனசார, சந்தோஷமா... இதுதான் வாழ்க்கை... நீங்கதான் எனக்கு எல்லாம்னு என்னையே கொடுக்கப் போறேன்'' என்றபடி... மடியில் இருந்த அவன் முகம் நோக்கி குனியத் துவங்கினாள்.

மனதாலும் உடலாலும் ஒருவரிடம் ஒருவர் தங்களை இழக்கத் துவங்கினர்.

காலைப் பனியையும் பொறுத்துக் கொண்டு, 5.00 மணிக்கெல்லாம் எழுந்தாள் துளசி. அவளை அணைத்தபடி உறங்கிக் கொண்டு இருந்தான் ஜேம்ஸ். அவனை விலக்கிவிட்டு எழுந்தாள். ஆசைப்பட்ட வாழ்க்கை... மனம் முழுவதும் சந்தோஷம் நிரம்பி வழிந்தது. தலை குளித்தாள். புட்வை மாற்றினாள். தலையில் ஈரம் துவட்டினாள். வீடு முழுவதையும் கூட்டி சுத்தப்படுத்தினாள்.

தலை முடியின் நுனியில் சின்னதாக ஒரு முடிச்சி போட்டு தலை முழுவதையும் காய விட்டு இருந்தாள். இந்த நேரம் மட்டும் ஜேம்ஸ் அவளைப் பார்த்து இருந்தால் அவ்வளவு தான். கோயில் சிலை போல் குத்து விளக்காய் ஜொலித்தாள். அவனே எழட்டும் என்று எழுப்பாமல் விட்டாள்.

7.00க்குள் காபி போட்டு... அவள் வைத்து இருந்த சேமியாவில் உப்புமாவும், தேங்காய் சட்னியும் பண்ணி வைத்து... அவனை எழுப்பினாள். அவனை பாத்ருமிற்குள் தள்ளி விடுவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. குளித்து விட்டே வெளி வந்தான்.

''காபி கொண்டு வரேன்'' சமையல் அறைக்குள் நுழைந்தாள். அதே நேரம்... கதவைத் தட்டிக் கொண்டே... அந்த



வீட்டு எஜமானி காயத்ரியும் அவளின் கணவன் சுந்தரும் உள்ளே நுழைந்தார்கள்.

''வாங்க... வாங்க... கூப்பிட்டா நானே வந்து இருப்பேனே...'' தடுமாறினான் ஜேம்ஸ்.

''டேய்... வழியாதடா... ப்ரசன்ட் பண்றவங்கதான் வரணும்'' என்று ஜேம்சின் தோளை உரிமையோடு தட்டினாள் காயத்ரி.

''உட்காருங்க ஸார்'' பாய் விரித்துப் போட்டான்.

''துளசி! மூணு காபி'' சத்தமிட்டான்.

சமையல் அறையில் இருந்து கொண்டே... வந்தவர்கள் யாரென்று புரிந்து கொண்ட துளசி... மூன்று காபியோடு வெளியே வந்தாள்.

சிரித்தபடி காபி கோப்பையை நீட்டியவள்... காயத்ரியின் கணவனைப் பார்த்து அதிர்ந்து போனாள். காபியை கொட்டாமல், மயங்கிச் சரியாமல் நின்றது... ஆண்டவன் செயல்... இதே நிலைதான் சுந்தருக்கும்...

''துளசியா?'' அவனுக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

வேரறுந்த மரம்போல் நிலைகுலைந்து போனாள். கண்ணுக்கு தெரிந்த பசுமை பாலைவனமாக மாறியது. தடுமாறாமல் இருக்க மிகவும் முயன்றாள்.

# 9

''என்ன துளசி! அப்படியே நின்னுட்ட? காபி கொடு.''

தன் உணர்வுகளை மறைத்துக் கொண்டு காபியை மூவருக்கும் நீட்டினாள். துளசியின் கையைப் பிடித்து காயத்ரி தன் அருகே உட்கார வைத்தாள். துளசியின் தோள் தடவி, தலை கோதி... கை பிடித்து அழுத்தி தன் அன்பை வெளிப்படுத்தினாள்.

''அவ்வளவு சீக்கிரம் நீ சம்மதிக்கலையாமே... ஜேம்ஸ் சொன்னான்.''

கடமைக்காக சிரித்து வைத்தாள்.

''இப்படி ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க... நீ ஆயுள் முழுக்க காத்து இருந்தாலும் தகும்டா.''

காலரைத் தூக்கி விடாத குறைதான் ஜேம்சுக்கு.

''உனக்கு என்ன உதவி வேணும்னாலும் தயங்காம கேளு... ஜேம்ஸ் எனக்கு சொந்தத் தம்பி மாதிரி... ரொம்ப நல்லவன்... என்ன கொஞ்சம் முரடன்... மத்தபடி எந்தக் குறையும் சொல்ல முடியாது... இவனுக்கு எவ்வளவோ செய்யணும்னு நினைச்சேன்... இவன்தான் ஏத்துக்கலை... இப்பக்கூட இந்த வீட்டுக்கு வாடகை கொடுப்பேன்னு பேசித்தான் சாவி வாங்கினான்'' காயத்ரி கலகலப்பாகப் பேசினாள். சுந்தர் எதுவுமே பேசவில்லை.

காயத்ரியும், ஜேம்சும் ஏதேதோ பேசினார்கள். எதுவும் துளசியின் செவிகளில் விழவில்லை... அதைக் கேட்கும் நிலையிலும் அவள் இல்லை. அவர்கள் விடை பெற்றபோதும் அனிச்சையாக கை கூப்பி, தலையசைத்து விடை கொடுத்தாள்.

''என்னாச்சி உனக்கு?'' துளசியின் முகவாயைத் தன் கைகளில் தாங்கிக் கொண்டு கேட்டான்.

''ஒன்னுமில்லை.''



''ஏய்... பொய் சொல்ற... அவங்க வந்ததில் இருந்து உன் முகமே சரியில்லை.''

''அப்படி எல்லாம் இல்லை.''

''அக்கா ரொம்ப நல்லவங்க... இறந்துபோன அவங்க தம்பி மாதிரி நான் இருக்கறதா அடிக்கடி சொல்வாங்க... அதனால என்மேல் பிரியம் கொஞ்சம் அதிகம்.''

''நாம இந்த வீட்லதான் இருக்கணுமா?''

''ஏன்... இந்த வீடு பிடிக்கலையா?''

''பிடிக்கலை.''

''நேத்து பிடிச்சிருக்குன்ன... உடனே வேறு வீடு... எப்படி துளசி?'' ஜேம்ஸின் சங்கடத்தைப் பார்த்து... தன்னை சுதாரித்துக் கொண்டவள்...

''சும்மா சொன்னேங்க'' என்றாள்.

''ஒரு நிமிஷம் பயந்தே போயிட்டேன்.''

சூழ்நிலையை மாற்றுவதற்காக டிபன் எடுத்து வைத்தாள். அவன் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டு இருந்தவள்...

''என்னங்க?''

''இம்... உப்புமா வேணுமா? ஊட்டி விடணுமா?'' என்றாள்.

அவன் அருகில் நெருங்கி உட்கார்ந்தவள்.

''உங்கப்பா அம்மாவைப் பார்க்க வேண்டாமா?'' என்றாள்.

இரண்டு நிமிடங்கள் மவுனமாக இருந்தவன்.

''இப்போ வேண்டாம். மெட்ராஸில் இருந்தாக்கூடப் பரவாயில்லை. அவங்க இருக்கிறதோ பெங்களூர்... இப்போ அங்கே போனா என் தங்கையோட கல்யாணம்கூட பாதிக்கப்படலாம்.

நமக்கும் அவமானம்தான். அவங்களைப் பொருத்தவரை நான் என்னைக்கோ செத்தாச்சி...''.

''ஸாரி... தெரியாம சொல்லிட்டேன்.''

''இன்னைக்கு பிரசாத்துல ஒரு சாங் ரெக்கார்டிங் இருக்கு... ஈவ்னிங் கொஞ்சம் லேட்டானாலும் ஆகும்...''

''லேட்டாகுமா?'' பயம் நெஞ்சைக் கவ்வியது.

''பயப்படாதே... இந்த வாரம் முழுக்க லீவ்தானே போட்டு இருக்க?''

''ம்.''

''போரடிச்சா, காயத்ரிக்காகிட்டே பேசிகிட்டு இரு... மும்தாஜ்தான் நாளைக்கு வந்திடுமே... அப்புறம் என்ன?'' என்றவன் கதவு திறந்து இருக்கிறதா என பார்த்து விட்டு இடது கையால் அவளின் இடுப்பை வளைத்தான்.

''என்னது சாப்பிட்றப்ப?'' சிணுங்கினாள்.

அவளைச் சீண்டிக் கொண்டே சாப்பிட்டு முடித்து... வயலினோடு அவன் கிளம்பிய பின்னர்... வயிற்றுக்குள் அமிலம் சுரக்கத் துவங்கியது. சாப்பிடாமல் மூடி வைத்து விட்டு உட்கார்ந்தாள். கதவு தாழிடப்பட்டு இருக்கிறதா? என்று அடிக்கடி பார்த்துக் கொண்டாள். எந்த நேரமும் சுந்தரால் தனக்கு ஆபத்து வரலாம் என்று செய்தி அலறியது. கைகளை இறுக்கிப் பிசைந்து கொண்டாள். நிலையில்லாமல் தவிக்கவும் தொடங்கினாள். பேசாமல் வீட்டைப் பூட்டி விட்டு ஹாஸ்டல் போய் விடலாமா? அதுவே சரி என்று மனதிற்குள் பட்டது.

தழையத் தழைய லூசாக தலையை பின்னிப் போட்டுக் கொண்டாள். கழுத்திலும் முகத்திலும் லேசான பவுடரை



ஏற்றினாள். பொட்டு வைத்துக் கொண்டு திரும்பியபோது கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

பகீர் என்று பயம் வயிற்றைச் சுருட்டிப் பிடித்தது. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. அச்சத்தோடு நகர்ந்து தாளை விலக்கினாள். பயந்தது சரியாகப் போய் விட்டது... சுந்தர்தான் நின்று இருந்தான்.

துளசிக்கு கண்கள் நிறமிழந்து... உதடு வறண்டது.

''பயப்படாதே துளசி... ரொம்ப பயப்படற மாதிரி தெரியுது. நான் உள்ளே கூட வரலை. வெளியே நின்னே பேசறேன்.''

''.......''

''என்னைப் பார்த்ததும் நீ பயந்த. ஆனா நான் சந்தோஷப்பட்டேன். ஜேம்ஸ் மனைவி நீயா இருப்பேன்னு நான் கனவு கூட காணல... சொல்லப் போனா கிட்டத்தட்ட உன்னை நான் மறந்தே போயிட்டேன். உன்னோட வாழ்க்கையில நான் விளையாடியவன் தான்... நான் அயோக்கியன்தான். ஆனா,

''மஞ்சள் கயிற்றோடு, குங்குமத்தோடு வாழ ஆரம்பிச்சிருக்க உன்னோட வாழ்க்கையில் எந்த வகையிலும் குறுக்கிடும் அளவு வடிகட்டின அயோக்கியன் இல்லை. நடந்ததை எல்லாம் மறந்திடும்மா... என்னால உன் வாழ்க்கையில எந்தப் பிரச்சினையும் வராது. தயவு செஞ்சி உன் கடந்த கால வாழ்க்கையை ஜேம்ஸ்கிட்டே சொல்லிடாதே. உனக்கு என்ன உதவி வேணும்னாலும் எங்கிட்டே கேளு... நீ என்னை மன்னிச்சிட்டால், இந்த வீட்டுலதான் குடியிருக்கனும்... என்னைப் பார்த்துப் பயப்பட வேண்டாம். நீயா அமைச்சிகிட்ட இந்த வாழ்க்கை உனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கனும்'' என்றவன் துளசியின் பதிலை எதிர்பார்க்காமல் தன் போர்ட்டிகோவில்

நுழைந்து அங்கே நிறுத்தப்பட்ட மாருதியை உசுப்பி விட்டுக் கூர்காவின் சல்யூட்டை லட்சியம் பண்ணாமல் புறப்பட்டான்.

அப்படியே கதவருகில் மடிந்து உட்கார்ந்து விட்டாள். பேசிவிட்டுப் போவது சுந்தர் தானா? நம்ப முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. என் வாழ்க்கையின் மேல் கடவுளின் பார்வை பட்டு விட்டதா? சந்தோசமும் கண்ணீராகவே அவளிடம் இருந்து வெளிவந்தது. அடுத்த நாளே மும்தாஜ் வந்தாள். ஜேம்சும், மும்தாஜும் தரையில் விடாமல் தாங்கினார்கள். வசந்தம், சந்தோஷம், பிருந்தா வனம் எல்லாம் ஒன்றாய் துளசி அனுபவித்தாள்.

தனக்கு எல்லாமே துளசிதான் என வாழ்ந்தான் ஜேம்ஸ். சுந்தர் துளசியைப் பார்க்கும்போதெல்லாம் அன்பாய் புன்னகைக்கத் தவறுவதில்லை. காயத்ரியும் அடிக்கடி துளசியைப் பார்த்துக் கொண்டும், பேசிக் கொண்டும் ஸ்நேகமாக இருந்தாள். துளசியை சுற்றி இருக்கும் எல்லோருமே அவளுக்கு தெய்வங்களாகத் தெரிந்தார்கள். துன்பம் என்பது கானல் நீராகக் கூட அவள் கண்களுக்குத் தென்படவில்லை. ஆனந்தத்தின் எல்லையிலேயே கம்பீரமாக அமர்ந்து இருந்தாள். அதன் உச்சகட்டமாக அவளுக்குள் சின்னதாய் மொட்டும் விட்டது. அது குட்டி ஜேம்ஸா, குட்டி துளசியா என்று இன்னும் ஒன்பது மாதங்கள் கழித்துத்தான் தெரியும். தான் தாயாகப் போவதை, தன் தாயிடம் போய் பூரிப்பாய் சொன்னாள். தன் வயிற்றில் தன் தாயின் கையை வைக்கச் சொல்லி... புரியாத தாய்க்கு புரிய வைக்க முயன்றாள். தனக்கு 12 வருட தாம்பத்திய வாழ்க்கையில் கிடைக்காத தாய்மை... துளசிக்கு உடனே கிடைத்ததை அறிந்து... எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்து, துளசியை அப்படியே உச்சி முகர்ந்து... நெட்டி முறித்தாள் காயத்ரி. சுந்தர் கூட அப்படி நடக்காதே, இப்படி நடக்காதேன்னு அறிவுறுத்தினான். எல்லாருமே திக்கு முக்காடித் தான் போயிருந்தார்கள்.



காலங்கள் கரையத் துவங்கியது. துளசியின் வயிறு மேடிடத் தொடங்கியது. மும்தாஜும் ஃபர்ஸ்ட் க்ளாஸோடு வந்து நின்றாள். அதன் பிறகு அவளுக்கு அப்ளிகேஷன் எழுதுவதும், இன்டர்வ்யூ அட்டன் பண்ணுவதுமே சரியாக இருந்தது. லட்சுமிதேவியும் அந்த இல்லத்தில் தாராள மாகவே விளையாடினாள். அவர்கள் எல்லோருக்கும் உள்ள ஒரே குறை துளசியின் தாயின் நிலைமைதான். ரொம்ப நாட் களாகவே ரெக்கார்டிங் பார்க்க வேண்டும் என்று நச்சரித்துக் கொண்டு இருந்தாள் மும்தாஜ். அவளின் நச்சரிப்பு தாளாமல் அன்று தன்னுடன் அழைத்துச் சென்று இருந்தான். ரெக் கார்டிங் முடியும்போதே, மும்தாஜின் சிறுகுடலைப் பெருங் குடல் தின்று கொண்டு இருந்தது. சாப்பாடு உள்ளே போகா மல் என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது என்று அருகே இருந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். விதி அதே ஹோட்டலில் காயத்ரி, சுந்தர் ரூபத்தில் ஒரு டேபிளில் அமர்ந்து இருந்தது.

மும்தாஜும் ஜேம்சும் அருகருகே அமர்ந்தார்கள்.

''என்ன மும்தாஜ் வேணும்?''

''பாக்கெட்டில் எவ்வளவு பணம் இருக்கு.''

''நீயே பார்த்துக்க... அதுக்கு தகுந்த மாதிரி ஆர்டர் பண்ணுமா'' என்றபடி பாக்கெட்டைக் காட்டினான். அவளே அவன் பாக்கெட்டில் கை விட்டு எடுத்தாள். அவள் பாக் கெட்டில் கைவிட்டபோதே காயத்ரிக்கு கோபம் வந்து அடங்கியது. ஃபேன் காற்றில் மும்தாஜின் துப்பட்டா வேறு ஜேம்ஸின் தோளிலேயே விழுந்து கொண்டு இருந்தது. சில நேரம் தன்மேல் கிடந்த துப்பட்டாவை எடுத்து அவன் தோளில் போட்டாள். இதையெல்லாம் பார்த்த காயத்ரிக்கு பற்றிக் கொண்டு வந்தது. எழுந்து வந்து ஜேம்ஸையும், மும்தாஜையும் மாறி மாறி அறையலாம் என்று கூட

யோசித்தாள். ஆர்டர் செய்ததை பேரர் கொண்டு வந்து வைத்தார். இருவரும் சாப்பிடத் தொடங்கினர். சாப்பிட ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே... மும்தாஜின் முகம் அஷ்ட கோணலாக மாறியது. சமாளித்துக் கொண்டு திரும்பவும் சாப்பிடத் துவங்கினாள். ஆனால் அதற்கு மேல் ஒரு வாய் கூட அவளால் சாப்பிட முடியவில்லை. கண்களில் கரகர வென்று கண்ணீர் சுரந்தது. ரத்த நாளங்கள் வெடித்து விடுவது போல் விம்மி விம்மி அதிர்ந்தது.

ஜேம்சின் தொடையைப் பிடித்து வேகமாக அழுத்தினாள்.

''என்ன மும்தாஜ்... ஏதாவது வேணுமா?'' என்றவன் மும் தாஜின் வேதனையையும் துடிப்பையும் பார்த்து அதிர்ந்து போய் விட்டான்.

''என்னம்மா! என்னாச்சி?''

இடது கையால் வயிற்றை இறுக்கிப் பிடித்துக் கொண்டு...

''ஸ்டமக் பெயின்.''

''வயிற்று வலியா? இப்படித் துடிக்கற.''

''ஐ'ம் ஸாரி ஜேம்ஸ்... என்னால உங்களுக்கு ப்ராப்ளம்'' மேலும் தன் வயிற்றை இறுக்கிக் கொண்டாள். இவர்கள் இருவரும் குனிந்து குனிந்து தலைகள் மோத மோத பேசிக் கொள்வது... காயத்ரிக்கு விபரீதமாகவே புரிந்தது.

அவசர அவசரமா பேரரை அழைத்து பில்லை பே பண்ணி னான்.

''எந்திரி போலாம்.''

''என்னால முடியல ஜேம்ஸ் ப்ளீஸ்.''

''என்னம்மா பண்ணுது?'' புரியாமல் துடிக்கத் துவங்கினான்.



''என்னால நடக்க முடியாது ஜேம்ஸ். வயித்துல ஈயத்தைக் காய்ச்சி ஊத்துன மாதிரி இருக்கு'' துடிக்கத் தொடங்கினாள்.

''மும்தாஜ்... மும்தாஜ்'' பதறினான்.

''என்னைப் பிடிச்சி... கூட்டி'' அதற்கு மேல் அவளால் பேச முடியாமல் தடுமாறினாள். அவளை அப்படியே தோளோடு சாய்த்துக் கொண்டு அவள் தடுமாறி விழாதபடி இறுக்கிக் கொண்டு அணைத்தபடியே வெளியே கூட்டிவந்து, அருகில் நின்று கொண்டிருந்த ஆட்டோவை அழைத்து... ஹாஸ்பிடல் பெயர் ஒன்றைக் குறிப்பிட்டான். தளர்ந்து போய்... அவனை இறுக்கிப் பிடித்துக் கொண்டு துடித்தாள். இதையெல்லாம் பார்த்து பூகம்பமாய் வெடித்து சிதறிப் போய் இருந்தாள் காயத்ரி.

வேகமாக டேபிளை விட்டு எழுந்தவளை, தடுத்து உட்கார வைத்தான்.

''அவசரப்படாதே வந்த வேலையை முடிச்சிகிட்டு, சாயந்தரமா பேசிக்கலாம்'' அடக்கி வைத்தான்.

''நம்ம ஜேம்ஸ்'' பொறுக்காமல் கூறினாள்.

''சாயந்தரம்.''

மாலை வரை காயத்ரியால் பொறுமையாக இருக்க முடியவில்லை. வீட்டிற்கு வந்ததும் நேராக தன் வீட்டிற்குக் கூடப் போகாமல், அவுட்டவுசை நோக்கி ஓடினாள். ஹாலி லேயே உட்கார்ந்து இருந்தாள் துளசி. காயத்ரியைப் பார்த்ததும் சிரித்தாள்.

''என்னக்கா... வாங்க.. உட்காருங்க.''

''ஜேம்ஸ் இருக்கானா?''

''இல்லை.''

''அந்தப் பொண்ணு மும்தாஜ்.''

''ரெண்டு பேருமே இல்லை. வெளியே போயிருக்காங்க. ரெக்கார்டிங் போயிருக்காங்க.''

''ரெக்கார்டிங் நடக்கல. ரொமான்ஸ் நடக்குது.''

''என்னக்கா சொல்றீங்க?''

அதே நேரம் ஜேம்ஸ் மும்தாஜோடு ஆட்டோவில் வந்து இறங்கினான். கை தாங்க முயன்றவனைப் பார்த்து...

''பரவாயில்லை... நானே வந்திட்றேன்'' மெதுவாக நடந்தாள். அவர்கள் இருவரும் வீட்டிற்குள் நுழையும்போது... காயத்ரியின் ஆத்திரமான குரல் கேட்டு இருவரும் அப்படியே நின்றார்கள்.

''சொந்த தங்கை அக்காவையே புருசனோட பழக விட மாட்டாங்க... நீ என்னடான்னா வீட்டுக்குள்ளேயே ஒருத்தியை சோறு போட்டு வளர்க்கிற?''

''என்னக்கா சொல்றீங்க?''

''என்ன வேணா பங்கு போட்டுக்கலாம். புருஷனை மட்டும் பங்கு போட்டுக்க விடக் கூடாது. இந்த ஜேம்ஸ் பய புத்தி இப்படிப் போகும்னு நான் நினைக்கவே இல்லை.''

''புரியலக்கா.''

''அசடு... உன் புருஷனுக்கும், மும்தாஜுக்கும் ஏதோ கசமுசா இருக்கு. அக்கம் பக்கத்து வீட்டுக்காரங்களே பல தடவை என்னைக் கேட்டாங்க. நான்தான் அப்படியெல்லாம் ஒண்ணுமில்லன்னு சொல்லிகிட்டு இருந்தேன். நெருப்பு இல்லாம புகையாதுங்கறது சரியா இருக்கு.''

''சில நேரம் பனிமூட்டம் கூட புகை மாதிரிதான் இருக்கும்.''



''உன்னை ஓங்கி அறையணும் போல இருக்கு. ஹோட்டல்ல பார்த்துட்டு வந்துதான் கத்தறேன். இவ்வளவு நேரம் வீட்டுக்கு வராம என்ன வேலை? அவன் பாக்கெட்டுல இவ கைவிடறதும், உரசி உரசிகிட்டு பேசறதும், அப்புறம் என்னடான்னு பார்த்தா அவ இடுப்புல கையை போட்டு தோள்ல சாச்சிகிட்டு வெளியே கூட்டிகிட்டுப்போனதைக் கண்ணால பார்த்தேன். நீ கண்டிக்கலன்னா அவன் கை நழுவிப் போயிடுவான்.''

452336
6227174.

''........''

''அழகா பொண்டாட்டி இருந்தாலும், குரங்கு மாதிரி வப்பாட்டி தேடுவானுங்க... இவ கண்ணுக்கு அழகா வேற உறிச்ச கோழி மாதிரி இருக்கா.''

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

''சரிக்கா... நான் பார்த்துக்கிறேன்.''

''இப்பவே கண்டிச்சிடு... வளர விட்டா உன் வாழ்க்கைதான் பறிபோகும். அவன் என் கண்ணுல படட்டும். பேசிக்கிறேன்'' உறுமிவிட்டு வில்லில் இருந்து புறப்பட்ட அம்பாக வீறிட்டு தன் வீட்டை நோக்கிப் போனாள். ஜேம்சும் மும்தாஜும் நின்று கொண்டிருப்பதை அவள் பார்க்கவே இல்லை. ரேஸில் ஓடும் குதிரைக் கணக்காக இரண்டு பக்கமும் பார்க்காமல் போய்க் கொண்டிருந்தாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பயத்தோடு பார்த்துக் கொண்டார்கள். இதயம் துடிக்கும்போதே இருவரும் உணர்வளவில் இறந்து போயிருந்தார்கள்.

உள்ளே நுழைந்தால் என்ன நடக்குமோ என்று வியர்வை பூக்க நடுங்கினார்கள். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் கண்ணி வெடி மேல் வைத்தது போல், வைக்கவும் முடியாமல் எடுக்கவும் முடியாமல் தத்தளித்தார்கள். உள்ளே நுழைந்த

போது துளசி ஹாலில் இல்லை. கால்கள் பின்னிக்கொள்ள இருவரும் ஹாலில் உள்ள சேரிலேயே அமர்ந்தார்கள். துளசி பெட்ரூமில் இருக்கிறாளா? கிச்சனில் இருக்கிறாளா? என்று தெரியவில்லை. ஆளையே காணோம். அவளை அழைக்கவும் தயக்கமாக இருந்தது. இதைக் கேட்டுவிட்டு பெட்ரூமில் அழுது கொண்டு இருக்கிறாளா?

ஜேம்சின் இதயம் சுக்கு நூறாக நொறுங்கியது. மும்தாஜ் பிணம் போல் உட்கார்ந்து இருந்தாள். பத்து நிமிடங்கள் அவள் வெளியே வருவாள் என்று காத்திருந்தான். துளசி வெளியே வரவே இல்லை.

சிறிது நாட்களுக்கு முன்பு துளசி கூறியது அவனுக்குள் பூகம்பமாய் எழுந்து நின்றது.

''என்னங்க... நான் எதிர்பார்க்காத பொக்கிஷம் நீங்க. ஏற்கனவே வாழ்க்கையில் நொந்து போயிட்டேன். உங்களால எனக்கு சோதனை வந்தா... உங்க மனசுல வேற ஒருத்திக்கு இடம் கொடுத்தா... அடுத்த நிமிடம் என் உடம்புல உயிர் இருக்காது.''

''துளசீ... ஈ... ஈ'' வேகமாக அலறியபடி எழுந்தான்.

## 10

திடுக்கிட்டு மும்தாஜ் நிமிர்ந்தாள். உடல் வேதனையை விட மனம் கொடுத்த வேதனை அதிகமாக இருந்தது. துளசியும் சப்பாத்தி மாவை அப்படியே தூக்கிக் கொண்டு சமையல் அறையில் இருந்து வெளியே ஓடி வந்தாள். ஓடி வந்த வேகத்தில் அவள் முந்தானை நழுவி கையிலேயே



விழுந்தது. இரண்டு கைகளிலும் மாவை வைத்துக் கொண்டு, எடுத்துப் போட முடியாமல் தடுமாறியபடி ஜேம்ஸ் அருகில் வந்தாள். முகத்தில் ஏகப்பட்ட கேள்விக்குறி.

''என்னங்க ஆச்சி... ஏன் சத்தம் போட்டீங்க... மும்தாஜ் ஏன் இப்படி உட்கார்ந்து இருக்கா?''

''உனக்கு ஒண்ணுமில்லையே.''

சோழியைக் குலுக்கி விட்டது போல் கலீர்ரென சிரித்தாள்.

''எனக்கா... கனவு ஏதாவது கண்டீங்களா?''

''.......'' துளசியை பார்த்துக் கொண்டே இருந்தான்.

''எந்தக் கடையில இந்த மாவ வாங்கிட்டு வந்தீங்க? என் கையை விடுவனாங்குது. பத்து நிமிஷமா ஒரே போராட்டமா இருக்கு. ஓ... இந்த முந்தானையைத் தூக்கி மேலே போடுங்களேன்.''

அவள் சொன்னதைச் செய்தான்.

''ஆமாம்... இவ ஏன் பேயறஞ்ச மாதிரி இப்படி இருக்கா... எங்கையாவது இழுத்தடிச்சீங்களா?''

இல்லையென தலையாட்டினான். கையில் இருந்த மாவைக் கொண்டு போய் வைத்து விட்டு... கைகளைக் கழுவிக் கொண்டு மும்தாஜ் அருகில் வந்தாள்.

''என்னடி ஆச்சி'' கழுத்தைத் தொட்டாள். நெருப்பை தொடுவது போல் கொதித்தது.

''ஐய்யோ உடம்பு இப்படிக் கொதிக்குது. ஹாஸ்பிடல் போலாமா?''

''போய்ட்டுதான் துளசி வரோம்'' வார்த்தைக்கு வலிக்குமோ என்று பேசினான். மும்தாஜின் கண்கள் கோவைப் பழத்திற்கு நிறம் மாறி... உப்பு நீரை உதிர்த்துக்

கொண்டிருந்தது. ஏதோ யோசித்தபடி காலண்டரைப் பார்த் தாள்.

"தேதி... பதினெட்டு... பீரியடா?"

"ம்" தலையசைத்தாள்.

"உனக்குத்தான் பீரியட் டைம்ல வயிற்று வலி வருமே... காலையிலேயே டேட் பாக்குறது இல்ல... இதுல அலஞ்சிட்டு வேற வர... இப்போ வலி எப்படி இருக்கு?"

"......"

"வந்ததும் படுக்க வேண்டியதுதானே... உட்கார்ந்து இருக்க... உடனே போய் படுக்காதே... வரேன்" என்றவள் தான் ஏழு மாத கர்ப்பிணி என்பதையும் மறந்து வேகமாக ஓடினாள். திரும்பி வரும்போது அவள் கையில் ஒரு டம்ளர் முழுக்க ஹார்லிக்ஸ் நிரம்பி தளும்பிக் கொண்டிருந்தது.

"இந்தா... குடி."

"வேண்டாம்..."

"என்ன வேண்டாம். இந்த நேரத்துலதான் வயிறு நிறைய சாப்பிடணும்... உன்னால இந்த நிலையில சாப்பிட முடியா துன்னு தெரியும். இதைக் குடிடி" சொன்னவள் அவளைக் குடிக்கவும் வைத்தாள்.

"வா," அவளைக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு போய் அவள் அறையில் அவள் பெட்டில் படுக்க வைத்தாள்.

"ட்ரஸ் சேஞ்ச் பண்ணனுமா?"

"ம்கூம்."

"நாப்கின்?"

"வேண்டாம்... ஹாஸ்பிடல்லையே பாத்துகிட்டேன்."



"சரி.. பேசாம படு..." என்றபடி அவள் கழுத்துவரை போர்த்தி விட்டு அந்த அறையின் ட்யூப் லைட்டை அணைத்து விட்டு, நைட் லேம்பை போட்டு விட்டு... பாதியளவு கதவு சாத்தி விட்டு... குறைந்த அளவு ஃபேனையும் வைத்து விட்டு வெளியே வந்தாள். ஜேம்ஸ் அதே இடத்தில் நின்று கொண் டிருந்தான்.

"என்னாச்சி... அப்படியே நின்னுகிட்டு இருக்கீங்க. மும்தாஜைப் பார்த்தா.. இத்தனை நாளா உங்களுக்குத் தெரி யாதே... பாவம் பீரியட் டைம்ல முதல் ரெண்டு நாளும் வலியால செத்துப் பிழைப்பா... பாவம்... ஆமாம் மதியம் ஏதாவது சாப்பிட்டாளா?"

"இல்லை."

"ஆங்..." தலையாட்டியபடி நீண்ட பெருமூச்சை விட்ட படி நகர்ந்தாள்.

இரவு சாப்பாட்டை ஏனோதானோவென்று கொறித்தான். வாயில் பூட்டுப் போட்டது போல் எல்லா வார்த்தையும் உள்ளே தங்கியிருந்தது. வந்ததும் வெடிப்பாள் என்று எதிர் பார்த்தான். ஆனால் பட்டாம்பூச்சியாய் விசிறினாள். அட்லீஸ்ட் ஏன் இவ்வளவு நேரம் என்று கேட்பாள் என்று எதிர் பார்த்தான். ஆனால் அவளோ ஆதுரமாய் நலம் விசாரிக் கிறாள். காயத்ரியக்காவிடம் விசாரிக்கிறேன் என்றாளே... எதையும் விசாரிக்காமல் முகம் பார்த்து சிரித்தபடி சாப்பாடு போடுகிறாள். ஒருவேளை பதுங்கிப் பாயலாம் என்று எண்ணி யிருக்கிறாளா? இல்லை காயத்ரி அக்கா சொன்னதை நம்ப வில்லையா... அதையெப்படி நம்பாமல் இருப்பா... சின்ன தடுமாற்றமாவது ஏற்பட்டு இருக்குமே... ஜேம்ஸிற்கு மண்டை குழம்பி வெடித்து விடுவேன் என்று பயமுறுத்தியது.

கிட்டத்தட்ட எல்லா வேலையும் முடிக்க துளசிக்கு 8.45 ஆயிற்று. எல்லாவற்றையும் சரி பார்த்தாள். ஒரு டம்ளர்

வெறும் பாலை சமையல் அறையிலேயே குடித்தாள். மற்றொரு டம்ளரில் ஜேம்ஸின் டேஸ்டிற்கு தகுந்தாற்போல் கொஞ்சமாக ஹார்லிக்ஸை சேர்த்து எடுத்துக் கொண்டு... சமையல் அறைக்கதவை சாத்தினாள். தோட்டப் பக்கக் கதவு, முன் கதவு எல்லாவற்றையும் சாத்தித் தாழிட்டு... எல்லா அறை பல்பையும் ஆ்ஃப் பண்ணி விட்டு... தங்கள் படுக்கை யறைக் கதவைத் தள்ளினாள். கண்ணை ஒரு கையால் மூடிய படி படுத்திருந்தான் ஜேம்ஸ். இடது கையால் தன் வயிற்றைத் தாங்கிக் கொண்டவள், வலது கையில் இருந்த டம்ளரோடு ஜேம்ஸை நெருங்கினாள். பால் டம்ளரை பக்கத்தில் இருந்த டேபிள் மேல் வைத்துவிட்டு கட்டிலில் அவன் அருகில் உட்கார்ந்து, தட்டி எழுப்பினாள்.

''என்னங்க.''

உடனே எழுந்து உட்கார்ந்தான் ஜேம்ஸ்.

''பால்!''

வேண்டாம் என்று வந்த வார்த்தையை அவள் கொடுத்த பாலோடு சேர்த்தே விழுங்கி வைத்தான். காலி டம்ளரை வாங்கிக் கொண்டு கட்டிலில் இருந்து இறங்கி சமையல் அறை நோக்கிப் போய்... அதைக் கழுவி வைத்து விட்டு... திரும்பும்போது... மும்தாஜ் ரூமை எட்டிப் பார்த்தாள். மும் தாஜ் ஒருக்களித்துப் படுத்திருந்தாள். திருப்தியாக தங்கள் அறைக்குள் நுழைந்தாள். முன்பிருந்த அதே கோலத்தில், கண்களை கைகளால் மூடிக் கொண்டு படுத்திருந்தான். கதவை சாத்தி விட்டு, அவனருகில் வந்து படுத்துக் கொண் டாள். நெருங்கிப் படுக்க வயிறு இடம் கொடுக்கவில்லை. எப்போதும் போல் அவன் மேல் கையைப் போட்டுக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள். இப்போதாவது ஏதாவது பேசுவாள் என்று எதிர்பார்த்தான். ம்கூம்...



சீரான மூச்சுக் காற்றுதான் அவளிடம் இருந்து வெளிவந்தது. அதற்குள் தூங்கியிருக்க மாட்டாள் என்ற நம்பிக்கையில்...

''துளசி!'' என்றான்.

''இம்'' கண்களைத் திறக்காமல் கேட்டாள்.

''உன்னால எப்படி இப்படி இருக்க முடியுது?''

''எப்படி?'' அப்போதும் கண்களைத் திறக்கவில்லை.

''நீயும் காயத்ரியக்காவும் பேசிகிட்டு இருந்ததை நாங்க வெளியே நின்னு கேட்டுகிட்டுதான் இருந்தோம்.''

துளசியின் கண்கள் மட்டும் திறக்கவில்லை. மனமும் விழித்து எழுந்து உட்கார்ந்தாள்.

''என்ன சொல்றீங்க?'' என்றவளைக் கண்கலங்கப் பார்த்தபடி எழுந்து அவனும் உட்கார்ந்தான். தலை கவிழ்ந்து இருந்தது. அவன் முகத்தைத் தூக்கி நிறுத்தினாள்.

''எதுக்கு தலை குனியுறீங்க. நிமிர்ந்து உட்காருங்க.''

''.........''

''அவங்க சொன்னதை நம்பி நான் சண்டை போடுவேன்னு எதிர்பார்த்தீங்களா?''

''.........''

''அந்த அளவிற்கா என்னை மட்டமா எடை போட்டு இருப் பீங்க?''

''..........''

''அவளைப் பத்தியும் தெரியும், உங்களைப் பத்தியும் எனக்கு நல்லாவே தெரியும். கடவுளே நேர்ல வந்து சொன்னாக் கூட நான் நம்ப மாட்டேன். பசுவோட மடிக்குள்ளே இருக்கிற

பால்ல தண்ணி கலந்து இருக்குன்னு சொன்னா... நம்பறதுக்கு எனக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு.''

''.........''

''என்னப்பா... ஏதாவது பேசய்யா?''

''எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை, துளசி...'' அவள் கைகளை தன் நெஞ்சின் மேல் வைத்துக் கொண்டான்.

''உங்ககிட்டே கேட்டு... மனச கஷ்டப்படுத்த எனக்கு விருப்பம் இல்லை. ஏற்கனவே உங்ககிட்டே சொல்லி இருக்கேன். உங்க ரெண்டு பேரோட ப்ரண்ட்ஷிப் பார்த்து பிரமிச்சிப் போயிருக்கேன். ஒரு ஆணும் பெண்ணும் மனசுல கொஞ்சம் கூட கள்ளமில்லாமல் பழக முடியுமான்னு ஆச்சர்யப்பட்டு இருக்கேன். அப்படிப்பட்ட அந்த அற்புதமான மனசு உடைய வங்க என் ப்ரண்ட் மும்தாஜ், என் புருஷன்னு நினைக்கும் போது எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?''

''காயத்ரியக்கா சொன்னது.''

''அவங்க பார்வையில அவங்க சொன்னது சரியா இருக்க லாம். அவங்களுக்கு ஒரு பக்கம் தானே தெரியும். வயசு வித்தியாசம் இல்லாம காதல் வர காலம் இது. கல்யாணம் ஆனவனா கல்யாணம் ஆனவளா... அப்படிங்கற வரைமுறையே இல்லாமப் போயிடுச்சி... அது மட்டும் இல்லை. உங்க மேலே ஏகப்பட்ட நம்பிக்கை அவங்களுக்கு. நீங்க தப்பு பண்றீங் களோன்ற பயம்... வேற ஒண்ணுமில்ல.''

''எங்க மேலே உனக்கேதும் சந்தேகம் இல்லையே'' தயக்க மாக மீண்டும் கேட்டான்.

''என்னய்யா... உங்க ரெண்டு பேர் மேலே எனக்கு சந் தேகமா. இந்த ஜென்மத்துல இல்லை. அடுத்த ஜென்மத்திலும் நீங்க ரெண்டு பேரும் இதே உறவோட எனக்குக் கிடைச்சா...



அப்போதும் சந்தேகம் வராது'' என்றபடி அவன் தலைகோதி நெஞ்சில் சாய்த்துக் கொண்டாள். அவனுக்குள் எழுந்த குழப் பத்தை தீர்க்கக் கூடிய வீரியமான மருந்தாகவும், அடிபட்டு வந்திருக்கும் பிள்ளைக்கு ஆறுதல் அளிக்கும் தாயாகவும் அங்கே துளசி மாறியிருந்தாள்.

''என்னங்க.''

''ம்...''

''காயத்ரியக்கா உங்க மேலே அக்கறை இருக்கறவங்க. அவங்க சந்தேகத்தைப் போக்க வேண்டியது உங்க கடமை.''

''ம்.''

''மும்தாஜும் உங்ககூட கேட்டுகிட்டுத்தானே இருந்தா?''

''ஆமாம் துளசி'' என்றபடி அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''அவ எதுவுமே பேசாம இருந்ததுக்கு இதான் காரணமா?'' பதற்றமாகக் கேட்டாள்.

''இருக்கலாம்'' என்றான்.

உடனே எழுந்து பக்கத்து அறைக்கு ஓடி வந்தாள். லைட்டைக் கூட போடாமல் மும்தாஜின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது. காய்ச் சல் வந்ததின் மர்மம் புரிந்தது.

''ஏய்... மும்தாஜ் எழுந்திரு.''

துளசி எழுப்புவது மும்தாஜிற்கு தெரிந்தது. கண்களைத் திறக்க கஷ்டப்பட்டாள்.

''மும்தாஜ்!'' வேகமாகத் தட்டினாள். கண்களை மும்தாஜ் திறக்கவே இல்லை. இரு பக்கமும் சூடாக கண்ணீர் கொப் பளித்து வெளியேறி, அவளின் காது மடல் முழுவதையும்

நனைத்து இருந்தது. அவள் தலையைத் தூக்கலாம் என்று கழுத்தோரத்தில் கை வைத்தாள். ஈரம் நசநசத்தது.

ஓசை வெளிவராமல் சிரித்தபடி கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

''பைத்தியம்... எந்திரி...''

அவளே கஷ்டப்பட்டு தூக்கி அவளை உட்காரவும் வைத்து, அவளுக்கு எதிரேயே உட்கார்ந்தாள். திரும்பவும் அவள் கன்னத்தை நன்றாகத் துடைத்து விட்டு...

''இவ்வளவு கோழையாவா இருப்ப...''

கண்களைத் திறந்து துளசியைப் பார்க்கக் கூசினாள் மும்தாஜ்.

''நீயும் அவரும் பத்து வருசம் ஒரே ரூம்ல இருந்தாலும் நான் சந்தேகப்பட மாட்டேன் போதுமா. ரெண்டு வருசமா உன்னை எனக்குத் தெரியும்டி... கல்யாணம் ஆனதில் இருந்து அவரையும் நல்லாத் தெரியும். யாரோ ஏதோ சொல்றாங் கன்னு இப்படியா?''

''இல்ல... துளசி...'' திக்கினாள். தொண்டை கமறியது.

''என்ன நொல்ல துளசி... எனக்கு இப்போ அவர் சொல்லித் தான் தெரியும், காயத்ரியக்காவும் நானும் பேசினதை நீங்க ரெண்டு பேரும் கேட்டுகிட்டு இருந்தீங்கன்னு.''

''.........''

''நான் கூட வயிற்று வலியிலதான் அப்படி இருந்தன்னு நினைச்சேன். என்னடி மும்தாஜ்... நீ கூடவா என்னைப் புரிஞ் சிக்கலை... நான் போயா உங்க ரெண்டு பேரையும் சந்தேகப் படுவேன்?''

''நா... இங்கே... தங்கியிருக்கக் கூடாது'' என்றவள் அதற்கு மேல் பேச முடியாமல் கேவிக் கேவி அழத் துவ ங்க. என்ன



செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் விட்டாள் துளசி. எப்படி சமாதானப்படுத்துவது என்று புரியவில்லை. உதடு துடித்து காற்றுதான் வெளிவந்தது. உடலில் விழும் அடியை விட மனதில் விழும் அடி மனிதனையே மாற்றி விடும்.

இவள் மனது மிகவும் மென்மையானது. நெறிஞ்சி முள் ளுக்கு நடுவே மாட்டிக் கொண்டு விட்டது. தன் கை காயப் பட்டாலும் சின்னக் கீறல் கூட விழாமல் அவள் மனதைக் காப்பாற்ற வேண்டும். சுமை தோளில் ஏறியது. மும்தாஜின் கலைந்த முடியை ஒதுக்கி விட்டாள். அப்போதும் சிலும்பிக் கொண்டிருந்த முடியை ஒன்றாக சேர்த்து தன் கூந்தலில் இருந்த ஒரு பின்னை எடுத்து அதன் வாய் பிளந்து தோழியின் கூந்தலில் செருகினாள். முகத்தை உற்றுப் பார்த்தாள்.

அழகான அந்தக் குண்டு முகம் அழுது வீங்கி இருந்தது. காயத்ரி கூறியது போல் உரித்த கோழியின் கலர்தான்... சிவந்த நிறத்தில் கண்மை கரைந்து திட்டுத் திட்டாக தெரிந்தது. பலாச்சுளையோடு போட்டி போடும் அந்த இதழ்கள் காய்ந்து இருந்தன. இமை முழுவதும் ஈரம். கண்கள் உள்ளே கொந்தளிக் கும் கடல். சிரிக்கும் விழி சிவந்து இருந்தது. குண்டு கன் னங்களில் அமைப்பு கொஞ்சம் மாறித்தான் போயிருந்தது.

''இங்க பாருடி, என்ன நடந்து இருக்கும்னு எனக்கு நல்லாவே தெரியும். காயத்ரி அக்கா மேலேயும் தப்பு இல்ல, உங்க மேலேயும் தப்பு இல்லை. நட்புக்கும், காதலுக்கும் மெல்லிய இடைவெளித்தான் இருக்கு. அந்த நிலையில இருந்து கொஞ்சம் மாறினாலும் அதோட புனிதம் கெட்டுப் போயிடும். அந்த நட்பு எல்லாப் பார்வைக்கும் தெரியாது. கடவுளை எல்லாருமா பார்த்திடறாங்க. இல்லையே... அது மாதிரிதான் நட்பும். எந்த ஒரு நெஞ்சுல கருணை, அன்பு, அமைதி, இரக்கம் இருக்கோ அதுதான் ஆண்டவனோட

இருப்பிடம். அதுதான் நட்போட இருப்பிடமும். உனக்கு ஆத்திரமும் வரக் கூடாது. அழுகையும் வரக்கூடாது. நம்மோட நெஞ்சு மாதிரி உயர்வானதும் இல்லை. தாழ்வானதும் இல்லை. சந்தோஷத்துக்கு காரணமும் நம்ம நெஞ்சம் தான். துக்கத்துக்குக் காரணமும் நம்ம நெஞ்சம்தான். குழப்பிக்காதடி... நீ எப்பவும் போல ஜேம்ஸ்கிட்டே கலகலப்பா பேசனும், சிரிக்கனும், தொட்டுப் பேசறது தப்பில்லைடி... தொட்ற நோக்கத்தைப் பொறுத்ததுதான்."

கண்களில் பொறி தட்ட தலை நிமிர்ந்தாள்.

"அணைச்சிப் பேசறது தப்பில்லை. அது எந்த வகையான அன்பை சார்ந்தது என்பதைப் பொறுத்தது."

"ஜேம்ஸ் என்ன சொன்னார்?" அதைக் கேட்டுத் துளசி சிரித்தாள்.

துளசி சிரிக்கும்போது முப்பத்திரண்டு நிலவுகள் சிரித்தன.

"சின்னப் பிள்ளையாவே இன்னும் இருக்க... அவர் எப்பவும் உன் பிரண்ட் ஜேம்ஸ்தான். மனசைப் போட்டுக் குழப்பிக்காம தூங்கு. இப்போ வயிற்று வலி எப்படி இருக்கு?"

"இந்தப் பிரச்சினையில... அது போன மூலை தெரியலை... இப்போ நீ கேட்ட பின்னாலதான் வலி இருக்கிற மாதிரித் தோனுது."

அவள் தலையைச் செல்லமாக ஒரு ஆட்டு ஆட்டியவள். காய்ச்சலுக்கும் ஒரு மாத்திரை உறையை பிரித்து அவள் வாயில் போட்டு விட்டுத்தான் வெளியே வந்தாள். துளசிக்காகக் காத்திருந்த ஜேம்ஸ், அவளின் புன்முறுவலைப் பார்த்த பின்னரே கண்களை மூடினான். துளசியால் மூட முடியவில்லை. தூக்கம் அவளை விட்டுத் தொலைந்து போயிருந்தது. விழிகளை உருட்டிக் கொண்டே இருந்தாள். அவள் கண்களை மூட கிட்டத்தட்ட விடியற்காலை 3.00 மணி ஆனது. உறங்குவ



தற்கு முன் மும்தாஜிற்கு ஒரு துணையைத் தேடி விட வேண்டும் என்ற முடிவெடுத்து இருந்தாள்.

ஒரு உறவை இணைக்க துளசி திட்டமிட ஒரு உறவை பிரிக்க சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வழிவகுக்க ஆயத்தமாயின.

## 11

மூடிய ஜன்னல்களுக்கு இடையில் சன்னமான சந்தையே நுழைவாயாகக் கொண்டு கீற்றாய் வெளிச்சம் உள்ளே பரவியிருந்தது. வெளியுலக சத்தமும் வேண்டிய மட்டும் விடிந்து விட்டது என்று அறிவித்தது. இரண்டு போர்வைகளுக்கு உள்ளே சிறைபட்டு இருந்தாள் துளசி... ஃபேன் காற்றும் உள்ளுக்குள்ளேயே சுழன்று கொண்டு அனலாக வீசியது. எழாமலேயே படுக்கையைத் தடவிப் பார்த்தாள். அவள் கைகளுக்கு ஜேம்ஸ் தட்டுப் படவில்லை. ஒரு கையால் இரண்டு போர்வையையும் உதறினாள்.

மூட மறுத்த இமைகள், விழிக்கவும் மறுத்து ஸ்டிரைக் பண்ணியது. கஷ்டப்பட்டு இமைச் சங்கிலியை உடைத்து, இரு கைகளையும் தேய்த்துக் கொண்டு, தன் உள்ளங்கையில் கண் விழித்தாள். பக்கத்தில் ஜேம்ஸ் இல்லை. உடனே பார்வை கடிகாரத்தின் மேல் தான் பதிந்தது.

"என்ன துளசி இன்னைக்கு லேட்டா?" ஐந்து மணிக்கெல்லாம் அவளை நலம் விசாரிக்கும் கடிகார முட்கள், இன்று இப்படி கேட்பது போல் இருந்தது. சின்ன முள் ஏழு மணி என்றும், பெரிய முள் பதினோரு நிமிடங்கள் என்றும் நொடி முள் ஐம்பத்திரண்டு விநாடி என்றும் ஆளுக்கொரு பக்கம் அச்சுறுத்தியது.

க்யர் போட்ட காரின் வேகத்தோடு எழுந்தவளை...

"குட்மார்னிங்" என்ற குரல் மேலே செயல்படாமல் இழுத்துப் பிடித்து நிறுத்தியது. குரல் வந்த திக்கைப் பார்த்ததும். ஸ்தம்பித்து நின்றாள்.

ஆவி பறக்கும் காபி டம்ளரோடு மும்தாஜ். அவளுக்கு என்ற உரிய ட்ரேட் மார்க் விளம்பரச் சிரிப்பு. தலைகுளித்து இருந்தாள். தலையில் கட்டுப்பட்டு இருந்த துண்டு, கொஞ்சமும் துவளாமல் நகராமல் ஸ்டிப்பாக இருந்தது. குப்பென சந்தன சோப்பின் வாசம் நாசியைத் தாக்கி உள்ளிழுக்க வைத்தது. கண்ணிற்கும் புருவத்திற்கும் இணைப்பாக இருந்த அந்தக் கடுகு மச்சம் கன்னத்திலோ, நெற்றியிலோ இருந்திருந்தால் இன்னும் அழகாக இருந்து இருப்பாள்.

"என்னடி அப்படிப் பார்க்கிற?"

"கனவுதான் கண்டுகிட்டு இருக்கேனா?"

"இல்லை... நிஜம். வேணா இந்த காபி டம்ளரைத் தொட்டுப் பார் சுடும்."

இவ்வளவு சீக்கிரம் இவளை இப்படிப் பார்ப்போம் என்று எண்ணவில்லை என்பது. தூக்கக் கலக்க முகத்திலும் துல்லியமாகத் தெரிந்தது.

"ஆர் யூ ஆல் ரைட்?" சந்தேகம் தீராமல் கேட்டாள்.

"பர்பெக்ட்லி ஆல் ரைட். மை டியர் ஸ்வீட் ஹார்ட்" என்றவளை வியப்பு மேலிடப் பார்த்தாள்.

"........"

துளசியின் கைகளில் காபி டம்ளரைத் திணித்தவள். அவள் விழிகளுக்கு நேராக தன் கைகளை ஆட்டி...



"இன்னும் சந்தேகம் தீரலையா... நைட்டு குழம்பி இருந்தேன். இப்போ தெளிவா இருக்கேன். எம்மேலே நீ வச்சிருக்கற அன்பும், நம்பிக்கையும் என்னை இந்தளவுக்கு கூட மாத்தலன்னா... நைட் நீ பேசினது எல்லாம் வேஸ்டா போயிடும். ஆமாம் திடீர்னு தத்துவமா உதிர்க்கத் தொடங் கிட்டே. நான் மட்டும் பத்திரிகைக்காரியா இருந்து இருந்தால்... இதோ ஓர் பெண் சாக்ரடீஸ்ன்னு புக்கே போட்டு இருப்பேன்."

"காபி நீயா போட்ட?"

"இதென்ன கேள்வி... நான்தான் போட்டேன். என்ன இப்போ குடிக்க கொஞ்சம் கஷ்டமா இருக்கும் போகப் போக சரியாயிடும்" என்று குறும்பாகப் பார்த்தாள்.

"டிபன் கூட பண்ணிட்டியா?"

"ரெடியாய்கிட்டே இருக்கு... சாப்பிட்டு பார்த்துட்டுதான் அது டிபனா இல்ல சாப்பாடான்னே சொல்லணும்."

இருவருமே ரூமை விட்டு வெளியே வந்தார்கள்.

"ஜேம்ஸ் எங்க?"

"ஜேம்ஸ் அப்பவே அவங்க வீட்டுக்குப் போயிட்டார்" முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"எவங்க வீட்டுக்கு?"

"அவங்கதான் காயத்ரி."

"அவங்க மேலே இருக்கிற கோபம். உனக்குப் போகல போல இருக்கு?"

"எனக்கொன்னும் கோபமில்லை."

"காபி கொடுத்தியா?"

"யார்க்கு... காயத்ரிக்கா?" கடித்தாள்.

''ஜேம்சுக்கு.''

''குடுத்தேன்... ஆள் அசந்தாச்சி... குடிச்சிட்டு என்ன தெரியுமா சொன்னார்?''

''என்ன?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவன், ரொம்ப...''

''ரொம்ப..''

''துரதிர்ஷ்டசாலியாம்'' உதட்டைக் கடித்துச் சிரித்தாள்.

அவளிடம் பேசிக்கொண்டே முகம் கழுவிய துளசி... அவள் கொடுத்த காபியை உறிஞ்சிட்டு...

''ஜேம்ஸ் இன்னைக்குத்தான் சரியா ஒரு விஷயத்தைப் பேசியிருக்கார்'' இவர்கள் இருவரும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்க... அங்கு காயத்ரியும் ஜேம்சும் அனல் கக்கிக் கொண்டு இருந்தார்கள். ஜேம்ஸை வெட்ட முடியாமல் கேரட்டை நச்சு நச்சென வேகமாக வெட்டிக் கொண்டு இருந்தாள் காயத்ரி.

நின்றபடி டேபிள் மேல் காயத்ரி காய்கறிகளை துண்டு துண்டாக்கிக் கொண்டிருக்க... அவளைப் பார்த்தபடியே எதிரே இருந்த சுவற்றில் சாய்ந்து கொண்டு தரையில் உட்கார்ந்து காலை நீட்டி இருந்தான் ஜேம்ஸ். அருகேயே கிட்டத்தட்ட கால் கிலோ வெங்காயத்தை உறித்து வைத்திருந்தான்.

''எல்லாம் உறிச்சாச்சி.''

''உன்னை யார்டா உறிக்கச் சொன்னது'' காய்கறி நறுக்கும் கத்தியோடு திரும்பிப் பார்த்து முறைத்தாள்.

''சொன்னாதான் செய்யணுமா?'' குனிந்து கொண்டே கண்களை உயர்த்தினான்.



''ஆமாம்பா... சொன்னதை நீ என்ன செஞ்சி இருக்க, சொல்லாததை எல்லாம் செய்ற?'' எங்கோ இடம் பார்த்து ஊசி செருகப்பட்டது.

தலையில் அடிபட்ட பாம்பின் கணக்காக விருட்டென நிமிர்ந்து,

''என்னதான் சொல்றீங்க?'' சீறினான்.

''எந்த துரோகத்தையும் என்னால மன்னிக்க முடியாது. அதுவும் கட்டின மனைவிக்கு துரோகம் பண்றவனை, எத்தனை பிறவி எடுத்தாலும் மன்னிக்க மாட்டேன்'' அந்த அசடு சுந்தரின் சில நிழல் வாழ்க்கையை அறியாமல் பிதற்றினாள்.

''அக்கா, வேற ஒருத்தரா இருந்தா இவ்வளவு நேரம் நான் பொறுமையா பேசிகிட்டு இருக்க மாட்டேன். ஒரு வினாடி கூட நீ சொல்ற உறவு போல மும்தாஜை நான் நினைச்சிக் கூடப் பார்த்ததில்லை. ஷி ஈஸ் மை பெஸ்ட் ப்ரண்ட். அவ எனக்கு தங்கை மாதிரின்னு நான் சொல்லி இருந்தா, உடனே நீங்களும் சந்தோஷப்பட்டு இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளி வச்சி இருப்பீங்க. அப்படி ஒரு பொய்யைச் சொல்லி தப்பிக்க எனக்கு இஷ்டமில்லை. அவ எனக்கு சகோதரியும் இல்லை. காதலியும் இல்லை... தோழி.

''சந்தேகத்துனால மும்தாஜோட எதிர்காலத்தை பாழாக்கிடாதீங்க. நீங்க சந்தேகப்பட்றதுனால மும்தாஜை நாங்க இழக்கவும் விரும்பல... எதுக்காக எங்க நட்பை விட்டுக் கொடுக்கணும்.''

''என்னை நீ நம்ப வைக்கலான்டா ஊரை நம்ப வைப்பியா?'' திருப்பிக் கேட்டாள்.

''நீங்க நம்பினால் போதும். இந்த சமுதாயமும் நம்பணுங்கிற அவசியம் எனக்கில்லை. சமுதாயம் சமுதாயங்கிறீங்களே யாரு? நீங்களும், நானும்தான். நாலு பேர் ரோட்ல நிர்வாணமா போனா... அதிசயமாப் பார்த்து, திட்டி

கல்லெடுத்து அடிக்கும் இந்த சமுதாயம் நாலு பேர் நானூறு பேரா மாறி போனா... என்னமோ தெரியலையேன்னு இந்த சமுதாயம் யோசிக்கும். நானூறு பேர் நாப்பதாயிரம் பேரா மாறும்போது, ட்ரஸ் போட்டு இருக்கவனை வித்தியாசமாப் பார்க்கும் இந்த சமுதாயம். ஸ்டடி மைன்ட் இல்லாம ஓட்ற வனை துரத்துறதும், எதுத்து நிறக்கறவனுக்கு பணிஞ்சு போற இந்த சமுதாயத்துக்காக நான் மும்தாஜை விட்டுக் கொடுக்கப் போறதில்லை.''

குக்கர் விசிலினால் பேச்சைப் பாதியில் நிறுத்தினான். விசில் நின்றதும் காயத்ரிதான் பேசினாள்.

''சரிடா! நீ சொல்றதை நான் ஒத்துக்கிறேன். அதுக்காக இந்த சினிமாவில காட்டுவாங்களே ரெண்டு கிளி மூக்கை மூக்கை உரசுகிற மாதிரி... அது மாதிரி தலையை முட்டி முட்டி பேசிக்கணுமா... அவளுக்குத் தனியா நடக்கத் தெரியாதா? நீங்கதான் நடை சொல்லித் தரணுமோ?''

''மஞ்ச காமாலைக்காரனுக்கு பார்க்கிறது எல்லாம் மஞ்சளாத் தான் தெரியும். வயிற்று வலியால் துடிச்சிகிட்டு இருக்கிற பெண்ணை, லெப்ட் ரைட்ல நடந்து வான்னா சொல்ல முடியும்.''

''சரிடா நேத்துதான் அந்தப் பொண்ணுக்கு உடம்பு சரி யில்லை. இதுக்கு முன்னால நீ தொட்டே பேசுனது இல்லையா?'' என்று கேட்டு முடித்து வேகத்தோடு அறை ஒன்று ஜேம்சின் கன்னத்தை பதம் பார்த்தது. வேக வேகமாக படபடவென அடுப்பை அணைத்தாள் காயத்ரி. ஜேம்ஸின் கன்னம் வலித் ததோ இல்லையோ, காயத்ரியின் கை வலித்தது. உக்ரமா கவே அவனை உற்றுப் பார்த்தாள். கன்னத்தைத் தடவிக் கொண் டான். இதழில் ஒரு சின்ன சிரிப்பு வந்து இடம் பிடித்தது.

''இப்போ உங்களுக்கு வந்த அதே ஆத்திரமும் கோபமும் தான் துளசி கிட்டே நீங்க பேசினபோது எனக்கு வந்துச்சு... நீங்க அறைஞ்சுட்டீங்க நான்...?''



அவசரப்பட்டு விட்டோமோ என்று மனமும் கண்களும் அவனைப் பார்க்கக் கூசியது.

''நீங்க என்னை அடிச்சிட்டதுனால நான் கொஞ்சம் கூட வருத்தப்படலக்கா... என் பெத்தவங்களை உங்க மூலம்தான் நான் பார்க்கிறேன். என் கன்னம் வலித்ததைவிட உங்க கை அதிகமா வலிச்சி இருக்கும்கா. என்னை நீங்களே புரிஞ்சுக் கலன்னா, வேற யார் புரிஞ்சிக்கப் போறா? ஏன்க்கா இன்னும் பழைய சிந்தனையிலேயே இருக்கீங்க. ஆணுக்கும் பெண் ணுக்கும் இடையில் காமம்தான் இருக்கணுமா? பரிசுத்தமான அன்பு இருக்கக் கூடாதா? வெக்கத்தை விட்டு சொல்றேன். துளசியோட சுண்டு விரல் பட்டாலே, எனக்குள்ளே ஷாக் அடிக்கும். உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை சிலிர்த்துப் போகும். ஆனால் மும்தாஜ் தடுமாறிப் போய் மொத்தமா விழுந்தாலும் ஏதோ ஓர் குழந்தை என் மேலே மோதின மாதிரிதான் என் நரம்பல்லாம் சொல்லுது. உடம்புல சூடா ரத்தம் ஓடுதுங்கறதுக்காக எல்லோருடனும் மனசையும் படுக் கையையும் பகிர்ந்துக்கொள்ள நான் என்ன ஆடா மாடா? மல்லிகைக்கும் அல்லிக்கும் எனக்கு வித்தியாசம் தெரியுங்கா... இனியும் என்னை நம்பலன்னா நான் என்ன செய்ய முடியும்? உங்களுக்கு விருப்பமில்லைனா வீட்டை வேணா காலி பண்ணிட்றேன்'' மனதிற்கு பட்டதெல்லாம் குற்றால அருவி போல் கொட்டித் தீர்த்து விட்டு, சமையல் அறையின் வாசல் வரை வந்தவன், நின்று திரும்பி, அவன் போவதையே விக்கித்துப் பார்க்கும் காயத்ரியை நோக்கி,

''பிறக்கப் போற என் குழந்தை மேல் ஆணையா, துளசி மட்டும்தான் என் மனைவி'' என்றவனின் வாயை ஓடி வந்து பொத்தினாள் காயத்ரி.

''வேண்டான்டா ஜேம்ஸ், உன்னை நம்புறேன்டா, உன்னை நம்புறேன்டா. அந்த மொட்டு மேலே சத்தியம் எல்லாம்

வேண்டாம். உங்க ரெண்டு பேரையும் நான் நம்புறேன்டா... துளசி மட்டும் உன் பொண்டாட்டியா இல்லன்னா... ஒரு குடும்பத்தை பிரிச்ச பாவியா ஆயிருப்பேனே, தெரியாம அடிச்சிட்டேன்டா என்னை மன்னிச்சிடுடா'' என்றவளின் கைகளைப் பற்றி சமாதானப்படுத்தினான்.

''உங்களை நான் மன்னிக்கறதா? என்னக்கா நீங்க? இதுக்குப் போய் இப்படி ஃபீல் பண்றீங்க. என்னைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் உரிமையோட சுட்டிக் காட்ட நீங்க இருக்கிறதா நான் சந்தோஷமா இருக்கேன்.''

''அதுக்கில்லடா, அந்தப் பொண்ணுகிட்டே நான் வந்து பேசட்டா?''

''அடடா அதெல்லாம் வேண்டாம். அதெல்லாம் நேற்று இரவே துளசி செஞ்சு முடிச்சிட்டா, காலையில காபி கொடுத்ததே மும்தாஜ்தான்.'' என்றான்.

''நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே?'' சந்தேகம் தலைதூக்க தயக்கமாகக் கேட்டாள் காயத்ரி.

''இல்லை'' தலையாட்டி மறுத்தான்.

''என்னை மாதிரி எல்லாரும் தப்பாப் புரிஞ்சிறதுக்கு முன்னால, அவளுக்கு ஒரு நல்ல இடத்தைப் பாருடா, ஆம்பளைன்னா பரவாயில்லை, பொம்பளைப்புள்ள வாழ்க்கை. யாரும் எதுவும் சொல்லிடக் கூடாது.''

''சரிக்கா'' ஆமோதித்தான்.

மும்தாஜிற்கு ஏற்ற ஒரு நல்ல இளைஞன் கிடைப்பானா? எங்கே இருக்கிறான் என்று வலைபோட்டு தேட வேண்டுமா? நல்லவனாக மாட்ட வேண்டுமே என்ற கவலை அப்போதே பொறுப்பாக அவனைக் கவ்வத் துவங்கியது. அதே நினைவாகத்தான் தன் வீட்டிற்குள் வந்தான். அன்றிரவு அதே யோசனையை துளசியும் அவன் காதில் ஓதியதால், மாப்பிள்ளை தேடும் பணியில் மிகவும் தீவிரமானான். சுந்தரின் சிபாரிசில் ஒரு நல்ல கம்பெனியில் மும்தாஜிற்கு வேலையும் கிடைத்தது. ஒரு கையில் தன்னுடைய அப்பாயின்ட்மென்டை வைத்துக் கொண்டு துளசியின் ரெஸிக்னேஸன் லெட்டரையும் எழுதி, தானே எழுதி, துளசி வேலை பார்க்கும் கம்பெனியில போய் கொடுத்து விட்டும் வந்தாள் மும்தாஜ்.



ஆரம்பத்தில் ஜேம்ஸின் மாப்பிள்ளை தேடலுக்கு பயங்கர எதிர்ப்பு தெரிவித்து, உண்ணாவிரதம் இருந்து, ஸ்டிரைக் பண்ணி, பின்பு காரம் குறைந்து அமைதியாகி ஒத்துக் கொண்டாள். தெரிந்தவரிடம் எல்லாம் சொல்லி, பேப்பரில் எல்லாம் விளம்பரம் கொடுத்தும், எந்த வரனும் திருப்தி அளிக்கவில்லை. கடைசியில் அவனுடன் மியூசிக் குருப்பில் ஃப்ளூட் வாசிக்கும் இப்ராஹிம் என்ற பெரியவரின் மகன் ரஹீம் சரியான வரனாக ஜேம்ஸிற்குத் தோன்றியது. இப்ராஹிம் எல்லாவற்றையும் மனம் திறந்து பேசினார். அவன் புன்முறுவலோடு தலையசைத்தான். அவர் மேல் இருந்த நன்மதிப்பே அவர் முகம் பார்க்காத ரஹீம் மேல் நன்மதிப்பை ஏற்படுத்தி இருந்தது. அவர்களை அடுத்த நாள் வீட்டிற்கு வரச் சொல்லி ஏற்பாடு செய்து விட்டு வீட்டிற்கு வந்தான் ஜேம்ஸ். ஹாலிலேயே பாயை விரித்துப் படுத்து இருந்தாள், துளசி. நிறை மாத கர்ப்பிணி. தஸ் புஸ்சென மூச்சு வாங்கியது. புரண்டு படுக்கவே சிரமப்பட்டாள். சிறிது நாட்களாகவே மும்தாஜ்தான் எல்லா வேலையும். துளசிக்கும் திடீர் திடீர் என்று நீர் வேறு கட்டிக் கொள்ளும். லொடக் லொடக் என்று வாந்தி வேறு. எதுவும் அவள் வயிற்றுக்குள் தங்க மாட்டேன் என்று அடம் பிடித்தது. மூச்சிரைக்க படுத்து இருக்கும் துளசியின் அருகே அவள் தலைக்கு அருகே வந்து அமர்ந்தான். அவன் கொடுத்த மல்லிகைப் பூ பொட்டலத்தை வாங்கி, தலையணைக்குப் பக்கத்திலேயே வைத்தாள்.

''ரொம்ப கஷ்டமா இருக்கா?'' ஆதங்கத்தோடு கேட்டவனின் கையை ஆசையோடு எடுத்து தன் கழுத்தில் வைத்துக் கொண்டு.

''குழந்தைன்னா சும்மாவா?'' என்றாள்.

''எனக்கென்னமோ நீ ரொம்ப கஷ்டப்படற மாதிரி தோணுது. இந்த ஒரு குழந்தையே போதும்'' என்றவனின் கையைப் படுத்தபடியே நெட்டி எடுத்தாள். நெட்டி எடுத்துக் கொண்டே ஜேம்ஸை விழியால் அள்ளி அள்ளிப் பருகினாள்.

''என்ன அப்படிப் பாக்குற?''

''இனிமே இப்படிப் பார்க்க முடியாதோங்கற பயம் வந்திருச்சி'' என்றவளின் வாயை சட்டெனப் பொத்தினான்.

''விளையாட்டுக்குக் கூட அப்படிச் சொல்லாதே. என்னால தாங்க முடியாது'' அவன் கையை மெதுவாக விலக்கி விட்டவள்,

''நெருப்புன்னா வாய் வெந்துடுமா... குழந்தை பிறப்பு பெண்ணிற்கு மறுஜென்மம்னு சொல்வாங்க. நாள் நெருங்க பயமா இருக்கு. எங்கம்மாவையும் போய் பார்க்கணும் போல இருக்கு'' பார்வையில் கெஞ்சினாள்.

''உனக்கு ஒண்ணும் ஆகாது துளசி. அம்மாவை, குழந்தை பிறந்ததும் பார்த்துக் கொள்ளலாம். அவ்வளவு தூரம் கூட்டிக் கிட்டுப் போகும் அளவு உன் உடல்நிலை சாதகமாக இல்லை'' என்றவன் தன் தலையிலேயே கொட்டிக் கொண்டு,

''நா ஒரு மடையன். முக்கியமான விஷயத்தையே மறந்துட்டேன். மும்தாஜ் எங்கே, ஆபீஸ்ல இருந்தே வரலையா?''

''அவ அப்பவே வந்திட்டா, சமையல் ரூம்ல நுழைந்தால் ஆராய்ச்சி கூடத்துல நுழைந்த மாதிரி.''



''நான் இப்ராஹிம்னு ஒருத்தரைப் பத்தி அடிக்கடி சொல்லி இருக்கேனே ஞாபகம் இருக்கா?''

''இம்... ப்ளூட் வாசிக்கிறவர்.''

''எஸ். அவரேதான். அவருக்கு ரஹீம்னு ஒரு பையன். பட்டதாரி, பேங்க்ல ஒர்க் பண்ணிகிட்டு இருக்காப்ல, நம்ம மும்தாஜைப் பார்க்க நாளைக்கு வரச் சொல்லி இருக்கேன். எனக்கென்னமோ இது முடியும்னு தோணுது.''

''முடிந்தால் வடபழனி முருகனுக்கு பாலாபிஷேகம் பண்றதா வேண்டியிருக்கேன்.''

''சாமிக்கு அப்ளிகேஷன் எல்லாம் போட்டாச்சா.''

கஷ்டப்பட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

''மும்தாஜ்'' ஹாலில் இருந்தே குரல் கொடுத்தான்.

''என்ன ஜேம்ஸ், காபியா?'' அங்கிருந்தே மும்தாஜும் சத்தமிட்டாள். அதைத் தொடர்ந்து மிக்ஸியின் சத்தம் கொர்... என உறுமத் துவங்க, அது அமைதியாகும் வரை காத்திருந்து, சத்தம் நின்றதும்,

''நாளைக்கு லீவ் போடு மும்தாஜ்'' என்றான் சத்தமாய்.

''எதுக்கு?'' அவள் சமையல் அறையை விட்டு வெளியே வரவே இல்லை.

''உன்னைப் பெண் பார்க்க வராங்க'' அவ்வளவுதான்.

'டமால்' ஒரு பாத்திரம் விழுந்த சத்தம் ேட்டது. உடனே இருவரும் காதைப் பொத்திக் கொண்டு ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்துக் கொண்டார்கள். ஜேம்ஸ் ரஹீமைப் பார்க்கா விட்டாலும், மும்தாஜை சீண்டுவதற்காக சாப்பிடும்போதும், உட்காரும்போதும், நிற்கும் போதும் என்று அவள் படுக்கைக்குப் போகும் வரை ஆஹா, ஓஹோ என்று புகழ்ந்து தள்ளினான். அதற்கு துளசியும் ஜால்ரா தட்டினாள்.

அன்றிரவு மும்தாஜிற்கு உறக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். அவள் இமைக் கதவைத் தூக்கம் வந்து தழுவ விரும்பாமல் ஒதுங்கியே நின்றது. முதல் முதலாகப் பெண் பார்க்கும் படலம். இது நாள் வரை ஜேம்ஸே எல்லா வற்றையும் பார்த்து திருப்தியில்லை என்று கூறினான். அவனே வீட்டிற்கு ஒருவரை வரவழைப்பது இதுவே முதல் முறை. அதனாலேயே ரஹீமைப் பார்க்க வேண்டும் என்று திருட்டுத்தனமாய் ஒரு ஆசை விதை விழுந்தது.

தலைக்கு வைத்திருந்த தலையணையை எடுத்து நெஞ்சில் அணைத்துக் கொண்டு புரண்டாள். ரஹீம் கருப்பா, சிவப்பா, அழகாக இருப்பானா? சுமாராக இருப்பானா? குட்டையா? வளர்த்தியா? மீசை வைத்து இருப்பானா இல்லை, இல்லாமல் இருப்பானா? அமைதியானவனா? கலகலப்பான வனா? இன்னும் என்னென்னவோ கேள்விகள் முளைத்தன. சுண்டி விட்டாற் போல், மனம் துள்ளியது. காதல் பாடல்கள் எல்லாம் ஹம்மிங்காக வெளியே வந்தது. இரவு நேரத்தில் தனிமையில் வாய் விட்டுச் சிரித்தாள், தனக்குத்தானே பேசிக் கொண்டாள். தானே பிதற்றிக் கொண்டு இருக்கிறோம் என்றே புரிந்தது. புரிந்தபோது வெட்கம் வந்தது. வெட்கம் வந்ததால் ச்சீய் என்ற ஓசை வந்தது. ஓசை வெளியே வந்ததால், தலை யணையில் முகம் புதைந்தது.

ரஹீமும் இப்ராஹிமும் வருவதற்குள் வீடு பார்த்து பார்த்து சுத்தம் செய்யப்பட்டது. குனிய முடியாமல் நடக்க முடியாமல் இருந்தாலும், குனிந்து நிமிர்ந்து டிபன் வேலையைத் தானே பார்த்துக் கொண்டாள் துளசி. மும்தாஜ் தடுத்தபோது,

''வேண்டான்டி, பெண் பார்க்கும்போதே விஷப் பரிட்சை யெல்லாம் வேண்டாம்'' என்றாள். பெண் பார்க்கும் படலத்திற் காகவே டீபாய் மேல் இரண்டு ப்ளவர்வாஷ் புதிதாக முளைத்து இருந்தது. என்றுமே இல்லாத சந்தோஷமும் உற்சாகமும்



ஜேம்ஸையும், துளசியையும் சுற்றிக் கொண்டது. இப்ராஹிம் தன் மகனை மட்டும் அழைத்துக் கொண்டு வந்தார்.

''இது ஒரு ப்ரண்ட்ஸ் மீட்டிங் மாதிரிதான் எடுக்கோணும். வீணான சம்ப்ரதாயம் எல்லாம் வேண்டாம்'' என்று உள்ளே நுழையும் போதே இப்ராஹிம் கூறி விட்டார். ரஹீமைப் பார்த்ததுமே துளசிக்கும் ஜேம்சிற்கும் மிகவும் பிடித்துப் போயிற்று. நல்ல கலர், நல்ல உயரம், பர்சனாலிட்டி, ஹேன்சம் எல்லாம் ஒருமித்து இருந்தான். கண்களில் கண்ணாடி. அது எதற்காக என்று பின்னால்தான் தெரிந்து கொள்ள வேண்டும். மும்தாஜின் கற்பனையில் உதித்த ஒரு கேள்வியான மீசை இருக்குமா இல்லையா என்பதற்கு இல்லை என்றுதான் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது. ஹிந்தி நடிகர் அமீர்கானின் முகச்சாயல், அவனின் கவர்ச்சியான முகத்தோற்றத்திற்கு, எந்த இயக்குநர் கண்ணிலும் படாமலா இருக்கிறான் என்று ஆச்சர்யமாக இருந்தது. நீலக்கலர் ஜீன்ஸ், லூசர் டைப்பில் ஒயிட் சர்ட், இன் பண்ணாமல் தளர்த்தி விட்டிருந்தான். பங்க் டைப் கட்டிங்... ப்ரியாக வெளிப்படையாகவே பேசினான் ரஹீம். அவன் பேசுவதை எல்லாம் அறைக்குள் இருந்தே ஒட்டுக் கேட்டாள் மும்தாஜ். அவன் ஆண்மைத்தனமான குரலின் வசீகரம் அவளை அதிகமாகவே தொந்தரவு செய்தது. உடல் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தாலும், மனம் வெளியே வந்து வராண்டாவையே சுற்றியது. துளசி மும்தாஜை அழைத்து வந்தாள். மும்தாஜைப் பார்த்ததுமே ரஹீமிற்குப் பிடித்து விட்டது. தந்தையைப் பார்த்து சந்தோஷமாகத் தலையாட்டினான். ஓரக்கண்ணால் முழுமையாகவே ரஹீமை மும்தாஜ் பார்த்தாள்.

துளசியிடம் யாரும் பார்க்காதவாறு சம்மதம் என்று கண்ணசைத்தும் வைத்தாள்.

''மிஸ்டர் ஜேம்ஸ், வாப்பா உங்களைப் பத்தியும், உங்க குடும்பத்தைப் பத்தியும் நிறைய சொல்லி இருக்கார். எனக்கு

மும்தாஜை ரொம்பப் பிடிச்சிருக்கு. நாளைக்கே நிக்கான் னாலும் சம்மதம்'' என்றான் மிகவும் வெளிப்படையாக.

''என்ன எதிர்பார்க்கிறீங்க?''

''என்னை நான் விக்க வரலை'' என்று சிரித்தான்.

மும்தாஜிற்கு பெருமை பிடிகொள்ளவில்லை. அந்த வாரத்திலேயே நிக்கா தேதியும் நிச்சயிக்கப்பட்டது. எண்ணி நாற்பத்தி எட்டாவது நாள், மிஸ். மும்தாஜ் மிஸ்ஸஸ்ஸாகி விடுவாள். திருமண நாளை விட, அந்த வீட்டில் வரப்போகும் குட்டி ஜீவனைப் பற்றிய எதிர்பார்ப்புதான் அதிகமாக இருந்தது. இன்று, நாளை என்று நாட்கள் வேகமாக நகர்ந்தது. டாக்டர்கள் வைத்த கெடுவும் முடிந்தது. ஆனால் துளசிக்கு சூட்டு வலி கூட எடுக்கவில்லை. கடைசியில் ஹாஸ்பிடலில் தங்கி விடுவது என்ற முடிவிற்கும் வந்தார்கள்.

காலையில் மும்தாஜின் திருமணத்திற்கு தேவையான துணிமணிகளை எடுத்து விட்டு, மாலையில் ஹாஸ்பிடலில் துளசியை அட்மிட் பண்ண வேண்டும் என்ற தீர்மானம் அந்த மூன்று பேர் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. இதற்கிடையில் டெலிபோன் இலாகா ரஹீமிற்கும் மும்தாஜிற்கும் கனெக்ஷன் கொடுத்தது.

காலை 9.00 மணிக்கெல்லாம் ஜேம்ஸ், மும்தாஜ், காயத்ரி மூவரும் பர்சேசிங்கிற்காக கிளம்பி விட்டனர். சந்தரும் கம்பெனி போயாயிற்று. வாட்ச்மேனும் பர்சனல் வேலை இருப்பதாகவும், ஒரு மணி நேரத்துக்கு துளசியிடம் பர்மிஷன் வாங்கி கிளம்பி விட்டான். துளசி மட்டும் வீட்டில் இருந்தாள். நகரக்கூட முடியாத அளவிற்கு உடல்நிலை பலகீனமாக இருந்தது. படுத்து இருக்கவும் முடியவில்லை. உட்காரவும் முடியவில்லை. மிகவும் கஷ்டப்பட்டாள். அடிவயிற்றை தாங்கிப் பிடித்துக் கொண்டு சாய்ந்து, கதவிலேயே ஒருக்களித்து உட்கார்ந்து இருந்தாள்.



'டேய் சீக்கிரம் வெளியே வாடா செல்லம்' தன் குழந்தையிடம் ஆசையோடு பேசினாள். குழந்தை உள்ளே புரண்டு அவளை உதைத்தது.

''ஆ... ஆ...'' சுகமான வேதனையில் துடித்தாள்.

'அம்மாவை ரொம்ப சோதிக்காதடா கண்ணா... உன்னைப் பார்க்க எவ்வளவு ஆசையோட இருக்கோம். புரிஞ்சிக்காம லேட் பண்றியே.''

அவள் பேசியதை அந்த சின்னப் பூ கேட்டிருக்க வேண்டும். அடிவயிற்றில் வலி 'பளீர்' எனத் தெறித்து ஓடியது. அதன் பின்பு இரண்டு நிமிட தாமதத்திற்கு பின்பு அதே போல் வலி சொடுக்கியது. அதன் பிறகு அலை அலையாய் வலிகள் வரத் துவங்க, தன் குழந்தை பூமியைப் பார்க்க ஆசைப்படுகிறது என்பது புரிந்தது. இரண்டு பக்க இடுப்பிலும் சூட்டுக் கம்பியை வைத்து இழுத்தாற்போல் வலி மின்னலாய் மின்னியது. கொஞ்ச நேரத்திலேயே துடிக்கத் துவங்கினாள்.

''அம்மா... ஆ... ஆ...'' வயிற்றைப் பிடித்துக் கொண்டு அலற ஆரம்பித்தாள்.

''அம்மா... ஆ... ஆ...'' தாள முடியாமல் சக்கரமாய் ஹாலிலேயே சுத்தத் துவங்கினாள். குப்பென வேர்வை பூக்க, உடல் முழுவதும் மழையில் நனைந்ததைப் போல் தொப்பையானது. கத்தி கத்தி நினைவிழக்கவும் தொடங்கினாள். அவள் அலறலைக் கேட்க யாருமே அங்கில்லை. பனிக்குடம் உடைந்தது. முழுமையாக நினைவிழந்து அந்த ஹாலில் கேட்பாரற்று துளசி கிடக்க, இவளை மறந்த நிலையில் ஜவுளிக் கடலுக்கு நடுவில் அவர்கள் மூவரும் குழம்பித் தவித்தார்கள்.

# 12

மனோஜ்குமார் நர்ஸிங்ஹோம்.

இன்டன்சிவ் கேர் யூனிட் முன்பு எல்லோரும் அவரவர் தெய்வத்தை பிரார்த்திக்க ரஹீம் கூட நின்றிருந்தான். செய்வ தறியாமல் திகைத்துப் போய் இருந்தார்கள். சர் சர்ரென... வெள்ளை தேவதைகள் இவர்களை லட்சியம் செய்யாமல் பறந்து கொண்டிருந்தார்கள். காயத்ரியின் வாய் கந்த சஷ்டியை முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. நிலையில்லாமல் பிடிப்பில்லாமல் தவித்தான் ஜேம்ஸ். கிட்டத்தட்ட மும்தாஜ் அழத் துவங்கி விட,

கதவு திறந்து வெளிப்பட்ட நர்ஸ் ஒருத்தியை வழிமறித் தாள் காயத்ரி.

''என்னம்மா ஆச்சி?'' கேட்கும்போதே குரல் நடுங்கிக் கொண்டிருந்தது. விழியால் கொக்கி போட்ட நர்ஸ்.

''இன்னைக்கோ நாளைக்கோன்னு இருக்கிறவங்களை விட்டுட்டு, நீங்க எல்லாம் எங்கே ஊர் சுத்த கிளம்பிட்டீங்க?''

''........''

''இப்படி ஒரு மோசமான நிலையில் யாரும் இங்கே வந்ததில்லை.''

''உயிருக்கு ஒண்ணுமில்லையே?'' அழுகையும் வார்த்தை யும் கலந்து வந்தது.

''எப்படீங்க சொல்ல முடியும்? வலி வந்தபோதே கொண்டு வந்தால் நம்பிக்கையா சொல்லலாம். இப்போ எதுவுமே



சொல்ல முடியாது'' அதற்கு மேல் பேச நேரமில்லாமை யால் மெடிஸன் எடுக்கப் பறந்தாள். ரஹீம் ஜேம்ஸின் தோளைப் பிடித்து 'ஒன்றும் ஆகாது' என்று சமாதானப் படுத்திக் கொண்டிருந்தான்.

நேரம் கடக்கக் கடக்க ஒருவர் உடம்பிலும் உயிர் இல்லை. மூச்சுவிட மறந்து அதைக் கையில் பிடித்துக் கொண்டு நின் றார்கள்.

நனைந்த கைகளை ஒரு வெள்ளை நிற டவலில் துடைத்துக் கொண்டே வெளிப்பட்டார், டாக்டர் மதுஸ்ரீ. நான்கு பேருமே ஒரு சேர கூவினார்கள்.

''துளசிக்கு ஒண்ணுமில்லையே.''

தன் மூக்கின் மேல் உட்கார்ந்து இருந்த கனமான கண்ணாடியை சரி செய்துவிட்டு, தலை குனிந்து கொண்டார், டாக்டர்.

''டாக்டர், என்னாச்சி'' காயத்ரி டாக்டரம்மாவின் கையைப் பிடித்தபோது நாசுக்காக விலக்கிய டாக்டர்.

''மனதை தேத்திக்கோங்க. எங்களால குழந்தையை மட்டும்தான் காப்பாத்த முடிஞ்சிச்சி.''

''துளசீ... ஈ..ஈ...ஈ...'' ஹாஸ்பிடலே வெடித்துச் சிதறு வதுபோல் கத்தினாள் மும்தாஜ். ஜேம்ஸிற்கு நாக்கு சுழலவே மறுத்து, துடிக்கவே மறந்து கட்டை போல் நின்றது. காயத் ரிக்கு உடல் முழுவதும் தீப்பற்றி திகுதிகுவென எரியவே துவங்கியது. அழவும் முடியாமல் சமாதானப்படுத்தவும் முடியாமல், தெரியாமல் ரஹீம் நின்றிருந்தான்.

''நான் நம்ப மாட்டேன் துளசி என்னை விட்டுப் போக மாட்டா... நான் நம்ப மாட்டேன். எல்லோரும் பொய் சொல் றாங்க'' சுவற்றில் தலையை முட்டிக் கொண்டு கதறினாள் மும்தாஜ். சுவற்றில் சாய்ந்தபடி இருந்த ஜேம்ஸ் சரிந்து கீழே வந்து மண்டியிட்டு மடங்கிப் பேச முடியாமல் தடுமாறினான்.

கண்களில் காவிரியும் கங்கையும் அடித்துக் கொண்டு புறப்பட்டது. உதடுகள் என்னென்னவோ சொல்லத் துடித்தது. ஆனால் ஒன்றும் வெளிவரவில்லை. கைகள் இரண்டையும் காயத்ரியையும் ரஹீமையும் பார்த்து விரித்து விரித்துக் காட்டினான்.

வெள்ளைத் துணியில் சுற்றிய அழகான ஆண் குழந்தையோடு ஒரு நர்ஸ் வெளிப்பட்டு யாரிடம் குழந்தையைக் கொடுப்பது என்று நிதானித்தபோது, தன் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டு கை நீட்டினாள் காயத்ரி.

மல்லிகைப் பூ குவியலே கொழு கொழு குழந்தையாய் அவள் கையில் விழுந்தது. அந்த குட்டி ஜேம்ஸ் அப்படியே துளசியை உரித்து வைத்திருந்தான். இந்த சீதோஷ்ண நிலையை ஏற்றுக் கொள்ள அவஸ்தையாய் நெளிந்தபடி... தன் குட்டி குட்டி விரலால் காயத்ரியின் சேலையை இறுக்கிப் பிடித்துக் கொண்டான். துளசிக்கு மின்னிய அதே கருந்திராட்சை கண்களால் முழித்தான். பின்பு இறுக்கி மூடிக் கொண்டு முகத்தைச் சுழித்தான். காயத்ரியின் மார்பில் பால் சுரக்காத குறைதான்.

ஸ்டெரச்சரில் வெள்ளைத் துணியால் முழுவதும் போர்த்தப்பட்டு வெளியே வந்தாள் துளசி. ஆவேசமாக எழுந்த ஜேம்ஸ், கைகள் நடுங்க அவள் முகத்தில் இருந்த துணியை விலக்கினான். சாந்தமாய் மிகவும் சாந்தமாய் கண்களை மூடியிருந்தாள், துளசி. அந்த முகத்திலும் களைப்பும் சோர்வும் தெரிந்தது. உதட்டில் நிரந்தர புன்னகை. தன்னை சலனப்படுத்தி சந்தோஷத்தையும் நிம்மதியையும் கொடுத்தவள் இப்போது நிம்மதியான உறக்கத்தில். அடிவயிற்றில் இருந்து ஒரு ஆக்ரோஷமான அழுகை அடித்துக் கொண்டு புறப்பட்டது.



சுவரோடு ஒட்டிக் கொண்டிருந்த மும்தாஜ் ஜேம்ஸின் கதறலை காதில் வாங்கி, தாங்கிக் கொள்ள முடியாமல், தவிப்போடு அவன் தோளைக் கட்டிக் கொண்டு கதறுவதை,

இமைக்க மறந்து ரஹீம் பார்த்தான்.

ஏனோ இயற்கை எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ள கற்றுக் கொடுத்து இருந்தது. அது பிறப்பாய் இருந்தாலும் சரி, இறப்பாய் இருந்தாலும் சரி, துன்பமாய் இருந்தாலும் சரி, இன்பமாய் இருந்தாலும், எல்லாவற்றையும் ஜீரணிக்க ஆரம்பித்து விட்டோம். யாரையாவது சார்ந்து, யாருக்காகவோ எல்லோருமே வாழ வேண்டிய கட்டாயம். மாலைக்குள் சிரிப்பவளை மனம் மறக்காது என்றாலும், நடப்பதற்காக சக்திக்காக சாப்பிட வேண்டி இருக்கிறது. சம்பாதிக்க வேண்டி இருக்கிறது.

சூன்யமாகவே அந்த வீடு இருந்தது.

மும்தாஜ் குழந்தையை விட்டு நகரவே இல்லை. காயத்ரியும், மும்தாஜும் மாறி மாறிப் பார்த்தார்கள். ஜேம்ஸிற்கு தான் இன்னும் உயிரோடு தான் இருக்கிறோமா? என்ற சந்தேகமே எழுந்து கொண்டிருந்தது. காயத்ரி மும்தாஜின் திருமணத்தை நினைவுபடுத்தும் அளவு ஆளே மாறிப் போயிருந்தாள்.

"போ துளசியோட ஆசையாவது நிறைவேறட்டும். ரஹீமைப் போய் பார்த்து வா" என அவன் முதுகைப் பிடித்துத் தள்ளினாள். சட்டையை மாட்டிக் கொண்டு ஜேம்ஸ் கிளம்பும் போது, ரஹீமும் இப்ராஹீமும் உள்ளே நுழைந்தார்கள்.

"வாங்க, வாங்க" சிரிக்க முயற்சித்தான்.

இருவரும் அமர்ந்து கொண்டார்கள். என்ன பேசுவது என்று தெரியாமல் சிறிது நேரம் அமைதி காத்துவிட்டு...

"குழந்தை எங்கே ஜேம்ஸ்?" இப்ராஹீம் கேட்டார்.

"மும்தாஜ் தூங்க வச்சிகிட்டு இருக்கா" காயத்ரிதான் பதில் கூறினாள்.

நெற்றியையும் நெற்றிப் பொட்டையும் வலுக்கட்டாயமாக தேய்த்த ரஹீம்,

"ஸாரி... இந்த நிக்காவில் எனக்கு இஷ்டமில்லை" என்றான்.

இப்ராஹிம் உள்பட அனைவரும் அதிர்ந்து போனார்கள்.

## 13

"என்னப்பா சொல்ற?" இப்ராஹிம்தான் தன் மகனைப் பிடித்து உலுக்கினார். நிதானமாகத் தன் மேல் இருந்த தன் வாப்பாவின் கையை விலக்கினான்.

"எனக்கு வேற வழி தெரியலை. மும்தாஜை மேரேஜ் பண்ணிக்கணும்னு நினைத்தது. அதுக்காக எல்லா வேலையும் தொடங்கியதுகூட உண்மை. நான் மறுக்கலை. இப்படி ஒரு துக்ககரமான சூழ்நிலையில் இதைச் சொல்ல எனக்கு சங்கடமாகத்தான் இருக்கு. எத்தனை நாள் ஆனாலும் சொல்லித்தானே ஆகணும்."

ஜேம்ஸிற்கு உலகமே கண் முன்னால் தலைகீழாகச் சுற்றியது.

"ரஹீம். உங்களோட முடிவிற்கு நியாயமான காரணம் இருந்தாக்கூட, இந்த நேரத்துக்கு அதைத் தாங்கிக்கிற சக்தி



எங்களுக்கு இல்லை. ப்ளீஸ்" கை கூப்பினான். அவன் கைகளைத் தட்டிக் கொடுத்து,

"எக்ஸ்ட்ரீம்லி ஸாரி. தனக்கு வரப் போற பொண்டாட்டி அழகா இல்லன்னாலும் சிவப்பா இல்லன்னாலும், படிப்பு வாசனையே இல்லாதவளாக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் யாரையும் ஏறிட்டுப் பார்க்காத கற்புள்ள பெண்ணாக இருந்தால் போதும்னு நினைக்கிறது தப்பில்லையே."

ரஹீமின் ஒவ்வொரு வார்த்தையும் அணுகுண்டாக எல்லார் செவியிலும் நுழைந்து வெடித்தது. இதையனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த மும்தாஜ் சூறாவளியாக வெளியே வந்தாள்.

"நாங்க எல்லாம் கொஞ்சம் மக்கு. உங்களை மாதிரி புத்திசாலி இல்லை. சொல்றதை மூடி மறைக்காம நேரா சொல் நீங்களா?" ஊசிப்பட்டாசாய் வெடித்தாள்.

மும்தாஜை இழுத்துப் பிடித்து...

"நாங்க இருக்கோமில்ல... நீ பேசக்கூடாது" அடக்கினாள் காயத்ரி.

"என்னை விடுங்கக்கா... இந்த ஆள் என்ன சொல்ல வரார் தெரியுமா? எனக்கும் ஜேம்சுக்கும் தப்பான உறவு இருக்கு... அதானே" ரஹீமைக் கடித்துக் குதறும் ஆக்ரோசத்தோடு கத்தினாள். ஜேம்ஸின் நாடி நரம்பெல்லாம் அறுபட்டது போல் ஆனது... துடித்தானே தவிர கோபப்படவில்லை. அமைதியாகவே பேசினான்.

"ரஹீம்! ஊர் ஆயிரம் பேசும். அதுல எதுவும் உண்மையில்லை. இந்த முடிவுக்கு நீங்க வரக்கூடாது. வேணா இப்பவே கூட மும்தாஜை கூட்டிகிட்டுப் போங்க. எந்தக் காரணத்தைக் கொண்டும் மும்தாஜை இனி பார்க்க மாட்டேன். கர்த்தர்

மேலே ஆ...'' அவன் வாயை வேகமாக வந்து பொத்தினாள் மும்தாஜ்.

''வேண்டாம் ஜேம்ஸ். இந்த ஆளுக்காக என்னை விட்டுக் கொடுக்க துணிஞ்சிட்டீங்களா? தப்பான முடிவை நீங்கதான் எடுக்குறீங்க. கல்யாணம் ஆகாம நான் இருந்திடுவேன். அது எனக்குக் கஷ்டமே இல்லை. ஆனா உங்களையும், குழந்தையையும் விட்டுட்டு, என்னால முடியாது. ஏன் ஜேம்ஸ் நான் உங்ககூட இருக்கிறது உங்களுக்குத் தொந்தரவா இருக்கா? உங்க மேலேயும், எம்மேலேயும், நமக்குள்ள இருக்கிற அந்தத் தூய நட்பு மேலேயும் நம்பிக்கை போயிடுச்சா?'' என்றவள் விருட்டென நிமிர்ந்து ரஹீமைப் பார்த்தாள். கை இரண்டையும் கூப்பினாள்.

''தயவு செஞ்சி வெளியே போயிடுங்க. அதுக்கு முன்னால ரொம்ப நன்றி. இந்தக் கல்யாணத்தை எப்படி நிறுத்துறதுன்னு புரியாம இருந்தேன். அதுக்கு வாய்ப்பை நீங்களே ஏற்படுத்திக் கொடுத்திட்டீங்க. கல்யாணத்துக்கு முன்னாலேயே உங்களை வெளிப்படுத்தியதற்கு ரொம்ப சந்தோஷம். உங்க மட்டமான பார்வைக்கு எங்க புனிதம் தெரியாது. இந்த உலகத்துல யார் யாரோ எதுக்கெதுக்காகவோ வாழறாங்க. பணத்துக்காக, காதலுக்காக, புகழுக்காக, காமத்துக்காக இப்படி அடுக்கிக்கிட்டே போகலாம். நான் நட்புக்காக வாழ விரும்புகிறேன்.

''இந்த உலகத்தைப் பத்தி எங்களுக்கு கவலை இல்லை. தூங்கிகிட்டு இருக்கற அந்தப் பூவுக்கு மட்டும் எங்க புனிதத்தை புரிய வச்சா போதும். அந்தப் பூவும் துளசியோட பிம்பம்ல. அதனால கண்டிப்பா எங்களைப் புரிஞ்சிக்கும். அந்த நம்பிக்கை எனக்கிருக்கு. உங்க பின்னால மனைவியா வர்றதை விட குழந்தைக்கு தாயா, ஜேம்சுக்குத் தோழியா, தான் யாருன்னே தெரியாம, தான் பெத்த பொண்ணு இன்னைக்கு மண்ணுக்



கடில இருக்கான்னு புரிஞ்சிக்க முடியாம இருக்கற அந்தப் பைத்தியக்கார தாய்க்கு மகளா இருக்கறதையும் பெருமையா நினைக்கிறேன்.

''வானத்துல விரிசல் விழுந்தா மின்னல்னு சொல்லி, மழை வரும்னு நினைக்கலாம். நிலத்துல விரிசல் விழுந்தா இது வெயில் காலம், குளிர்காலம் வரும்னு காத்திருக்கலாம். மொட்டுல சின்ன விரிசல் விழுந்தா அது பூக்கப் போவுதுன்னு புரிப்படையலாம். மனசுல விரிசல் விழுந்தா மட்டும் எதையும் நினைக்க முடியாது. கல்யாணம்கற கோட்டை என்னைப் பொருத்தவரை இடிஞ்சி போச்சி. இனிமேல் அதை கட்டற தாவும் இல்லை. நட்புங்கற மூணு எழுத்துக்காக மட்டும்தான் இனிமே என் வாழ்க்கை. ப்ளீஸ் கெட் அவுட்.'' வாசல் பக்கமாகக் கையை நீட்டினாள்.

அவமானம் தாங்காமல் ரஹீமின் சிவந்த முகம் கருத்துப் போய் இருந்தது. தலை குனிந்தபடி வெளியேறினான். கண் முன்னால் நடந்த அத்தனையையும் ஜீரணிக்க முடியாமல் இப்ராஹிமும் அவனைப் பின் தொடர்ந்தார்.

மும்தாஜ் ஜேம்஬ின் காலடியில் உட்கார்ந்து, குனிந்து இருந்த அவன் தலையை அண்ணாந்து பார்த்தாள்.

''ஜேம்ஸ்! ஒரே வீட்டுல, ஒரே அறையில் கூட வாழ்நாள் முழுக்க நாம் நட்போட புனிதம் கெடாமல் வாழ முடியுங்கற நம்பிக்கை எனக்கிருக்கு'' என்றவளின் தலையில் கைவைத்து...

''அந்த நம்பிக்கை எனக்கும் இருக்கு. குழந்தை அழற மாதிரி இருக்கு உள்ளே போடா'' என்றான் கண்களில் புது ஒளியோடு.

மும்தாஜ் பரிதாபமாய் காயத்ரியைப் பார்த்தாள். அந்தப் பார்வை 'நீங்க என்ன சொல்றீங்க?' என்று கேட்பதுபோல் காயத்ரிக்குத் தோன்றியது.

''நீங்க ரெண்டு பேரும் நூறு வருசம் இதே வீட்டுல இருக்கனும். எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. நல்ல பிள்ளைகளை மனசுக்குள்ளேயும் வீட்டுக்குள்ளேயும் குடிவச்சிருக்கற நம்பிக்கை எனக்கிருக்கும்மா'' என்று தழுதழுத்தபடி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

ஆட்டோவில் போய்க் கொண்டிருந்த இப்ராஹீம் அருகில் இருக்கும் மகனைக் கொலை செய்யாத குறைதான். இன்னும் கொஞ்சம் வேகமாக அவர் பற்களை கடித்து இருந்தால், பற்கள் அனைத்தும் பொடிப் பொடியாக நொறுங்கி இருக்கும். திட்டித் தீர்க்கத் தொடங்கினார்.

''ஆரம்பத்திலேயே அவங்க எல்லாரைப் பற்றியும் தெளிவா சொல்லி தானே, பெண் பார்க்கவே கூட்டிட்டுப் போனேன். புதுசா இப்போ என்னத்தை கண்டுபிடிச்சி கிழிச்சிட்ட. அவங்க எல்லார் மனசையும் இப்படிப் போட்டு நொறுக்கவா? என்னையும் உன்னையும் பெற்ற பாவத்தை அந்த அல்லா தான் மன்னிக்கனும்.''

''.......''

சாலையையே வெறித்துப் பார்த்தபடி இருந்தான் ரஹீம்.

''உன் முகத்தைப் பார்க்கும்போதே, கண்ணெல்லாம் கூசுது.''

''.........''

மவுனமாக தனக்குள் அழுதவன், இப்ராஹிம் பக்கம் திரும்பவே இல்லை.

''நான் பாட்டுக்கு பேசிகிட்டு இருக்கேன். நீ பாட்டுக்கு ரோட்டைப் பார்த்திட்டு இருக்க?'' என்று ஆவேசமாக ரஹீமின் தோளைப் பற்றித் திருப்பினார். அவர் வேகமாகத் திருப்பிய தால் தளும்பிக் கொண்டிருந்த ரஹீமின் கண்ணீர் துளிகள் சிதறி வந்து இப்ராஹிமின் கையில் விழுந்து சுட்டது.



''ரஹீம்'' கோபம் தணியாமலேயே கேட்டார்.

தன் இடது கையால் கண்கள் இரண்டையும் துடைத்துக் கொண்டு, நாசியை உறிஞ்சிக் கொண்டான்.

''வாப்பா எல்லாரும் எல்லாத்துக்கும் நல்லவங்களா இருந்திட முடியாது. சில நேரம் நல்ல நோக்கத்திற்காக அவப் பேர் வாங்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுடும். என் நிலைமையும் அதான். அந்த வீட்டுல என் உதடுதான் பேசுச்சே தவிர, மனசு பேசல. பேசவும் கூடாது.''

அவருக்கு எதுவும் புரியவில்லை. கண்களைச் சுருக்கினார்.

''மும்தாஜ் மேலே நான் வச்ச ஆசையை விட, அவங்களுக்குள் இருக்கும் நட்பு ரொம்ப பரிசுத்தமானதுன்னு எனக்கு நல்லாவே தெரியும். மும்தாஜோட இரண்டு மூன்று முறை போன்லேயும் பேசி இருக்கேன். அவ பேசின ஒவ்வொரு வார்த்தையிலும் ஜேம்சும் துளசியும்தான் ஜீவனா ஆத்மாவா இருந்தாங்க. அந்த பொண்ணுவிட்ட மூச்சுக்காற்று கூட நட்பு, நட்புன்னு சுழன்ற மாதிரிதான் எனக்குத் தோணிச்சு. இப்படிப்பட்ட ஒரு அன்பைக் கொடுக்கவும், வாங்கவும் எல்லாராலையும் முடியாது.''

''என்னப்பா சொல்ற?''

''இப்படிப்பட்ட ஒரு இதயத்தை நிக்கா பண்ணிக்கப் போறோம்னு ரொம்ப சந்தோஷப்பட்டேன். துளசி இறந்த போது ஹாஸ்பிடல்ல நானும் இருந்தேன். அவங்களுக்குள்ளே இருந்த பிணைப்பைப் பார்த்து ஆடிப் போய்ட்டேன் வாப்பா. இந்த நேரத்துல ஜேம்சுக்கும் இந்த குழந்தைக்கும் மும்தாஜ் தேவை. அவங்களைப் பிரிக்க நான் விரும்பல.''

''நீ இப்படிப் புரிஞ்சிகிட்டபோது, உன் நிக்காவால எப்படிப்பா பிரிவு வரும்.''

''வரும் வாப்பா. கண்டிப்பா வரும். பிரிவுன்னா நீங்க நினைக்கிற மாதிரி இல்லை. அவளோட நேரத்துல, அன்புல, பரிவுல இப்படி எல்லாத்திலேயும் பாதியை நான் பிரிச்சிடு வேனே.''

''அதுக்கு கல்யாணத்தை தள்ளிப் போட்டு இருக்கலாமே'' அவரின் குரலில் இருந்த சுதி குறைந்து இருந்தது.

''இப்படி ஒரு காரணத்தை நேரடியா சொல்லி விட்டுக் கொடுக்கிறேன்னு நின்னேனா... சலனம் இல்லாமல் இருக்கிற அவ மனசுல எம்மேலே காதல் கூட ஏற்படலாம்... நான் என்னமோ தியாகம் பண்றதா நினைக்கலாம். அப்படி ஒரு உணர்வு ஏற்பட்டா குழப்பத்திற்கு ஆளாயிடுவா.''

''இல்லப்பா... நீ தப்பா கணக்கு போட்டு இருக்க. இப்பவே ஆட்டோவைத் திருப்பலாம்.''

''வேண்டாம் வாப்பா. யோசிச்சிதான் இந்த முடிவிற்கு வந்து இருக்கேன். என்னோட முடிவுல மாற்றமும் இல்லை. ஜேம்ஸோட தோழி எனக்கு நல்ல மனைவியா இருக்க முடியும். ஆனா என்னோட மனைவி ஜேம்சுக்கு ஒரு நல்ல தோழியாவும், அந்தக் குழந்தைக்கு ஒரு நல்ல தாயாவும் இருக்க முடியுமாங்கறது சந்தேகம். தப்பான அர்த்தத்தில் சொல்லலை. பாதியை நான் பறிச்சிடுவேனோன்னு பயப்படறேன்.''

''அந்த காயத்ரிம்மா கூட குழந்தையைப் பார்த்துக்குவாங்க.''

''கண்டிப்பா பார்ப்பாங்க. ஆனா மும்தாஜ் விட்டுக் கொடுக்க மாட்டா. மும்தாஜுக்கு இந்த நிலையில கடமையும் பொறுப்பும் அதிகம். அதுக்கு குறுக்கே நான் நிக்க விரும்பல. ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்குமாவது மும்தாஜ் அவங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப அவசியம். அந்தக் குழந்தை ஒரு நிலைக்கு வரும் வரை மும்தாஜ்ங்ற தாய் அங்கே தேவை.



அதுக்கு பத்து வருசமும் ஆகலாம். இருபது வருசமும் ஆகலாம். அதுவரைக்கும் நானும் காத்திருக்கப் போறேன்.''

''இவ்வளவு ஆசையை மனசுல வச்சுகிட்டு, அப்படி ஏன் பேசுன? வேற காரணம் சொல்லிட்டு வந்திருக்கலாமே.''

''வேற காரணம் எல்லாம் சரியான காரணமாக இருக்காது வாப்பா. எப்படியாவது சமாதானப்படுத்தி கல்யாணத்துக்கு முயற்சிப்பார் ஜேம்ஸ். தன்மானம் தாக்கப்பட்டாலே யாரும் நிமிர்ந்து நிக்கணும்னு வெறியையே உண்டாக்கிக்குவாங்க. அவங்க ரெண்டு பேரையும் தட்டி விட்டு, கிள்ளி விட்டு வந்திருக்கேன். வீரியத்தோட அவங்க ஜெயிச்சிக் காட்டுவாங்க.''

''மும்தாஜ் உன்னை மன்னிக்கலன்னா?''

சிரித்தான். அவன் சிரிப்பில் வேதனையும், சந்தோஷமும் கலந்தே வெளிப்பட்டது.

''புரிய வைக்க நேரம் பார்த்து முயற்சிப்பேன். முடியலன்னா அவங்க நட்புங்கற கட்டிடம் வானம் தொடும் அளவு உயர்ந்து நிக்க, அஸ்திவாரமாய் நானும் புதைந்து இருக்கேங்கற சந்தோஷமே, ஆத்ம திருப்தியே போதும்'' மீண்டும் மவுனமாய் சாலையை வெறிக்கத் துவங்கினான்.

''யா அல்லா என் மகனுக்கு எத்தனை வருடம் கழித்து வேண்டுமானாலும் நிக்கா நடக்கட்டும். அந்த மும்தாஜோட நடத்திடுப்பா'' என தொழத் துவங்கினார் இப்ராஹிம்.

இவையெல்லாம் தனக்குத் தெரியும் என்பதுபோல் மும்தாஜின் மடியில் ஜொள்ளு ஒழுக, தன் பொக்கை வாயைத் திறந்து இருந்தான் குட்டி ஜேம்ஸ்.

# இதயத்தைக் கிள்ளாதே

## 1

மார்கழி குளிர் விடியலுக்கு காத்திருக்கும் சூரியன். உள்ளுக்குள் இறங்கி ஊசி குத்துவது போல் உணர்வைக் கிளப்பி... நரம்பைச் சுண்டும் குளிர். கருப்பும் வெளுப்பும் கலந்த ஒரு அழுக்கான மேகப் போர்வை.

விடியற்காலை நாலரை மணி. ஆனால் எங்கும் விடிந்து விட்ட அறிகுறி கிடையாது. குண்டூசி விழுந்தால்கூட சத்தம் கேட்கும் அப்படி ஒரு நிசப்தம்.

அந்த அமைதியில், பார்கவி தெருவில் ஏழாம் நம்பர் வீட்டில் இருந்து மெல்லிய இசை காற்றோடு கலந்து, வீதிக்கு வந்து விளையாடுவது துல்லியமாகக் கேட்டது.



அருகே சென்று பார்த்தால் குட்டி காம்பவுண்ட் சுவர். உள்ளே நுழைந்ததும் ஒரு கார் செல்லும் அளவுக்கு சிமெண்ட் பாதை போடப்பட்டது தெரியும். இரு பக்கமும் மல்லி, ரோஜா, துளசி என்று பூக்கள் மணமும், இலைகளின் மணமும் கலந்து வந்து நாசியைத் தொட்டு உள்ளிழுக்க வைக்கும். இன்னும் கொஞ்சம் நடந்தால் ஒரு போர்ட்டிகோ. அதில் சாக்லெட் நிற பிரிமியர் 118 சாதுவாக நின்றிருந்தது. எந்தச் சூழலுக்கும் ரம்மியமான வீடு. இன்னும் கொஞ்சம் நடந்து கதவு திறந்து பார்த்தால், சின்னதாக ஒரு மூலையில் ஒரு ஒனிடா கலர் டி.வி. அதற்கடுத்து தாண்டினால் வலது ஓரம் சமையல் அறை. இடது ஓரம் இரண்டு பெட் ரூம்கள் நடுவில் முற்றம். அதற்கு நடுவில் துளசி மாடம்.

பழங்காலத்து மாடலில் முற்றம், மாடி, ஓட்டு வீடு என்று எல்லாம் கலந்தது போல் அந்த வீடு இருந்தது.

கொட்டும் பனியில் தலைகுளித்து... தலையில் கட்டியிருக்கும் வெண்ணிறத் துண்டு அவிழட்டுமா? வேண்டாமா? என்று ஊசலாடிக் கொண்டிருக்க, காட்டன் புடவை தன் விறைப்பைக் காட்ட...

முத்து முத்தாக முதுகில் விழுந்த நீர்த்துளி ஜாக்கெட்டில் ஊடுருவி முதுகைத் தொட்டு சிலிர்ப்பை ஏற்படுத்துவதையும் பொருட்படுத்தாமல் கருமமே கண்ணாக துளசி மாடத்தைச் சுற்றிக் கொண்டிருந்தாள் காயத்ரி.

துளசி மாடத்தைச் சுற்றி முடித்து பூஜைக்கு வைத்திருந்த உதிரிப் பூக்களோடு பூஜையறைக்குள் நுழைந்தவள் கொஞ்ச நேரம் கண்களை மூடிக் கொண்டிருந்தாள். பின் மெதுவாகத் திறந்து வகிட்டிற்கும், முந்தானைக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் திருமாங்கல்யத்திற்கும் குங்குமத்தை அழுத்தமாக இட்டு, கண்களில் ஒற்றிக் கொண்டு வெளிப்பட்டாள்.

சமையல் அறைக்குள் நுழைந்து கேஸைப் பற்ற வைக்கும் இந்த காயத்ரிக்கு, வயது இருபத்தி எட்டு. இரண்டு குழந்தை களுக்கு அம்மா என்றால் நம்புவது கொஞ்சம் கஷ்டம். அப்படி ஒரு கட்டுக்குலையாத தோற்றம். கொஞ்சம் கருப்பு. அடக்கமான அழகு. இடுப்பில் விழும் அளவு கூந்தல், சிரித்தால் குழி விழும் கன்னங்கள், இருட்டிலும் பளிச்சிடும் வெண்ணிறமான அழகான பற்கள். அடிக்கடி ரகுவரன் இவளைச் சிரிக்கச் சொல்வது இதற்காகக் கூட இருக்கலாம்.

சமையல் அறைக்குள் நுழைந்ததும் அவள் மெலிதாகப் பாடுவதை நிறுத்தவில்லை. முனகலா, பாடலா, ராகமா என்று பிரித்துப் பார்க்க முடியாத ஒரு இசை. ஆனால் கண்களை மூடிக் கொண்டு காது கொடுத்துக் கேட்கலாம். சுகமாக இருக் கும். ரகுவரனின் அத்தியாவசிய வேலைகளில் அவளைப் பாட வைத்துக் கேட்பதும் ஒன்று.

இரவில் மீதமாகியிருந்த பாலை சூடாக்கி இறக்கினாள். கொஞ்சம் தண்ணீர் விட்டு, டிக்காஷன் கலந்து, சூடு குறை யாமல் இருக்க ஒரே ஒரு முறை ஆற்றி, ஒரு ஓரமாக வைத்து விட்டு, இட்லி குக்கரை வைத்துவிட்டு, ரகுவரன் எழுதிக் கொண்டிருக்கும் அறை நோக்கி நடந்தாள். அப்போதும் மெல்லிதான பாடல்...

**துர்க்கை அம்மனைத் துதித்தால் போதும்**
**துன்பம் பறந்தோடும்.**
**அவள் பாதம் தொட்டு வணங்கி விட்டாலே**
**பாவம் தெறித்தோடும்.**
**நெஞ்சம் நிறைந்து, தஞ்சம் தந்த**
**எம் மன்னவன் வாழ்ந்திடவே**
**என்னிரு கண்ணாம் மழலையிரண்டை**
**மனமாய் வாழ்த்திடவே**
**நித்தம் பணிந்தாள் உன் திருப்பாதம்**



**நான் உன் சேயம்மா...**
**நீ கடைக்கண் பார்த்தாலே**
**வாழும் உலகமம்மா.**

கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றவள்... ரகுவரன் இவன் வரவிற்காக காத்திருப்பது போல் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும்,

''என்ன எழுதாம உட்கார்ந்து இருக்கீங்க?''

பளிச்சென்று சிரித்தான்.

''உன் வரவுக்காகத்தான்'' சொல்லியபடியே அவளை விழுங்கி விடுவது போல் ஒரு பார்வை.

''நா வருவேன்னு தெரியுமா?''

''இம். இந்த மகாராணி வரப்போறத காபியோட வாச னையே எனக்கு சொல்லிடுச்சே.''

''சமத்து'' காபி டம்ளரை நீட்டினாள்.

வாங்கிக் கொண்டவன், ''அதென்ன காயத்ரி பக்தி பாட்ல குடும்ப வாசனை வருது?''

''அம்பாள்கிட்ட எனக்கு வேண்டியதத்தானே கேட்க முடியும்?''

''அப்ப நாட்டப் பத்தி கவலை இல்லையா?''

''வீடு நல்லா இருந்தா நாடு நல்லா இருக்கும்.''

''தாயே! தெரியாமக் கேட்டுட்டேன்'' போலியாக சர ணடைந்தான்.

''பேங் ஆடிட்! சீக்கிரம் போகணும் காயத்ரி.''

''அப்பவே ஹீட்டர் போட்டுட்டேன். எடுத்து வைக்கிறேன். போய் குளிங்க. ஏழு மணிக்குள்ள எல்லாம் ரெடியாயிடும்.''

காலி டம்ளரை எடுத்துக் கொண்டு கிளம்பியவளின் கைகளைப் பற்றி இழுத்தான்.

''என்னப்பா?''

''உன்னை இப்படியே பார்த்துக்கிட்டே இருக்கலாம் போல இருக்கு.''

மனதுக்குள் நெகிழ்ந்தாலும், ''ஆறு வயதில் பையனும், நாலு வயதில் பொண்ணும் இருக்கா... ஞாபகம் இருக்கா?'' நமுட்டாகச் சிரித்தாள்.

''இல்ல காயத்ரி உன்னப் பார்த்தாலே போதும். சோறு தண்ணி எதுவும் வேண்டாம்.''

''நா என்ன அவ்வளவு அழகா?''

''எம் பொண்டாட்டி எனக்கு அழகுதான்.''

''நா கருப்பு.''

''பைத்தியம், உங்கிட்ட புடிச்ச விஷயங்கள்ள இதுவும் ஒன்று. கிளியோபாட்ரா கறுப்புதான் தெரியுமா?''

''சமாதானமா?''

''இல்லம்மா நெஜமாத்தான் சொல்றேன்'' குரலைக் கிசு கிசுப்பாக்கினான்.

''நா வெறும் எஸ்.எஸ்.எல்.சி. நீங்க எம்.காமாச்சே?''

சேரைப் பின்னுக்குத் தள்ளி விட்டு எழுந்தவன், அவள் தோளைப் பற்றி இறுக்கி, ''உனக்கு மொதல்ல இந்த 'காம்ப்ளக்ஸ்' போகனும். ஒரு குடும்பத் தலைவிக்கு பட்டப்படிப்பு அவசியம் இல்லை. ஆனா பக்குவம் வேணும். அது உங்கிட்ட இருக்கு. பொண்ணுக்கு அரசாங்க உத்தியோகம் அவசியம் இல்லை. ஆனா அடக்கமும், அனுசரிச்சுப் போற பண்பும் வேணும். இதுவும் உங்கிட்ட எக்கச்சக்கம். உன்னைப் போல ஒரு



மனைவி கிடைப்பான்னு நா நெனச்சிக்கூடப் பார்க்கல. உன்னை மேரேஜ் பண்ணப்ப எவ்வளவு சந்தோஷமா இருந் தேன் தெரியுமா? நான் புண்ணியம் பண்ணியிருப்பதே நீ மனைவியாகக் கிடைச்சப்பத்தான் நம்பினேன். ஆபீஸ் எவ் வளவு டென்ஷனா இருந்தாலும், ஒடி வந்து உம்மடியில தல வச்சிப்படுத்தா... இட்ஸ் கான்'' தோள் குலுக்கிச் சிரித்தான்.

காயத்ரியின் கண்கள் கலங்கியிருந்தது. உதடு லேசாகத் துடித்து அவன் தோள் மேல் சாய்ந்து துவண்டாள். மெலிதான விம்மல் வெடித்தது.

இறுக்கி அணைத்துக் கொண்டவன், சற்று நேரம் பேசாமல் இருந்து விட்டு அவளின் முன்னுச்சிக் கேசத்தை ஒதுக்கி விட்டபடியே,

''இன்னிக்கு மறக்க முடியாத பொருள் ஏதாவது தரணும் போலத் தோணுது. ஏதாவது கேளு காயத்ரி?''

''எங்கிட்டேயே நா என்ன கேட்க முடியும்?''

அவனை விலக்கிக் கொண்டு நகர்ந்தாள்.

''சீக்கிரம் வாங்க வெந்நீரைக் கலந்து வைக்கிறேன்'' என்று சொல்லி விட்டு, பக்கத்து ரூமின் கதவைத் திறந்தாள்.

இரண்டு பேர் தாராளமாகப் படுக்கும் ஸ்டீல் கட்டில்கள் இரண்டு ஒன்றாக இணைத்துப் போடப்பட்டு இருந்தது.

போர்வையைப் பந்தாகச் சுருட்டியபடி மனோஜ் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் மேல் காலைத் தூக்கிப் போட்டபடி மதுவும் தூங்கிக் கொண்டிருந்தாள்.

மணி பார்த்தாள். ஐந்தரை என்று காட்டியது.

ஆறு மணிக்கு மேல் எழுப்பிக் கொள்ளலாம் என்று இரு வருக்கும் போர்வையைச் சரி செய்து விட்டு சமையல் அறைக் குள் புகுந்தாள்.

''காயத்ரீ...''

''இதோ வந்திட்டேன்.''

குரல் கொடுத்தபடி குக்கரில் இருந்த இட்லியை ஹாட் பேக்கில் எடுத்துப் போட்டுக் கொண்டு, ஹாலுக்கு வந்தாள்.

தட்டில் இட்லி வில்லைகளை எடுத்து வைத்து, தக்காளிச் சட்னியையும், கொத்துமல்லிச் சட்னியையும் தட்டின் ஓரத்தில் எடுத்து வைத்தாள்.

''சாம்பார் வைக்கலையா?''

''இல்ல, ஏழு மணிக்குள்ள எப்படி முடிக்கிறது?''

''சரி... ஒரு பேச்சுக்குக் கேட்டேன். மதுக்குட்டி குரல் கேட்டுச்சி ஆளக் காணோம்?''

''நா குளிக்கப் போகணும் டாடி...'' சோபாவின் பின்னால் இருந்து தம்பூரா மீட்டியது போல் ஒரு குரல் வந்து விழுந்தது.

''பின்னால என்னடா பண்ற?''

''ஜட்டியோட நிக்கறேன் டாடி.''

''ஏன்?''

''இந்த மனோ பய என்னக் குளிக்க விடமாட்டேங்றான். அவன் வெளியே வந்ததும் திட்டுங்க டாடி.''

''சரிடா, திட்டிடலாம். சாப்பிட்டியா?''

''வேணாம் டாடி, மனசு சரியில்ல.''

குபீர் என்று வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு காயத்ரியைப் பார்த்து ''எம் பொண்ணு எப்படிப் பேசறா பாத்தியா, சமத்து!''

ஒன்றும் பேசாமல் சிரித்தாள்.



''இந்தக் காலத்து புள்ளைகளுக்கு பேசக் கத்துக் கொடுக்கணும்ற அவசியமே இல்ல. நமக்கு சொல்லிக் கொடுக்குங்க. கம்ப்யூட்டர் யுகங்கறது சரியா இருக்கு. இல்ல யு.கே.ஜி. படிக்கிறதுங்களுக்கு எவ்வளவு நாலேஜ் தெரியுமா?'' சொல்லிக் கொண்டே மகளைத் தன் பக்கம் இழுத்தான்.

''டேய்...''

''இம்...''

''இங்க வாடா.''

''இன்னா டாடி?''

''மிஸ் நல்லா சொல்லித் தராங்களா?''

ஒன்றும் சொல்லத் தெரியாமல் அவன் தொடையோடு, ஒட்டிக் கொண்டாள்.

''மதுக்கு இன்னிக்கு ஈவ்னிங் என்ன வாங்கி வரணும்?''

''மனோக்கு தெரியாம எனக்கு மட்டும் வாங்கி வரீங்களா?'' ஆசையோடும், எதிர்பார்ப்போடும் மது கொஞ்சியது.

''நோ ம்கூம்... தப்புடா. உனக்கொன்னு, அண்ணாவுக் கொன்னு.''

''அவன் என்ன அடிக்கிறான் டாடி.''

''மதுவ அடிக்கக் கூடாதுன்னு சொல்லிர்றேன். உனக்கு என்ன புடிக்கும்?''

''சேக்கோ பார்.''

''வேணாம். பனிக் காலம், ஒத்துக்காது'' குறுக்கிட்டாள் காயத்ரி.

''எனக்கு சேக்கோபார்தான் வேணும்'' காலை உதற ஆரம்பித்தாள் மது.

''சொன்னாக் கேளுடி.''

''மாட்டேன் போ. நீ அண்ணா கட்சிதான். நா டாடி புள்ள போ.''

''பார்த்தீங்களா என்ன பேச்சு பேசறா? எனக்கென்ன சேக்கோ பார் வாங்கி அப்பாவும் பொண்ணுமா, சாப்புட்டுட்டு மூக்க ஒழுக விட்டுகிட்டு இருங்க. நீ குளிக்க வா. ரிக்ஷாக்காரன் வந்திடப் போறான்'' மதுவைத் தூக்கிக் கொண்டாள் காயத்ரி.

''ஏன் மம்மி என்னப் புடிக்கலியா?''

''இல்ல ராசாத்தி, இது பனிக்காலம், சேக்கோபார் சாப்டா சளி புடிக்கும். உனக்கு சளி புடிச்சா... கஷ்டப்படுவ... அப்புறம் மம்மி மனசும் கஷ்டப்படும்ல அதுக்குத்தாண்டா சொன்னேன்.''

''அப்ப சும்மாச்சுக்கும் திட்னுயா?''

''இம்...''

''உனக்கு என்னைப் புடிக்கும் தானே?''

''ஆமாண்டா செல்லம்.''

''மனோ?'' அவள் கேட்கும் தொனி அவனைப் புடிக்காது என்று சொல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது.

ஆனால் காயத்ரி,

''அவனையும் புடிக்கும்.''

''டாடி...''

''மூச்சே அவர்தானே.''

''அப்படினா?''

''ஒண்ணும் இல்ல'' ஒரு முறை ரகுவரனை திரும்பிப் பார்த்துவிட்டு தலை கவிழ்ந்து கொண்டாள்.

''உனக்கு என்னப் புடிக்காது மம்மி?''

''பொய் பேசறவங்களப் புடிக்காது. நம்புறவங்கள ஏமாத்தறது புடிக்காது.''



பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ரகுவரன் 'காயத்ரி' அழைத்தான்.

''என்னங்க?'' திரும்பினாள்.

''நா பொய் சொன்னாக் கூடவா?''

சில வினாடிகள் அவனை உற்றுப் பார்த்தாள், பின்பு.

''இந்த விஷயத்துல நீங்க மட்டும் இல்ல. கடவுளா இருந்தாலும் இந்த காயத்ரி திரும்பிப் பார்க்க மாட்டா'' சொல்லி விட்டு மதுவோடு பாத்ரூம் பக்கம் நகர்ந்தாள்.

''சொடேர்'' என்று சாட்டையால் யாரோ அடித்தது போல் உணர்ந்தான் ரகுவரன். எட்டு வருடமாக எட்டிப் பார்க்காத கலக்கம். அவனுக்குள் சூழ்ந்து கொண்டு பயமுறுத்தியது.

''காயத்ரி'' அவனையறியாமல் அவன் உதடு மட்டும் சத்தம் வெளிவராமல் முணுமுணுத்தது.

ஒரு நெருப்புக் கோளம் எங்கோ உருவாகி அவனை நோக்கி வருவது போல் உணர்ந்தான். குப்பென்று வேர்த்தது. உற்சாகமும் சட்டென்று வடிந்தது போல் உணர்ந்தான்.

''எனக்குக் கூட பொய் சொல்றவங்கள, நம்பறவங்கள ஏமாத்தறவங்களக் கண்டாலே பிடிக்கறதுல... ஏமாத்துறவங்கன்னு தெரிஞ்சாலே திரும்பிக்கூட பார்க்க மாட்டேன். ரகு தப்போ சரியோ ஒப்பன் ஹார்ட்டா இருக்கணும் கரெக்டா?'' அன்று அவன் தோள் அணைத்து ஜனனி சொன்னது சினிமாஸ்கோப் திரைப்படமாக விரிந்து தெரிந்தது.

## 2

காலை பனிரெண்டு மணிக்குள் எல்லாப் பேப்பரிலும் சைன் பண்ணிவிட்டு, டையைத் தளர்த்திக் கொண்டு தன்

சேரில் கொஞ்சம் தளர்ந்து சாய்ந்தான் ரகுவரன். ஏ.ஸி.யின் ரீங்காரம் மட்டும் மெலிதாகக் கேட்டுக் கொண்டிருந்தது. பிஸியாக வந்த இரண்டு மூன்று போன் கால்களைத் தவிர்த்தான். கைகள் அவனையும் அறியாமல் பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டிருந்தன.

மெல்லிய கதவு தட்டும் சத்தம் கேட்டது.

பஸ்ஸர் அழுத்தி விட்டு... 'எஸ்.கமின்', நிமிர்ந்து உட்கார்ந்து டையை சரி செய்து கொண்டு தலையைக் கைகளால் கோதி விட்டான்.

அக்கவுண்டண்டன்ட் உள்ளே நுழைந்தார். முன் மண்டையை விளையாட்டுத் திடலுக்கு ஏலம் விடும் வயது. தங்க கலர் ப்ரேம் போட்ட கண்ணாடி, மெல்லிய தேகம். ஏ.ஸி.யின் தாக்கத்தை ஒரு நிமிடம் சமாளித்து சரி செய்தார்.

''எஸ். என்ன ராமன்?''

''ஸார்...'' இழுத்தார்.

''எஸ். கமான்.''

''ஜனனி விஷயமா?''

''வாட்?'' குரல் அதிர்ந்தது. ''ஹூ ஈஸ்.ஷீ?''

ராமனுக்கு ஆச்சரியமாக இருந்தது... இரண்டு வாரத்திற்கு முன்பு தானே ஜனனி பற்றி இவரிடம் பேசினோம். என்னாச்சி? எதுக்கு இப்படி அதிர்ந்து போகிறார்... ஒன்றும் பிடிபடவில்லை.

''இல்ல சார் லோன் விஷயமா...''

''என்னோட கஸின் ஒருத்தி... சொந்தமா ரெடிமேட் ஷாப் வைக்கலாம்னு... அதுக்கு லோன் கூட அப்ளை பண்ணியிருக்கா?''



''ஓ... சைதாப்பேட்டை ஜனனி... கரெக்ட்.''

''எஸ் சார்... அப்பாடா ஞாபகம் இருக்கே...'' மனதுக்குள் சந்தோசமாக ஒரு குறுகுறுப்பு ஓடியது ராமனுக்கு.

''சாரி ராமன்... இப்ப எதையும் கேக்கற மூட்ல நா இல்ல. நாளைக்கு திரும்ப எனக்கு ரிமைன்ட் பண்றீங்களா?''

''ஓகே சார்.''

''சாரி இப் யூ டோண்ட் மைண்ட். ஒரு ஒன் ஹவருக்கு என்ன யாரும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம் ப்ளீஸ். ஸ்டிரிக்டா சொல்லிடுங்க. ஓ.கே. யூ கேன் கோ.''

''தேங்க்யூ சார்.''

கண்களை மூடினான். கண்கள் எரிய ஆரம்பித்து இருந்தது. மூடிய இமைகளைத் திறக்கக் கஷ்டமாக இருந்தது. எரியும் அந்த சிவந்த விழிகளுக்குள் ஜனனியின் உருவம் வந்தது. மெல்ல மெல்ல அவனின் நினைவுகள் பின் நோக்கி நகர்ந்தன.

முக்கால்வாசி இருட்டும், கால்வாசி வெளிச்சமும் கலந்த அந்த சைனீஸ் ரெஸ்டாரண்டில் எதிரும் புதிருமாக ஜனனியும், ரகுவரனும் அமர்ந்திருந்தனர். கலங்கிய அந்த வெளிச்சத்தில் பச்சையும், நீலமும் கலந்த நிறத்தில் பூக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிறைந்த சுடிதாரில் ஜனனி தெரிந்தாள்.

சிவந்த நிறம், ஆளை அசத்தும் அழகு. கூர்மையான நாசி, சின்னதாக ஒரு ஸ்டிக்கர், லிப்ஸ்டிக் தேவைப்படாத இதழ்கள், மைக்கு வேலை கொடுக்காத அழகிய கண்கள், நெற்றியில் விழும் முடிகள். இடது கையால் அதை ஒதுக்கியபடியே ரகுவரனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ரகுவரன் பேரர் கொண்டு வந்து அப்போது வைத்துச் சென்ற தக்காளி சூப்பில் ஸ்பூனை விட்டு கலக்குவதில் மும்முரமாக இருந்தான்.

''ரகு.''

''ம்.'' நிமிர்ந்தான். அவன் விழிகள் அவள் விழிகளை சந்தித்து தாழ்ந்து கொண்டன.

''பேசப் புடிக்கலையா?''

மவுனமாக இருந்தான்.

''ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேணும்னு தானே இங்கே வந்தோம்?''

''ம்'' தலையாட்டினான்.

''அப்புறம்... இப்படி மவுனமாக இருந்தா என்ன அர்த்தம்?''

''மனசு குழம்பியிருக்குன்னு அர்த்தம்.''

''குழம்பினாத்தான் ஒரு தெளிவான முடிவுக்கு வர முடியும்.''

''என்னால முடியல ஜனனி.''

''ரிலாக்ஸ். ஏன் இப்படி டென்சனாகுறீங்க?''

அவளை உற்றுப் பார்த்தான். அவன் கண்கள் கலங்குவதை அவனால் தடுக்க முடியவில்லை. அவன் கண்ணீர் கண்டு ஜனனியிடம் லேசான பதற்றம் தொற்றிக் கொண்டது. அவன் கைகளைப் பற்றி கைகளுக்குள் வைத்து ஒரு பூவைத் தொடுவது போல் மெலிதாக அழுத்தினாள்.

''என்ன டியர். பொண்ணு மாதிரி கண்ணெல்லாம் கலங்கிட்டு... சொல்லப்போனா நான்தான் கலங்கணும். நீங்க போயி ஸில்லி... கண்ணத் தொடைங்க'' அவளே அவன் கன்னங்களில் கோடு போட்ட கண்ணீரை ஒற்றி எடுத்தாள்.

''இல்ல ஜனனி.''

''உஷ்'' ஒண்ணும் பேச வேண்டாம். இப்ப என்னாச்சி எதுக்கு இந்தக் கலக்கம்? காதலிச்சா கல்யாணம் பண்ணிக்கணும்னு ஏதாவது சட்டமா? இல்ல ரகு, காதலிக்கிறவங்க எல்லாம் கல்யாணம் பண்ணிகிட்டு கொழந்த குட்டி பெத்துகிட்டா காதலில் ஒரு த்ரில்லே இருக்காது.''



''ஜனனி.''

''எஸ். நாம ரெண்டு பேரும் ஒண்ணு சேர்றதுனால எத்தனையோ பேருக்கு மனசு கஷ்டம். நம்ம ரெண்டு குடும்பத்துக்கும் துக்கம். அவங்களால நம்ம ஒத்துக்கவும் முடியாது. அவங்க போனா போகட்டும்னு நம்மலால சந்தோசமாவும் இருக்க முடியாது. நம்ம ரெண்டு பேரும் மனச கல்லாக்கிக்கிட்டு தியாகம் பண்ணிட்டா எத்தனையோ பேருக்கு சந்தோசம்''

''நான் என்ன சொல்ல வரேன்னா...''

அவன் இதழில் தன் விரல் வைத்துத் தடுத்தாள்.

''நோ... நீங்க எதுவும் சொல்ல வேண்டாம். எனக்கு அம்மா வேண்டாம்... அப்பா வேணாம்... ஜனனி மட்டும் போதும். நா சந்தோசமா இருப்பேன்னு எனக்கு நீங்க ப்ராமிஸ் பண்ணுவீங்க.''

''ஜனனி'' கொஞ்சம் சத்தமாக அழைத்தான்.

''இம். இது ரெஸ்டாரண்ட்'' அதட்டியவள், ''அந்த முடிவுக்கு வர உங்களாலேயும் முடியாது என்னாலயும் முடியாது. அப்பா அம்மாவையே சுத்தி வளர்ந்துட்டோம். சோ அவங்க முடிவுக்கு கட்டுப்பட்டுத்தான் ஆகணும். காதல்னா சந்தோசம் மட்டும் இல்ல. விட்டுக் கொடுப்பதும் காதல்தான்.''

''உன்னோட இந்த முடிவுல எந்த மாற்றமும் இல்லையா?''

''என்ன செய்யறது ரகு ஏற்கனவே என் அப்பா ஹார்ட் பேஷண்ட் இரண்டு முறை அட்டாக் வந்தாச்சு. அம்மா வேண்டாத கடவுளில்லை. தினந்தோறும் தாலிக்கு மஞ்சள் குங்குமம் வைத்து வணங்கிட்டு இருக்காங்க. என் முடிவுக்கு ஒரு பெரிய அதிர்ச்சிய தந்து... நினைச்சுக்கூட பார்க்க முடியல ரகு.''

''நம்ம பெத்தவங்க சம்மதம் கிடைக்காதுங்கற பட்சத்தில் இதுதான் முடிவு.''

''என்னை மறந்துட்டு நீ வாழ்ந்துடுவியா?''

ஜனனி தடுமாறினாள்.

''முடியாதுன்னு ஏதாவது உண்டா?''

''மறந்துடுவியா?''

''ட்ரை பண்ணுவேன்.''

''என்னால முடியாது ஜனனி. கல்யாணம் பண்ணிப்போம். நீ ப்ரக்னெண்ட் ஆனா நிச்சயம் ரெண்டு வீட்லயும் சம்மதம் கிடைக்கும்.

குரல் வெளிப்படாமல் சிரித்தாள்.

'ஸாரி ரகு. நான் மாடர்ன் டைப்தான். ஆனா ஒரு சில விஷயங்கள்ல பத்தாம்பசலி. மனசார ரெண்டு வீட்லயும் சம்மதம் கிடைக்காம உங்கள நான் தொட விடமாட்டேன். நான் உங்க சொந்தம்தான். உங்களுக்கு உரிமையானவதான். ஆனாலும்... பெரியவங்க சம்மதத்தோடவும், ஆசியோடவும் நடக்க வேண்டிய ஒரு புனிதச் சடங்கு அது... அவங்க வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கிட்டு நாம இணைஞ்சோம்னா... அது நல்லால்ல...'' அவள் குரல் கொஞ்சம் கொஞ்சமாக உடைய ஆரம்பித்தது.

அவள் முகத்தை தன் உள்ளங்கைகளில் சிறைப்படுத்தினான்.

''உன்ன மருமகளா அடைய எங்கம்மா குடுத்து வைக்கல ஜனனி.''

''ரகு எனக்கு கூட இந்தப் பிரிவ தாங்கற சக்தியை கடவுள்தான் கொடுக்கணும். இப்பகூட நீ எதிரில் இருக்கிற தைரியத்தில்தான் இப்படி பேசிட்டிருக்கேன். நாளை எப்படின்னு எனக்குப் புரியல.''

''ஜனனி'' என்று சத்தத்தைக் கூட்டினான்.



இதழ் ஓரமாக சிரிப்பை விரிய விட்டாள். அதில் துயரம் நிறைந்திருந்தது.

''பயப்படாத. நிச்சயம் நல்லாருப்பேன்.''

''உன்னோட வீட்ல... பயங்கர எதிர்ப்பா?''

''பயங்கர எதிர்ப்பில்லை. ஜென்மப் பகை'' சிரித்தாள்.

''உன்னால எப்படி சிரிக்க முடியுது?''

''அழுதா மட்டும் பிரச்சினை தீர்ந்திடுமா?''

''உனக்கு எப்படிப் புரிய வைக்கிறதுன்னே தெரியல.''

''உங்கள நான் நல்லா புரிஞ்சிகிட்டதாலத்தான் சொல்றேன். அப்பா அம்மா பார்க்கற பொண்ணையே கல்யாணம் பண்ணிக்குங்க. நான் திரும்பவும் சொல்றது இதுதான். பெத்தவங்களுக்குப் பயப்படுறவங்க, அவங்க சம்மதிக்க மாட்டாங்கன்னு தெரிஞ்சும் காதலிக்கறது தப்பு. அந்தத் தப்பைத்தான் நாம பண்ணிட்டோமே. எனக்கு ஒரே ஒரு வருத்தம்தான் ரகு.''

வெறித்துப் பார்த்தான்.

''என்னன்னு கேக்க மாட்டீங்களா?''

''சொல்லு ஜனனி.''

''இந்த நல்ல மனுசன் மடியில் தலை வைக்க எனக்கு அதிர்ஷ்டமே இல்லையே. இந்த கைக்குள்ள கோழிக்குஞ்சா சுருண்டுக்கிடணும்னு கனவு கண்டேனே... அதுக்கும் வாய்ப்பில்லையே... இந்த நெஞ்சு மேல சாஞ்சிக்கிடணும்... உங்க இதயம் ஜனனி... ஜனனின்னு துடிக்கணும்... அந்தத் தாலாட்டக் கேட்டுகிட்டு தூங்கணும்னு எல்லாம் கற்பனை பண்ணினேன். அதெல்லாம் பொய்யாகப் போறத நெனைச்சாதான் கஷ்டமா இருக்கு.''

கண்ணீரை மறைக்கத் தடுமாறினாள்.

சிறிது நேர மவுனத்திற்குப் பிறகு...

''பிரிஞ்சிடுவோம் ரகு.''

''.........''

''இப்ப நான் சொல்றது கஷ்டமா இருக்கும். ஆனா போகப் போக சரியாகும்.''

''கட்டிலுக்கும் தொட்டிலுக்கும் ஒருத்தி சொந்தமான பின்னால் காதல மறக்கறது ரொம்ப சுலபம். ப்ளீஸ்ப்பா. என்ன மறக்க டிரை பண்ணு. நீ படப் போற வேதனையை விட... அதிகமா நான்தான் படப் போறேன். ப்ளீஸ்டா... மறந்துடு. ஜனனி உனக்கு வேண்டாம்.''

''நான் ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டியே?''

''இல்லப்பா'' தலையாட்டினாள்.

''நம்ம ரெண்டு குடும்பத்த பத்தி மட்டுமே பேசறியே... தன்னோட பொண்டாட்டி மனசும் சரி, உடம்பும் சரி தனக்கு மட்டும் சொந்தமா இருக்கணும்னு நினைச்சிட்டு வா, உன்னோட ஹஸ்பெண்டிற்கும்...'' சொல்லிவிட்டு அவளைப் பார்த்தான். மீண்டும் தொடர்ந்தான். ''அதே நம்பிக்கையோட வர பொண்ணுக்கும் நம்ம காதல் தெரிஞ்சா அதிர்ச்சியா இருக்காதா?''

''அப்கோர்ஸ், ஏன் சொல்லணும்?''

''ஜனனி...''

''எஸ்... வாழ்க்கைங்கற ஹிஸ்டிரியில தோல்விய சொல்லக் கூடாது.''

''ஆனா எல்லா ஹிஸ்டிரியிலயும் வெற்றி. தோல்வி ரெண்டுமேதான் சொல்லப்படுது.''

''லிசன் ரகு... நான் உங்களுக்கு வரப்போற பொண்ணு கிட்ட பொய் சொல்லச் சொல்லலை. நீங்க இந்த கசப்பான



உண்மையச் சொல்றதுல யாருக்கு லாபம்? வீணா அந்தப் பொண்ணுக்கு மனக் கஷ்டம். உண்மையப் பேசிட்டீங்கன்னு அவ உயர்வா நெனச்சாலும் ஒரு ஓரத்துல குத்திக்கிட்டுத் தான் இருக்கும். ஈசியா எடுத்துக்கிறவளா இருந்தா சொல்லுங்க.. இல்லன்னா வேண்டாம். நீங்க இந்த உண்மையைச் சொல்றத விட அவளுக்கு உண்மையா நடந்துக்குங்க. மூணு முடிச்சு போட்ட உடனே ஜனனிங்கற இந்த மூணு எழுத்தையும் தொடச்சி தூர எறிஞ்சிடுங்க. நான் எங்க இருந்தாலும் உங்களுக்காக பிரே பண்ணுவேன். உங்களுக்கு நல்ல மனைவி கிடைக்க ஆல் த பெஸ்ட்'' சொல்லிவிட்டு எழுந்தாள்.

''பஸ் ஸ்டாண்ட் வரையாவது நான் கூட வரலாமா ஜனனி?''

கண்கள் பனிக்கக் கேட்டான்.

அவன் கைகளை இறுக்கப் பற்றி அதில் அழுத்தமாக முத்தமிட்டாள்.

''வாங்க...''

பஸ் ஸ்டாப் வரை இருவரும் ஒன்றும் பேசாமல் வந்தார்கள். அந்த மவுனத்தில் அர்த்தம் இருப்பது போலவும், இல்லாதது போலவும் அவர்களுக்குத் தோன்றியது. அவள் போக வேண்டிய பஸ்சிற்காக அவளுடனே காத்திருந்தான். பத்திரமாக ஏற்றி விட்டு கையசைத்தான். அன்று கண்களில் கண்ணீர் பெருக கையசைத்தவள்தான். இதுவரை அவனுக்கு தென்படவில்லை. காயத்ரியை மணந்து அவளின் உள்ளம் கலந்து இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகி சந்தோஷத்தின் உச்சத்தில் இருக்கும் ரகுவரனுக்கு இன்று அதிகமாக ஜனனியின் ஞாபகம். வேதனையாக இருந்தது. மீண்டும் காதல் காயங்கள் அவன் கண்களுக்கு தட்டுப்பட்டன.

கடிகாரத்தின் பெண்டுலம் அவனை நிகழ்காலத்திற்குத் திருப்பியது.

'இப்போது எப்படி இருப்பாள், அதே ஜனனியாக இருப்பாளா, அதெப்படி இருப்பா, திருமணம் ஆகியிருக்குமே, பிறகு ஏன் எனக்கு இன்விடேஷன் அனுப்பவில்லை, சதை போட்டு இருப்பாளா, அந்தக் குறும்பெல்லாம் இப்போது இருக்குமா, அவள் கணவன் என்ன செய்கிறான்? இவள் மனம் புரிந்தவனா? குழந்தைகள் எத்தனை இருக்கும்? மது, மனோ போல் குட்டிகையா? எனக்கு இரண்டு நரை முடி இருப்பது போல் அவளுக்கும் இப்போது இருக்குமா?' என்னென்னவோ கேள்விகள் எல்லாம் அவனுக்குள் எழ ஆரம்பித்தன.

இது காயத்ரிக்கு தெரிந்தால்...? உடல் நடுங்கியது. மறைக்க வேண்டும் என்று இல்லை. அவள் சென்சிட்டிவ் டைப் என்பதால்தானே. இது மட்டும் தெரிந்தால் அவள் மனதில் இருந்து நிச்சயம் நான் எடுத்து வீசப்படுவேன். அவளுக்குத் தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு தற்காலிக முடிவுக்கு அவன் வரும்போது மீண்டும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

அனுமதி பெல்லை அழுத்தி விட்டு,

''எஸ் கமீன்'' என்றான் காட்டமாக.

தயக்கமாக உள்ளே பியூன் நுழைந்தான்.

''நான்தான் யாரும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு சொல்லியிருந்தேனே... ராமன் சொன்னாரா, இல்லையா?''

மிகவும் தயங்கிய பியூன் பவ்யமாக...

''அவர் சொன்னார் சார். உங்களைப் பார்க்க ஒரு பொண்ணு வந்திருக்காங்க சார்.''



''பொண்ணுன்ன உடனே நான் இருக்கேன்னு சொல்லிட்டியா?''

கோபமாக உறுமினான்.

''நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன் சார். ஆனா அவங்க பிடிவாதமா உங்களப் பார்க்கணுங்கறாங்க.''

''யாரு? விசிட்டிங் கார்டு வாங்கி வந்தியா?''

''இல்ல சார். ஆனா மெட்ராசுக்கு மாத்தலாயிருக்கிற அசிஸ்டெண்ட் கலெக்டர்னு சொன்னாங்க சார்.''

''வாட்... அசிஸ்டெண்ட் கலெக்டரா?''

''ஆமா சார். அதான் விசிட்டிங் கார்டு கூட வாங்கிட்டு வராம ஓடி வந்தேன்.''

எரிப்பது போல் பார்த்தான். ''எதுக்கு முக்கியத்துவம் குடுக்கணுமோ அதுக்குக் குடுக்காதீங்க... சீக்கிரம் கூட்டிகிட்டு வா.''

பியூன் பிடரி தடுமாற வெளியே ஓடினான். சில வினாடிகளுக்குப் பின் பியூன் கதவைத் திறந்து மரியாதை செய்ய உள்ளே நுழைந்தாள், ஜனனி.

வாய் விட்டு அலறி... சடார் என சேர் விட்டு எழுந்தான்.

## 3

கஞ்சி போட்ட உயர் ரக காட்டன் புடவை... மிடுக்கைக் கொடுக்கும் கண்ணாடி இரண்டு கைகளிலும் ஒவ்வொரு வளையல். கழுத்தில் சின்னதாக ஒரு செயின்... மேக்கப் இல்லாமல் சாதாரண அழகு தேவதையாக இருந்தாள் ஜனனி.

''என்ன ரகு ஆச்சர்யமா இருக்கா?'' சிரித்தாள். அதே சிரிப்பு. தன் கண்களையே நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தவன்...

''ஜ..ன..னி..யா?'' தடுமாறிக் கேட்டான்.

''எஸ். அதே ஜனனிதான். அந்த 'அதே'வில் லேசான அழுத்தம் தென்பட்டது.

சுதாரித்துக் கொண்டவன், ''உட்காரு ஜனனி. ஓ... ஸாரி உட்காருங்க.''

அவனுக்கு முன்பு போடப்பட்டு இருக்கும் சேரில் அமர்ந்தவள், ''நோ பார்மாலிட்டீஸ். நான் இப்ப கலெக்டரா வரல. உங்க பிரண்டா வந்திருக்கேன்.''

''நீ கலெக்டரா?''

''ஏன் ஆகக் கூடாதா? இல்ல நம்ப முடியலையா?''

''இப்ப என்னால எதையும் நம்ப முடியல.''

''ஓ.கே. மேல மேல உங்களுக்கு டவுட் வரதுக்குள்ள எல்லாத்தையும் நானே கிளியர் பண்ணிடறேன். நம்ம திவாகர் இல்ல... அதான் உங்க கிளாஸ்மெட். அவர தற்செயலா சந்திச்சேன். உங்கள பத்தி விசாரிச்சப்ப அட்ரஸ் கொடுத்தார். பார்க்கக் கூடாதுன்னுதான் நெனச்சேன். ப்ச்... மனசு கேட்கல. நேத்துதான் இங்க ஜாயிண்ட் பண்ணினேன்.''

வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்தவன்... சந்தோஷமும் துக்கமும் கலந்து சிரித்தான்.

''எப்படி ஜனனி இருக்கே?''

''பைன். நீங்க எப்படி?''

''ம்'' தலையசைத்தான். ''வீட்ல எல்லாம் எப்படி இருக்காங்க?''



''பைன். காயத்ரி, மது, மனோல்லாம் எப்படி இருக்காங்க?''

''உனக்கெப்படி...?'' ஆச்சரியப்பட்டான். அதே சமயம் நம்மைப் பற்றி இவ்வளவு விசாரித்து வைத்து இருக்கிறாள். ஆனால் நாம் அவள் செத்தாளா, வாழ்ந்தாளா? என்று தெரியாமல் இருந்து இருக்கின்றோம் என்று வெட்கினான்.

''எல்லாம் எனக்குத் தெரியும்.''

''உன்னோட ஹஸ்பெண்ட் நேம் என்ன? என்ன பண்றார்? குழந்தைங்க எத்தனை?''

''இம்... ம்...'' தடுத்து நிறுத்தியவள், ''ஐய்யய்யோ மின்னல் வேகத்துல இப்படிக் கேட்டா எப்படி பதில் சொல்றது? முதல் கேள்வி என்ன? என்னோட ஹஸ்பெண்ட் நேம் என்ன?''

''ப்ளப்'' உதட்டைப் பிதுக்கி சத்தம் கொடுத்து... தோள் குலுக்கினாள். ''தெரியாது. மிஸ்டர் எக்ஸ் ஆர் வொய் ஆக இருக்கலாம்.''

''என்ன சொல்ற?''

''ஐ'ம் மிஸ் ஜனனி. நாட் மிஸஸ் ஜனனி.''

உள்ளுக்குள் சகலமும் அதிர்ந்தது ரகுவரனுக்கு. 'ஏன் பெண்ணே, உனக்கு இந்த நிலை என்னால்தானா?'

அவன் மனதைப் படித்தது போல் உடனே அவள் பேசத் தொடங்கினாள்.

''உடனே நீங்க ஃபீல் பண்ண வேண்டாம். எனக்குப் பிடிக்கல. சரியா அமையல அதான் காரணம்.''

''சாரிம்மா.''

''எதுக்கு?''

''கேக்கணும்னு தோணிச்சு.''

''நல்லா புரிஞ்சுகிட்டவங்களுக்கு இடையில சாரியும் தேவையில்லை, தேங்கசும் தேவையில்ல.''

பஸ்ஸர் அழுத்தி கூல்டிரிங்ஸ் வரவழைத்துக் கொடுத்தான். இதயத்தில் நெருஞ்சி முள் குத்துவது போன்ற வலி. 'என்னால்தான் இந்தத் தனிமையோ என்ற வேதனை... என்னை சுமந்த உன் இதயம் மற்றொருவனை மறுத்து விட்டதா? ஆனால் நான்... மறந்து விட்டேன். எப்படி... எப்படி? நான் உண்மையாக உன்னைக் காதலிக்கவில்லையா?' தனக்குள்ளாக குழம்பினான்.

''அப்பா அம்மா எப்படி இருக்காங்க?''

''ரெண்டு பேருமே இறந்தாச்சி'' சாதாரணமாகச் சொன்னாள்.

''எப்...போ...?''

''மூணு வருடத்துக்கு முன்னால.''

''இப்ப... நீ...?''

''தனி மரம். என்னோட ஸ்டேடஸ் பார்த்து எத்தனையோ பேர் மேரேஜ் பண்ணிக்க முன் வராங்க. பட், ஐ டோண்ட் லைக்.''

''வொய்?''

''ரகுவ மறக்க முடியல.''

''.......''

''தப்பா எடுத்துக்காதீங்க. உங்கள எதுவும் சொல்லலை. வேண்டாம் ரகு. இத இத்தோட விட்டுடுங்களேன்.''

''ஜனனி... புரியாம பேசாத. உனக்குன்னு ஒரு குடும்பம் வேண்டாமா?''

''வேண்டாம்.''

''இது பிடிவாதம்.''



''இல்ல... பொய்யா வாழ விரும்பல.''

''நோ... வாழணும்னு நெனச்சா கண்டிப்பா வாழலாம்.''

''கல்யாணம் பண்ணிக்கிட்டு புருஷனக் காதலிக்க மனசுக்கு சக்தியில்ல.''

''காதலங்கறது ஒருத்தர் மேல மட்டும்தான் வரும்னு சொல்றது சுத்த ஹம்பக். உன்ன மனசாரக் காதலிச்சேன். உன் கூட வாழணும்னு ஆசைப்பட்டேன். ஆனா அது நடக்கல. கல்யாணம் பண்ணிகிட்டேன். அவளோட அன்பு... அரவணைப்பு... அவளையும் காதலிக்க வச்சிடுச்சி. இட்ஸ் நேச்சர்.''

''ஓகே ரகு.. இத இத்தோட விடுங்க. ரொம்ப நாள் கழிச்சி பார்க்க வந்தா, இப்படி சண்டை போட்டு விரட்டுறீங்களே'' பரிதாபப்படுவது போல் கேட்டதும்...

அதுவரை சிரிக்காமல் சீரியசாக பேசிக் கொண்டிருந்த ரகுவரன்... அவளைப் பார்த்து மென்மையாகக் கண்களை மூடித் திறந்தான்.

''இன்னிக்கு ஆடிட் ஜனனி. உன்ன வீட்டுக்கும் கூட்டிப் போக டயம் இல்ல. சாரிடா'' தாழ்ந்து பேசினான்.

''என்ன சொன்னீங்க... திரும்ப சொல்லுங்க'' அவள் முகத்தில் எதிர்பார்ப்பு மின்னியது.

''டயம் இல்ல. சாரிடா.''

''ரொம்ப நாளாச்சி ரகு. இப்படி 'டா' போட்டு அன்பான வார்த்தையைக் கேட்டு வருடக் கணக்காச்சி.''

''புண்படுத்திட்டேனா?''

''இல்லப்பா'' மறுத்தாள்.

''உங்க வீட்டுக்கு என்னைக் கூட்டிப் போவீங்களா?''

"ஷ்யூர். எப்ப வேணா நீ வரலாம். நாங்க எல்லோரும் உனக்காகக் காத்துக்கிட்டு இருப்போம்."

"உங்க வொய்ப் எப்படி... அழகா?"

"ம்... எனக்கு அழகு.. அவ மனசும் ரொம்ப அழகு."

"நம்ம விஷயம் தெரியுமா?"

நெற்றியைத் தேய்த்தபடி... "இல்ல ஜனனி... தெரியாது."

"ஏன்? சொல்லலையா?"

"அவ சென்சிடிவ் டைப். ஸோ, சொல்லலை."

"தப்பு ரகு. பொண்டாட்டிகிட்ட மறைக்கலாமா?"

சிரித்தபடி எழுந்து, அவள் அருகே வந்து குனிந்தபடி சொன்னான்.

"நான் மறைக்கணும்னு மறைக்கல. அவ மனசு கஷ்டப் படக் கூடாதுன்னுதான். வள்ளுவரே சொல்லியிருக்கார்... தப்பு இல்லை என்கிற பட்சத்தில் பொய் சொல்லலாம்னு."

"சரி. என்னை எப்படி இன்ரடியூஸ் பண்ணப் போறீங்க?"

"ரொம்பத் தெரிஞ்சவங்க, வேண்டப்பட்டவங்க. பிரண் டோட தங்கச்சி..."

"நான் மனோ, மதுவெல்லாம் பார்க்கணுமே?"

"கண்டிப்பா. நாளைக்கு கூட்டிகிட்டுப் போறேன். இப்ப நீ தங்கியிருக்கும் அட்ரஸ் குடு. நானே வந்து பிக்கப் பண்ணிக் கிறேன்."

"ஒகே" தன் விசிட்டிங் கார்டை அவனிடம் கொடுத்து விட்டு, தன் கண்கள் முழுவதும் அவனை ஒரு முறை நிரப்பிப் பார்த்து விட்டு கள்ளமில்லாமல் தலையாட்டிவிட்டு வெளியேறினாள்.



அப்படியே நின்று கொண்டிருந்தான் ரகுவரன். அவள் சென்று ஐந்து நிமிடங்களுக்கு மேலாக ஆகியிருந்தாலும் அவள் விட்டுச் சென்ற வாசனை... வார்த்தை... கள்ளமில்லா சிரிப்பு... அதனுள் ஒளிந்து இருக்கும் சோகம்... எல்லாம் ஒட்டுமொத்தமாக அவனைச் சூழ்ந்து துன்புறுத்தியது.

ஆடிட் தொடங்கிய கொஞ்ச நேரத்தில் ஜனனியும், காயத் ரியும் மறைந்து போனார்கள். வேலையில் மும்முரமானான். ஜனனியை நீண்ட நாள் கழித்துப் பார்த்த மகிழ்ச்சியில் வேலை எக்ஸ்பிரசாக ஓடியது.

இரவு பதினோரு மணி...

நல்ல குளிர். கடும் இருட்டு... எல்லோரும் உறக்கத்தோடு உறவாடும் வேளையில் இரண்டு தலையணைகளை ஒன்றன் மேல் ஒன்றாகப் போட்டு தலை வைத்து இருந்தான். இரண்டு கைகளையும் மடித்து தலைக்குக் கீழ் கொடுத்து மெதுவாக சுழன்று கொண்டு இருக்கும் பேனை வெறித்துப் பார்த்தபடி இருந்தான். அவன் பரந்த மார்பில் மது உறங்கிக் கொண்டிருந் தாள்.

புரண்டு படுத்த காயத்ரி, அவன் முட்டியில் தோள் இடித்து... விழித்துப் பார்த்தாள். எந்த சலனமும் இல்லாமல் பேனை வெறிப்பதிலேயே இருந்தான்.

தன் மேல் கால் போட்டு, கழுத்தில் கைகளைக் கட்டிக் கொண்டு படுத்திருந்த மனோவை நாசூக்காக விலக்கி படுக்க வைத்து, மதுவையும் அவன் மார்பில் இருந்து எடுத்து மனோ விற்கு அருகில் படுக்க வைத்து... கம்பளி எடுத்து இருவருக் கும் ஒன்றாக சேர்த்து போர்த்தி விட்டாள்.

கதகதப்பான ரகுவரன் மார்பில் உறங்கிய மது மட்டும்... லேசாக சிணுங்கினாள். மெதுவாக அவளைத் தட்டிக் கொடுத்து தலை கோதி தூங்க வைத்து விட்டு ரகுவரன் பக்கம் ஒருக் களித்துத் திரும்பினாள் காயத்ரி.

அவன் தலை தொட்டுத் திருப்பினாள்.

"தூக்கம் வரலையா?"

"இல்ல."

"ஏம்ப்பா... ஆபீஸ்ல ஏதாவது பிரச்சினையா?"

அவளைப் பார்த்து கடமைக்காகச் சிரித்தான்.

"எம்மேல கோபமா? என்னங்க பண்றது? எனக்குத் தெரியாமலே ஒரு பிடிவாத குணத்துக்கு சின்னக் குழந்தையில இருந்தே அடிமையாயிட்டேன்ங்க. பிரச்சினைய சின்னதா எடுத்துக்க முடியல. யார் ஏமாத்தினாலும் தாங்க முடியல. ஒரு தடவை எங்க ஊர்ல 5-ம் வகுப்பு படிக்கும்போது என் சிலேட்டை ஒருவன் எடுத்து வைத்துக் கொண்டு இல்லன்னு பொய் சொன்னதால அந்தப் பையனோட அந்த ஊர்ல இருக்கற வரைக்கும் நான் பேசவே இல்லீங்க. இப்பவும் எங்க அம்மா சொல்லி சிரிப்பாங்க. தயவு செய்து கோபமா எடுத்துக்காதீங்க?" பரிதாபமாகக் கேட்டாள்.

"எதுக்கு இப்ப இதெல்லாம்...?"

"காலையில நான் அப்படிப் பேசினேன்னு..."

"ச்சேச்சே... அப்படி எல்லாம் இல்ல" சொல்லிவிட்டு அவள் புறம் திரும்பி தன் நெஞ்சோடு சேர்த்துக் கொண்டு, "நீ தூங்கு?" என்றான்.

"என்கிட்ட சொல்லக் கூடாத பிரச்சினையா?"

"ஆமாம்" தனக்குள் கூறிக் கொண்டு, "இல்லையே" என்றான்.

"எனக்கு ஏதோ வாங்கிட்டு வர்றதா சொன்னீங்க?" தலை தூக்கி அவன் முகம் பார்த்துக் கேட்டாள்.

"நீதான் எதுவும் வேணான்னு சொல்லிட்டியே?"



"இப்ப கேட்டா கெடைக்குமா?"

"ம்... கண்டிப்பா."

"தப்பா நெனைக்க மாட்டீங்களே?" சந்தேகமாகக் கேட்டாள்.

"இல்லம்மா. சொல்லு."

"எங்கிட்ட நீங்க பொய் சொன்னதில்லதானே...?"

டக்கென்று அவளை விலக்கினான். அவள் கண்களைச் சந்திக்கும்போது 'ஆமான்னு சொல்லுடா' என்று கெஞ்சுவது போல் தோன்றியது. தெளிந்த நீரோடையாக இருக்கும் அவள் மனதில் சொல்லியிருக்கேன்னு சொல்லி எதுக்குக் கல்லெறியணும்?

"உங்கிட்ட நான் பொய் சொன்னதில்ல காயத்ரி" என்று பொய் சொன்னான்.

"நன்றிப்பா."

"எதுக்கு?"

"புருஷன் பொண்டாட்டிக்குள்ள எந்த ஒளிவு மறைவும் இருக்கக் கூடாது. நாம ரெண்டு பேரும் அப்படி இருப்பது ரொம்ப சந்தோஷமா இருக்கு."

"என்னமோ கேக்கணும்னு சொன்னியே..." பேச்சை மாற்றினான்.

அவன் தலைமுடியைக் கலைத்தபடி...

"உங்க மனசும், உடம்பும் எனக்கு மட்டும்தானே சொந்தம்?"

"என்ன கேள்வி இது? ஆபாசமா இல்ல" வெடித்தான்.

"இல்ல... அது... வந்து..." வார்த்தைகளை மென்று விழுங்கினாள்.

"இந்த உடம்பு உனக்கு மட்டும்தான் சொந்தம். மனசு... மனசு...?"

தடுமாறினான்.

"ஏன் தயங்குறீங்க?"

"அது... அது உனக்கு சொந்தம். என்னோட அம்மா, அப்பாவுக்கு சொந்தம். நம்ம மனோ மதுவிற்கு சொந்தம். அப்புறம்..." என்று நீட்டிக் கொண்டு போனவனை...

"ம் போதும்" என்று நிப்பாட்டினாள்.

"நீங்க தடுமாறவும் என்னமோ ஏதோ என்று பயந்துட்டேன். அப்படி ஏதாவது ஒன்னுன்னா நான் உயிரோடவே இருக்க மாட்டேன்.

"பைத்தியம் என்ன பேசற? காம் டவுன்" என்று அவளை மேலும் இறுக்கிக் கொண்டான். காற்று அவர்களுக்கு இடையே புக கஷ்டப்பட்டது.

"ஏதாவது பாடு காயத்ரி."

"........"

"ஏய்..."

"ம்..."

"பாடேன்."

"ஏன் தினமும் நானேதான் பாடணுமா?" ஒரு சேஞ்சுக்கு நீங்க பாடக் கூடாதா?"

"நானா? பாட்றதா?" மெலிதாகச் சிரித்தான்.

"பாடுங்களேன்."

"நா பாடினா என்ன நடக்கும் தெரியுமா? தூங்குற வால் ரெண்டும் எந்திரிச்சிடும். நீயும் காதப் பொத்திக்குவ..."



"இல்ல.. பாடுங்க."

"நல்லா இருக்காது."

அவன் வாய் அருகே தன் காதைக் கொண்டு சென்றவள்... "இம் எனக்கு மட்டும் கேக்கற மாதிரி பாடுங்க." அவன் உடல் சிலிர்க்க கிசுகிசுத்தாள். மெலிதாக செருமினான்.

**"இஞ்சி இடுப்பழகி**

**மஞ்ச செவப்பழகி**

**கள்ளச் சிரிப்பழகி**

**மறக்கமனம் கூடுதில்லையே... ஏய்."**

"இம் பாடுங்க...! ஏன் நிப்பாட்டிட்டீங்க..."

"காத்துதான் வருது" அவன் கூறி முடிக்கும் முன் கலகலவெனச் சிரித்தாள். அவனும் சேர்ந்து கெண்டான். சிரித்து சிரித்து கண்கள் குளமாயின. அவன் மார்பில் தன் கைகளால் செல்லமாகக் குத்தி, காதைப் பிடித்து, மூக்கைக் கடித்து... "ஆனாலும் நீங்க ரொம்ப மோசம்" என்று சிணுங்கிக் கொண்டே அவன் தோளிலேயே உறங்கிப் போனாள் காயத்ரி.

"நாளைக்கு இதே சந்தோசம் இவளுக்கு இருக்குமா?" அவனுக்கே சந்தேகமாக இருந்தது. ஜனனியை தன் வீட்டிற்கு அழைத்து வருவதால் அமைதிப் பூங்காவாக இருக்கும் இந்த வீடு... பூகம்பம் நடந்த சுடுகாடு போல் மாறப் போவதை அப்போது அவன் அறிந்திருக்கவில்லை.

# 4

காலை எழுந்தது முதல் அலுவலகம் செல்லும் வரை காயத்ரியுடன் ஜனனி பற்றி ஓதியிருந்தான் ரகுவரன். தன்

காதலி என்பதை மட்டும் மறைத்து, கலெக்டர், நல்லவள், நண்பனின் தங்கை என்றெல்லாம் சொல்லி... ஜனனி பற்றி காயத்ரி மனதில் நல்ல அபிப்ராயத்தை உருவாக்கி இருந்தான். இதுக்கு முன்ன இவங்களப் பத்தி ஒரு வார்த்தை கூட எனக்கு சொல்லவே இல்லையே என்று அவள் சந்தேகமாகக் கேட்டபோது, எனக்கு நேற்று அவங்களைப் பார்க்கும்போது தான் ஞாபகமே வந்தது, என்று பச்சையாகப் புளுகினான். 4 மணிக்கெல்லாம் அழைத்து வருவேன். சாப்பாட்ல அசத்திடனும் என்று கட்டளையிட்டான்.

காயத்ரிக்கு மிகுந்த ஆச்சர்யம். இதுவரை இப்படி ஒரு வருக்காக... பார்த்துப் பார்த்து சமைக்கவோ, கவனிக்கவோ முன்பே அவன் சொன்னதில்லை. காயத்ரி வருபவர்களை உபசரிப்பதில் அவார்ட் வாங்குபவள் என்று தெரிந்தும், இவ்வளவு அக்கரை எடுத்துக் கொண்டது, எல்லாம் நன்றாகச் செய்ய வேண்டுமே என்ற நடுக்கத்தையும் கொடுத்தது.

நான்கு மணிக்கு எல்லாம் வீட்டை சுத்தப்படுத்தி ஒரு தெய்வீகத் தன்மையை வரவழைத்தது. சாயங்காலத்திற்கான டிபனை முடித்து... இரவு சாப்பாட்டிற்கு தேவையான எல்லா வற்றையும் தயார் செய்து... காயத்ரி வாசலுக்கு வரவும், ஜனனியோடு ரகுவரன் வந்து இறங்கவும் சரியாக இருந்தது.

''நல்ல ஜோடி'' சனித்தனமான அவள் மனமே பிரச்சினைக்கு ஆரம்ப சுழி போட்டது.

வாயிற்படியில் நின்று கொண்டிருந்தவள், ஜனனியைப் பார்த்து மெலிதாக முறுவலித்தாள்.

காரை நிறுத்திவிட்டு பின்னாலேயே வந்த ரகுவரன்.

''ஷீ ஈஸ் மை லவ்லி ஒய்ப் காயத்ரி'' என்று கை காட்டினான்.

காயத்ரியின் கிராமத்துத்தனமும், கலக்கம் இல்லாத அந்த முகமும் நடுவகிட்டின் ஆரம்பத்தில் அழுத்தமாக வைக்கப்



பட்டிருந்த குங்குமத்தின் கம்பீரமும், ஜனனிக்குள் என்னவோ செய்தது. அது மரியாதையா? இல்லை பிடிப்பா? இல்லை பயமா? என்று தெரியவில்லை. அவளையும் அறியாமல் கை கூப்பினாள்.

''வணக்கம்'' குரலில் குயில் கூவியது.

''என்னங்க எனக்கு போய் வணக்கம் சொல்லிகிட்டு. நீங்க அஸிஸ்டன்ட் கலெக்டர்.''

''அதனால் பயமா?'' கண்களைச் சிமிட்டினாள்.

''அவர் கூட எட்டு வருசம் குடித்தனம் பண்ணியிருக்கேன். நான் பயப்படறதா? ஒரு மரியாதை தாங்க'' என்றபடி ரகுவரனைப் பார்த்துச் சிரித்தாள்.

''என்ன ரகுவரன். காயத்ரி இப்படிச் சொல்றா? நீங்க என்ன புலியா? சிங்கமா?'' என்றபடி... காயத்ரியின் கூந்தல் அழகைப் பாராட்டியபடி விரைவில் காயத்ரியோடு ஒன்றி விட்டாள்.

இரண்டு பெண்கள் இருக்கும் இடத்தில் இருவருக்கும் அறிமுகமான ஆடவன் தனியாக மாட்டிக் கொண்டால் வாய் திறக்க முடியாமல் தர்ம சங்கடத்திற்கு ஆளாக வேண்டிய நிலை வரும் என்பதை அப்போதுதான் ரகுவரன் உணர்ந்தான்.

''உள்ள வாங்க'' அழைத்தாள் காயத்ரி.

சுற்றும் முற்றும் பார்த்தபடி உள்ளே நுழைந்தாள் ஜனனி. பார்வையில் தேடல் இருந்தது.

''மதுவும், மனோவும் எங்க?'' கேட்டாள்.

''பக்கத்து வீட்டு பாட்டி, அம்மன் கோவில் வரைக்கும் கூட்டிகிட்டுப் போறேன்னு போயிருக்காங்க. இப்ப வந்திடு வாங்க. நீங்க வாங்க'' காயத்ரி சொல்லிக் கொண்டே... சமையல் அறைக்குள் நுழைந்தாள். இரண்டு நிமிடங்களில் அவளின் கைகளில் இரண்டு தண்ணீர் டம்ளர்கள் இருந்தது.

''இந்தாங்க.''

சோபாவில் ரகுவரனுக்கு கொஞ்சம் தள்ளி அமர்ந்திருந்த ஜனனியிடம் நீட்டினாள்.

''என்ன இது?''

''பச்ச தண்ணி.''

காயத்ரியின் கண்களைக் குறும்பாகச் சந்தித்து...

''வெறும் தண்ணிதானா? காபி... சாப்பாடு எல்லாம் கிடையாதா?''

பளீர் என சிரித்தாள் காயத்ரி.

''எல்லாம் உண்டு. ஆனா முதல்ல தண்ணி தரணும். தாகம் வந்திருக்கலாம். இல்லாமல் கூட இருக்கலாம். அவங்க ளோட வயிறு குளிர்ந்தால் மனசும் குளிரும்.

ரகுவரனுக்குப் பெருமிதமாக இருந்தது. 'எப்படி என் மனைவி?' என்று கேட்காமல் கேட்டான் ஜனனியிடம்.

அவளும் பெருமிதமாகவே அவனைப் பார்த்தாள்.

''டிபன் கொண்டு வரேன்...'' காயத்ரி உள்ளே திரும் பியதும்,

''சூப்பர் ரகு.''

''எது?''

''உங்க செலக்ஷன்.''

''உண்மையா?''

''எஸ். உங்க மேல சத்தியமா? உங்க வொய்ப் மட்டும் இன்னும் கொஞ்சம் படிச்சிருந்தாங்கன்னா... இன்னும் நல்லா இருக்கும்.''



''மெதுவா பேசு... அவ காதுல விழுந்திடப் போகுது. ஏற்கனவே படிக்கலங்கற குறை இருக்கு. நீயும் சொல்லிட்டா போச்சி... அவ்வளவுதான்.''

டிபன் முடிந்தது.

வித விதமாகச் செய்து வைத்து, சாப்பிடவும் முடியாமல், அதை விடவும் மனம் இல்லாமல் ஜனனி தவிக்கும்படி வைத் தாள். வீட்டைப் பற்றி வீட்டில் உள்ள பொருட்கள் பற்றி... சொல்லப் போனால் ஒவ்வொரு செங்கல் பற்றி புராணமும் அவர்கள் சொல்லி முடிக்கும்போது மணி கிட்டத்தட்ட ஆறு ஆகப் போகிறேன் என்று சொன்னது.

''என்னங்க?''

''என்ன காயத்ரி.''

''அந்த காமாட்சி பாட்டி வந்தாச்சான்னு பாருங்க... புள்ளைங்கள இன்னும் காணோமே.''

சரி என்று கிளம்பிய ரகுவரனின் தலை... காம்பவுண்ட் சுவர் தாண்டியதும்,

''நான் ஒன்னு உங்களக் கேக்கட்டா?'' தயக்கமாக கேட் டாள் காயத்ரி.

''ஓ.எஸ். கேளேன்.''

''எங்கள பத்தியே கேக்கறீங்களே... உங்களப்பத்தி எதுவும் சொல்ல மாட்டேங்கிறீங்களே?''

''ரகுக்கு எல்லாமே தெரியுமே... உங்கிட்ட சொல்லலையா?''

''இல்லை'' உதட்டைப் பிதுக்கினாள்.'' அவர் எதுவும் எங் கிட்டச் சொல்லலை.''

''நான் சொல்றேன். என்னைப் பத்தி என்ன தெரிஞ்சுக் கணும்?''

''ஏன் நீங்க கல்யாணம் பண்ணிக்கல?''

''புடிக்கல காயத்ரி.''

''ஏன் புடிக்கல?''

''தெரியல.''

''ஆம்பிளைங்களையே புடிக்காதா.''

''அப்படி எல்லாம் ஒன்னும் இல்ல.''

''பின்ன ஏன் பண்ணிக்கல... நீங்க படிக்கிறச்ச யாரை யாவது காதலிச்சீங்களா?''

சாதாரணமாக பதில் சொல்லிக் கொண்டிருந்த ஜனனிக்கு சுருக்கென்று தைத்தது.

''கல்யாணம் பண்ணிக்கிடலனா? காதல்னுதான் அர்த்தமா?''

''நான் அப்படிச் சொல்ல வரலை. இப்ப பொண்ணுங் களுக்குக் கல்யாணம் ஆகலனா ஒன்று வரதட்சணை கொடுக்க முடியாம இருக்கணும், இல்ல. அழகில்லாம இருக்கணும். இல்லை ஆம்பிளைங்களையே புடிக்காம கல்யாணம் வேணாங் கணும். இல்ல காதல் தோல்வியா இருக்கணும். அதான் கேட்டேன்.''

''அப்படித்தான் வச்சிக்கோயேன்.''

''உங்கள விட்டுட்டு வேற ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிகிட்டாரா?''

''ஆமா'' தலையாட்டினாள்.

''நீங்க ஏன் தடுக்கல?'' கோபமானாள். அவளுக்கே இழைத்த துரோகம் போல் வார்த்தையில் சூடு தெறித்தது.

காயத்ரியின் கைகளை ஆதரவோடு பற்றினாள் ஜனனி.

''கோபப்படாத... எனக்குத்தான் புடிக்கல... நான் தான் வில கிட்டேன்.''

''ஏன்?''

''ரெண்டு குடும்பத்திலேயும் பிரச்சினை.''



''தப்பா எடுத்துக்காதீங்க. பிரச்சினைன்னா காதலிக்கக் கூடாது. எனக்குக் காதல் புடிக்காது. ஆனா காதலிச்சவங்க பிரியக் கூடாதுன்னு நெனப்பேன். அவரத் திரும்பிப் பார்க் கலையா?''

''பாக்கல.''

''நாங்க பாக்குறோம். பண்ணிக்கிறீங்களா?''

மவுனமாக ஜனனி சிரித்தாள்.

''பெண்ணுரிமை பத்தியும், தனியா வாழறது பத்தியும்... பேசறதுக்கும் எழுதறதுக்கும்தான் நல்லா இருக்கு. நடை முறைக்கு ஒத்து வராதுங்க. உங்களுக்குன்னு ஒரு குடும்பம் வேணும். கொழந்தைங்க வேணும்.''

''ஏன் பெத்தவங்க... அண்ணா தம்பி எல்லாம் காப்பாத்த மாட்டாங்களா?''

''காப்பாத்துவாங்க... ஆனா புருஷன் புரிஞ்சிகிட்ட மாதி ரியோ, இல்ல பொண்டாட்டி புரிஞ்சிகிட்ட மாதிரியோ... புரிஞ்சுக்குவாங்களா? புரிஞ்சிகிடலாம். எங்கனாவது ஒரு இடத்துல அது நடக்கலாம். நம்மோட அந்தரங்கத்த அம்மா அப்பா கிட்ட சொல்ல முடியாது. அண்ணன், அண்ணிகிட்ட சொல்ல முடியாது.''

''ஆனா ப்ரண்டு கிட்ட மனசு விட்டுப் பேசலாமே.''

''அந்த ப்ரண்டு கட்டிகிட்டவனா இருந்தா இன்னும் சவு கரியமா இருக்குமே.''

உதட்டை சுழித்து பிதுக்கி விட்டு... ''எனக்கு அப்படித் தோணல.''

''நாங்க பாக்றோமே...'' இறங்கி வந்து கெஞ்சினாள். ''ஏனோ தெரியல. நீங்க தனியாக இருக்கிறது கஷ்டமாக இருக்கு.''

அப்போது.

மதுவோடும், மனோவோடும் ஆர்ப்பாட்டமாகச் சிரித்த படி உள்ளே நுழைந்தான் ரகுவரன்.

வெள்ளை நிற பைஜாமாவில் மனோவும், பனியன் ஸ்கர்ட்டில் மதுவும் அவனின் கைகளை ஆளுக்கு ஒன்றாகப் பிடித்திருந்தனர். அவர்களைப் பார்த்ததுமே ஜனனியின் மனம் துள்ளியது. ..ப்பா... என்ன கொழு கொழு குழந்தைகள். இரண்டுமே நல்ல நிறம். புசுபுசு கன்னம். கொவ்வை... இதழ்... அடர்ந்த முடிகள்... துருதுருவென அலையும் பார்வை.

மனோவை விட மதுக்குட்டி குண்டாக இருந்தாள். அவளின் தோள்பட்டைக்கு வரும் உயரம். ரகுவரன்தான் அறிமுகப் படுத்தி வைத்தான்.

''இந்த ஆன்ட்டி பேர் ஜனனி.''

மனோ முன் வந்து.

''ஹாய் ஆன்ட்டி.''

அவனின் தளிர்க்கரம் அவள் மேல் பட்டதுமே... ஜில் லென்று ஒரு உணர்வு தாக்கியது. அப்படியே அவனைப் பிடித்து இழுத்து அணைத்துக் கொண்டாள்.

''என்ன படிக்கிற...?''

''பர்ஸ்ட் ஆன்ட்டி.''

''ஸ்கூல்ல யார் பர்ஸ்ட்.''

''நான் இல்ல... ரஞ்சித்தான்.''

''நல்லா படிச்சாதானேடா கண்ணா... டாடி போல ஆபீஸ ராகலாம்.''

''படிப்பேன். டாடி போல வருவேன்...''

மனோவின் இரு கன்னங்களையும் மாறி மாறி தன் இதழ்களால் ஒற்றி எடுத்தாள். தன் ஹேண்ட் பேக்கில் இருந்து இரண்டு பைவ் ஸ்டாரை எடுத்து அவனிடம் நீட்டினாள்.



உடனே காயத்ரியைப் பார்த்தவன்... அவள் கண் அசைவு கிடைத்ததும் இரண்டையும் வாங்கி...

''தேங்க்ஸ் ஆன்ட்டி'' என்று சொன்னதோடு நிற்காமல் அவள் இரு கன்னங்களிலும் கிஸ் அடித்து...

''ஏன் இதுக்கு முன்னெல்லாம் நீங்க எங்க வீட்டுக்கு வரல.''

''அட்ரஸ் தெரியாதுடா.''

''இப்போ தெரியுமில்ல...''

''இம்...''

''அப்போ தெனமும் வர்றீங்களா?''

''உனக்காக வரேன்.''

அப்போது தான் சோபாவில் உட்கார்ந்தபடி... அவளையே மிரள மிரளப் பார்த்துக் கொண்டிருந்த மதுவை கவனித்தாள் ஜனனி. அவளுக்கு அருகே வந்து... மண்டியிட்டாள். ரோஜாவை குவித்து முகமாக்கியது போல் இருந்த மதுவின் முகத்தை கைகளால் தாங்கி... அவள் உச்சி கேசத்தை கலைத்து முன் நெற்றியில் முத்தமிட்டு ''சாரிடா... உன்ன கவனிக்கவே இல்ல... உனக்கும் சாக்லெட் வாங்கி வந்திருக்கேன்'' என்று அவளிடம் சாக்லெட்டை திணித்துவிட்டு...

''ஆன்ட்டி'' மதுவின் குரலில் மழலை ஆங்கிலம் குதித்து விளையாடியது.

''என்ன கண்ணம்மா.''

''ஜ... ம்.. மது உங்க நேம் ஜ...ன்னி தானே?'' குரல் திக்கியது.

''ஜன்னி இல்ல ஜனனி ஆன்ட்டி,'' மனோ திருத்தினான்.

''அவ என்னைக் காய்ச்சல்னு சொன்னா கூட கவலை இல்லை.'' ஜனனி சொல்லி முடிக்கும் முன் அவள் நெஞ்சில் வந்து மோதினாள், மது. மெத்தென்று அவள் மேல் மது

விழுந்தபோது... ஏதோ ஒரு இனம் புரியாத பாசம் அவ ளுக்குள் அலை மோதியது. அதுவரை அணை கட்டியிருந்த உணர்வுகள் பொங்கி எழுந்தது. தாயாக அவள் ஆகவில்லை என்றாலும், தாய்மை எனும் பண்பு அவளுக்குள் உருகி ஓடியது. எனக்கும் குடும்பம்... குழந்தை கட்டாயம் வேண் டுமா?... ஏன் இதுவே என் குடும்பமாக இருக்கக் கூடாது. இடம் பெருள் தெரியாமல் எண்ணங்கள் அங்கிங்கென கட்டுண்டு பறந்தது.

''நேரமாச்சி ஜனனி... போகலாமா?'' ரகுவரன் கேட்டான்.

''போலாமே...'' மனமில்லாமல் சம்மதித்தாள்.

''நைட் போறீங்களே... வீட்ல யார் இருக்கா? யாரும் இல்லை என்றால் இங்கேயே தங்கிட்டு... காலையில போங் களேன்'' காயத்ரி கேட்டதும்.

ஜனனி ரகுவரனைப் பார்த்தாள்.

''இல்ல காயத்ரி... அவ அண்ணன் தேடுவான். நான் கொண்டு போய் விட்டுட்றேன்.''

''யார் உங்க அண்ணா? என்ன பண்றார்?'' நோண்டினாள் காயத்ரி.

''அவர்... அவர் ஜனனி.'' தடுமாற ஆரம்பித்ததும் ரகுவரன் தானே பதில் சொன்னான்.

''நா திவாகர்ன்னு அடிக்கடி சொல்வேன்ல... அவன்தான்.''

''என்ன பண்றார்?''

''ஷோரூம் ஒருத்தன் ஓப்பன் பண்ணியிருக்கான்னு நான் கொஞ்ச நாளைக்கு முன்னால சொன்னேன்ல. அந்த திவா கர்தான்.''

திருப்தியாக தலையாட்டி வழியனுப்பி வைத்தாள், காயத்ரி.

குழந்தைகள் இரண்டும் கார் மறையும் வரை கைகளை ஆட்டிக் கொண்டிருந்தன.



அவள் கொடுத்த இனிப்பும், முத்தமும், அவைகளுக்கு மிகவும் பிடித்துப்போய் ''ஜனனி ஆன்ட்டி நல்லவங்கதானே?''

இரண்டும் தனியாக உட்கார்ந்து ஜனனியைப் பற்றி டிஸ்கஸ் பண்ணும் அளவிற்கு உள்ளம் நிறைந்திருந்தாள், அவள்.

காரில் போகும்பேது மவுனமாக சாலையைப் பார்த்து ஓட்டிக் கொண்டிருந்த ரகுவரனைப் பார்த்து, ஜனனிதான் மெலிதாக செருமிவிட்டு,

''ரகு... எதுக்கு இந்த மவுனம்? எனக்கென்னமோ பயமா இருக்கு. ஒரு பொய்ய சொல்லிவிட்டு அதுக்காக எவ்வளவு பொய் சொல்ல வேண்டியிருக்கு...'' என்னைக்காவது திவாகர அவ பாக்ற சந்தர்ப்பம் வந்திச்சின்னா... நம்ம அவ கேவலமா நெனைக்க மாட்டா?''

''நீ ஈஸியா சொல்லிட்ட ஜனனி. ஆனா அவ மூஞ்சப் பாக்றப்ப... உண்மையச் சொல்லி அவளக் கஷ்டப்படுத்தணு மான்னு தோணுது...''

''சொன்னா சொல்லி முடிக்கிற வரைக்கும்தான் கஷ்டம், சொல்லாமப் போனா வாழ்நாள் முழுக்கக் கஷ்டம்.''

''என்னை நீ இன்னும் லவ் பண்றியா?''

''எஸ்.'' கொஞ்சம் கூடத் தயங்காமல் கூறினாள்.

ஒன்றும் பேசத் தோன்றாமல் அவளையே விக்கித்துப் பார்த்தான்.

''ப்ரண்ட லவ் பண்ணக் கூடாதா ரகு? ரகுவ மறக்க முடி யலன்னு சொன்னதுக்குக் காரணம்... உங்களையே கல்யாணம் பண்ணிக்கணுங்கற எண்ணம் இல்ல. எனக்கு வரப் போறவன் உங்களைப் போல இருக்கணும். ஜென்டில் மேனா இருக் கணுங்கற எதிர்பார்ப்புதான். ஜனனியோட ரகு என்னைக்கோ செத்தாச்சி. நான் பேசறது பழகுறது எல்லாம் காயத்ரியோட புருஷங்கிட்ட... என்னோட நல்ல நண்பர்கிட்ட... தட்ஸ் ஆல்.''

''அப்புறம்... ஏன் ஜனனி மேரேஜ் பண்ணிக்க மாட்டேங்கற...?''

''பண்ணி வைக்க யாரும் இல்ல.''

''ஏன் நான் இல்ல... காயத்ரி இல்ல... நாளைக்கே உனக்கு ஏத்த மாதிரிப் பார்க்கிறேன்.''

''உங்களுக்கும் காயத்ரிக்கும் புடிச்சிருந்தா போதும். உங்க ரெண்டு பேரையும் பார்க்கும்போது எனக்கும் கல்யாணம் பண்ணிக்கனும்னு தோணுது.''

''அடிச்சக்கை... நிஜம்மாவா?''

''எஸ்...'' தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்...

''வாவ்... வெக்கப்படுறியா? அசிஸ்டென்ட் கலெக்டரா இருந்தாலும் களை வெட்டிகிட்டு இருந்தாலும்... இந்த விஷயத்துல ஒரே மாதிரிதானா?''

''ச்சீய்...'' சிணுங்கினாள். மிகவும் சந்தோஷமாகப் பார்த்தான் ரகுவரன்.

''நீ நல்லா இருக்கனும் ஜனனி. அப்பா... அம்மா... இல்லன்னா என்ன? நாங்க இருக்கோம். தீபாவளி, பொங்கல், தலைப் பிரசவம் எல்லாம் நான் பாக்றேன்...''

கண்களில் ஜனனிக்கு நீர் திரண்டது.

''எனக்கு தாயா மாறப்போறீங்களா ரகு?''

''இல்லடா... தாயுமானவனா இருக்கேன். உனக்கு மனசுக்குப் புடிச்ச நல்ல தோழனா இருப்பேன். என்னோட வீட்ட, நீ பொறந்த வீடா நெனைச்சிக்கோ.''

''தேங்க்யூ ரகு'' உணர்ச்சி மேலிட அவன் கைகளைத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''நல்லா புரிஞ்சவங்ககிட்ட தோ தேங்க்ஸ்... நோ சாரி...'' தோள் குலுக்கி இரண்டு நாட்களுக்குப் பிறகு மனம் விட்டுச் சிரித்தான்.



அதே நேரம்.

திவாகர் ரகுவரன் வீட்டு காலிங்பெல்லில் கை வைத்தான்.

'அதற்குள்ளா விட்டுட்டு வந்திட்டார்? கார் சத்தம் கேக்கலையே?' யோசனையோடு கதவைத் திறந்து பார்த்தாள் காயத்ரி.

கலைந்து போய் இருந்த கேசம்... கண்ணாடி தாங்கியிருக்கும் கண்கள், ஓரளவு கலர், கையில் ஒரு ரிஸ்ட் வாட்ச்... மடித்து விடப்பட்ட புல் ஹாண்ட், சிரித்தபடி நின்றிருந்தான் திவாகர்.

''நீங்க யாரு?''

''ரகு இருக்கானா? நான் திவாகர்ன்னு சொல்லுங்க...''

''திவாகரா?'' கேள்விக்குறியோடு அவனைப் பார்த்தாள்.

''ஆமாம் என்னப் பத்தி ரகு சொல்லியிருக்கானா?''

''உள்ள வாங்க...'' அவள் அழைத்ததும்...

ஹாலில் உள்ள சோபாவிற்கு தன் உடம்பை சாய்வாகக் கெடுத்தான்.

''ரகு இல்லையா சிஸ்டர்?''

''உங்க தங்கையோட உங்க வீட்டுக்குத்தானே போய் இருக்கார்?''

''என்னோட தங்கையா? என் வீட்டுக்கா?'' உலகமகா ஜோக்கே கேட்டது போல் சிரித்தான்.

கொஞ்சம் மிரட்சியோடு அவனைப் பார்த்தாள்.

''எனக்கு அக்கா, தங்கை யாருமே இல்லையே... நானே அவனைப் பார்த்து ரொம்ப நாள் ஆகுது... பாத்துட்டு, பேசிட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''ஜ...ன...னி..!''

''அ...'' ஆச்சரியப்பட்டான். ''ஜனனி பத்தி ரகு உங்ககிட்ட சொல்லியிருக்கானா?'' சுதாரித்துக் கொண்டவன்.

''சொல்லியிருக்கார்'' என்றாள்.

சன்னமாக குரல் வெளிவந்தது. ''எல்லாம்?''

''ம்.''

''வித்தியாசமான காதலர்கள்'' எதார்த்தமாக அவனையும் அறியாமல் வார்த்தைகள் வெளியிட்டான்.

நெஞ்சுக்குள் கைவிட்டு இதயத்தை யாரோ பிடித்து இழுத்து... கிள்ளி விடுவது போல் துடித்தாள். சில வினாடிகளில் பல விதமான ரசாயன மற்றங்களுக்கு ஆளானது காயத்ரியின் முகம்.

## 5

மணி பத்தை நெருங்கும்போது ரகுவரன் திரும்பியிருந் தான். காயத்ரியை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று அவனே கேட்டைத் திறந்து காரைப் போர்டிகோவில் நிறுத்தி னான். கார் சாவியை உருவிக் கொண்டு கேட்டை சாத்தி பூட்டை ஒரு முறை இழுத்துப் பார்த்துவிட்டு உள்ளே நுழைந் தான். மெலிதான மங்கலான வெளிச்சம் ஹாலில் நிரம்பி யிருந்தது.

''காயத்ரி எங்க போயிட்டா? அதுவும் ராத்திரி நேரம்?'' கேள்விகள் எழ ஆரம்பித்தன.

''காயத்ரி.''

''..........''

''காயத்ரி...'' இவன் குரலுக்கு எவ்வித பதிலும் வரவில்லை.



''எங்க போனா?'' பெட்ரூமை எட்டிப் பார்த்தான்.

குழந்தைகளை அணைத்தபடி உறங்குவது போல் நடித்துக் கொண்டு இருந்தாள் காயத்ரி. கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தோடியது.

''ரொம்ப அசதிபோல இருக்கு. நல்லா தூங்கறா... தூங் கட்டும்'' தனக்குத் தானே பேசியபடி கதவைத் தாளிட்டான். தாளிடும் போதே பசி வயிற்றைக் கிள்ளியது. காயத்ரியை எழுப்பலாமா? ச்சேச்சே... காலையில் இருந்து அடுப்படியி லேயே வெந்திருப்பா... தூங்கட்டும்.

தனியாக போட்டு சாப்பிடத் தோன்றாமல் இரண்டு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டு வந்து, அவள் அருகே படுத்தான்.

பொங்கி வந்த அழுகையை மறைத்துக் கொண்டு திரும் பாமல் கொஞ்சம் கூட சத்தமில்லாமல் பொறுமிக் கொண்டிருந் தாள்.

''இத்தனை நாளா பன்னிரெண்டு மணிக்கு வந்தாலும் எழுந்திரி... எழுந்திரின்னு எழுப்பி சாப்பிட்டுப் படுப்பவர் இன்னைக்கு ஏன் படுத்துட்டேன்னு ஒரு வார்த்தை கேட்க முடியல... அவளோட ஹோட்டல் போயிட்டு வந்திருப்பார். மனசும் வயிறும் நெறஞ்சி திம்முன்னு ஆயிருக்கும்'' கண்ணீர் கரகரவென கழன்றது. சத்தம் இல்லாமல் அடக்கிக் கொண் டிருந்தாள்.

அவள் இடுப்பில் கை போட்டபடி ஒருக்களித்தான் ரகுவரன்.

அவன் கை விழுந்ததும் நெருப்புத் துண்டு பட்டது போல் உடல் முழுவதும் சுள்ளென்று எரிந்தது.

கையை எடுத்துப் போட்டு விடலாம். ஆனால் அசிங்கம்.

கொஞ்ச நேரத்தில் ரகுவிடம் இருந்து மெலிதான மூச்சிறைக் கும் சத்தம் கேட்டது.

ஆழ்ந்து தூங்கிப் போயிருந்தான். கொட்ட கொட்ட இவள் விழித்திருந்தாள். மனம் தாறுமாறாகத் தடம் போட்டது. உயர்ந்த இடத்தில் இருந்தவன் அதளபாதாளத்திற்கு போய் இருந்தான். 'நா மூச்சு விட்றத கூட எண்ணி இவர்கிட்ட சொல்லி இருக்கேன். ஆனா இவ்வளவு பெரிய விசயத்த எனக்கு பொய் பேசுனா புடிக்காதுன்னு தெரிஞ்சிருந்தும் சொல்லலைனா சர்தான் போடி உனக்காக நான் உண்மை பேசணுமான்னு தானே அர்த்தம்.'

ஜுரம் வந்தது போல் கை, கால் நடுங்க ஆரம்பித்தன.

இரவு மூன்று மணிக்கு மேல் கொஞ்சம் கண் அயர்ந்தாள். கனவிலும், ஜனனியும், ரகுவரனும் டுயட் பாடுவது போல் தான் இருந்தது.

விடிந்தது கூடத் தெரியாமல் காயத்ரி உறங்கிக் கொண்டிருந்தாள். உறக்கம் என்பதைவிட எழ முடியாமல் உடல் படுத்தியது. முகம் அழுது அழுது வீங்கியிருந்தது. கண்களில் கடுமையான சிகப்பு. காய்ச்சல் டிகிரி கணக்கில் எகிற எகிற சன்னமான முனங்கல் அவளிடம் இருந்து வெளிப்பட்டது. அடித்துப் போட்டது போல் வலியில் உயிர் போனது. எழ முடியாமல் தடுமாறினாள்.

கைகளைப் படுக்கை மேல் படர விட்டாள். குழந்தைகள் இன்னும் எழவில்லை என்று தெரிந்தது. அவர் எழுந்திட்டாரா? அவனை நினைக்கும் போதே பந்தாக அடி வயிற்றில் ஏதோ ஒரு பய உணர்வு சுருண்டு மேல் எழும்பியது. 'என்ன பாத்து பாத்து கவனிச்சிகிட்டது எல்லாம் ஒரேடியா இப்படி ஏமாத்தத்தானா? நான் என்ன துரோகம் பண்ணினேன் இவருக்கு?'

மனதளவில் மிகவும் தளர்ந்து போய் இருந்தாள். அதீத நம்பிக்கை, ஏமாற்றத்தைத் தாங்காது. அவன் சிரித்துப் பேசியது அன்பாக அரவணைத்தது எல்லாமே ஓடி ஒளிந்து அவன்



மறைத்த உண்மைகள் மட்டுமே அவள் முன் விஸ்வரூபம் எடுத்தது. எழ முயற்சித்தாள், உடல் ஒத்துழைக்க மறுத்தது.

அவளுடைய சின்னச் சின்ன அசைவுகளில் ரகுவரன்தான் எழுந்தான். மணி பார்த்தபோது ஐந்தரை என்று காட்டியது.

இமைகள் கேள்விக்கான முடிச்சைப் போட காயத்ரியைப் பார்த்தான். இந்த நேரத்திற்கு இவள் எழுந்து விடுவாளே? சந்தேகமாக அவள் போர்வையை விலக்கினான்.

காயத்ரியின் முகம் வீங்கி உதடு காய்ந்து முனகும் சத்தம் துல்லியமாகக் கேட்டதும், பதற்றம் தொற்றிக் கொள்ள கைலியை ஒரு முறை இறுக்கமாகக் கட்டிக் கொண்டு அவளுக்கு அருகில் நெருங்கி நெற்றி, கழுத்து, மார்பு, பின் கழுத்து எல்லாவற்றையும் தொட்டுப் பார்த்தான். ஹீட்டரைத் தொட்டது போல் சூடு. வெப்பம் தாளாமல் கைகளை உதறிக் கொண்டவன்...

''காயத்ரி...''

''காயத்ரி...'' தலையை தூக்கி தன் மடியில் சாய்த்துக் கொண்டான்.

''காயத்ரி...''

''இம்...'' இமைகளை திறக்க சிரமப்பட்டாள்.

''காயத்ரி... என்னப் பாரும்மா, உடம்பு இப்படிக் கொதிக்குது?'' தடுமாறினான்.

''ப...ர..வாயில்லை கொஞ்...ச நே...ரத்....துல சரியாயிடும்'' வார்த்தைகள் வெளி வராமல் தடுமாறியது.

''டாக்டருக்கு போன் பண்றேன்.'' அவளை மெதுவாகக் கிடத்திவிட்டு போன் நோக்கி நடக்காமல் ஓடினான்.

டாக்டர் வருவதற்குள் கேஸ் பற்ற வைத்து ஒரு கிண்ணத்தில் சுடு தண்ணி வைத்து இறக்கினான். டவலை அதில்

நனைத்து இறுக்கிப் பிழிந்து அவள் கழுத்து முகம் துடைத்தான்.

அவள் எழ எத்தனிக்கும்போது தடுத்து நிறுத்தி "நீ படு. ரெஸ்ட் எடு நான் பார்த்துக்கிறேன்."

"இல்லை சரியாயிடும்..."

"படுங்றன்ல..." குரலை உயர்த்தினான். "இப்படி அனலாக் கொதிக்குது. என்னை எழுப்ப வேண்டியது தானே? நான் என்ன செத்தா போய்ட்டேன்?"

"இப்ப... எதுக்கு இப்படிப் பேசுறீங்க?" மிரண்டாள்.

"பின்ன என்ன உனக்கு எதுவும் ஒண்ணுன்னா?" மேலே பேசாம மவுனமாக அவளையே பார்த்தான்.

மெல்ல கட்டிலில் நகர்ந்து அவன் பார்வையைத் தவிர்த்து கீழே இறங்கினாள் காயத்ரி. சேலையைச் சரி செய்து கொண்டு குழந்தைகளை எழுப்பினாள்.

தினமும் முரண்டு பிடிக்கும் குழந்தைகள் இன்று வெகு அமைதியாக எழுந்து அவள் பேஸ்ட் வைத்துக் கொடுத்த பிரஷ்ஷோடு நகர்ந்தன.

தடுத்தும் அவள் கேட்காமல் எழுந்து வேலையை கவனித்தது அவனுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை.

"நேத்து ராத்திரி ஏன் என்ன எழுப்பல?"

கோபமாகப் பார்த்தான். "இப்ப டாக்டர் வந்திடுவார். போய் படு."

"என்னைப் படுக்க வைக்கிறதுல உங்களுக்கு என்ன அவ்வளவு ஆசை?"

"காயத்ரி..."

"சும்மாதான் கேட்டேன். சாப்டீங்களா?"



"சாப்ட்டேன்."

"எங்க?"

"ஜனனி வீட்ல."

"அவங்க அண்ணா இருந்தாரா?"

"ஓ... இருந்தானே."

"ஜனனிதான் இங்க வந்துட்டாங்களே... சமச்சது யாரு?"

"ஏய் என்ன நீ கேள்வி மேல கேள்வி கேக்குற? திவாகர் தான் சமைச்சான். அவன் நல்லா சமைப்பான். ரசம் வைக்கிறதுல ஸ்பெஷலிஸ்ட் தெரியுமா? சாப்டாலே ஆச்சின்னு உடும்பா பிடிச்சிகிட்டான்" பொய் சொல்கிறேம் என்று காயத்ரிக்குத் தெரியாது என்ற உணர்வில் சரளமாகப் பேசினான் ரகுவரன்.

காயத்ரியின் முகம் சிவந்தது. கோபத்தை வெளிக்காட்டாமல் பற்களைக் கடித்துக் கொண்டாள். ரத்த அழுத்தம் அதிகரித்தது.

டாக்டரின் கார் ஹாரன் கேட்டது.

வெளியே சென்று அழைத்து வந்தான். வந்தவர் "ஒன்றும் இல்லை டென்ஷன்" என்று கூறி... வந்ததற்கு ஒரு இன்ஜக்ஷன் போட்டு விட்டு நகர்ந்தார்.

மதுவும், மனோவும் காயத்ரியைக் கலவரமாகப் பார்த்தார்கள். "மம்மிக்கு என்னாச்சி?" கேட்டதும்,

"மனோ இங்கே வா" ரகு அழைத்ததும் அவன் அருகில் ஓடினான்.

"மம்மியை டிஸ்டர்ப் பண்ணாத..."

"எதுக்கு என் குழந்தையை எங்கிட்ட இருந்து பிரிக்கறீங்க?" விலுக்கென்று நிமிர்ந்தான் ரகுவரன்.

"உனக்குப் பைத்தியம் புடிச்சி போச்சா? என்னாச்சி? ஏன் இப்படிக் கத்தற?"

''ஆமாம்பா... எனக்கு பைத்தியம்தான். மண்ட கொழம்பிப் போய் இருக்கு. மனசும் கொழம்பிப் போய் இருக்கு. புருஷன் ராமன்னு நம்புனேன்ல... நான் பைத்தியம்தான். பொய்யே சொன்னதில்லன்னு நம்புனேன்ல நான் பைத்தியம்தான். இத்தன நாளா நான் பேசினப்ப இனிச்சது... இப்ப கத்தறேனா?''

''இப்ப என்னாச்சி? ஒன்றும் இல்லாத விஷயத்தைப் பெரி சாக்குற?''

''எதுங்க ஒன்னுமே இல்லாத விஷயம்? நம்பிக்க துரோ கமா?'' வெடித்தாள். உடல் மேலும் கொதிக்க ஆரம்பித்தது. பிரஷ்ஷர் கிடுகிடுவென உயர்ந்தது. கழுத்து நரம்புகள் புடைத்தது.

அவள் கைகளைப் பற்ற வந்தான். வெடுக்கென உதறி விட்டாள்.

''இங்க பாரு எனக்குக் கோபம் வராது. வந்தா என்ன நடக்கும்னு தெரியாது?'' உறுமினான்.

அவனின் கோபம் அவளுக்குள் பயத்தையும், சிலிர்ப் பையும் உண்டாக்கினாலும் சண்டையிடுவது என்றே எதிர்த்து நின்றாள்.

''கோபம்தான் வராது... ஆனா பொய் பேச வரும்... நல்லா நடிக்க வரும் இல்ல?''

''மொட்டத் தலைக்கும், மொழங்காலுக்கும் முடிச்சிப் போடாத'' பற்கள் அரைபட்டன.

''நான் முடிச்சி போடல... போட்டது நீங்க. அத அப்படியே நம்புனம் பாரு... என்ன செருப்பால அடிக்கணும்.''

''அடிச்சிக்கோ தனியா போய் அடிச்சிக்கோ எங்கண்ணு முன்னால பண்ணாத'' வெடித்தான்.

காயத்ரிக்கு அழுகை பீறிட்டது. குழந்தைகள் இரண்டும் பீதியோடு சோபா பக்கமாக ஒதுங்கிக் கொண்டன.



''ஏங்க நா அப்படி என்ன துரோகம் பண்ணிட்டேன்? எதுக்கு இப்படி எரிஞ்சு விழுறீங்க?''

''காயத்ரி ப்ளீஸ். உங்கிட்ட என்னைக்காவது கோபமா பேசினேனா? காலையில் இருந்து நீதான் சரியா நடந்துக்கல...'' சமாதானம் பண்ணும் நோக்கில் ஆதரவாக அவள் அருகே வந்தான்.

வெறி கொண்டவள் போல் கத்தினாள் காயத்ரி ''கிட்ட வராதீங்க.''

''காயத்ரி உனக்கு ஒன்னுமில்லையே, ஏன் இப்படி கிறுக்குத் தனமா நடந்துக்குற?'' அவனை ஆக்ரோஷமாய் பார்த்தாள். 'ஏமாந்து விட்டோம்' என்ற வெறுப்பு அவள் கண்களில் மின்னியது.

''நா கிறுக்குத்தனமாகத்தான் நடந்துக்கிறேன். அப்படி இருக்கட்டும். ஆனா நான் கேட்கறதுக்கு மட்டும் மறைக்காம உண்மையை சொல்லுங்க?''

''என்ன உண்மை? கேளு...'' அப்போது கூட அவனுக்கு ஜனனி பற்றித் தான் கேட்கப் போகிறாள் என்ற உறுத்தல் வரவில்லை. இரண்டு நாட்களாக இருந்த மனப் போராட்டம் கூட தற்போது விலகியது போல் உணர்ந்திருந்தான். ஆனால் இப்போது தன் பேச்சை மதிக்கவில்லை என்ற வெறுப்பு. எதிர்த்துப் பேசுகிறாள், அதுவும் ஒன்றுமே இல்லாத விசயத் திற்கு மல்லு கட்டுகிறாள் என்று காயத்ரி மேல் கோபம் தான் வந்தது. தான் ஆண் என்ற ஈகோ மெல்ல அவனுக்கு எட்டிப் பார்த்தது. காயத்ரியை எதிரியாகப் பார்க்கத் தூண்டியது.

''சொல்லு என்ன கேக்கணும்?''

''ஜனனி யாரு?''

துணுக்குற்றான் ''ஜனனியா?''

''ஆமா ஜனனிதான்''

''தெரிந்து போயிற்றா? அதற்குள்ளா? யார் வந்து சொல்லியிருப்பார்கள்? விசயம் தெரிந்துதான் வெடிக்கிறாளா?'' யோசனையோடு அவளைப் பார்த்ததும்.

காயத்ரியே பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

''நேத்து ராத்திரி உங்க ப்ரண்ட் திவாகர் வந்திருந்தார். அவர் தங்கை ஜனனியைத் தேடிகிட்டு'' அந்தத் தங்கையில் அழுத்தம் இருந்தது.

''தி...வா...க...ரா?'' வாய் உலர்ந்தது.

'படுபாவி காரியத்தக் கெடுத்துட்டியேடா... பொத்தி பொத்தி வச்சத இப்படிப் போட்டு ஒடச்சிட்டியே...' மனதுக்குள் புழுங்கினான். தலை தானாகக் கவிழ்ந்தது. மனைவியிடம் மன்னிப்புக் கேட்க ஆயத்தமானான்.

''சாரி காயத்ரி... ரியலி சோ சாரி.''

''தப்ப பண்ணிட்டு சாரி கேட்டுட்டாப் போதுமா?''

''என்ன பண்ணனும் காயத்ரி?''

''டைவர்ஸ் பண்ணனும்'' சலனமில்லாமல் சொன்னாள்.

''காயத்ரீ...'' குரல் உச்ச ஸ்தானத்திற்குப் போயிற்று...

''.......''

''வேண்டாம்மா. நீ பேசறது விபரீத முடிவு. ஜனனிய காதலிச்சேன். உண்மைதான். நீ தெரிஞ்சா கஷ்டப்படுவேங்கறதாலதான் நான் சொல்லலை. நீ ஃபீல் பண்ணக் கூடாதுங்கறதாலதான் நான் சொல்லலை. ப்ளீஸ் பிலிவ் மீ. எங்களுக்குள்ள எதுவும் கெடையாது. லவ்வ மறந்து எத்தனையோ வருசங்களாகுது.''

''நக்கலா?''. நமுட்டாக, அலட்சியமாகச் சிரித்தாள்.

''இல்லம்மா இது சத்தியம்.''



''நான் நம்பத் தயாரா இல்ல. என்ன மதிச்சா, என்னோட எண்ணங்களுக்கு மதிப்பு கொடுத்திருந்தா, இத நீங்க என்னைக்கோ சொல்லியிருக்கணும். கொஞ்சம் நம்ம கல்யாண நாளை நெனைச்சிப் பாருங்க...''

ஏதேதோ குழப்பங்கள் சூழ பீதியோடு அவளை உற்றுப் பார்த்தான் அவன். மனக் கண்ணுக்குள் முதலிரவு தெரிய ஆரம்பித்தது.

மெத்தை மேல் தூவப்பட்டு இருந்த ரோஜாவையும், மல்லிகையும் ஒன்று விடாமல் பொறுக்கி, டீபாய் மேல் வைத்துக் கொண்டிருந்த ரகுவரன், கதவு தாளிடும் சத்தம் கேட்டுத் திரும்பினான். பட்டுச் சேலை சரசரக்க பால் செம்போடு நின்றிருந்தாள் காயத்ரி.

கைகளைத் தட்டி விட்டபடி அவள் அருகே வந்து... தலை குனிந்து பூமியை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தவளை நெருங்கி... மென்மையாக முகம் நிமிர்த்தினான். அவள் அவனைப் பார்க்காமல், வெட்கம் பிடுங்க இமைகளை இறக்கிக் கொண்டாள்.

''வா'' பால் செம்பை வாங்கிக் கொண்டு அவளைக் கட்டிலுக்கு அழைத்து வந்தான்.

''உட்கார்'' கைகாட்டினான்.

''விழுந்து கும்பிடணும்'' முனகினாள்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்... உட்கார்.''

நுனியில்... முள்ளின் மேல் அமர்வது போல் அமர்ந்தாள்.

அவளுக்குப் பக்கத்தில் ரகுவரன் மெத்தையில் சம்மணம் இட்டு அமர்ந்தான்.

''உனக்கு விருப்பம்னா உன்னோட கைய நான் தொடலாமா?''

ஒன்றும் பேசாமல் தலை கவிழ்ந்து இருந்தாள்.

அவள் கையை எடுத்து, ரேகை பார்ப்பவன் போல் பார்த்து தன் கையையும் அவள் உள்ளங்கையோடு ஒட்ட வைத்தான்.

''உன்னோட கழுத்துல தாலி கட்றவரை உன்னை யாருன்னே எனக்குத் தெரியாது. போட்டோ பார்த்தேன். பிடிச்சிப் போச்சு. உன்னோட குணம் எப்படின்னு எனக்குத் தெரியாது. எது புடிக்கும் எது புடிக்காதுன்னும் தெரியாது. அதனால மனசு விட்டுப் பேசினா, நாளைக்கு நமக்குள்ள எந்தப் பிரச்சினையும் வராது.''

விழிகளை உயர்த்தினாள். ''ஒரு நாள் பேசிட்டா... முழுசா புரிஞ்சுக்க முடியுமா?''

மெலிதாகச் சிரித்தான்.

''ஓரளவுக்குத் தெரிஞ்சிக்கலாம் இல்ல...''

''ம்'' தலையாட்டினாள். முதலில் அவளே தொடங்கினாள். ''என்னைப் பற்றி சொல்லட்டுமா?''

''சொல்லு...'' சந்தோஷமாகத் தலையாட்டினான்.

''நான் பத்தாவது வரைக்கும்தான் படிச்சிருக்கேன். நெறைய படிக்கணும்னு ஆசை, ஆனா குடும்ப சூழ்நிலை, வசதியில்லாததனால படிக்க முடியலை. நான் ரொம்பவும் நல்ல பொண்ணு இல்ல. சின்னச் சின்ன தப்பு பண்ணியிருக்கேன்.''

''தப்புன்னா... கொலையா? கொள்ளையா?''

''அய்யய்யோ அப்படி எல்லாம் இல்ல...'' பதறினாள். அப்பாவித்தனம் அப்பட்டமாக வெளிப்பட்டது.

''சும்மா கேட்டேன். சொல்லு...'' அவள் உள்ளங்கையில் கோலம் போட்டான்.

''பிடிவாதம் ஜாஸ்தி, அடிக்கடி சுள்ளுன்னு கோபம் வரும். எனக்கு சொந்தமானதுன்னு தெரிஞ்சா, அத அடுத்தவங்க



தொடக்கூடாதுன்னு நெனப்பேன். அப்படி ஒரு குணம் எனக்கு அடுத்தவங்களுக்கு சொந்தமான எதுவும் எங்கிட்ட இருக்கக் கூடாதுன்னும் தோணும். எதுவும் புதுசா இருக்கணும்னு தோணும். காய்கறி கூட எனக்குப் பழசு புடிக்காது'' அவள் சொல்லச் சொல்ல ரகுவரன் தனக்குள் கணக்குப் போட ஆரம்பித்தான்.

'கடவுளே... இவகிட்ட மனசு விட்டுப் பேசணும்னு நினைச்சா? இவ இப்படி பொசசிவ் டைப்பா? ஜனனியைப் பற்றி நான் சொன்னா... இவ எப்படி எடுத்துக் கொள்வாளோ தெரியலையே... கிராமத்துப் பொண்ணு டக்குன்னு ஏதாவது ஒரு முடிவுக்கு வந்து விட்டால். வேண்டாம். ஜனனியைப் பற்றி மட்டும் இப்போதைக்கு இவகிட்ட பேச வேண்டாம். முழுவதும் புரிந்து கொண்டு இதை இவள் எப்படி எடுத்துக் கொள்வாள் என்று தெரிந்த பிறகுதான், சமயம் பார்த்துத்தான் சொல்ல வேண்டும்'' இப்படி அவன் நினைத்து முடிப்பதற்குள்...

காயத்ரி தான் பிறந்ததில் இருந்து ஓடையில் குளித்தது முதல் ஆடு மாடுகளைத் துரத்தியது... ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போது ஒருவன் காதல் கடிதம் கொடுத்தது, அதை அப்பா அம்மாவிடம் காட்டி இரண்டு நாள் காய்ச்சலில் படுத்தது... குளிர் காலங்களில் முகத்தையும், கை கால்களையும் தொட்டு துடைத்துக் கொண்டு குளிப்பது போல் தண்ணீரை மொண்டு ஊற்றி அம்மாவை ஏமாற்றியது... அது தெரிந்து அம்மா துரத்தியபோது தாத்தா வீட்டில் ஓடி ஒளிந்தது முதற்கொண்டு... எல்லாவற்றையும் ஒப்பித்தாள். மூச்சு விட்டதை அவள் எண்ணவில்லை. அதனால் அதைத் தவிர சொத்தைப் பல் முதல் சொந்த பந்தத்தை எல்லாம் சொல்லி முடித்தாள்.

அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான். எல்லாவற்றையும் தன் கணவனிடம் சொல்லி விட்டோம் என்ற திருப்தி அவள் முகத்தில் ஜொலித்தது. மங்கிய வெளிச்சத்தில் அழகாகவே தெரிந்தாள். பவுடர் கூடத் தேவையில்லா

கிராமத்து அழகு... அலைபாயும் அவள் கரிய விழிகள் அவனை ஆர்வத்தோடு பார்த்தன.

இவள் மிகவும் நல்லவள், கள்ளம் கபடம் இல்லாத அப்பாவி, கறந்த பாலைவிடத் தூய்மையானவள். ஏகப்பட்ட கனவுகளோடு வந்திருக்கும் இவளிடம் காதலைப் பற்றி சொல்லி கற்பனைகளை அனல் விட்டுப் பொசுக்க வேண்டுமா? நான் மனதால் வேறொரு பெண்ணைத் தீண்டியவன் என்று தெரிந்தால் இவள் நிச்சயம் தாங்க மாட்டாள். உயிர் இல்லாத பொருட்களிடம் இவள் உரிமையை தனக்கு மட்டும் என்ற சொந்தத்தை எதிர்பார்க்கும்போது, என்னிடம் எதிர்பார்ப்பு மிகவும் அதிகமாக இருக்கும் இவளுக்கு. உண்மையைப் பேசுகின்றோம் பேர்வழி என்று தெரிந்தே இதயத்தைக் கிள்ளிப் பார்க்கக் கூடாது. ஜனனியின் நினைவை அழிக்க முடியவில்லை என்றாலும் உள்ளத்தின் ஓரத்தில் ஒதுக்கி வைக்க முடிந்தது.

''எனக்குன்னு அந்தரங்கம் ஏதும் இல்லை காயத்ரி.''

சந்தோஷமாக அவனைப் பார்த்தாள், ''நெஜமாவா?''

''ஆமா, சொல்லிக் கொள்வது போல் எதுவும் இல்ல.''

''எனக்கு பிடிச்சவங்க என்கிட்ட எதையும் மறைக்கக் கூடாது. பொய் பேசக் கூடாதுன்னு எதிர்பார்ப்பேன்'' தயக்கமாக தன் கோரிக்கையை வெளியிட்டாள்.

''நான் எதையும் உங்கிட்ட மறைக்கக் கூடாதுன்னு எதிர் பார்க்கிற, அவ்வளவு தானே?''

''ஆமா'' தலையாட்டினாள்.

''அப்ப என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?''

''ரொம்பவும். இன்னும் என்னால நம்ப முடியல... உங்களுக்கு தகுதியானவளான்னு சந்தேகமா இருக்கு.''

''ச்சேச்சே... உன்னை எனக்கு ரொம்பப் புடிச்சிப் போய் தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். மனசு ஒத்துப் போயிட்டா மத்ததெல்லாம் கண்ணுக்குத் தட்டுப்படாது.''



''டோண்ட் வொரி.''

''நான் ஒண்ணு கேக்கட்டா?''

''ஒண்ணென்ன ஓராயிரம் கூடக் கேளு. வாழ்க்கைங்கற நம்மோட வண்டிக்கு நாம ரெண்டு பேருதான் கடையாணி. அதனால சந்தேகமே இருக்கக் கூடாது.''

அவனுடைய தெளிவு அவளுக்குப் பிடித்துப் போயிற்று.

''பூவெல்லாம் எதுக்கு பொறுக்கி டீபாய் மேல வச்சிருக்கீங்க?''

''இதானா...? பூ கசங்கறது எனக்குப் பிடிக்காது. கொஞ்சம் எழுந்து நிக்கிறியா?''

மறுவார்த்தை பேசாமல் எழுந்து நின்றாள்.

அவள் சற்றும் எதிர்பாராத விதமாக குனிந்து அவள் கரங்களைப் பற்றித் தலை தாழ்த்தி வணங்கினான்.

சடார் என நகர்ந்து பதறினாள் காயத்ரி. அவளால் ஜீரணிக்க முடியாத... செயல்.

கவர்ச்சியாகச் சிரித்தபடி நிமிர்ந்தவன் அவளை அருகில் இழுத்தான்.

''பயந்திட்டியா?''

''என்னங்க இது... நீங்க போய்... என் கையப் பிடிச்சு கும்பிட்டிட்டு... நல்லால்ல...'' அழ ஆரம்பித்தாள்.

''ஏய் இப்ப எதுக்கு அழறே? காலம் முழுவதும் என் காலடியில நீ இருக்கப் போற... இன்னைக்கு ஒரு நாள் உனக்கு நான் தலை வணங்கக் கூடாதா?''

''இது... இது... தப்புப்பா.''

''எது? உன்னோட கையத் தொட்டுக் கும்பிட்டதா?''

''ம்.''

''மணவறையில எத்தனத்தடவ நீ என் கால்ல விழுந்திருப்ப.''

''அது சம்பிரதாயம்.''

''எஸ். அது சம்பிரதாயங்கறபோது இதுவும் சம்பிரதாயம் தான். மூனு முடிச்சி போடறதுக்கு அர்த்தம் இருக்கும், மெட்டி போடறதுக்கு அர்த்தம் இருக்கும், அது போலத்தான் இதுவும்.

''இதுக்கு என்ன அர்த்தம் தெரியுமா? காலம் முழுவதும் என்னோட காலடியில நீ இருந்தாலும் என்னோட குடும்பம், அதோட கவுரவம், மரியாதை, மானம் எல்லாத்தையும் உன் காலடியில வைக்கிறேன். அதுக்கு எந்தவிதக் களங்கமும் வராம நீதான் பார்த்துக்கணும்னு அர்த்தம். அதுக்காகத்தான், முதலும், கடைசியுமா உன் முன்னால் தலை தாழ்த்தி வணங்கி உன் காலடில பொறுப்புக்கள சுமத்தறேன்.''

''நீங்க கேட்டுக்கிட்ட பிறகுதான் நான் இதெல்லாம் பார்க்கணுமா?''

''அதுக்கில்ல. இது நமக்குள்ள விஷயம். மணப்பந்தல் லேயே செய்திருந்தால் அடுத்தவங்க முகம் சுளிப்பதை விட பெத்தவங்களே முகம் சுளிப்பாங்க. அதுக்காகத்தான் நான் அப்ப இத செய்யல.''

''ரெண்டு பேரும் சேர்ந்துதானே குடும்பம் நடத்தப் போறோம். இதுல யார் உயர்வு, யார் மட்டம்ங்கற பேச்சு வந்தா பிரச் சினை. நீயில்லாம நான் இல்ல... நான் இல்லாம நீ இல்லங்கற எண்ணம்தான் எனக்குத் தேவை.''

கண்கள் கலங்கிய காயத்ரி, ''நான் ரொம்பக் குடுத்து வச்சவ.''

''யேய்... என்னது குழந்தை மாதிரி அழுதுகிட்டு. ஒருத் தருக்கு ஒருத்தர் உண்மையா இருக்கணும். நான் துரோகம் பண்றதா உன்னோட மனசுக்கு பட்டா, நான் தப்பு பண்ணிட்டா உன்னோட எந்த முடிவுக்கும் நான் கட்டுப்படுவேன். ஆனா நாம பிரியக்கூடாது. ஒரு லட்சிய கணவன் மனைவியா வாழணும்.''



''கண்டிப்பா'' வேகமாக தலையசைத்தாள், காயத்ரி.

கண்களைச் சுழற்றிக் கொண்டு மெலிதான கொட்டாவி அவளிடம் இருந்து வெளிப்பட்டதும்,

''தூங்கு'' அவளை ஒரு குழந்தையாக நினைத்து நெற்றி யில் முத்தமிட்டுத் தூங்க வைத்தான். பின் தூங்காமல், வெகு நேரம் ஆழ்ந்து உறங்கும் காயத்ரியைப் பார்த்துக் கொண் டிருந்தான்.

அது இப்போது கீறல் விழாத கட்டாகாத பிலிம் போல் அவன் மனத்திரையில் ஓடியது.

நிஜத்திற்கு வந்து, நிமிர்ந்து பார்த்தபோது... காயத்ரி அவன் முன்பு இல்லை. சாமான்கள் உருட்டும் சத்தம் கேட்டு சமையல் அறையில் நிலைப்படியை பிடித்தபடி அவள் முதுகையே வெறித்துப் பார்த்தான்.

''காயத்ரி.''

அவளிடம் இருந்து எவ்விதமான பதிலும் இல்லை. கேஸ் பற்ற வைப்பதிலும், தண்ணீர் ஊற்றுவதிலும் மும்முரமாக இருந்தாள்.

''தப்புதான். உன்கிட்ட உண்மைய மறைச்சது தப்புதான். ஆனா அது எனக்காக இல்ல உனக்காக.''

''.....''

''தப்பு பண்ணினா தண்டனை வேணும்.''

''அதுக்கு டைவர்ஸ் பேசற அளவுக்கா போகணும்?''

''நீங்க துரோகம் பண்றதா எனக்குத் தெரிஞ்சா எந்த முடிவுக்கும் நான் வரலாமில்லையா?''

''நான் உனக்குத் துரோகம் பண்ணல.''

''நான் நம்பத் தயாரா இல்ல.''

"எட்டு வருஷம் குடித்தனம் நடத்தின என்னோட வார்த்தையில உனக்கு நம்பிக்கையில்ல... எவனோ சொல்லிட்டுப் போனதுல அவ்வளவு நம்பிக்கை இல்ல?"

"எவனோ சொன்னது பொய்யில்லையே? எட்டு வருஷம் குடித்தனம் நடத்தின நீங்க சொன்னதுதானே பொய்? கல்யாணம் பண்ணிக்கிட்டா பத்தாது, ரெண்டு கொழந்தைங்க பெத்துகிட்டாப் பத்தாது. பொண்டாட்டி மனசப் புரிஞ்சிக்கத் தெரியணும். புரிஞ்ச மாதிரி நடிக்கறவனெல்லாம் ஆம்பளையே இல்ல" கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் வார்த்தைகளைச் சிதற விட்டாள்.

"உனக்காகத்தான், உன்னப் புரிஞ்சிட்டதால்தான் மறச்சேன்."

கோபத்தில் முகம் சிவந்த ரகுவரனின் தன்மானம் எட்டிப் பார்த்து அவனை உசுப்பி விட்டது. 'பொட்டச்சி உனக்கு இவ்வளவு திமிர் இருக்கும்போது ஆம்பள எனக்கென்ன?' அவளை ஆத்திரத்தோடு நெருங்கினான்.

"பளார்" பலத்தை எல்லாம் ஒன்று திரட்டி அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

பொறி கலங்கியது காயத்ரிக்கு. அணைப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்திராத கைகள், முதல் முதலாக தன் கன்னத்தைப் பதம் பார்த்தது அவளுக்குள் எரிமலையைக் கொதிக்கச் செய்தது. சில நிமிடங்களுக்கு கண்களில் பூச்சி பறந்தது. விர்ரென்று தலை சுற்றியது. அவன் விரல்கள் ஐந்தும் அவள் கன்னத்தில் பதிந்து தடம் போட்டுக் கன்னியிருந்தது. 'கை நீட்டும் அளவுக்குத் துணிந்தாயிற்றா? அந்த ஜனனி தானே காரணம். எவளோ ஒருவளுக்காக நான் உதைபட வேண்டுமா? கண்களில் கரகரவென சுரந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு, சினம் கொண்ட பெண் புலியாக அவனைக் கோபத்தோடு ஏறிட்டாள்.

அறை விழுந்த சத்தம் கேட்டு மனோவும், மதுவும் பயத்தோடு ஒன்றை ஒன்று கட்டிக் கொண்டன.



"வர வர இந்த வீட்ல நிம்மதிங்கறதே செத்துப் போச்சி" சத்தமிட்டபடியே வேகமாகப் படியிறங்கி வெளியேறினான் ரகுவரன். மனம் அடித்துக் கொண்டது. அதிகமாகக் கோபப்பட்டு விட்டோமோ? அடித்திருக்கக் கூடாதோ? ஆனால் திரும்ப அவளிடம் இறங்கி வர மனம் இல்லை.

"நிம்மதி போச்சா. நான் போயிட்டா சரியாயிடும். எதையாவது குடிச்சிட்டு அக்கடான்னு கண்ண மூடிக்கிறேன். எல்லாம் சந்தோஷமா இருங்க. நான் சாகணும். அவ்வளவு தானே. எதையாவது பண்ணிக்கிறேன்" அழுகையோடு தடுமாறி தடுமாறி குரல் வெளிவந்தது. அப்படியே சமையல் அறை நிலைப்படியிலேயே சரிந்து உட்கார்ந்தாள்.

மெல்ல மனோ அவள் அருகே வந்தான்.

"மம்மி" அவன் அழுது இருப்பது அவன் பேச்சில் வெளிப்பட்டது.

"மம்மி..." திரும்பவும் அழைத்தான்.

உணர்ச்சி இல்லாமல் திரும்பிப் பார்த்தாள்.

"டாடி அடிச்சிட்டாங்களா?"

"......."

"வலிக்குதா?"

"நான் இனிமே அடம் பண்ண மாட்டேன். மதுவும் பண்ண மாட்டா. நீ அழுவாத."

"....."

"பேசு மம்மி."

".........."

"அடம் பண்ண மாட்டேன்."

மெதுவாய் வாய் திறந்தாள்.

"ஸ்கூலுக்குப் போ."

"மது?"

"அவளுந்தான். வாங்க ரெண்டு பேரும்." இருவரையும் அழைத்து முகம் கழுவி ரகுவரன் சீவி விட்டிருந்த தலையைக் கலைத்து திரும்ப சீவி, பிரட் எடுத்து வைத்து ஸ்கூல் வேனுக்காக காத்திருந்தாள் காயத்ரி. அவளின் அசாத்திய மவுனம் ஏற்கனவே பயந்து போய் இருந்த குழந்தைகளுக்கு இன்னும் கிலியை ஏற்படுத்தியது.

ஸ்கூல் வேன் சத்தம் கேட்டது.

"மனோ, மது கிளம்புங்க."

"மம்மி..." மனோ பார்வையால் மிரண்டு கெஞ்சினான்.

"என்னடா?"

"வாயேன்?"

"எங்க?"

"வா" அவள் கையை இழுத்துக் கொண்டு பூஜை ரூமை நோக்கிப் போனான். மதுவும் கண்களைக் கசக்கிக் கொண்டே பின்னால் போனாள்.

தன் வலது கையை காயத்ரிக்கு நேராக நீட்டினான்.

"சாமி சத்தியமா சாக மாட்டேன்னு என் கையில கிள்ளி சத்தியம் பண்ணு மம்மி."

"கடவுளே" கதறிக் கொண்டு நெஞ்சோடு வாரி அவனை இறுக்கினாள்.

"சொல்லு மம்மி... சாக மாட்டதானே?"

"இல்லடா... உங்க ரெண்டு பேர விட்டுட்டு நான் எப்படிச் சாக முடியும்?"

"சாகப் போறேன்னு டாடிகிட்ட சொன்னதெல்லாம் சும்மாவா?"



"இம்." தலையசைத்தாள்.

சாமி மேல சத்தியம் செய்து விட்டாள். இனி தன் மம்மி சாக மாட்டாள் என்ற அசாத்திய நம்பிக்கையோடு தன் தங்கையின் கைகளைப் பற்றிக் கொண்டு அந்தப் பிஞ்சு, ஸ்கூல் வேனை நோக்கி ராஜநடை போட்டது.

## 6

அந்த உயர்ரக ஆங்கிலப் பள்ளியில் லஞ்ச் டைம். ஆங்காங்கே மர நிழல்களிலும், கிரவுண்டிலும், சின்னதும், பெரிசுமாக கான்வென்ட் குழந்தைகளின் கூட்டம்... வலது கோடியில் குட்டையாக இருந்த ஒரு வேப்பமர நிழலில் மதுவும், மனோவும் உட்கார்ந்து இருந்தார்கள். இருவர் கண்களிலும் நீர்கோத்து இருந்தது.

"அழாத மது" மனோ அவளைப் பாவமாகப் பார்த்தான்.

"எனக்கு அழுகை அழுகையா வருதுடா."

"அழுவாத."

"டாடி ஏன் மம்மிய அடிச்சாரு?"

"தெரியல... சண்ட..."

"ஆமா."

"எனக்கு பயமா இருக்கு."

"எனக்குந்தான். மம்மி சாவப் போறேன்னு கூட சொன்னாங்க தெரியுமா?"

"நீதான் சத்தியம் வாங்கினியே?"

"ஆமா. அப்பவும் பயமா இருக்கு."

452336
6227174.
தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

''மம்மியும், டாடியும் இனிமே பேசிக்கவே மாட்டாங்களா?''

''ஆமா.''

''டாடி கெட்டவரா?''

''ஆமா.''

''மம்மி.''

''அவங்கதான் அழுதாங்களே.''

''மம்மி பாவம் இல்ல.''

''ம்... டாடிகிட்ட மம்மிய அடிக்கக் கூடாதுன்னு சொல்லிட லாம்.''

''ம்.'' மது தலையாட்டினாள்.

மூச்சிரைக்க வேகமாக கிரவுண்ட் சுற்றிக் கொண்டிருந்த மனோவின் கிளாஸ்மெட் தினேஷ் இவர்கள் இருவரையும் பார்த்து இவர்கள் அருகே ஓடி வந்து நின்று மூச்சு வாங்கினான்.

''டேய் மனோ, கிளாசுக்குப் போகல?''

''இல்ல... பெல் ரிங்காகட்டும்.''

''மது ஏன் அழுவுது?'' தினேஷ் கேட்டான்.

''மம்மியும், டாடியும் இன்னைக்கு சண்ட போட்டுக்கிட் டாங்க.''

''டாடி மம்மிய அடிச்சிட்டாங்க'' மனோவின் குரல் கம்மியது.

''அழாதடா மனோ, நீ அழுதா மதுவும் அழுவும்.''

''எனக்கு அழுகை வருதே. மம்மியும், டாடியும் இனிமே பேசிப்பாங்களா?''

''பேச மாட்டாங்க.''

தினேஷ் தெளிவாகச் சொன்னான். பயந்து போய் மது திரும் பவும் சத்தமாக அழ ஆரம்பித்தாள்.



''அழாத மது. என்னோட மம்மி டாடியும் இப்படித்தான் சண்டை போட்டாங்க. தினமும் சண்டை போட்டாங்க. திட்டிப் பாங்க. அப்புறம் கோர்ட்டுக்குப் போயி டைவர்ஸ் வாங்கிடு வாங்க. அப்புறம் பேசவே மாட்டாங்க.''

''ஏன்? டைவர்ஸ்னா என்ன?''

''தெரியல. டைவர்ஸ் வாங்கியாச்சின்னு அவங்கதான் பேசிகிட்டாங்க.''

''டைவர்ஸ்'' மனோவிற்கு எங்கோ அறைந்தது. காலையில் கூட மம்மி இதுபோல் தானே ஏதோ பேசினா!

தினேஷ் மேலும் தொடர்ந்தான்.

''அவங்க சண்டை போட்டதுனால என்னை மம்மிகிட்ட விட்டுட்டாங்க. டாடிய அப்புறம் நான் பார்க்கவே இல்ல. மம்மி யும் பார்க்கக் கூடாதுன்னு சொல்லிட்டா. டாடிய எனக்குப் பார்க்கணும் போல் இருக்கும். அப்பவெல்லாம் மம்மிக்குத் தெரியாம டாடி போட்டோவ நான் பார்த்துப்பேன்.''

மனோ அனிச்சையாக மதுவைப் பிடித்துக் கொண்டான். ''தினேஷ் ஒருத்தனா இருக்கறதனால மம்மிகூட போயிட் டான். நாங்க எப்படி?''

''ஒருத்தர் டாடி கூடவும், ஒருத்தர் மம்மிகூடவும் போவீங்க'' தெரிந்தது போல உண்மையை வெகு எதார்த்தமாக தினேஷ் கூற...

மனோவிற்கும், மதுவிற்கும் அழுகை பீறிட்டது.

'இனிமே மதுவ நான் பார்க்க முடியாதா?'

'மனோவ நான் பார்க்க முடியாதா?'

'மம்மி டாடி பேச மாட்டாங்களா? அவங்க இனிமே சண்டை தான் போடுவாங்களா?'

ஏகப்பட்ட கேள்விகள் அந்த இளம் குருத்துக்களிடம் எழுந்து விடை தெரியாமல் தத்தளித்து... பெற்றவர்கள் இனி

சண்டைதான் போடுவார்கள். பேச மாட்டார்கள், நாம் இரு வரும் தனித்தனியாக போய் விடுவோம் என்று மட்டும் தெளிவாக கணித்து வைத்தன. தினேஷ் வேறு டைவர்ஸ் ஆன பெற்றோர்களின் பையன் என்பதால் எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்லி விட்டான்.

இனிமேல் யார் எழுப்பி விடுவா? யார் டிபன் கொடுப்பா? யார் டிரஸ் பண்ணி விடுவா? யார் ஸ்கூல் அனுப்புவா? குழம்பித் தவித்தன.

பெல் ஒலிக்கும் சத்தம் கேட்டது.

மதுவின் கண்களைத் துடைத்து விட்டு, ''நம்ம டாடியும், மம்மியும் பேசிப்பாங்க வா'' என்று சமாதானம் சொல்லி... அவள் கிளாசில் விட்டு விட்டு தினேசோடு தன் கிளாஸ் ரூமிற்கு மனோ நடந்தான். அவன் நடையில் துடிப்பில்லை, துள்ளல் இல்லை. ஏனோ தானோவென்று சுரணையற்று இருந்தது.

லஞ்ச் ஹவருக்கு பின்னால் நடந்த பாடங்கள் எல்லாம் நினைவை விட்டு நகர்ந்தன. ரகுவரன் காயத்ரியை ஓங்கி அறைந்ததும், 'நான் செத்து விடுகிறேன்' என்று காயத்ரி கதறியது மட்டும் மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்தது.

அவர்கள் காரசாரமாக ஒருவரை ஒருவர் திட்டிக் கொண் டது மட்டும் செவிகளுக்குக் கேட்டது.

காயத்ரிக்காக அவன் மனம் பரிதாபப்பட்டது. 'பாவம் மம்மி. டாடி அடிச்சிட்டாங்க. ரொம்ப வலிக்கும்' அவர்களுக்கு வந்திருக்கும் வலி பற்றி தெரியாமல் மனோ வேறு விதமாக எண்ணி ஒன்றும் தெரியாமல் விழித்தான்.

''இரண்டு நாட்கள் மெல்ல உருண்டோடியது. காயத்ரி யிடமும், ரகுவரனிடமும் எவ்விதமான சமாதானப் போக்கும் தென்படவில்லை. அவர்கள் எதற்காவது பேச்சு எடுத்தால்



அது சண்டையில் போய்த்தான் முடிந்தது. ரகுவரன் இறங்கி வரும்போது காயத்ரி உச்சாணிக் கொம்பில் இருந்தாள். இவள் இறங்கலாம் என்று யோசிக்கும் முன்பே இவன் ஏதாவது ஏடா கூடமாக வார்த்தையை விட்டான். ஒரு சின்ன சந்தேகத்தினால் அந்தக் குடும்பத்தின் ஆணிவேர் ஆட்டம் கண்டது. ஏனோ தானோவென இருவரும் நடந்து கொண் டார்கள். இருவருக்கும் தாங்கள் நடந்து கொள்ளும் விதம் தவறு என்று உறுத்தினாலும் யார் என்று பார்ப்போம் என்ற சவால், ஈகோ அவர்களை இணைய விடாமல் தடுத்தது. இதனால் பாதிக்கப்பட்டது இரண்டு குழந்தைகள் தான்.

விவரமாகப் புரிந்து கொள்ளவும் தெரியாது. என்ன புகைச்சல் என்று தெரிந்து கொள்ளும் வயதும் இல்லை. ஆனாலும் அவைகள் பயந்து நடுங்கின. சாவின் விளிம்பில் இருப்பவன் கூட மனோ, மது போல் பயந்து இருப்பானா என்றால் சந்தேகம் தான். காயத்ரி தன் பாட்டிற்கு சமைத்து வைப்பதும், எதுவும் பேசாமல் ரகுவரன் போட்டு சாப்பிட்டு விட்டுப் போவதும் வழக்கமாகியது. அலைந்து களைத்து வருபவனுக்கு அவள் கையால் ஒரு காபி, ம்கூம், ஒரு புன்சிரிப்பு... அதுவும் இல்லை. சிரிப்பு என்ன விலை என்று கேட்கும் அளவிற்கு மாறியிருந்தாள்.

'எட்டு வருடம் தான் நினைத்ததையே திரும்பிச் சொன்ன காயத்ரியால் இப்படிக்கூட மாற முடியுமா? ஒரு சந்தேகம் குடும்பத்தை இப்படிச் சீரழிக்குமா? ஒரு நல்ல பெண்ணை இந்த அளவிற்கு மாற்றுமா?' குழம்பித் தவித்தான். குழந்தை களைப் பார்ப்பதற்கே பாவமாக இருந்தது.

காலை டிபன் எல்லாம் முடித்து டைனிங் டேபிள் மேல் வைத்து விட்டு கடமைக்காக குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி விட்டு பக்கத்து வீட்டில் புகுந்து கொண்டாலும் சாப்பிட்டு இருப்பாரா? விக்கி இருக்குமா? தண்ணீர் குடித்தாரா? என்று அவன் பின்னாலேயே மனம் சுற்றியது. கார் கிளம்பும் சத்தம்

வந்து தேய்ந்ததும் தன் வீட்டிற்குள் புகுவாள். ஏன் இந்த வீறாப்பு?

வேண்டாம் ஒரு பெண்ணிற்கு. அதுவும் தாயானவளுக்கு இது இருக்கக் கூடாது என்று அவள் மனமே இடித்தாலும், 'ஏன் கூடாது?' தவறு செய்தவர் தலை நிமிர்ந்து வரும்போது நான் ஏன் பணிந்து போக வேண்டும்? தனக்குத்தானே சமா தானமும் சொல்லிக் கொள்ள ஆரம்பித்தாள்.

அன்று ரகுவரனுக்கு சுத்தமாக வேலை ஓடவில்லை. காலையில் தவறே செய்யாத குழந்தைகள் இவன் பொருட்டு... காயத்ரியிடம் பொதீர்... பொதீர்... என அடிபட்டது நிழலாடியது.

பரிந்து கொண்டு போனால் மேலும் அவைகளுக்குத்தான் அடிவிழும். இப்படியே எத்தனை நாட்களுக்கு பொறுத்துப் பொறுத்துப் பார்ப்பது. அதான் எரிமலையாகி விட்டான்.

அடி தாளாமல் மது வீறிட்டதும் அவனால் தாங்க முடிய வில்லை. காயத்ரியின் முடியைக் கொத்தாகப் பற்றினான். மதுவை அவளிடம் இருந்து பிரித்தான்.

'சடார்' என ரகுவரன் முடி பற்றி இழுத்ததும் கால் நுனியில் இருந்து தலைவரை 'சுரீர்' என வலி தெறித்தது.

''என்ன நெனச்சிக்கிட்டு இருக்க? குழந்தைங்க என்ன பண்ணிச்சி?'' கோபமாகக் கத்தினான்.

''நிச்சயமா உங்கள நினைக்கலப்பா...'' வலிக் கொடுமை யிலும் அழுகையோடு பதில் கொடுத்தாள்.

''என்னை ஏன் நீ நெனக்கிற? மனசுல நா இருந்தா இப்படி நடந்துக்குவியா? மொதல்ல பொம்பளையா நடக்க கத் துக்கோ, அப்புறமா புள்ளைய அடிக்கலாம். புருஷன் நடத்தக் கெட்டவனான்னு யோசிக்கலாம்.''

''வார்த்தையை யோசிச்சிப் பேசுங்க... நான் ஒன்னும் எவன் பின்னாடியும் லோலோன்னு அலையல. நீங்கதான்



அந்த ஜனனி பின்னால போறீங்க? அந்த புத்திக் கெட்ட வளும் உங்க பின்னால அலையறா.''

'பளார்' என அறைய தூக்கிய கையைக் கஷ்டப்பட்டு நிறுத்திக் கொண்டான். ''ஜனனியைப் பத்தி இனியும் தப்பா ஏதாவது பேசின... நான் மனுசனா இருக்க மாட்டேன் ஆமா'' உறுமிவிட்டு நகர்ந்தான்.

'வர வர நிம்மதியே இல்லாம போச்சி...' தனக்குத்தானே முனகிக் கொண்டு, டேபிள் நுனியில் உட்கார்ந்தபடி பேப்பர் வெயிட்டரை உருட்டிக் கொண்டு இருந்தான். நல்லவேளை இந்த விவகாரம் எதுவும் ஜனனிக்குத் தெரியாது. மனதுக்கு அது மட்டும் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

அன்று அலுவலகத்தில் வீடு நினைவாகவே இருந்ததால் வேலை ஆமை வேகத்தில் நகர்ந்தது.

அவன் நினைவைக் கலைக்கும் பொருட்டு... காலிங் பெல் ஒலித்தது. சேரில் வந்து அமர்ந்தவன் ''எஸ் கமின்'' என்றான். உள்ளே நுழைந்த ப்யூன் பவ்யமாக...

''ஸார்... சேர்மன் வந்திருக்கார்...''

''சேர்மனா?'' குரலில் பதற்றம் தொற்றிக் காண்டது. வேக மாக எழுந்து கதவைத் திறந்து கொண்டு சேர்மனை வர வேற்றான்.

''வாங்க ஸார்... வாங்க.''

ஆரோக்கியமான ஈறுகள் தெரிய அவனைப் பார்த்து சிரித்த சேர்மன் நெடுநெடுவென வளர்ந்திருந்தார். 50 வயது மதிக்கத்தக்கவராக இருந்தார். முடிகளுக்கு மை அடித்திருந்தது தெரிந்தது. முழுமையாக நரைக்கத் தொடங்கிய மீசை, ஈர்ப்புத் தன்மை உள்ள கண்கள், செவினோடு தொங்கும் ஸ்பெக்ஸ்.

உள்ளே நுழைந்ததும் அவன் தோளில் கை போட்டார்.

"என்ன ரகுவரன் சவுக்கியமா?"

"நல்லா இருக்கேன் ஸார்."

"வார்த்த மட்டும்தான் அதைச் சொல்லுது. முகத்துல சந்தோஷத்தைக் காணோமே?" ஜோசியக்காரர் போல் அவர் பேசியதும்...

"அதெல்லாம் ஒன்னுமில்லை ஸார்... லேசா கோல்ட்."

நிதானமாக சேரில் அமர்ந்தார்.

"ஹாட் ஆர் கோல்ட் ஸார்."

"நோ தேங்க்ஸ்."

அவரைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான் ரகுவரன்.

"ஒரு பத்து நிமிசத்துக்கு யாரையும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு சொல்லிடுப்பா."

கேள்விக்குறியாக அவரைப் பார்த்துக் கொண்டே அவர் கேட்டுக் கொண்டதை உத்தரவாகப் பிறப்பித்தான்.

"சொல்லுப்பா... என்ன பிரச்சினை?"

"நத்திங் ஸார்?" புரியாமல் கூறினான்.

"மை டியர் யங் மேன்... வாழ்க்கையில உன்னோட ஸ்டேஜெல்லாம் தாண்டி வந்தவன் நான். உன்னோட முகத்தப் பார்த்தாலே ஏதோ பிராப்ளம் என்கிறது நல்லாவே தெரியுது. மனசுல வச்சிகிட்டு உள்ளுக்குள்ளேயே நொறுங்கறதுனால யாருக்கு லாபம்? அதுவும் போக நீ டல்லா இருந்தா என் கம்பெனிக்கு தாம்ப்பா நஷ்டம். எந்த ஒரு பீலிங்சுக்கும் ஒரு வடிகால் கண்டிப்பா வேணும். என்னை உன்னோட தகப்பன் போல நெனைச்சிக்கோ ம்... சொல்லு."

மெல்ல உடைய ஆரம்பித்தான் ரகுவரன். தன் மேல் அன்புள்ள அந்தப் பெரிய மனிதர் கேட்கும்போது, உணர்ந்து



தோள் கொடுக்க வரும்போது... அவனையறியாமலேயே காதல் விவகாரத்தில் இருந்து கைப் பிடித்தவள் சண்டை வரை அதீத துக்கத்தோடு விவரித்தான்.

சேர்மன் மெலிதாகச் சிரித்தார்.

"இது எல்லா ஆம்பிளைக்கும் வரக் கூடிய கஷ்டம்தான். நீ மூணு மாசமா இத அனுபவிக்கிற... நா முப்பது வருசமா அனுபவிக்கிறேன்."

"ஸார்."

"எஸ் மை டியர் யங் மேன். நான் பெரிய சேர்மன். சொசைட்டில பெரிய அந்தஸ்து. கை நிறைய சம்பாதிக்கிறேன். ஆனா என்னோட அம்மா கையில இருபது ரூபா கொடுக்க முடியல. அக்கா, தம்பி, தங்கைகிட்ட உரிமையோடு பாசத்தோட பழக முடியல. காரணம் என்னோட பொண்டாட்டி. அவங்களுக்கு நான் ஏதாவது ஹெல்ப் பண்ணிட்டேன்னு தெரிஞ்சாலே பூகம்பம் என்னோட பெட்ரூமில்தான்."

"ஸார்."

"பொறுமையாக் கேளு. வீட்ல நிம்மதியே இல்ல... வீட்டுக்குப் போகணும்னு நெனச்சாலே கடுப்பா இருக்கு. பொண்டாட்டி நல்லா அமைஞ்சவனப் பார்த்தாலே லேசா பொறாமை கூட வருதுப்பா. தண்ணியடிக்கலாம். சேர்மன் தண்ணியடிக்கிறார். அப்படிம்பானுங்க. அது வெளிய தெரிஞ்சா ரொம்ப அசிங்கம். எனக்கில்ல என்னோட ஸ்டேட்டஸ்க்கு. அட்ஜஸ் பண்ணிக்கோ. இல்ல புடிக்கலன்னா ஜனனி சம்மதிச்சா அந்தப் பெண்ணையே மேரேஜ் பண்ணிக்கோ."

"நோ... நோ... ஜனனியை நான் இல்ல ஸார்... காயத்ரியப் பிரியணும்னு எனக்குத் துளி அளவு எண்ணம் கூட இல்ல ஸார்... அவ என்னப் புரிஞ்சிக்க மாட்டேங்கறா... அவ நல்லவ ஸார்... அது எனக்கு நல்லாத் தெரியும். பட் ஜனனி மேட்டர்ல அன்டர்ஸ்டேன்டிங் இல்லாம இருக்கா."

''ஜனனிக்கு இந்த விஷயம் தெரியுமாப்பா?''

''இல்ல ஸார். ஜனனிக்கு இது தெரியக் கூடாது, தெரிஞ்சிக் கவும் நான் விடமாட்டேன். ஏற்கனவே என்னால அவ வாழ்க் கையைத் தொலைச்சிட்டு நிக்கிறது போதும். இது தெரிஞ்சா மனசு நொந்து போய்டுவா... இந்த சமயம் பார்த்து அவ ட்ரையினிங்குக்காக அஸ்ஸாம் போய் இருக்கிறது ஒரு வகையில நல்லதுக்குத்தான் ஸார்.''

''அன்னைக்கு வந்ததோடு சரியா? அதுக்கப்புறம் ஜன்னி வீட்டுக்கு வரலயா?''

வேகமாகத் தலையாட்டி மறுத்தான்.

''இல்ல ஸார். அடுத்த நாளே ட்ரையினிங்குக்கான ஆர்டர் வந்தட்டதுனால மதியமே கிளம்பிப் போயிட்டா. அதனால விசயமும் தெரியாது. தெரிஞ்சிக்கவும் கூடாது. தெரிஞ்சிக்க வும் நான் விட மாட்டேன். பாவம் ஸார் ஜனனி. இன்னமும் அவளைப் புண்படுத்தணுமா?

''மேலும் அவளுக்கு ஒரு திருமணத்தை செஞ்சு பார்க்க ணும்கிற ஆசையில இருக்கேன் ஸார். அவளும் இப்பத்தான் தன் பிடிவாதத்தை குறைச்சு இறங்கி வர்றது போலத் தெரியுது. இந்த நேரத்தில் அவ மகிழ்ச்சியைக் கெடுக்க விரும்பல.''

''ஓகே யங் மேன், போய் காயத்ரிகிட்ட மனசு விட்டுப் பேசு... அவ கோபப்படுவதுல நியாயம் இருக்கு. அதை இவ் வளவு நாளா இழுத்துகிட்டுப் போறதுதான் நல்லா இல்ல. போ... போய்..., பேசு.''

மனதிற்கு ஏதோ தெளிவு கிடைத்தது போல் இருந்தது. சேர்மனின் கைகளைப் பற்றிக் கொண்டு ''தேங்க் யூ ஸார்'' தழுதழுத்தான்.

''உணர்ச்சி வசப்படாத... போ... போய் காயத்ரியை சமாதானப்படுத்து கோ மேன்...'' அவனைத் தள்ளாத குறை யாக வெளியே அனுப்பினார்.



காரை சந்தோஷமாக ஸ்டார்ட் செய்து தன் வீடு நோக்கி செலுத்தினான். மனசுக்குள் லேசாக சந்தோசப் பூச்சு. எப்படி யாவது சமாதானப்படுத்தி விடவேண்டும். யோசனையாகவே காரைச் செலுத்தினான். ரகுவரனின் காரைப் பார்த்ததும், காம்பவுண்ட் சுவர் அருகே நின்றிருந்த காயத்ரி, கேட்டை வேகமாகத் திறந்து விட்டு விட்டு பக்கத்து வீட்டில் போய் புகுந்து கொண்டாள்.

காரில் வரும்போதே அவள் செய்கையை கவனித்தான். லேசாக கோபம் எட்டிப் பார்த்தது. அடக்கிக் கொண்டான். காரை போர்டிகோவில் நிறுத்திவிட்டு, சாவியை உருவி பேண்ட் பாக்கெட்டில் செருகிக் கொண்டு பக்கத்து வீட்டை நோக்கி நடந்தான்.

கதவை இரண்டு முறை தட்டினான்.

பதில் வரவில்லை. உள்ளே நுழைந்தான். ஒரு ஓரமாகப் போடப்பட்டு இருந்த கட்டிலில் குப்புறக் கவிழ்ந்து இருந் தாள் காயத்ரி. தூங்குவது போல் பாசாங்கு செய்தாள்.

சமையல் அறைக்குள் அந்தக் கிழவி எதையோ உருட்டிக் கொண்டிருந்தது. சிறிது நேரம் எதுவும் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

மெல்ல அழைத்தான்.

''காயத்ரி.''

''.......''

''காயத்ரி.''

அவன் அழைப்பது தெரிந்தும் சலனம் இல்லாமல் இருந்தாள். உள்ளே இருந்து வெளிப்பட்ட கிழவி ரகுவரனை அப்போதுதான் பார்த்தவள் போல் அதிசயித்தாள்.

''வாப்பா ரகு... வா... வா... ஒரு வாய் காபி தண்ணி குடிக்கிறியா?'' பேச்சுக்காக கேட்டு வைத்தாள்.

''காயத்ரியை எழுப்புங்க.''

''அசந்து தூங்கறாளே'' காயத்ரிக்கு ஒத்து ஊதினாள்.

''எழுப்புங்க.''

''வேணாந்தம்பி.''

''எழுப்புங்க'' கோபம் வந்தது.

அதுவரை படுத்து இருந்த காயத்ரி சடார் என எழுந்தாள். ''நிம்மதியா ஒரு எடத்துக்கு வந்தா விட மாட்டீங்களே... சொல்லிக் கொண்டே தன் வீடு நோக்கி ரகுவரனை லட்சியம் செய்யாமல் நடந்தாள். பற்றிக் கொண்டு வந்தது, அவனுக்கு. ஒன்றும் பேசாமல் பின்னாலேயே நடந்தான். வீட்டிற்குள் இருவரும் நுழைந்ததும்...

''காயத்ரி.''

அவள் எதுவும் பேசாமல் விடுவிடுவென முற்றத்தை தாண்டிப் போய்க் கொண்டிருந்தாள். வேகமாகப் போய்க் கொண்டிருந்தவளை ஓடிப் போய் நிறுத்தினான்.

''காயத்ரி நான் சொல்றதைக் கேளு.''

''நான் எதையும் கேக்கற மாதிரி இல்ல. கைய விடுங்க.''

''ப்ளீஸ் நான் சொல்றத இந்த ஒரு தடவை மட்டும் கேளு.''

அவள் செவிமடுக்கும் நிலையில் இல்லை. ஆனால் சின்சியராகத் தான் கல்லூரியில் காலடி எடுத்து வைத்ததில் இருந்து ஜனனியைக் காதலித்து பின் அவர்கள் என்ன பேசிக் கொண்டு பிரிந்தார்கள். தற்போது நடந்த சந்திப்புகள் முதல் கொண்டு எல்லாவற்றையும் தெளிவாகச் சொன்னான்.

''மறந்துரு காயத்ரி... ப்ளீஸ்.''

''மறக்கத்தான் போறேன். உங்க காதல இல்லை... உங்கள'' நாக்கில் விஷம் தடவி சொற்களை வீசினாள்.

''நான் சொல்றதக் கேளு காயத்ரி.''

''இத்தன நாளும் கேட்டது போதும்... இனிமேயும் கேட்க நான் தயாரா இல்லை.''



''காயத்ரி.''

''நமக்குள்ள எந்த உறவும் வேண்டாம்.''

''நிஜமாத்தான் சொல்றியா?'' நிதானமாகக் கேட்டான்.

''ஆமா... நான் யோசிச்சிதான் முடிவெடுத்து இருக்கேன்.''

''நல்லா யோசிச்சியா?''

''ஒரு தடவைக்கு பத்து தடவை யோசிச்சாச்சி... எதுவும் வேண்டாம்.''

''உன்னைச் சொல்லி தப்பே இல்லடி. என்னோட புத்திய செருப்பால அடிக்கனும். உன்கிட்ட வந்து தொங்கிட்டு இருக் கன்ல... என்ன சொல்லனும். உனக்கு எல்லாம் நான் லாயக் கில்ல. வரவள பூ மாதிரி பார்த்துக்கனும். பொண்ணு மாதிரி பார்த்துக்கனும்னு நெனச்சி... எல்லாத்துக்கும் உதவி பண்ற ஆம்பள அத்தன பேரும் இளிச்ச வாயனுங்க... சரி இவனுக்கு நம்மள விட்டா கதியில்ல, நாதியில்லன்ற கொழுப்பு. எவன் பொண்டாட்டிய தலையில தூக்கி வச்சிக்கனும்னு கனவு காண்றானோ... அவன் தலையில நல்லா மொளகா அரைச் சிடுவீங்க... ஏன்னா அவந்தான் எதுவும் கேட்கமாட்டானே. சரி சரின்னு தலையாட்டிகிட்டே போயிடுவான்ற நெனப்பு.

''அதே குடிகாரன், கொள்ளைக்காரன், வீதிக்கொரு வப் பாட்டி வச்சிக்கிறவனுக்கு பொண்டாட்டிகிட்ட இருந்து சகல மரியாதையும் கிடைக்கும். ஏன்னு கேட்டாதான் வாய கிழிச் சிடுவானே... குரல் வளைய நெறிச்சிடுவான்ற பயம். எவ்வளவு தப்பு பண்ணாலும் தலையாட்டிகிட்டு நிப்பீங்க. ஆனா என்ன மாதிரி இளிச்சவாயன் எவனாவது மாட்டிக்கிட்டா முழி பிதுங்க வச்சிடுவீங்க. தப்புதான் காயத்ரின்னு உங்ககிட்ட மன்னிப்புக் கேட்க வந்தேன்ல... அது என்னோட தப்புதான்.'' படபடவென பொறிந்து தள்ளினான்.

''உங்களுக்கு வேணுன்னா நீங்க பேசறது சரியா இருக்க லாம். ஆனா இத்தனை வருஷமா நீங்களே உலகம்னு உங்க காலடில கிடந்த எனக்கு இது பெரிய தவறுதான். என்னைக்கு

என்னிடம் மறைக்க நினைச்சிங்களோ? அப்பவே நீங்க களங்கப்பட்டவர்தான். என்னைப் பத்தி உங்களுக்கு ஆரம்ப முதலே தெரியும். இவ்வளவு பெரிய விஷயத்த நான் ஜீரணிக்க முடியல்ல. இன்னும் உங்க உறவை நம்பி ஏத்துக்க முடியல. இப்ப உங்கள ஒன்று கேட்கிறேன். இதே ஒரு நிலை என் முன்னாள் காதலன் ஒருவன் என்று எனக்கு ஏற்பட்டு உங்களுக்குத் தெரிஞ்சிருந்தா ஆம்பிளை நீங்க எப்படி நடந்து இருப்பீங்க. அதை எல்லாம் பேசிப் பிரயோசனமில்லை. வேண் டாம் என்னை விட்டுடுங்க'' கண்ணீரைக் கொட்டினாள்.

அதன் பிறகு நான்கு மணி நேரம் கழித்து கையில் சூட் கேசோடும் இடுப்பில் மதுவோடும், தன் தாய் வீடு நோக்கி பஸ் ஏறியிருந்தாள் காயத்ரி.

டி.வி. டேபிள் மேல் சந்தோஷமாக அவனை விட்டு விலகுவதாக கடிதமெழுதி கையெழுத்துப் போட்டு விட்டு நாலாக மடித்து டி.வி. ஸ்டெப்லைஸர் கீழ் வைத்து இருந்தாள். அது தோட்டத்தில் இருந்து ஜன்னல் வழியாக உள்ளே வந்த காற்றின் உதவியால் படபடத்துக் கொண்டு இருந்தது.

## 7

''நீ பண்றது கொஞ்சம் கூட நல்லால்லம்மா'' தோசைக் கல்லின் அடிப்பாகத்தில் இருந்த கரியைக் கழுவியபடியே தன் மகளைப் பார்த்துச் சொன்னாள் லஷ்மி.

கொஞ்ச நேரம் தாயை முறைத்துப் பார்த்த காயத்ரி. ''என்னைக்கு நீ எனக்கு சப்போட்டா பேசியிருக்க. அவரத் தானே தலையில தூக்கி வச்சிகிட்டு ஆடுவ'' சிடுசிடுத்தாள்.

''புரியாம பேசாத காயத்ரி... கூடக் கூட பேசிட்டா பண்றதெல்லாம் நியாயமாயிடாது? அந்தத் தம்பி என்ன தப்பு



பண்ணிச்சி? ஊருல இருக்க எவனும் செய்யாத தப்பா பண்ணிருச்சி... ஒரு ஆம்பிளைய இந்த அளவு நோகடிக்கக் கூடாது. ஆம்பள பொம்பளையால அழுவக் கூடாதுடி.''

''நீ பேசாம சும்மா இருக்கியா?'' அடக்கினாள்.

''என்னை நீ அடக்காத. காலம்பூரா நீ இப்படியே இருந் துடுவியா? ஒரு பொம்மணாட்டி... வாழா வெட்டியா இருக்கக் கூடாது. கண்ட நாய் கண்டபடி பேசும். ரெண்டு தடவ கூப்பிட வந்துட்டாரு. நீ இப்பிடிப் பிடிவாதமா இருக்கிறது நல்லதுக்கில்ல. எத்தனை நாளைக்கு நீ என்னோட நிழல்ல இருப்ப...?''

''ஓ... நீ அப்படி வர்றியா. நானும் எம்புள்ளையும் உங்கூட இருக்கறதுனால உனக்குக் கஷ்டம்னா தாராளமா வெளியே போயிடுறோம். கள வெட்டியாவது எம்புள்ளைக்கு நான் கஞ்சி ஊத்த முடியும்'' வெடுக்கென கூறி விட்டுக் கொல்லைப் புறத்தில் உள்ள சலவைக் கல்லில் போய் அமர்ந்தாள்.

மனோவின் நினைவு மிகவும் அதிகமாக அவளை வாட்ட ஆரம்பித்திருந்தது. எப்படி இருக்கின்றானோ? இன்றோடு ஒரு மாதம் ஆகிறது. ஒவ்வொரு நாளும் மதுவிற்கு ஒவ் வொரு பொய் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம். டாடியையும் மனோவையும் பார்க்க வேண்டும் என்று கொஞ்ச நாட்களாக அடம் பிடிக்க ஆரம்பித்திருந்தான்.

''அம்மா தபால்.''

தபால்காரர் ஒரு கவரை கதவின் இடுக்கு வழியாக உள்ளே வீசிவிட்டுப் போனார். கொல்லைப் புறத்தில் இருந்து எழுந்து வந்து காயத்ரிதான் கவரை எடுத்துப் பிரித்தாள்.

ரகுவரன் சட்ட ரீதியான விவகாரத்திற்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பி இருந்தான். அவளுக்குள் பயம் பரவ ஆரம்பித்தது. ஆனாலும் பணிந்து போகும் குணம் மட்டும் விடவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. படுக்கையில் வந்து சரிந்தாள். அவளது சிந்தனையை மதுவின் உளறல் தடுத்தது. எழுந்து

உட்கார்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் மகளையே பார்த் தாள். மதுவின் இதழ்கள் மெதுவாகப் பிளந்தன...

''மனோ...''

''ம....னோ...''

''பாக்குணும்.''

''டாடி எங்கே?''

''டாடி...''

''டாடி...''

மதுவின் கழுத்திலும், நெற்றியிலும் கை வைத்தாள். காய்ச்சல் அனலாகக் கொதித்தது. 'மனோ, டாடி ஞாபகம் வந்திருச்சோ? அதற்குத்தான் இந்தக் காய்ச்சலா?' பதறிப் போனாள்.

''அம்மா... ஆ...'' வீறிட்டாள்.

காயத்ரிதான் எதையோ பண்ணிவிட்டுக் கத்துகின்றாள் என்று லஷ்மி ஓடி வந்தாள்.

''என்ன காயத்ரி?''

''கொழந்தைய தொட்டுப் பாரேன். அனலாக் கொதிக்குது'' பரபரத்தாள். லஷ்மி தொட்டுப் பார்க்கும்போது...

''மனோ...''

''மனோ...''

''டே...ய்... அண்ணா... டாடி... டாடி...'' முனகல் வெளிப் பட்டதும்.

ஒருவித வெறுப்போடு காயத்ரியைப் பார்த்தாள்.

''இன்னும் என்ன பொம்பிளை நீ... புள்ளை ஏக்கத்தி லேயே காய்ச்சல் வந்துடுச்சு. உன்னோட வீம்ப எங்கேயாவது மூட்டக்கட்டி வச்சிட்டு இப்பவே கிளம்பு...''

தலையை சாய்த்து ஒரு வெட்டு வெட்டிப் பார்த்தாள்.

''எங்கே போகச் சொல்றே?''

''உன்னோட புருசன் வீட்டுக்கு...''



மதுவைத் தூக்கித் தோளில் போட்ட காயத்ரி, தன் தாய்க்கு முன்னால் ரகுவரன் அனுப்பி இருந்த வக்கீல் நோட்டீசை தூக்கிப் போட்டாள்.

''பாரு நல்லா பாரு.. உன்னோட மருமகன் டைவர்ஸ் கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பி இருக்காரு...''

தன் மேல் வீசப்பட்ட அந்தத் தாள்களை பொறுக்கி... நான்காக மடித்து மகளிடமே கொடுத்தவள்...

''அவரா அனுப்பி இருக்க மாட்டார். நீ கேட்டு இருப்ப. அவர் அனுப்பி இருக்கார். இல்லன்னு என்னோட முகத்தைப் பார்த்துச் சொல்லு பார்ப்போம்'' என்றதும்.

ஒன்றும் பேசாமல் மவுனமானாள் காயத்ரி.

''புள்ளைக்கு அனலாக் கொதிக்குதே காயத்ரி'' பேச்சை மாற்றினாள்.

''இதோ வரேன்'' என்று வெளியே ஓடிய காயத்ரியின் தாய் இரண்டு வீடு தள்ளியிருந்த வைத்தியக்காரக் கிழவியைக் கையோடு கூட்டி வந்தாள்.

அள்ளி முடிந்த கொண்டையோடும், கனுக்காலுக்கு மேல் ஏற்றிக் கட்டப்பட்ட சேலை, காதை இழுத்துக் கொண்டு ஒவ் வொரு பக்கமும் இரண்டு இரண்டு பவுன் தோடுகள் தொங்க வைத்தியக்கார கிழவி உள்ளே நுழைந்தாள்.

''தாயீ புள்ளைய படுக்கையில போடு.''

காயத்ரி மெதுவாக மதுவைக் கட்டிலில் சரித்தாள்.

விழிகளை உருட்டி மதுவின் கண்களைப் பிளந்து பார்த்தாள்.

நெஞ்சில் கை வைத்துப் பார்த்தாள். மதுவின் நாடி சரியாக அவள் கைகளுக்குப் பிடிபடவில்லை. அவளிடம் இருந்து அதே பிதற்றல் வெளிவந்தது.

''மனோ... மனோ...''

''டேய் மனோ...''

''டாடி... டாடி...''

பாக்குனும்... பாக்...கு..னும்.''

தலை நிமிர்த்தி காயத்ரியைப் பார்த்த அந்தக் கிழவி, ''புள்ளைக்கு அப்பன் ஏக்கமும், அண்ணன் ஏக்கமும் எடுத்துப் போச்சும்மா...''

புரியாமல் பார்த்தாள் காயத்ரி.

''அடுத்த பஸ்சுக்கே கௌம்பி மெட்ராஸ் போம்மா...''

''ஏன் இங்க உங்களால எதுவும் மருந்து கொடுக்க முடியாதா?''

''காய்ச்சல் இருந்தா கொடுக்கலாம். அப்பனையும், அண்ணனையுமில்ல கேக்குது...''

''கூட்டிக்கிட்டுப் போகலன்னா?''

''இப்பிடிக் கேட்டா நான் எப்படித் தாயி பதில் சொல்றது? டாக்டரு குடுக்குற மருந்துனால மட்டும் நோய் குணமாகிறதில்லை. மனுசனோட அன்பு, பாசந்தாம்மா. புள்ளைய இன்னும் ஏங்க உடாத...'' சொல்லிவிட்டு காய்ச்சலுக்கு கசாயம் வைத்துக் கொடுக்கச் சொல்லி இரண்டு வகையான சூரணத்தைக் கொடுத்து விட்டு நகர்ந்தாள்.

இரவு நெருங்கும்போது காய்ச்சல் கொஞ்சம் குறைந்து இருந்தது. ஆனால் முனகுவது நின்றபாடில்லை.

நன்றாக கதகதப்பாக மதுவை அணைத்துக் கொண்டே படுத்திருந்தாள் காயத்ரி. நினைவு முழுவதும் மனோவையும், ரகுவரனையும் சுற்றி சுற்றி வட்டமிட்டது. மனோவையும் தன்னோடு அழைத்து வந்திருக்கலாம் என்று தோன்றியது. அவன் மட்டும் ஸ்கூல் முடிந்து வந்திருந்தால் அவனையும் தன்னோடு அழைத்து வந்திருப்பாள்.

எப்படி இருக்கின்றானோ? தெரியவில்லை... கண்களில் கண்ணீர் சுருசுருவென்று சுரந்தது.

''காயத்ரி.''



கண்களை யாருக்கும் தெரியாமல் துடைத்துக் கொண்டு...

''என்னம்மா'' என்றாள்.

''நாளைக்கு ஊருக்குப் போறியா?''

''....''

''குடும்பத்தில் சண்டை வருவது சகஜம். அது பிரிவுல போயி நிக்கக் கூடாதும்மா...''

''டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பிட்டாரு. வெக்கங்கெட்டுப் போய் திரும்பப் போவச் சொல்லுறியா?''

''உன்னோட வீட்டுக்குப் போக நீ ஏன் வெக்கப்படற?''

''இல்லம்மா அவரோட என்னால வாழ முடியாது? திரும்ப அந்த வீட்ல நான் போயி நின்னேன்னா அவருக்கு பணிஞ்சி போய்ட்டதா தோணும். அவர் செஞ்ச பெரிய தவறை ஏத்துக்கிட்டு நான் தோத்துப் போய்ட்டதா மனசு குத்தும்...''

''யாருகிட்டே நீ தோத்துப் போற? உன்னோட புருஷன் கிட்டதானே. ரெண்டு பேத்துல யாரு ஜெயிச்சாலும், குடும்பம் நல்லா இருக்கணும். புருஷன் பொண்டாட்டிக்குள்ள நீயா நானாங்கற போட்டி வரக் கூடாதும்மா. அப்படி வந்ததுன்னா பலியாகிறது என்னமோ குழந்தைங்கதான். பொண்ணுங்றவ கடவுளுக்குச் சமம். சிவன் பார்வதிக்கு வலது பக்கம் இடம் குடுக்கல. இடது பக்கம்தான் குடுத்தான்... ஏன்? அந்த பக்கம் தான் இதயமே இருக்கு. உடம்பு இயங்கக் கூடிய சக்தியும் இருக்கு. பொண்ணு கல்யாணம் ஆகறதுக்கு முன்னால பெத்தவங்களுக்காக வாழணும். ஒருத்தன கட்டிக்கிட்டா அவனுக்காக வாழணும். கொழந்தைங்களுக்குத் தாயாயிட்டா அதுங்களுக்காக வாழணும்...''

''இந்த மாதிரிப் பேசி என்னோட மனசக் குழப்பாத?'' மெதுவாக சத்தத்தை அதிகமாக்கினாள்.

''உன்னோட மனச நான் குழப்பல. ஒரு அயோக்கியன ஒதுக்கிட்டு, ஒரு அயோக்கியன் தலையில என்னைக் கட்டிட்டி

யேம்மான்னு நீ வந்தா அது ஒரு மாதிரி. எம் புருஷன் தினமும் குடிக்கிறான், அடிக்கிறான். அங்க இருந்தா நான் செத்துடு வேன்னு நீ வந்தா, அது ஒரு மாதிரி. இல்ல வரதட்சணைக் கொடுமை தாங்கலம்மான்னு நீ வந்தா அது ஒரு மாதிரி. இல்ல எனக்கு மாமியார் சரியில்ல. மாமனார் சரியில்ல. எல்லோரும் என்னை வெறுத்து ஒதுக்குறாங்க. அங்க நான் எப்படிம்மா இருப்பேன்னு நீ வந்தா அது ஒரு மாதிரி. ஆனா இப்ப நீ எதுக்கு வந்துருக்கன்னு நீயே யோசிச்சுப் பாரு. புருஷன் - பொண்டாட்டிக்குள்ளே நம்பிக்கை வேணும்மா... அடுத்தவங்க சொல்றதை வச்சி எடை போடக்கூடாது? இப்பல்லாம் நல்ல பொண்ணுக்கு நல்ல பையனோ இல்ல ஒரு நல்ல பையனுக்கு நல்ல பொண்ணோ எங்கயாவது ஒரு இடத்துலதான் அமை யுது. வீணா வாழ்க்கையைக் கெடுத்துக்காத..."

அதிகமான அவன் ஆண்மையை கீறி பார்த்து விபரீதத் திற்கு தான் தான் வழிவகுத்து விட்டோமோ என்று காயத் ரிக்கு உள்ளத்தின் ஓரத்தில் தோன்றியது.

அதே நேரம்...

மனோ ரகுவரனின் அணைப்பில் சுருண்டு கிடந்தான்.

"டாடி..."

"ம்."

"டாடி..."

"ம்... சொல்லுடா" பேச்சில் சுரத்தே இல்லை.

"மம்மிய பாக்கணும்."

"...மதுவைப் பாக்கணும்."

"டாடி..."

"பார்க்கலாம்."

"எப்ப?"

"எப்பவாவது."



"மம்மிய டைவர்ஸ் பண்ணப் போறீங்களா டாடி?"

சட்டென சூடுபட்டதுபோல நிமிர்ந்து பார்த்தான் ரகுவரன்.

"என்ன சொன்னே?"

"டைவர்ஸ்."

"இல்லையே. உனக்கு யார் சொன்னா?" வேதனையோடு அவனை அவனுக்கு வலி இல்லாமல் இறுக்கிக் கொண்டான்.

"எனக்கு தெரியும் டாடி... வேணா டாடி. மம்மியக் கூட்டிக் கிட்டு வந்துடலாம் டாடி..."

"கூட்டிட்டு வந்திடலாம்... நீ தூங்கு."

"நீங்க பொய் பேசறீங்க... என்னையும், மதுவையும் ஆளுக்கு ஒருத்தரா எடுத்துக்கிட்டு போயிடுவீங்க..."

இந்த பூமியில் பிறந்ததில் இருந்து விவரம் தெரிந்து... முதல் முதலாக கண்ணீர் பெருகி மார்பை நனைத்தது ரகுவரனுக்கு.

"மம்மி தப்பு பண்ணிட்டாங்களா?"

கண்ணீரை சுண்டி விட்டபடி மனோவையே பார்த்தான்.

"அழாதீங்க டாடி. எனக்குக் கண்ணெல்லாம் தண்ணி தண்ணியா வருது."

"....."

"மம்மிய மன்னிச்சிடுங்க டாடி."

"மன்னிச்சாச்சி."

"டைவர்ஸ் வேண்டாம் டாடி. மது கூட நான் இருக்கணும். எனக்கு மம்மி வேணும். நாம ஒண்ணாவே இருக்கலாம்..."

"ஒண்ணாத்தான் இருப்போம். நாளைக்கு ஸ்கூல் போகணும்ல, படு..."

"மம்மிய கூட்டிட்டு வர்றீங்களா?"

"கூட்டிட்டு வரேன்."

"நீங்க கூட்டிட்டு வரலேன்னா எங்கயாவது நான் போய் செத்துப் போய்டுவேன்" அழ ஆரம்பித்தான்.

அதீத துக்கத்தோடு மனோ கண்களைத் துடைத்து விட்டவன், "இல்லேடா கண்ணா, இல்ல ராஜா, நான் கூட்டிட்டு வரேன். செத்துப் போறேன்லாம் பேசக் கூடாது. அது கெட்ட வார்த்தை. நீ இப்படில்லாம் பேசனா டாடி மனசு கஷ்டப்படுண்டா ராஜா. நீயும் என்னை விட்டுப் போறேன்னா நான் எங்கேடா போவேன்?"

மெலிதான குலுக்கல் அவனிடம் இருந்து வெளிப்பட்டது.

மனோ மெதுவாகத் தூங்க ஆரம்பித்தான். அவனுக்கு போர்த்தி விட்டபோது, காலிங்பெல் ஒலித்தது.

இந்த நேரத்தில் யாராக இருக்கும்? யோசனையாக மனோவை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு அவன் தூங்குவதில் திருப்திப்பட்டு பனியனோடு இருந்தவன், ஹேங்கரில் மாட்டியிருந்த ஒரு சட்டையை எடுத்து அதற்குள் தன்னைத் திணித்துக் கொண்டு கதவைத் திறந்தான்.

மெலிதாகச் சிரித்தபடி சேர்மன் நின்றிருந்தார்.

லேசான அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு, "உள்ளே வாங்க சார்" என்றான்.

"உட்காருங்க சார்."

"எதுவும் அவசர வேலை இருக்கா சார். சொல்லியனுப்பி இருந்தா நானே வந்திருப்பேன் சார்."

சோபாவில் அமர்ந்தார். "ஒண்ணும் அவசரம் இல்லப்பா உன்னை பார்க்கத்தான் வந்தேன். பையன் எங்கே?"

"இப்பதான் சார் தூங்கறான்."

"உட்காருப்பா."

அவருக்கு எதிரே இருந்த சோபா நுனியில் பட்டும் படாமல் அமர்ந்தான்.

"என்ன முடிவு பண்ணியிருக்கே?"

"டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பியிருக்கேன் சார்."



"யோசித்துத்தான் முடிவெடுத்தியா?"

"நல்லா யோசிச்சிப் பார்த்துட்டேன் சார். அவ கால்ல நான் விழல, மத்தபடி எப்படி எல்லாம் சொல்ல முடியுமோ அப்படி எல்லாம் சொல்லிட்டேன் சார். ப்ச் நோ யூஸ்."

"வேணா ரகு. ஜனனியக் கூட்டிகிட்டு வந்து, காயத்ரிகிட்ட பேச விடு... எல்லாம் சரியாயிடும்."

வேகமாகத் தலையாட்டி மறுத்தான் ரகுவரன்.

"நோ சார். ஏற்கனவே உங்ககிட்ட சொல்லியிருக்கேன். ஜனனிக்கு இது தெரியக்கூடாது. என்னால அவ இதுவரைக்கும் பட்ட கஷ்டம் போதும். அது மட்டும் இல்ல. அசாமுக்கு டிரெய்னிங் போய் இருக்கான்னு தெரியும். ஆனா அட்ரஸ் தெரியாது. அதுவும் ஒரு வகையில எனக்கு நல்லதுன்னு தான் தோணுது. ஏன்னா அட்ரஸ் தெரிஞ்சா நானே என்னையும் மீறி என்னோட துக்கத்தையெல்லாம் வார்த்தையாக் கொட்டியிருந்தாலும் கொட்டியிருப்பேன்."

"அப்ப ஜனனி... லட்டரே போடலையா?"

"இல்ல. ரெண்டு தடவை போன் மட்டும் வந்தது. அட்ரஸ் நானும் கேட்டுக்கல. சந்தோஷமா இருக்கறதா பொய் சொல்லிட்டேன்."

தானே தலையைத் தட்டிக் கொண்டு, "சாரி சார்... என்ன சாப்பிடறீங்க?" என்றான்.

"ஒன்றும் வேண்டாம். தண்ணி மட்டும் குடு. ஆமாம் நீ சாப்பிட்டியா?"

"சாப்பிட்டேன் சார்" பொய் சொன்னான்.

கண்ணாடி கிளாசில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு வந்து கொடுத்தான். வாங்கிக் குடித்தவர், மீதியை டீபாய் மேலேயே வைத்தார்.

ரகுவரனை உற்றுப் பார்த்து விட்டு,

"என்ன முடிவு எடுத்து இருக்க?" என்றார் மறுபடியும்.

"டைவர்ஸ்" சலனமில்லாமல் சொன்னான்.

"ரகுவரன் நான் சொல்றத கேளுப்பா டைவர்ஸ் வேண்டாம். அன்னைக்கு நான் உங்கிட்ட பேசினது தப்போன்னு கூடத் தோணுது. குடும்பத்த சேத்து வைக்க ரொம்ப கஷ்டப்பட ணும். ஆனா பிரிக்கிறது ரொம்ப சுலபம்" பேசியபடியே அவனுக்கு அருகே வந்து அமர்ந்தார்.

"நீ தப்பான முடிவுக்கு வரக் கூடாதுன்னுதான் இந்த ராத்திரி நேரம் உன்னைத் தேடி வந்தேன்."

"நீங்க சொன்னதுல எதுவுமே தப்பானது இல்ல சார். புரிஞ்சிக்காதவகிட்ட குடித்தனம் பண்றதும் ஒண்ணுதான், சன்னியாசியா இருக்கறதும் ஒண்ணுதான்."

"ரகு..."

"வேண்டாம் சார். எப்ப அவ என்னை மதிக்காம எடுத்தெறிஞ்சி பேசிட்டாளோ, நம்பிக்கையில்லாம வாசல்படியைத் தாண்டிட்டாளோ இனிமே வேண்டாம். ஸ்கூலுக்குப் போன குழந்தைக்குக் கூடத் தெரியாமப் போனது எந்த விதத்துல சார் நியாயம்? முன்னைப் போல ஒரு அன்னியோன்யம் இனி வராது சார்."

"ஏன் வராது? சின்னப் பிரிவு பலமான அன்பைக் குடுக்கும்."

"இல்ல சார். குடும்பங்கற கண்ணாடி உடையவே கூடாது. அப்படி உடைஞ்சிடுச்சின்னா எத்தனை தடவை ஒட்டினாலும் விரிசல் தெரியும் சார். சப்தமில்லாம வலிக்கும். மனசு உறுத்தும். அதுகூடப் பரவாயில்ல. சந்தேகப்படறவகிட்ட என்னால எப்படி சார் வாழ முடியும்?"

ரகுவரனைப் பார்த்து விரக்தியாக இதழ்களை விரிய விட்டார் சேர்மன்.

"ஏன் சந்தேகப்பட மாட்டா?"



"சார்..."

"ஆமாம் ரகு. அன்பு அதிகமாயிட்டா அங்க, கோபம், சந்தேகம் எல்லாம் இருக்கும். அது மட்டும் இல்ல. காயத்ரி பொசசிவ் டைப். பொய் பேசுனா சுத்தமா பிடிக்காதுங்கறதும் தெரியும். அப்புறம் ஏன் அந்தப் பொண்ணு கோபப்படாது? எப்படி என்னைப் புரிஞ்சிக்க மாட்டேங்கறா என்னோட வொய்புன்னு வருத்தமா இருக்கோ, அதுபோல அவளுக்குள்ளும் ஏதாவது வருத்தம் இருக்கலாம், குறைகள் இருக்கலாம். பொண்டாட்டிங்கறவ புருஷன் தனக்கு மட்டுந்தான்னு நினைக்கிறதுல என்ன தப்பு? அன்பைப் பரிமறிக்கிட்டா மட்டும் போதாது. உன்னோட அந்தரங்கத்தையும் பரிமாறி இருக்கணும்."

"சார் நான் எவ்வளவோ முறை கெஞ்சிப் பார்த்துட்டேன். அவ காதுலேயே வாங்கிக்கல."

"காயத்ரி புரிஞ்சுக்கலங்கறது பொய். உன்னால புரிய வைக்க முடியல."

"இல்ல சார். அவ மேல என்னோட உயிரையே வச்சிருக்கேன். ஆனா அவ என்னையே சந்தேகப்படறா. இவளைக் கல்யாணம் பண்ணப்ப ரெம்ப சந்தோஷப்பட்டேன் சார். அந்த அழகு எனக்குப் போதுமானதா இருந்தது. கிராமத்துப் பொண்ணு. கள்ளம் கபடம் இல்லாதவள்ன்னு பெருமைப்பட்டேன். கொஞ்சமா படிச்சதினால வீட்லேயே இருந்துகிட்டு என்னையும், குழந்தைகளையும் கண்ணும் கருத்துமா பார்த்துக்குவா... வேலைக்கு போறவளா இருந்தா அவளுக்கு ஆயிரம் டென்சன். அதை வீட்லதான் வந்து காட்ட முடியும். குடும்பத்துல அமைதி இருக்காதுன்னு நெனச்சேன். ஆனா இப்ப ரொம்பவும் பீல் பண்றேன் சார். அப்படி ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணியிருந்தாக் கூட அவளுக்கு சந்தேகப்பட நேரமே கிடச்சி இருக்காது. படிச்சிருப்பதால புரிஞ்சிருப்பா."

ஆழமாக அவனை ஊடுருவிப் பார்த்தார்.

''தப்பு ரகு. நீ போட்ட கணக்கு ரொம்பத் தப்பு. ஏன்னா புருஷன் விஷயத்துல எல்லாப் பொண்ணுங்களும் ஒரே மாதிரிதான்.''

''........''

''எட்டு வருச தாம்பத்யம் டைவர்ஸ்தானா? ஒருத்தர ஒருத்தர் புரிஞ்சிகிட்டதா ஒருத்தர ஒருத்தர் ஏமாத்திக்கிட்டு இருக்கீங்க. காயத்ரியோட கோபம் எல்லாம் நீ பொய் சொல்லிட்டங்கறது மட்டும் இல்ல. அந்தப் பொய்ய அடுத்த ஆள் மூலம் தெரிஞ்சிகிட்டோம்கற ஆத்திரம், இன்னும் உன்னைப் புரிஞ்சிகிடலயோங்கற ஏமாற்றம்.''

''சார், நான் மன்னிப்பு கேட்டாச்சி.''

அவன் தோளைப் பிடித்து அழுத்தியவர்...

''நீயும் சரி, காயத்ரியும் சரி, சரியான சுயநலக்காரங்க. நீங்க ரெண்டு பேரும் வளர்ந்தாச்சி, படிச்சாச்சி, வேலைக்கும் போயாச்சி, கல்யாணம் பண்ணியாச்சி, கொழந்தைகளும் பெத்தாச்சி. ஏறத்தாழ எல்லாத்தையும் அனுபவிச்சாச்சி. பாவம் ரெண்டு குழந்தைகள நெனச்சிப் பாத்தீங்களா? அதுங்களோட எதிர்காலத்த கொஞ்சமாவது யோசிச்சீங்களா?''

''சார்.''

''ஈசியா டைவர்சன்னு ஒன்னுமே இல்லாத விஷயத் திற்கே போயிட்டீங்களே. இதுதான் நீங்க வாழ்ந்த வாழ்க் கையா? ஆளுக்கொரு குழந்தையாப் பிரிச்சுகிட்டு சந்தோஷமா வாழ்ந்துடுவீங்களா?''

நிஜங்கள் அவன் முன்பு விஸ்வரூபம் எடுத்து நிற்க, பலமாக அதிர்ந்தான் ரகுவரன்.

''உன்னால காயத்ரியப் பிரிஞ்சி நிரந்தரமா வாழ்ந்திட முடியுமா?''

''......''

''உன்னோட குழந்தைகளப் பிரிஞ்சி இருந்துடுவியா?''

''.......''



''வாழ்க்கையே விட்டுக் கொடுத்தல்தான். அன்பும் விட்டுக் கொடுப்பதுதான். பிறகு எதுக்கு இந்த ஈகோ, வீராப்பு... யோசிச்சி பாரு.''

''.....''

''நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சா பாவம் அந்த ஜனனி பொண்ணுக்குத் தான் அவமானம். தன்னால ஒரு குடும்பம் பிரிஞ்சிடுச்சோன்னு தினமும் நொந்து நொந்து சாவா. உங் களோட பிரிவு அந்தப் பொண்ணோட வாழ்க்கையில பெரிய பாதிப்பை உண்டாக்கும்.''

மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தவர்,

''ஓ.கே. ரகு. உனக்கு இதெல்லாம் சொல்லணும் போலத் தோணுச்சி, சொல்லிட்டேன். யோசிச்சிப் பாரு வரேன்'' அவன் தோளைத் தட்டினார்.

''குட் நைட்.''

''குட் நைட் சார்.''

அவர் கார் கிளம்பிப் போவதையே பார்த்துக் கொண் டிருந்தான். சத்தம் தேய்ந்து வெகு நேரம் வரை அங்கே நின் றிருந்தான். பின் கதவை சாத்தி விட்டு மனோ அருகில் வந்து படுத்தான்.

கண்களை மூட முடியவில்லை. கண்களில் விட்டில் பூச்சி அடித்தது போல் எரிந்தது. தூக்கம் வர ஆரம்பித்த உடன் விழித்திரையில் படம் விரிந்தது. கோர்ட்டில் ரகுவரனும், காயத் ரியும் ஆளுக்கொரு பக்கமாக நின்றார்கள். நீதிபதி ஏதோ வாயசைத்தார். பிறகு ஆளுக்கொரு குழந்தைகளை இழுத்துக் கொண்டு அவைகள் கால் உதறிக் கதற கதற ஆளுக்கொரு பக்கமாக எதிரும் புதிருமாக பயணமானார்கள்.

சடார் என விழித்தான், ரகுவரன். மனோ அவன் மார்பில் படுத்திருந்தான். உடல் எங்கும் குப்பென்று வேர்த்து நீர்த் துளிகள் முத்துக் கோர்த்திருந்தது. மணி பார்த்தான் நான்கு.

விடியற்காலை நான்கு...

'அதிகாலைக் கனவு பலிக்குமே?'

சுரீர் என்று நெஞ்சுக்குள் யாரோ கத்தி செருகியது போல் உணர்ந்தான்.

## 8

சோர்வாக சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்தான் ரகுவரன். டேபிள் மேல் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பைலின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. எதிலுமே ஈடுபாடில்லாத ஒரு பார்வை. கண்களில் கருவளையம் போடலாமா? வேண்டாமா? என்று யோசிக்கும் நிலை. இரண்டு வாரமாக சேவிங் பக்கமே போகாத தாடை. லேசாக தாடையைத் தேய்த்தபடியே கொட்டாவி ஒன்றை வெளிவிட்டபடி அண்ணாந்து பார்த்தபடி இருந்தான்.

கதவு இரண்டு முறை தட்டப்பட்டு...

''மே ஐ கமின் சார்.''

நிமிர்ந்து உட்கார்ந்தபடி... ''எஸ்'' என்றான்.

வந்தது டெலிபோன் ஆபரேட்டர் மீனா.

''சார், காலையில டென் தேர்ட்டிக்கு அசாம்ல இருந்து எஸ்.டி.டி. கால் வந்தது.''

''என்ன சொன்னாங்க?'' ஆர்வமானான்.

''ஜனனிங்கறவங்க போன் பண்ணாங்க. நீங்க இல்லன்னு சொன்னதும், நீங்க வந்தா அவங்க போன் பண்ணதா மட்டும் சொல்லச் சொல்லிட்டு போன் கட் பண்ணிட்டாங்க.''

''ஓ.கே.''

மீனா அறையை விட்டு வெளியேறியதும் நெற்றியைச் சுருக்கினான்.



'எதுக்கு எஸ்.டி.டி. அதுவும் காலையிலேயே. யோசித்தவன் அப்போதுதான் டேபிள் மேல் பேப்பர் வெயிட்டிற்கு கீழ் சிணுங்கிக் கொண்டிருந்த கடிதத்தை கவனித்தான்.

சுரத்தேயில்லாமல் பிரித்தான். கொஞ்சம் சாய்வான கையெழுத்தில் கடிதம் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது.

*'அன்புமிக்க மாப்பிள்ளை சிரஞ்சீவி ரகுவரனுக்கு. அத்தையின் அநேக ஆசீர்வாதங்கள். என் கடிதம் உங்களுக்கு வியப்பைக் கொடுக்கலாம். பக்கத்து வீட்டுச் சிறுமியின் உதவியால் இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதிக் கொண்டு இருக்கின்றேன். மதுவிற்கு உங்கள் ஞாபகம் அதிகமாகி விட்டது. உங்கள் இருவரில் யாருக்கு அறிவுரை சொல்வது என்று எனக்குப் பிடிபடவில்லை. என் மகளிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன். ஆனால் அதற்கு எந்தவிதப் பலனும் இல்லை.*

*இப்படியே எத்தனை நாட்கள் இருப்பது? ஏதாவது ஒரு முடிவிற்கு வந்துதானே ஆக வேண்டும். அதனால பஞ்சாயத்து கூட்டலாம் என்று இருக்கின்றேன். ஊரில் இருக்கும் பெரியவங்களாவது என் மகளுக்கு நல்ல வழியைக் காட்ட மாட்டாங்களா? என்ற ஆதங்கத்தில் தான். எங்கள் ஊரில் எந்த ஒரு நிகழ்ச்சியையும், நல்லது கெட்டதையும் பஞ்சாயத்து தீர்ப்பிற்கே கட்டுப்பட்டு வந்து விட்டோம். வரும் சனிக்கிழமை நீங்கள் ஊருக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அம்மன் மேல் பாரத்தைப் போட்டு விட்டேன். இனி அவள் பார்த்துக் கொள்வாள். பேரன் நன்றாக இருக்கின்றானா? உங்கள் உடலையும் கவனித்துக் கொள்ளுங்கள். இருவரும் சேர்ந்து பிள்ளைகளின் வாழ்க்கையைப் பாழாக்கி விடாதீர்கள்.*

*ஆசீர்வாதங்களுடன் அன்பு அத்தை.*

இரண்டு, மூன்று முறை கடிதத்தில் பார்வையை மேய விட்டான்.

ஏதோ இழக்கக் கூடாத ஒன்றை இழக்கப் போவதாக அப்போதே அவன் மனம் படபடக்க ஆரம்பித்தது.

'ஊர் பஞ்சாயத்து... டக்கென்று ஒரு முடிவு எடுத்து விடுவார்களே?' மனதில் பூரான் நெளிந்தது. என்னதான் நடக்கிறது என்று பார்ப்போம். திடமான முடிவிற்கு வந்தான். அப்போதுதான் தன் தாய் தந்தையின் இழப்பு, அவர்களின் இறப்பு பெரிசும் துன்புறுத்தியது.

வீட்டில் தாயோ, தகப்பனோ இருந்திருந்தால் இந்தப் பிரச்சினை இந்த அளவுக்கு முத்தியிருக்குமா? யோசிக்க யோசிக்க மண்டை காய்ந்தது.

சனிக்கிழமை காலை...

ரகுவரனின் பிரிமியர் 118 மனோவையும் சுமந்து கொண்டு கிராமத்துப் புழுதியில் புதைந்து ஊர்ந்து கொண்டிருந்தது. நேராக பஞ்சாயத்து தலைவர் வீட்டின் முன்னால் காரை நிறுத்தினான்.

''வாங்க தம்பி.''

கதர் வேஷ்டி சட்டையில் இருந்த அந்த முதியவர் வரவேற்றார். மனோவைத் தூக்கிக் கொண்டு இறங்கினான்.

''உள்ள வாங்க தம்பி.''

உள்ளே சென்றான்.

பழங்காலத்து வீடு... தூசு தட்டி, துடைத்து வைக்கப்பட்ட நாற்காலியில் அவனை அமரச் சொன்னார்.

''தம்பிக்கு பஞ்சாயத்து கூட்றதுல வருத்தம் ஒண்ணும் இல்லையே?''

''இல்லைங்க.''

''எல்லாம் லக்ஷ்மியம்மா சொன்னாங்க. அந்தப் புள்ள ஏன் இப்படிப் பிடிவாதமா இருக்குன்னு தெரியல. ஊர் கூட்டத்துல புத்தி சொல்லிப் பார்ப்போம்.''

அதற்குள் மனோ, ரகுவரனின் தொடையைச் சுரண்ட ஆரம்பித்தான்.



''என்னடா கண்ணா?''

''மம்மியப் பார்க்கனும்'' கண்களில் ஏக்கமும், ஆவலும் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுத் தொங்கியது.

பஞ்சாயத்துத் தலைவர் தர்ம சங்கடமாக அவனைப் பார்த்தார். பின்பு ''டேய் வீரா.''

''என்னங்கய்யா'' குரல் கொடுத்தபடி குனிந்தது போலவும், நிமிர்ந்து நிற்பது போலவும் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்ட ஒரு கருத்த வேலையாள் வந்து நின்றான்.

''பையன் லக்ஷ்மியம்மா பேரன். தூக்கிகிட்டு போய் நம்ம காயத்ரி கிட்ட விட்டுடு.''

மனோ குதித்துக் கொண்டு கிளம்பும்போது...

''டாடி, மம்மிய நீங்க பார்க்கல?''

''பார்க்கலாம். நீ போய்ப் பாரு. வீரா ஒரு நிமிஷம்'' என்றபடி தான் மதுவிற்கு வாங்கி வந்த பொருட்களைக் கையோடு கொடுத்தனுப்பினான். வீரன் திரும்பி வரும் போது மதுவைத் தூக்கி வந்திருந்தான். மது அவனோடு ஒட்டிக் கொண்டு அழுதது. கொஞ்ச நேரம் கோபம் காட்டியது.

''என்னை... உட்டுட்டு போயிடாதீங்க டாடி...''

கழுத்தைக் கட்டிக் கொண்டு முகம் தேய்த்தது.

''டாடி...''

''என்ன ராஜாத்தி, சொல்லுடா கண்ணா?''

''என்ன... உட்டுட்டு... போ... வ... மாட்டியே?''

''இல்ல.''

''பொய் இல்லையே?''

''அப்ப சத்தியம் பண்ணு'' பிஞ்சுக் கை அவன் மார்புக்கு நேராக விரிந்தது.

அணைத்துத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தான்.

''மம்மி எப்படி இருக்கா?''

''சாப்பிடறதே இல்ல டாடி.''

மாலை வரை மனோவும் இங்கு வரவில்லை. மதுவும் அங்கு போகவில்லை. லக்ஷ்மியம்மாள் இரண்டு முறை அழைத்தும் ரகுவரன் நாகுக்காக மறுத்து விட்டான்.

மேலும் வற்புறுத்தியபோது, பஞ்சாயத்திற்கு வந்து விட்டு அங்கு தங்குவது முறையில்லை என்று விலகினான். அதற்குள் ஒவ்வொரு வீட்டிற்கும் மாலை ஊர் பஞ்சாயத்து என்ற செய்தி தெரிவிக்கப்பட்டது.

நான்கு மணிக்கெல்லாம் மாரியம்மன் கோவில் முன்பு நாற்காலிகளும், பெஞ்சுகளும் போடப்பட்டன. கொஞ்சம் கொஞ்சம் கூட்டம் கூட ஆரம்பித்தது. கடைசியாக தலைவரோடு ரகுவரன் வந்தான். அதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்பாக காயத்ரி, லக்ஷ்மியம்மாளோடு வந்திருந்தாள்.

ரகுவரனைப் பார்த்ததும் மின்னல் தெறித்தார் போல், 'ஐய்யய்யோ இப்படி இளைச்சிருக்காரே?' எண்ணம் ஓடியது. 'சரியா சாப்பிடலையா?' பல கேள்விகள் முளைத்து முளைத்து அமுங்கின.

ரகுவரன் காயத்ரியை கவனித்தான்.

'எப்படி இருந்தவள் இப்படி உருமாறிப் போய் விட்டாளே?'

அவன் பார்ப்பது தெரிந்து தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். குரலை செருமிக் கொண்டு தலைவர் பேச ஆரம்பித்தார்.

''என்னோட பேச்சுக்குக் கட்டுப்பட்டு வந்திருக்கிற உங்க எல்லோருக்கும் என்னோட வணக்கத்த சொல்லிக்கிறேன். இந்தப் பஞ்சாயத்துக் கூட்டவே எனக்கு இஷ்டமில்ல. நம்ப ஊர் பொண்ணு காயத்ரி, எவ்வளவு தங்கமான பொண்ணுங்கறதும், அந்தத் தம்பி எவ்வளவு நல்லவருங்கறதும் நமக்கு நல்லாவே தெரியும். இவங்க ரெண்டு பேருக்குள்ள ஏதோ சண்டை. அதுக்காக விடுதலை கேட்டுப் பஞ்சாயத்தக் கூட்டியிருக்காங்க. பாரபட்சம் இல்லாம தீர்ப்பு சொல்றதுதான் நம்ம பஞ்சாயத்தோட கடமை. அறுத்துக் கட்றது நமக்கு புதுசு இல்லன்னாலும் இவங்க ரெண்டு பேரும் சொல்றத வச்சித் தான் நாம ஒரு முடிவுக்கு வர முடியும்.



''மேலும் இரண்டு பேரும் அவங்களுக்குள்ளேயே பேசி பேசி பிரச்சினையைப் பூதாகாரமாக்கி இருக்காங்க. நம்ம எல்லோரையும் அவங்க உறவினரா நினைச்சு எதார்த்தமான நம்ம கிராமத்து பூமில அவங்க பாரத்தையெல்லாம் இறக்கி வச்சு முடிக்கட்டும். ஆண்டவன் அருளால இரண்டு பேரும் சேர்ந்து குழந்தையோட ஊருக்கு சந்தோஷமா திரும்பணுங்கறதுதான் என்னோட ஆசைன்னு சொல்லி பஞ்சாயத்த துவக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு காயத்ரி பக்கம் திரும்பினார்.

''சொல்லம்மா என்ன பிரச்சினை?''

''ஐயா, இவருக்கு என்னப் பத்தி எல்லாம் தெரியும். நான் மூச்சு விடறதக் கூட எண்ண முடிஞ்சிருந்தா எண்ணி சொல்லியிருப்பேன். ஆனா இவரு என்கிட்ட பொய் சொல்லி ஏமாத்திட்டாரு.''

''என்ன பொய்மா?''

''கல்யாணத்துக்கு முந்தியே காதலிச்சிருக்காரு. அது கூடப் பரவாயில்ல. பிரண்டோட தங்கச்சின்னு பொய்... அந்தப் பொண்ண கூட்டிகிட்டு வந்ததுல இருந்து சொன்னதெல்லாம் பொய்.''

ரகுவரன் பக்கம் திரும்பியவர், ''இதுக்கு நீ என்னப்பா சொல்ற?''

''அதுக்கு நான் காரணம் இல்லைய்யா. இவதான். இவ மேல நான் வச்ச அதீத ஆசை, அன்புதான் காரணம். காயத்ரி மனசுல சின்ன சலனம் கூட வரக் கூடாதுங்கறதுதான் நான் எடுத்துகிட்ட அக்கறை.''

''பொய்.''

"இதுதான் நிஜம். இவகிட்ட உண்மை சொல்லியிருந்தா நிச்சயம் கவலப்படுவா. பழைய காய்கறியே பிடிக்காதுன்னு சொன்னவகிட்ட புருஷன் காதலிச்சது மட்டும் பிடிக்கும்னு சொல்ல முடியுமா?"

'விலுக்'கென்று அடிபட்டது போல் நிமிர்ந்து பார்த்தாள்.

"ஏம்மா, அப்படி உண்மையைச சொல்லியிருந்தாலும் அவர் லேட்டா வரும்போதெல்லாம் அந்தப் பொண்ணப் பார்த்து இருப்பாரோன்னு உனக்குத் தோணாமலா இருக்கும்? ஒவ்வொரு நாளும் நீ சந்தேகப்பட்டு துடிக்கறத விட ஒரு உண்மைய யாருக்கும் அதனால எந்தக் கெடுதலும் இல்லைங்கறபோது மறைக்கறது தப்பு இல்லைம்மா.

"உனக்கு மகாபாரதம் தெரியும். ராமாயணம் தெரியும். இதெல்லாம் படிச்ச பொண்ணு நீ. மகா பாரத யுத்தத்துல தர்மரே 'இறந்தான் அஸ்வத்தாமன்'னு வேகமா சத்தம் போட்டுச் சொல்லிட்டு 'என்ற யானைன்னு' அப்புறம் மெதுவா சொல்லலை. அதுல நியாயம் இருக்கும்னு தோணும்போது இதுல ஏன் இல்லங்கற?"

புதியதாக ஒரு கோணம் காயத்ரிக்கு புழுதி படர்ந்தது போல் புரியத் தொடங்கியது.

"நீ என்னப்பா சொல்ற?"

"நான் சொல்ல என்னய்யா இருக்கு? இவளுக்குக் கொஞ்சம் கூட எம் மேல பாசமே இல்லய்யா. உண்மையான அன்பு, சந்தேகத்த பெரிசு படுத்தாது."

குறுக்கே புகுந்தாள் காயத்ரி.

"இவருக்கு எம்மேல பாசம் இருந்தா அன்னைக்கு ஒரு வார்த்த சாப்பிட்டியான்னு கேட்டாரா?"

"நானே சாப்பிடாம பட்டினியாத்தான் படுத்தேன். நீ அசந்து தூங்கினதால தண்ணியக் குடிச்சிட்டுப் படுத்துட்டேன். உன்னோட சந்தேகத்துக்கு அப்புறம் ஒரு நாளாவது



காபி சாப்பாடு உன் கையால எனக்கு உண்டா? நமக்குள்ள பிரச்சனைன்னா நாமதானே பேசி தீர்த்துக்கணும். அடுத்த வீட்ல போய் படுத்துக்கிட்டாத் தீர்ந்திடுமா?"

ஈட்டியாக அவன் கேள்விகள் அவளைத் துளைத்தது.

"இவர் எதுவும் என்கிட்ட பேசல, சமாதானப்படுத்த முயற்சி பண்ணல. அடிக்க ஆரம்பிச்சிட்டாரு" குரல் கம்மியது.

"நீ எதுக்குப்பா கை ஓங்கின?"

"தப்புதான்யா. ஆனா இவ என்னைப் பேச விடல, பேச வந்தப்பையும் விலகிப் போயிட்டா. என் மேல இருக்கிற வெறுப்பைக் குழந்தைகள்ட்ட காட்ட ஆரம்பிச்சிட்டா. அப்புறம் என்னைய கட்டுப்படுத்த முடியல."

குழந்தைகள் ரெண்டும் லஷ்மியம்மாளிடம் ஒண்டிக் கொண்டு இருந்தன.

தலைவர் நெற்றியைச் சுருக்கினார். "ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுக்க மாட்டேங்கறீங்க. சண்ட சச்சரவும், சந்தேகமும் குடும்பத்துல இருந்தாலும் நல்லா இருக்காது."

"ம்..." யோசித்தார்.

"பஞ்சாயத்தோட எந்த முடிவுக்கும் நீங்க ரெண்டு பேரும் கட்டுப்படுவீங்கல்ல?"

அந்த 'எந்த முடிவில்' நல்ல அழுத்தம் கொடுத்து பேசினார்.

சற்றும் யோசிக்காமல் இருவருமே ஆமோதித்தார்கள்.

# 9

"குழந்தைகளையும் ஒரு வார்த்தைக் கேட்டுக்குவோம்" தலைவர் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே... காக்கி நிற யூனிபார்ம் அணிந்த ஒடிசலான தேகம் உடைய இளைஞன் தலைவர் அருகே வந்து.

"ஐயா நம்ம காயத்ரிக்கு ரிஜிஸ்தர் தபால் வந்திருக்கு. வீட்டுக்குப் போனேன். பக்கத்துல இருக்கிறவங்க சொன்னாங்க. பஞ்சாயத்து கூடியிருக்குன்னு, அதான் இங்கேயே எடுத்துக் கிட்டு வந்தேன்."

"யர் போட்டு இருக்கா?"

"ஜனனின்னு பேர் இருக்கு. மெட்ராஸ் அட்ரசுக்கு லட்டர் வந்திருக்கு. பக்கத்து வீட்டுக்காரங்க நம்ம ஊர் அட்ரஸ் கொடுத்து ரீ-டேரக்ட் பண்ணியிருக்காங்க."

ரகுவரன் புரியாமல் கடிதத்தையும், காயத்ரியையும் ஏறிட்டுப் பார்த்தான். காயத்ரி கையெழுத்து போட்டு விட்டு கடிதங்களை வாங்கிக் கேள்விக் குறியோடும், எரிச்சலோடும் கடிதத்தைப் பிரித்தாள்.

ஜனனியின் முத்துமுத்தான கையெழுத்தை அவள் கண்கள் வருட ஆரம்பித்தது.

*அன்பான என் காயத்ரிக்கு,*

*ஜனனியின் அன்பான மடல். ரகு, மனோ, மது எல்லோரும் நலமா? உங்கள் நினைவாக, நான் நலம். நான் அஸ்ஸாம் ட்ரெயினிங் போய் இருப்பது ரகு மூலம் உனக்குத் தெரிந்திருக்கும். ரகுவிற்கு கடிதம் எழுதாமல் உனக்கு எழுதியிருப்பதின் காரணம், ரகுவை விடவும் என் மனதில் நீ உயர்ந்து இருப்பதால். ஒரு நாள் உன்னிடம் பேசினாலும் அந்த அன்பான பார்வை, கள்ளமில்லாப் பேச்சு, பரிவான தோழமை எல்லாம் என்னை உன்னிடம் என் உள்ளத்தை இழக்கச் செய்து விட்டது. இந்த நேரம் ஒரு உண்மையை நான் சொல்ல விரும்புகின்றேன். என் காலேஜ் வாழ்க்கையின்போது நாங்கள் இருவரும் காதலர்கள். அத்து மீறியவர்கள் அல்ல. நான் ரகுவரனைக் காதலித்தேனே தவிர, காயத்ரியின் கணவனை அல்ல.*

*உங்கள் இருவரையும் நினைக்கும்போது எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா? நீங்கள்*



*இருவரும் மனம் ஒத்த, புரிந்து கொண்ட கொடுத்து வைத்த தம்பதிகள். உங்களுக்கு மகளாகப் பிறந்து இருக்கக் கூடாதா என்று கூடத் தோன்றுகிறது. உன் மடியில் முகம் புதைக்க அப்படி ஒரு ஆசை. அன்று ரகுவரன் என்னை வீட்டில் விடும்போது, நானும் காயத்ரியும்தான் இனி உனக்கு தாய், தந்தை என்று சொன்னது, நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நீயும் ரகுவரனும் கை பிடித்துக் கேட்டது. நான் என் பெற்றவர் களை இழக்கவில்லை என் சொந்தங்கள் என்னை விட்டுப் போகவில்லை என்று மனதிற்கு மிகவும் தெம்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. உங்களை எல்லாம் எப்போது பார்க்கப் போகின்றோம் என்று துடித்துக் கொண்டும் இருக்கின்றேன்.*

*காயத்ரி என்னைவிட நீ சிறியவளாக இருந்தாலும் என் மனம் விரும்பி தத்தெடுத்துக் கொண்ட தாய் நீதான். தகப்பன் ரகுதான். எத்தனை நாள் நான் இப்படியே இருப்பது? எனக்காகவாவது இல்லாவிட்டாலும் உங்கள் இருவரின் சந்தோஷத்திற்காவது நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றேன்.*

*இனியும் காதலித்து கல்யாணத்திற்கு காத்திருக்க விருப்பம் இல்லை. நேரடியாக கல்யாணத்திற்கே போக விரும்புகின்றேன். என்னோட இங்கு ட்ரெயினியாக வந்திருக்கும். அஸிஸ்டெண்ட் கலெக்டர் ரவியை எனக்கு மிகவும் பிடித்து இருக்கின்றது. இருவருக்கும்தான். என்னைப் பற்றி எல்லாம் அவரிடம் சொல்லி விட்டேன். அவருடைய போட்டோ இத்தோடு இணைந்திருக்கும் சிறிய கவருக்குள் இருக்கின்றது. பார்த்து விட்டு உங்கள் இருவரின் முடிவையும் சொல்லுங்கள், என்னை முறை யாகப் பெண் பார்ப்பதற்கும், பேசி முடிப்பதற்கும் தேதி கேட்டார். அவரிடம் எனக்கு காயத்ரி, ரகுவரன் என்ற சின்ன வயது பெற்றவர்கள் இருக்கின்றார்கள். அவர்களைக்*

*கேட்டுத்தான் எந்த முடிவும் எடுக்க முடியும் என்று நம் வீட்டு முகவரியைக் கொடுத்து இருக்கின்றேன். உங்கள் முடிவை எனக்கு உடனே இருவரும் கலந்து ஆலோசித்து எழுதவும். உங்கள் மாப்பிள்ளை எப்படி?*

*எனக்கு இந்த மாப்பிள்ளையைப் பிடித்து இருக்கிறது. இப்போது மட்டும் அல்ல. இனி வரும் நாட்களிலும் எனக்கு நீங்கள் இருவர்தான் எல்லாமே. எனக்குப் பிடித்து இருக்கிறது இந்த ரவியை. உனக்கு காயத்ரி?''*

*என்றும் உன் ஜனனி.*

கடிதத்தை முடிக்கும் முன் கண்ணீர் திரையிட்டு, நாலைந்து வரிகளில் விழுந்து எழுத்துக்களை அழிக்க முற்பட்டுக் கொண்டிருந்தன. பொலபொலவென சகலமும் அவளுக்கு உதிர்ந்தது. 'ஜனனீ..' உள்ளுக்குள்ளேயும் உச்சரித்துப் பார்த்தாள். கொஞ்சம் கொஞ்சமாக மண்டியிட்டு அமர்ந்து அவளையும் மீறி அழத் தொடங்கினாள்.

கூடியிருந்த ஒருவருக்கும் எதுவும் புரியவில்லை. ரகுவரன் பதறிப் போய் வேகமாக அவள் அருகே வந்தான்.

''காயத்ரீ! நடுக்கத்தோடு அவள் தோளைத் தொட்டது தான் தாமதம். அப்படியே அவன் காலடியில் சரிந்து கதறினாள்.

''எ...ன்னை மன்னிச்சிடுங்க'' ரகுவரன் கால்களில் காயத்ரியின் கண்ணீர் வெப்ப ஆறாக ஓடியது.

''டேய் எழுந்திரிடா'' தொட்டுத் தூக்கினான்.

ஜனனியின் ஒவ்வொரு வார்த்தையும் அவள் இதயத்தைக் கிள்ளிக் கிள்ளி எழுந்தது. அந்த அளவு கேவலமாக நடந்து இருக்கின்றோம். ரகுவரனைப் பார்க்க மனம் கூசியது. தான் பெண்ணா? அவள் பெண்ணா? ஜீரணிக்க முடியாத அளவு கேள்வி எழுந்தது.

''காயத்ரீ.''



''டேய் கண்ணம்மா... என்ன இது? குழந்தை மாதிரி அழுதுகிட்டு.''

தோளோடு சரித்துக் கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டான். அவளுக்கும் துடைத்து விட்டான். பஞ்சாயத்து என்பதையும் மறந்து எங்கே அவனை விட்டால் போய் விடுவானோ என்ற பயத்தில் அவன் மார்பில் கோழிக் குஞ்சாக ஒண்டிக் கொண்டாள்.

இவர்கள் இருவருக்கும் இனி இந்தப் பஞ்சாயத்து தேவையில்லை என்பது அவர்களுக்குத் தெரியாதா என்ன? மெதுவாக கலைய ஆரம்பித்தார்கள்.

அவள் எவ்வளவு பெருந்தன்மையானவள்... இல்லாவிட்டால் அவள் வாழ்க்கை முடிவை எப்படி என்னிடம் விட்டிருப்பாள்? நொறுங்கினாள். அவள் எங்கே, தான் எங்கே? எண்ணிப் பார்க்கவே கூசியது. அவளிடம் மன்னிப்பு கேட்கக் கூட தனக்குத் தகுதியிருக்கின்றதா என்று சந்தேகப்பட்டாள்.

அந்த சின்னக் கவரை ரகுவரன் பிரித்துப் பார்த்தான். கமலையும், ராம்கியையும் கலந்த சாயலில் சுருட்டை முடியில் பளிச்சென்று சிரித்துக் கொண்டிருந்தான் ரவி.

அது கூடவே சின்ன துண்டு சீட்.

அதையும் காயத்ரிதான் பிரித்தாள்.

*அன்புமிக்க ரகு. ரவி எப்படி? நன்றாக இருக்கின்றாரா? காயத்ரிக்கு இவரைப் பிடிக்குமா? எனக்கு திருமணம் பண்ணிக் கொண்ட வேகத்தில் மனோ, மது போல இரண்டு குழந்தைகளுக்கு ஒரே நேரத்தில் தாயாக வேண்டும். உங்கள் வீட்டில் நான் வயிற்றைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு வளைய வர வேண்டும். எனக்கு பிரசவம் முதல் இறப்பு வரை உங்களின் அருகாமை அன்பும் வேண்டும். மனதிற்குப் பட்டதை எழுதி விட்டேன். தவறாக எண்ண வேண்டாம்.*

காயத்ரியால் பேசக்கூட முடியவில்லை. எப்படிப்பட்ட அற்புதமான பெண். நெஞ்சு கொள்ளாமல் துக்கம் வெடித்தது.

ரகுவரன் அவள் முகத்தைத் தூக்கினான்.

''எதுக்கு காயத்ரி அழற... நான் இருக்கப்ப உங்கண்ணுல தண்ணி வரலாமா?'' தலையை வருடி விட்டான்.

''எனக்கு ஜனனிய பார்க்கணும் போல இருக்குங்க.''

''வந்துடுவா.''

''இல்ல நானே பார்க்கப் போவணும். ப்ளீஸ்...''

''சரி கண்டிப்பா கூட்டிகிட்டுப் போறேன். இப்பவாவது சிரி காயத்ரி... பார்த்து ரொம்ப நாளாச்சி.''

''குழந்தைங்க எங்க?''

கண்களை அலைய விட்டாள். எங்கும் தென்படவில்லை. காயத்ரி ரகுவரனின் கால்களில் சரிந்தபோதே கண்களைத் துடைத்துக் கொண்டு குழந்தைகளோடு வீடு போய் இருந்தாள் லஷ்மியம்மா.

45 2336 / 622 7174

''எனக்கு இன்னும் ஒரு பொண்ணு வேணும்.''

''எதுக்கு?'' அவனிடம் குறும்பு மின்னியது.

''ஜனனீன்னு பேரு வைக்கணும்.''

''இப்ப மட்டும் என்ன? இந்த ஜனனிய காலம் பூரா கண் கலங்காம பார்த்துக்கிட்டா போதாதா? இன்னொரு ஜனனி வேண்டாம் காயத்ரி'' போலியாக பயந்தான்.

''சாரி...''

''ச்சீய்... எதுக்கு சாரி? நமக்குள்ள சாரி தேவையா?'' அவன் காதுமடலில் கிசுகிசுத்தான். வெகு நாட்களுக்கு பிறகு அவனின் அருகாமை அவளுக்கு புதிய உலகத்தையே காட்டியது.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002